ஸ்ரீகலா SRIKALA



# மாயமோ! மதுரமோ! என் மதுரா!!!

MAYAMO! MATHURAMO! EN MATHURAA!!


ஸ்ரீகலா SRIKALA
மாயமோ!
மதுரமோ!
என்
மதுரா!!!
MAYAMO! MATHURAMO!
EN MATHURAA!!


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
Download

## Contents

மாயம் : 1
மாயம் : 2
மாயம் : 3
மாயம் : 4
மாயம் : 5
மாயம் : 6
மாயம் : 7
மாயம் : 8
மாயம் : 9
மாயம் : 10
மாயம் : 11
மாயம் : 12
மாயம் : 13
மாயம் : 14
மாயம் : 15
மாயம் : 16
மாயம் : 17
மாயம் : 18
மாயம் : 19
மாயம் : 20

PDF தமிழ்.com
WWW.PDFTAMIL.COM

மருதூர் கிராமம் :

திருவிழா என்பதால் இரவு வாண வேடிக்கையுடன் கோலாகலமாக, குதூகலமாக இருந்த அந்தக் கிராமம் முழுவதும் கோவில் மைதானத்தில் கூடியிருந்தது... மக்கள் அனைவரும் அங்கு ஆடி கொண்டிருந்த கரகாட்டத்தைக் கண்ணிமைக்க மறந்து பார்த்து கொண்டிருந்தனர்...

"அம்மா... உச்சா வருதும்மா..." ஐந்து வயது சிறுவன் தனது தாயின் கரத்தினைச் சுரண்டினான்...

"அங்கே மரத்துக்குப் பின்பக்கமா போய் இருந்துட்டு வா..." ஆட்டத்தைப் பார்க்கும் சுவாரஸ்சியத்தில் சிறுவனின் அன்னை மகன் புறம் திரும்பாது கூறினார்...

"அம்மா... பயமாயிருக்கு..."

"ஏலேய்... நம்ம முத்து மாரி துணையிருப்பாள்டா... தைரியமா போ... பொட்ட புள்ள மாதிரி பயந்து சாகாதே...."

அன்னை கூறிய தைரியத்தில் சிறுவன் தள்ளியிருந்த மரத்தை நோக்கி சென்றான்... இயற்கை உபாதையைக் கழித்த பிறகு நிம்மதியுடன் திரும்பிய சிறுவன் அடுத்தச் சில நொடிகளில் கடத்தப்பட்டான்...

கோயம்புத்தூர் :

"ம்மா... வீட்டிலிருக்கப் போர் அடிக்குது... வெளியில் போய் விளையாடிட்டு வர்றேன்..." அந்த எட்டு வயது சிறுமி தனது தாயிடம் கெஞ்சி கொண்டிருந்தாள்...

ஒற்றைப் படுக்கையறை கொண்ட அந்தச் சிறிய அடுக்குமாடி குடியிருப்பில் துறுதுறு குழந்தையான அவளால் ஒரு இடத்தில் சும்மாயிருக்க முடியவில்லை...

"சரி... விளையாடிட்டுச் சீக்கிரம் வந்திரு... யார் கூப்பிட்டாலும் போகக் கூடாது..." என்று எச்சரிக்கை செய்த தாய் அவள் விளையாடுவதற்கு அனுமதி அளித்தார்...

வீட்டு வேலை செய்தபடி மாடியில் இருந்து மகள் விளையாடுவதை அவ்வப்போது கண்காணித்தபடி இருந்தார் அவர்... தரையில் சதுர கட்டங்கள் வரைந்து தனியே பாண்டி விளையாண்டு கொண்டிருந்த மகளைக் கண்டு அவருக்குக் கவலையாக இருந்தது...

கிராமத்தில் உறவினர்கள் குழந்தைகளுடன் தான் விளையாடிய பாண்டி, பல்லாங்குழி ஆட்டம் எல்லாம் அவர் கண்முன் வந்து சென்றது...

'ம்ஹூம்... வீட்டை போல் நகர வாழ்க்கையும் சுருங்கி போய் விட்டது...' என்று பெருமூச்சு விட்டபடி தனது வேலையைத் தொடர்ந்தார்...

அடுத்து பதினைந்து நிமிடங்கள் கழித்து அவர் மீண்டும் மகளைப் பார்த்த போது அவள் அங்கில்லை... அடித்துப் பிடித்துக் கொண்டு அவர் கீழே சென்று பார்த்த போது அவள் அங்கு மட்டுமில்லை... வேறு எங்குத் தேடியும் கிடைக்கவில்லை...

ஆம், எட்டு வயது சிறுமி கடத்தப்பட்டிருந்தாள்...

சென்னை மெரினா கடற்கரை :

ஜனசந்தடி மிக்க அந்தக் கடற்கரையில் அந்தத் தம்பதி தங்களது ஆறு வயது மகனுடன் வந்தமர்ந்தனர்... கூட்டுக் குடும்பத்தில் வசிக்கும் அவர்களுக்கு இது போன்ற இடங்களே தனிமையான இடங்கள்... பேச்சுச் சுவாரஸ்யத்தில் தங்களது மகனை கவனிக்க மறந்து போயிருந்தனர்...

அடுத்த அரை மணி நேரத்தில் பந்து விளையாடி கொண்டிருந்த அவர்களது மகனை காணவில்லை... எப்போதும் அருகில் பந்து விளையாடி கொண்டிருப்பவனை இன்று திடுமெனக் காணவில்லை என்றதும் அவர்கள் பதறி போய்த் தேடினார்கள்... இந்தச் சிறுவனும் கடத்தப்பட்டு இருந்தான்...

********************

சென்னை கடற்கரை சாலையில் இருந்த அந்த ஆடம்பரமான பங்களா பௌர்ணமி வெளிச்சத்தில் அழகாய் ஜொலித்தது... அவ்வளவு பெரிய அரண்மனை போன்ற வீட்டில் அம்மா, மகள் என்று இரு ஜீவன்கள் மட்டுமே இருந்தனர்...

"பாப்பா... இன்னைக்கு மாப்பிள்ளை வர்றாரா...?"

மகளின் அதீத அலங்காரத்தைக் கண்டு அவளது அன்னை பவானி மகிழ்ச்சியாய் கேட்டார்...

"யா மாம்..." என்று அன்னைக்குப் பதிலளித்த மந்தாகினி கண்ணாடியில் தெரிந்த தனது உருவத்தை ஆராய்ச்சியாய் பார்த்து கொண்டிருந்தாள்...

வயது இருபத்திமூன்று... பால் போன்ற வெண்ணிற மேனி, கொடி போன்ற இடை, மதி போன்ற முகம் என்று மாசு மருவில்லாமல் அதீத அழகுடன் அவள் இருந்தாள்... கிழக்கும், மேற்கும் ஒன்றிணைந்தது போல் அவள் கவர்ச்சியாகவும் இருந்தாள்... அதே சமயம் குத்துவிளக்கு போன்று சுடர்விடும் அழகுடனும் அவள் இருந்தாள்...

அந்த நேரம் பார்த்து வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது... அதைக் கேட்டு முகம் மலர திரும்பியவள்,

"மாம்... அவருக்குப் பிடிச்சது தானே சமைச்சு வச்சியிருக்கீங்க...? அவருக்குத் தேவையான..." மேலே அவள் சொல்லும் முன் அவளைத் தடுத்த பவானி,

"எல்லாம் ரெடியா இருக்கு... நீ போய் மாப்பிள்ளையைக் கவனி..." என்று சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்து சென்று விட்டார்...

மந்தாகினி புன்னகையுடன் வீட்டின் கதவை திறந்தாள்... அவள் நினைத்தது போல் அவள் கணவன் தான் வந்திருந்தது...

"வாங்க... வாங்க..."

PDF தமிழ் .com

வாய் கொள்ளா புன்னகையுடன் தன்னை வரவேற்ற இளம் மனைவியைக் கண்டு செந்தில்நாதனின் அகமும் முகமும் மலர்ந்தது... புன்னகை புரிந்த போது மனைவியின் கன்னத்தில் விழுந்த குழியில் தனது கை விரல் வைத்து நிமிண்டியபடி கண்சிமிட்டி சிரித்தவர்,

"ரொம்ப அழகாயிருக்கேடி... அப்படியே மனுசனை மயக்கிறியே..." என்றவரின் கண்களில் அப்பட்டமாய் மயக்கம் தெரிந்தது...

அவரது மயக்கத்தில் மந்தாகினியின் மனதில் கர்வம் வந்தது... விழிகளில் வழிந்த நேசத்தோடு அவரைப் பார்த்தாள் அவள்... தனது இரு கைகளையும் சேர்த்து அவரது கழுத்தில் பூமாலையாய் கோர்த்தவள்,

"உங்களை விடவா நான் அழகாயிருக்கேன்..."

அவளது முகம் நோக்கி தனது முகத்தை இழுத்தபடி கூறியவளை கண்டு, "ம்ஹூம்... அப்படியா..." என்றபடி மையலோடு அணைத்துக் கொண்டார் செந்தில்நாதன்...

ஐம்பது வயதிலும் நாற்பது வயது மதிக்கும்படி அவர் சற்று இளமையாகத் தான் இருந்தார்...

"ம்... அப்படித்தான்..." என்றவள் அவரை உரசியபடி,

"ஜீன்ஸ், டீசர்ட்டில் ரொம்பவும் இளமையாக இருக்கீங்க..." என்றவளை உற்சாக மிகுதியில் தனது கைகளில் அள்ளி கொண்டார் அவர்...

"அச்சோ... முதலில் சாப்பிடலாம்... அதுக்குப் பிறகு..." என்று கை, கால்களை உதைத்துக் கொண்டு சிணுங்கியவளின் காதில் அவர் ரகசியமாய் ஏதோ பேசினார்...

அதில் முகம் சிவந்தவள், "யூ நாட்டி..." என்றபடி வெட்கத்துடன் அவரது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

"ஹா... ஹா..." என்று சிரித்தபடி அவளைத் தங்களது படுக்கையறைக்குத் தூக்கி சென்றார் அவர்...

அடுத்த ஒரு மணி நேரத்தில் கிளம்பிய செந்தில்நாதனை படுக்கையில் படுத்தபடி பார்த்து கொண்டிருந்தாள் மந்தாகினி...

"என்ன பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?"

"ம்ப்ச்... ஒண்ணுமில்லை..." என்றவளின் அருகே அமர்ந்தவர் அவளது தலையைப் பாசத்துடன் வருடி கொடுத்தார்...

வாகாய் அவரது மடியில் புரண்டு படுத்தவள் அவரது இடுப்பை கட்டி பிடித்துக் கொண்டு அவரது மடியில் முகம் புதைத்தாள்...

"என்னடி...?" அவளது செயலில் அவர் சிறிது மனம் தடுமாறி தான் போனார்...

"என்ன என்ன...?" விழியுயர்த்தி அறியாமையுடன் கேட்டவளின் இமை மீது முத்தமிட்டவர்,

"இப்படிச் செஞ்சால் நான் எப்படிப் போவது...?"

"அப்போ போக வேண்டாம்..." என்றவள் அவரது கழுத்தை வளைத்து அவரது உதட்டில் ஆழ்ந்து முத்தமிட... அவர் தன்னை மறந்தவராய் மீண்டும் அவளுள் மூழ்க துவங்கினார்...

சில பல நிமிடங்கள் கழித்துத் திருப்தியுடன் அவரை விட்டு விலகிய மந்தாகினி, "செந்தில்... நீங்க இங்கேயே இருந்திருங்களேன்..." என்க... அவளை அணைத்தபடி,

"அது மட்டும் முடியாது மினி..." என்றவரை கையாலாகாதவளாய் பார்த்தவள்,

"ஏன்...?"

"ஏன்னா... என் மனைவி எனக்கு மூளை மாதிரி... அவளை இழந்தால் நான் செயலிழந்து போய் விடுவேன்..."

PDF தமிழ் .com

அவரது முதல் மனைவி மீனாட்சி குடும்பத்தை மட்டுமல்ல, அவரது அரசியல் வாழ்க்கையையும் திறன்பட நிர்வகிப்பவர்... பெரிய அரசியல் குடும்பப் பின்புலம் கொண்டவர்... அந்தச் செல்வாக்கு செந்தில்நாதனுக்கும் தேவைப்பட்டது...

மகள் வயதில் இருக்கும் பெண்ணுடன் உறவாடி விட்டு அவளைக் கையணைவில் வைத்துக் கொண்டு இப்படிக் கொஞ்சமும் மனசாட்சி இல்லாது பேச அவரால் மட்டுமே முடியும்...

"நீங்க போயிட்டு வாங்க செந்தில்..."

அவர் சொன்னதும் புரிந்து கொண்டு முகம் வாடாமல் அவரை வழியனுப்பி வைத்த மந்தாகினி மீது அப்படியொரு காதல் வந்தது அவருக்கு... ஐம்பது வயதில் தலை நரைத்த போதும் அந்த ஆண் மகனுக்கு ஆசை நரைக்கவில்லை...

மந்தாகினியின் பதினேழு வயதில் அவள் மீது ஆசை கொண்டார்... அப்போது அவருக்கு நாற்பத்தினான்கு வயது... இருந்தும் கொஞ்சமும் தயங்காது தனது ஆசையை அவளிடத்தில் வெளிப்படுத்தி அவளைத் தன்வசப்படுத்திக் கொண்டார்... இன்றும் அதை நினைத்து பார்த்தால் அவருக்கு அப்படியொரு பிரமிப்பாய் இருந்தது...

"இப்போ தான்டி உன்னை ரொம்பப் படிச்சியிருக்கு..." என்று அவளது கன்னம் தட்டி சிரித்தார் அவர்...

"எனக்கு உங்களை அதை விட அதிகமா பிடிச்சியிருக்கு..." என்று மயக்கும் புன்னகையைச் சிந்தியவளை கண்டு அவருக்கும் மயக்கம் வந்தது...

"அது நீ இருக்கும் கோலத்தைப் பார்த்தாலே தெரியுது..." என்றவரது பார்வை அவள் மீது அந்தரங்கமாய் ஊர்ந்து சென்றது...

"ச்சீ போங்க..." என்று சிணுங்கியவளை வாரியணைக்கக் கைகள் பரபரத்த போதும் நேரமாகி விட்டதை உணர்ந்து அவர் தனது வீட்டிற்குக் கிளம்பினார்...

"வர்றேன் மினி..." என்றவர் அவளது நெற்றியில் முத்தமிட்டு விலகி சென்றார்...

அவர் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த மந்தாகினியின் விழிகளில் அப்பட்டமாய் ஏக்கம் தெரிந்தது...

முரண்பாடான காதல் அவர்களது... ஆனாலும் அந்தக் காதலே எத்தகைய முரண்பாட்டினையும் தாண்டிட சொல்லி தூண்டியது...

"பாப்பா..." என்றபடி உள்ளே வந்த அன்னையைக் கண்டதும் வாரி சுருட்டி கொண்டு எழுந்தமர்ந்தாள் அவள்...

அவரோ அவளது தோற்றத்தை கண்டு கொள்ளாது, "அந்த நிலம் வாங்கறது சம்பந்தமா பேச சொன்னேனே... பேசினியா பாப்பா...?"

"இல்லை மாம்..." என்றவள் அன்னை முகம் பார்க்காது தனது கைவிரல்களை ஆராய்ந்தாள்...

"அழகும், இளமையும் இருக்கிறப்பவே வாழ்க்கையில் செட்டில் ஆகிக்கணும் பாப்பா... நாளைக்கு மாப்பிள்ளை காலத்துக்கு அப்புறம் நமக்கு என்ன மிச்சம் இருக்கும் சொல்லு...? இல்லை நீ தான் சொத்துக்குப் பங்கு கேட்டு அங்குப் போய் நிற்க முடியுமா...?"

"அவருக்கு அப்புறம் எனக்கு ஒரு வாழ்க்கை வேண்டாம்மா..." என்று தீர்மானமாய்க் கூறிய மகளைக் கண்டு எரிச்சல் வந்தது அந்தத் தாய்க்கு...

"இப்படி லூசு மாதிரி பேசாம அறிவோடு நடந்துக்கோ... இதுக்கு மேலே உனக்கு அறிவுரை சொல்ல என்னால் முடியாது..." என்று சலித்தபடி அவர் சென்றுவிட்டார்...

மந்தாகினி யோசனையுடன் அமர்ந்து விட்டாள்...

வழக்கம் போல் கடை வீதி வந்ததும் செந்தில்நாதன் தனது ஓட்டுநரை, "ராஜா..." என்றழைக்க...

PDF தமிழ் .com

அவரது அழைப்பை புரிந்து கொண்டவனாய் அவன் காரை நிறுத்தினான்... அவர் சட்டை பையில் கை விட்டுப் பணத்தை எடுத்து அவனிடம் நீட்டினார்... ஏன், எதற்கு என்று கேட்காமல் அவன் பணத்தை வாங்கிக் கொண்டு கீழே இறங்கினான்...

அடுத்தச் சில நிமிடங்களில் அவன் காரில் வந்தமர்ந்த போது மல்லிகை பூவின் மணம் காரை நிறைத்தது... அதன் மணம் நாசியில் நுழைந்ததும் செந்தில்நாதனுக்குத் தனது முதல் மனைவி மீனாட்சியின் நினைவு மனதில் எழுந்தது...

"சார்..." என்றபடி பூ பொட்டலத்தை நீட்டிய ஓட்டுநரிடம் இருந்து அதை வாங்கி வைத்துக் கொண்டார் அவர்...

ராஜன் காரை கிளப்பினான்... இது அவனுக்கு வாடிக்கையான ஒரு செயல் தான்... அவரது பலம், பலவீனம் அனைத்தும் அவனுக்கு அத்துப்படி... கிட்டத்தட்ட இருபது வருடங்களாக அவரிடம் வேலை பார்க்கிறான்... மிகுந்த விசுவாசமானவன்...

"மீனும்மா..." ஆர்ப்பாட்டமான குரலுடன் வீட்டினுள் நுழைந்தார் செந்தில்நாதன்...

"அப்பா... உங்களுக்கு உங்க மீனும்மா மட்டும் தான் கண்ணுக்கு தெரியுமா...? உங்க மகள் மது நான் கண்ணுக்கு தெரியலையா...?"

வரவேற்பறையில் அமர்ந்திருந்த மகள் மதுரகவி செல்லமாய்ச் சிணுங்கினாள்...

"அடடே... என் மது குட்டியை நான் மறப்பேனா..." என்றபடி மகளின் அருகில் சென்று அவர் அமர்ந்தார்...

"எப்போப்பா டெல்லியில் இருந்து வந்தீங்க...?"

"இப்போ தான்டா மது... இது அஃபீசியல் ட்ரிப் இல்லை... அதனால் யாருக்கும் தெரியாது..."

"ம்... சரி... சரி..." என்றவள் அவரது கைகளில் இருந்த பூவை கண்டு,

"இன்னைக்காவது இந்தப் பூவை எனக்குக் கொடுக்கலாமே...?"

"ம்ஹூம்... அது மட்டும் முடியாது... இருபத்தியொன்பது வருச பழக்கம்... இப்போ புதுசா மாத்திக்க முடியாது... உன் அம்மா கொடுத்தால் வாங்கி வச்சிக்கோ..."

கணவன் கூறியதை கேட்டபடி அங்கு வந்த மீனாட்சியின் முகத்தில் அப்படியொரு பெருமை வழிந்தது... திருமணமான நாள் முதல் இன்று வரை இந்தப் பழக்கத்தை விடாது கடைப்பிடித்து வரும் கணவன் மீது அவரது நேசம் அதிகரித்தது...

"டிபிக்கல் தமிழ்நாட்டு ஹஸ்பெண்ட்..." முகத்தைச் சுளித்தாள் மகள்...

"அவர் ஊருக்கு தான்டி அமைச்சர்... எனக்கு என்னோட கணவன் மட்டும் தான்... முதல்ல அதை நீ புரிஞ்சிக்கோ..." என்று மகளிடம் உரைத்த மீனாட்சி கணவரிடம்,

"நீங்க டயர்டாகி வந்திருப்பீங்க... போங்க குளிச்சிட்டு வாங்க... சாப்பாடு எடுத்து வைக்கிறேன்..."

மனைவி பேச்சிற்கு எதிர்பேச்சு பேசாது அவர் எழுந்து செல்ல, அதை ப்ரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் மீனாட்சி...

"போதும், போதும் உங்க புருசனை சைட் அடிச்சது... எனக்குப் பசிக்குது சாப்பாடை போடுங்க..." என்றபடி மதுரகவி எழுந்தாள்...

"சின்னவளையும் சேர்த்து கூட்டிட்டு வா... ஒவ்வொருத்தருக்கா தனித்தனியா பரிமாற முடியாது..."

"இன்னும் உங்க மகனை காணோம்...?" எதிர்கேள்வி கேட்ட மகளை முறைத்து பார்த்தவர்,

"நான் தான் திருவை கட்சி வேலையாய் திருச்சிக்கு அனுப்பியிருக்கேன்... நாளைக்கு அவன் வந்துருவான்..."

PDF தமிழ் .com

"அடேங்கப்பா..." என்று தோளை குலுக்கிய மகளைக் கண்டு,

"நீயும் இந்தச் சோசியல் சர்வீசை தலை முழுகிட்டு நம்ம பிசினசை பார்... இல்லைன்னா அரசியலுக்கு வா... பெண்கள்ன்னா எளிதில் ஓட்டு வாங்கி விடலாம்... ஆனா நீ நாங்க சொல்கிற எந்தப் பேச்சையும் கேட்கிறதா இல்லை..."

"அம்மா... எனக்கு அதிலெல்லாம் இன்ட்ரெஸ்ட் இல்லை..."

அந்நேரம் அங்கு வந்த செந்தில்நாதன், "மதும்மா... அப்படி எல்லாம் சொல்ல கூடாது... நாளைக்கு நாம ஒரு புதுப் பிசினசில் சைன் பண்ண போறோம்... அதை உன் பெயரில் தான் ஆரம்பிக்கப் போகிறேன்..."

"ப்ளீஸ்ப்பா... பிசினஸ் எல்லாம் வேண்டாம்..."

"நோ மது... நான் நல்ல முறையில் இருக்கும் போதே உங்களை எல்லாம் செட்டில் பண்ணி விடணும்ன்னு நினைக்கிறேன்..."

அவரது அழுத்தமான குரலில் மதுரகவியால் பதில் பேச முடியாது போனது...

"சரிப்பா..." என்றாள் உள்ளடங்கிப் போன குரலில்...

"அப்பா..." இரண்டாவது மகள் பதினைந்து வயது தாமரை அங்கு ஓடி வந்தவள் தந்தையைக் கட்டியணைத்து கொண்டாள்...

கடை குட்டியான அவளிடத்தில் அவருக்கு நிரம்பச் செல்லம்...

"இவ்வளவு நேரம் என்னடா பண்ணிக்கிட்டு இருந்த...?"

"ஹோம்வொர்க்ப்பா..."

"சாப்பிட வாங்க..." மீனாட்சி அழைக்கவும் எல்லோரும் உணவு மேசைக்குச் சென்றனர்...

இரவு உணவு முடித்து அறைக்கு வந்தவரின் பின்னேயே மீனாட்சி வந்தார்... படுக்கையில் கால் நீட்டி அமர்ந்து கொண்டவர் அருகில் அமர்ந்த மீனாட்சி,

"மதுவை நினைச்சா தான் பயமா இருக்குங்க..." என்க...

"ஏன்...?" என்றார் செந்தில்நாதன் யோசனையாக...

"இந்த வயதிற்குரிய ஆசைகள் எதுவும் இல்லாமல் ஏதோ ஒப்புக்கு வாழ்ந்து கொண்டிருப்பது போல் இருக்கிறாள்... அவளது ஒவ்வொரு நடவடிக்கையும் அப்படித் தான் இருக்கு... அது ஏன்னு தான் எனக்குப் புரியலை..."

அதைக் கேட்டு அவர் இடியெனச் சிரித்தார்... கணவரது சிரிப்பை புரியாது பார்த்தார் மீனாட்சி...

"மந்திரி மகள்ங்கிற பெருமை இல்லாமல் சிம்பிளாக அவள் இருக்கிறாள்... அதாவது உன்னைப் போல்... இதைப் போய்ப் பெருசா எடுத்துக்கிட்டு ஃபீல் பண்ணிக்கிட்டு இருக்கியே..."

"ம்... அப்படியும் இருக்குமோ..."

"அப்படித்தான் இருக்கும்... எதையும் நினைத்து மனசை போட்டு குழப்பிக்காம நீ தூங்கு..." என்றவர் மனைவியை மடி தாங்கி கொண்டார்...

கணவரது வருடலில் ஆழ்ந்த உறக்கத்திற்கு மீனாட்சி சென்றுவிட்டார்... அந்நேரம் செந்தில்நாதனின் அலைப்பேசி அழைத்தது... 'ஹோம் மினிஸ்ட்ரி காலிங்' என்று மின்னிய அலைப்பேசி திரையை யோசனையுடன் பார்த்தவர் மனைவியின் தலையைத் தலையணையில் வைத்து விட்டு மெல்ல எழுந்து பால்கனிக்கு வந்தார்...

"சொல்லும்மா மினி..." மந்தாகினி எண்ணை தான் அப்படிப் பதிந்து வைத்திருந்தார்...

செந்தில்நாதனின் குரலில் வழிந்த காதலில் மந்தாகினியின் மனம் நிறைந்தது...

PDF தமிழ் .com

"சும்மா தான் எடுத்தேன்..." என்றவள் மேலே பேச துவங்க...

அவளுடைய சுவாரஸ்சியமான பேச்சில் அவரும் கள்ளுண்ட வண்டாய் மதி மயங்கி போய்ப் பேச துவங்கினார்...

அதே நேரம் மதுரகவி தனது அறையிலிருந்த பால்கனியில் அமர்ந்திருந்தாள்... இருண்ட வானை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவளின் கண்களில் கண்ணீர் துளிகள் நட்சத்திரங்கள் போன்று மின்னியது...

அவளது மனதில் சொல்லொண்ணா துயரம் அழுத்தியது... மனதின் துக்கத்தினை வாய் விட்டு அழுதாலாவது சிறிது குறையும்... ஆனால் வாய் விட்டு அழ முடியாது அவள் தவித்தாள்... இத்தனை வருடங்களாக அவள் தனது தவிப்பை அடக்கியதில் அவளது துயரம் தான் அதிகரித்ததே தவிர... அது குறைந்தபாடாக இல்லை...

*************************

அந்தப் பிரபல கல்லூரியின் ஒதுக்குப்புறமாய் இருந்த கிணற்றைச் சுற்றிலும் கல்லூரி மாணவர்கள் சூழ்ந்து நின்றனர்... எல்லோரின் முகத்திலும் சிறிது கவலை, அதிகம் பரபரப்புக் காணப்பட்டது... அவர்களுடன் படிக்கும் மாணவி ஒருத்தி தான் சடலமாக அந்தக் கிணற்றில் மிதந்து கொண்டிருந்தாள்...

சக மாணவிக்கு நேர்ந்த கதியை நினைத்து எல்லோருக்கும் கவலையாகவும் இருந்தது... அதே சமயம் எதனால் அவள் இறந்து போனாள் என்பது பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் அவர்களுக்குள் பரபரப்பாய் தொற்றிக் கொண்டது...

உடலை கைப்பற்றிய காவல்துறை வழக்கம் போல் 'காதல் தோல்வியால் தற்கொலை' என்று அந்த மாணவியின் மரணத்தைப் பற்றிய மர்மத்தை மூடி மறைத்து விட்டது... மூடி மறைத்ததா இல்லை அதைப் பற்றித் துப்பறியும்

ஆர்வம் இல்லையா என்பது அவர்கள் மட்டுமே அறிவார்கள்...

************************

மறுநாள் காலையில் எப்போதும் போல் மதுரகவி சமுதாயத் தொண்டு செய்யக் கிளம்பி விட்டாள்... எளிய பருத்தி புடவையில் எந்தவித அலங்காரமும் இல்லாமல் எளிமையாய் கிளம்பியவளை கண்டு மீனாட்சி முறைத்து பார்த்தார்...

"அப்பா சொன்னது உனக்கு நினைவு இல்லையா...?"

"என்ன சொன்னார்ம்மா...?" என்று தெரியாது விழித்தவளை கோபமாய்ப் பார்த்தவர்,

"இன்று புதிய தொழில் ஒப்பந்தம் போட வேண்டும்ன்னு சொன்னாரா இல்லையா...? அதிகாலையில் வந்த திருக் கூட ரெடியாகிவிட்டான்..."

அன்னை கூறும் போதே அங்கு வந்த திருச்செல்வன் அவரைக் கண்ணமர்த்திப் பேசாது செய்தவன் தங்கையிடம், "மதும்மா... போய்க் கிளம்பி வாம்மா..."

அண்ணனிடம் மறுத்து பேச முடியாதவளாய் அவள் உடை மாற்ற சென்றாள்...

"திரு..." என்ற அன்னையைக் கையமர்த்தித் தடுத்தவன்,

"அம்மா... மது எடுத்துச் சொன்னால் கேட்டு கொள்வாள்... அவளை நான் பார்த்துக்கிறேன்... நீங்க வேறு வேலை இருந்தால் பாருங்க..." என்று அவரை அனுப்பி வைத்தவன் தனது அலைப்பேசியை எடுத்துக் கட்சி மாவட்ட செயலாளரை அழைத்துப் பேசினான்...

தந்தையின் அனைத்து அரசியல் வேலைகளுக்கும் அவன் துணையாக இருக்கிறான்... விரைவில் அவரது அரசியல் வாரிசாக அவன் அறிவிக்கப்பட இருக்கிறான்...

தமிழ் நாவல்

"அம்மா... நான் ரெடி..." என்றபடி தன் முன் வந்து நின்ற மகளைக் கண்டு மீனாட்சியின் மனம் சுணங்கியது...

"ஏன்டி... கொஞ்சம் மாடர்ன்னா ட்ரெஸ் பண்ண கூடாதா...? இது என்ன பட்டிக்காடு போல்...?" என்று முகத்தைச் சுளித்தார் அவர்...

இப்போதும் அதே பருத்தி புடவை தான் என்றாலும் கொஞ்சம் விலையுயர்ந்த புடவையாய் அவள் உடுத்தி இருந்தாள் அவ்வளவே...

"எல்லாம் இது போதும்மா..." என்று அவள் எரிச்சல்படும் போதே செந்தில்நாதன் அங்கு வந்துவிட்டார்...

"அவர் வந்துவிட்டார்... வாங்க..." என்று அவர் அழைக்க...

வேறுவழியின்றி மதுரகவி பெற்றோருடன் இணைந்து நடந்தாள்... அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்தவனைக் கண்டு மதுரகவி அதிர்ச்சி அடைந்தாள்... எல்லாம் நொடி நேரம் தான் அடுத்த நொடி தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்வாக அங்குச் சென்றாள்...

அவனிடம் தனது குடும்பத்தினரை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தார் செந்தில்நாதன்... இறுதியாகத் தனது மகளைச் சுட்டிக் காட்டி,

"இவள் தான் என் மகள் மதுரகவி..."

செந்தில்நாதன் தனது மகளை அவனிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்... அதே போல் மகளிடம்,

"இவர் மிஸ்டர். ரிச்சர்ட் வில்லியம்ஸ்... நாம புதுசா தொடங்கி இருக்கிற தொழிலின் பங்குதாரர் இவர் தான்... இவரோட நிறுவனத்தோடு சேர்ந்து தான் நாம இந்தத் தொழில் பண்ண போகிறோம்... இலண்டனில் இருந்து வந்திருக்கிறார்..."

மதுரகவி அந்த நெடியவனை நிதானமாக ஏறிட்டு பார்த்தாள்... நல்ல நெடுநெடுவென்ற உயரத்தில் ஹாலிவுட் நாயகன் போல் அழகாக இருந்தான் அவன்...

அதே சமயம் அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... தமிழ் பாரம்பரியத்துடன் தழைய தழைய புடவை கட்டியிருந்தவளை அவனது விழிகள் விழுங்கி விடுவது போல் பார்த்து வைத்தது... அவளது தலை முதல் கால் வரை அவனது பார்வை ரசனையுடன் வருடி சென்றது...

அதில் அவள் மனதிற்குள் கோபம் கொண்டாள்... ஆனாலும் தந்தையின் பொருட்டு அவள் தனது கோபத்தை அடக்கியபடி அமைதி காத்தாள்...

"மிஸ்டர். ரிச்சர்ட்..."

செந்தில்நாதன் அவனை அழைக்கவும் தன்னினைவில் இருந்து வெளிவந்தவன் அவளைப் பார்த்து இரு கரங்களையும் கூப்பி,

"வணக்கம் மிஸ். மதுரகவி..."

தூய தமிழில் அவளது பெயரை சொன்னதோடு மட்டுமில்லாது அவன் அழகாய் கரம் குவித்து வணக்கம் தெரிவித்தது அங்கிருந்தவர்களைப் பெருத்த ஆச்சிரியத்தில் ஆழ்த்தியது... ஏனெனில் எல்லோரிடமும் மேற்கத்திய பாணியில் கையை நீட்டி கை குலுக்கியவன் அவளிடம் மட்டும் கரம் குவித்தது அவர்களுக்குப் பெரும் வியப்பாய் இருந்தது...

அதில் மதுரகவி நிம்மதி அடைந்தவளாய் தனது இரு கரத்தையும் குவித்துப் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தாள்... அவளது செயலை கண்கள் மின்ன பார்த்தவனைக் கண்டு அவளது விழிகள் முறைத்துப் பார்த்தது...

"உங்களுக்குத் தமிழ் தெரியுமா...?" என்று ஆச்சிரியத்துடன் கேட்டான் திருச்செல்வன்...

"தமிழ் தெரியுமாவா...? என்ன இப்படிக் கேட்டுட்டீங்க மிஸ்டர். திருச்செல்வன்..." என்று அழகிய தமிழில் உரைத்த ரிச்சர்ட் மதுரகவியைப் பார்த்தபடி,

"காற்று வெளியிடை கண்ணம்மா... நின்றன் காதலை எண்ணி களிக்கின்றேன்..."

கவித்துவமான அந்த வார்த்தைகளை ரிச்சர்ட் சொல்லும் போதே அவனது விழிகளில் அப்படியொரு காதல் கவிதையாய் பெருகி வழிந்தது...

ரிச்சர்ட்டின் காதல் வழிந்த விழிகளைக் கண்டு அதிர்ந்து போனவளாய் செய்வதறியாது உறைந்து போய் நின்றிருந்தாள் மதுரகவி...!!!

மதுரமாகும்...!!!

"Hello
Is it me your're looking for?
'Cause I wonder where you are
And I wonder what you do
Are you somewhere feeling lonely,
or is someone loving you?
Tell me how to win your heart
For I haven't got a clue
But let me start by saying, I love you"

"வாவ்... சூப்பருங்க..."

திருச்செல்வனின் உற்சாகக் குரலில் மதுரகவி தன்னினைவில் இருந்து வெளியில் வந்தாள்... வசீகரமான புன்னகையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த ரிச்சர்ட்டை கண்டதும் அவளது மனதிற்குள் ஒரு நடுக்கம் வந்தது...

அன்று அவன் ஆங்கிலப் பாடலை பாடிய போது அவளது சகோதரனை போன்று அவளும் ஆவென வாய் பிளந்து கேட்டவள் தான்... ஏனெனில் அவன் ஆள் மட்டும் வசீகரமானவன் அல்ல... அவனது குரலும் அந்தளவிற்கு வசீகரமானது... ஆளை வசியம் செய்யவல்லது...

என்ன ஒன்று அன்று ஆங்கிலப் பாடலை பாடி அவளை வசியம் செய்தான்... இன்று தமிழ் பாடல் பாடி வசியம் செய்ய முயல்கிறான்... மொத்தத்தில் அவளைப் படுத்தி எடுக்கவென்றே விமானம் பிடித்து வந்திருக்கிறான்...

அன்று கூட்டத்தில் யாரையோ பார்த்து அவன் பாடுகிறான் என்று நினைத்தவளிடம் பின்னாளில் ஒரு நாள் அவன் அந்தப் பாடலை அவளுக்காகத் தான் பாடியதாகக் கூறிய போது அவள் சிறகில்லாமல் வானத்தில் பறந்தாள்... அழகான ஆங்கிலேயன் ஒருவன் தன் பின்னால் சுற்றி வந்த போது எல்லாப் பெண்களுக்கும் வரும் மயக்கம் தான் அவளுக்கும் வந்தது...

தமிழ் நாவல்

ஆனால் அந்த மயக்கம் இப்படி விரைவில் தெளிந்திருக்க வேண்டாம் என்று நினைத்தவளுக்கு அத்தனை துக்கமாக இருந்தது...

'இப்போ உனக்கு அவன் மீது மயக்கம் இல்லையா...?' அவளது மனசாட்சி கேள்வி கேட்டதில் அவள் திருதிருவென விழித்தாள்...

மனதை மயக்கியவனின் முகம் மறக்கும் முகமா...? இல்லவே இல்லை... அவள் மறைந்தாலும் மறக்க இயலாது...

ரிச்சர்ட் யாரை பற்றியும் கவலைப்படாது அவளது முகத்தைத் தான் அவதானித்துக் கொண்டிருந்தான்... அவளது முகத்தில் மாறி மாறி வந்து போகும் உணர்வினை கண்டு அவனது முகத்தில் யோசனை வந்தது...

"மிஸ்டர். ரிச்சர்ட்... நல்ல நேரம் முடிவதற்குள் நாம் சைன் பண்ணி விடலாமா...?"

செந்தில்நாதனின் குரலில் அவரைத் திரும்பி பார்த்தவன், "யா... ஷ்யூர்..." என்று அவன் சம்மதம் தெரிவிக்க...

அந்த இடத்திலேயே புதுத் தொழிலுக்கான ஒப்பந்தம் போடப்பட்டது... வக்கீல் முதல் கொண்டு எல்லோரும் அங்கேயே வரவழைக்கப்பட்டு இருந்தனர்...

மதுரகவியின் பெயரில் தான் அந்தத் தொழிலை ஆரம்பித்திருந்தார் செந்தில்நாதன்...

ஒப்பந்த பத்திரத்தில் ரிச்சர்ட் முதலில் கையெழுத்து போட்டு விட்டு அதை அவளிடம் நீட்டினான்... அவன் போட்ட கையெழுத்திற்குக் கீழே கையெழுத்து போட்டவளின் மனதில் துக்கம் எழுந்தது... திருமணப் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டிய இருவரும் இப்படித் தொழில் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட வேண்டிய தலையெழுத்தை எண்ணி நொந்தபடி மனதை தேற்றிக் கொண்டு அதில் கையெழுத்திட்டாள்...

ரிச்சர்ட் ஒன்றும் பேசாது அமைதியாக அவளது கையெழுத்தை பார்த்திருந்தான்...

எல்லாம் நல்லபடியாக முடிந்ததில் செந்தில்நாதனுக்கு வெகுதிருப்தி... அந்த நேரம் திருச்செல்வனின் அலைப்பேசி அழைத்தது... எடுத்து பேசியவனின் முகம் யோசனையாய் மாறியது... தயக்கத்துடன் தந்தையை அழைத்து அவரது காதில் விசயத்தைக் கூறினான்...

"எங்க கட்சி தொண்டர் ஒருத்தர் திடீர்ன்னு இறந்துட்டாராம்... நாங்க கட்டாயம் போயாகணும்..." என்று ரிச்சர்ட்டிடம் கூறியவர்,

"நீங்க இங்கே இருந்து சாப்பிட்டுட்டு தான் போகணும்..." என்று அவனை வற்புறுத்தினார்...

ஓட்டு வங்கிக்காக அவர் இந்த மாதிரி சிறு சிறு விசயங்களைக் கூடக் கூடுதல் கவனம் எடுத்து செய்வார்... அதனால் தான் அவர் தேர்தலில் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார்...

"இதை நீங்க சொல்லவும் வேண்டுமா...?" என்று பதில் கூறியவனின் பார்வை மதுரகவி மீது அழுத்தமாய்ப் பதிந்தது...

அதைக் கண்ட அவளுக்கு 'ஐயோ' என்றிருந்தது...

தந்தையும், சகோதரனும் விடைப்பெற்றுச் சென்றதும் ரிச்சர்ட்டிடம் தனியாக மாட்டி கொண்டாள் மதுரகவி... மீனாட்சி சமையலறைக்குச் சென்று விட்டார்...

யாருமில்லாத தனிமை ரிச்சர்ட்டிற்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்ததோ என்னவோ தான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து அவள் அருகில் வந்து அவன் அமர்ந்தான்... அதில் திடுக்கிட்டு போனவளாய் அவள் அங்கிருந்து எழ போனாள்... அவனோ அவள் கையமர்த்தி அவளைத் தடுத்து அமர வைத்தான்...

தமிழ் நாவல்

"மினிஸ்டர் வீட்டுக்கே வந்து மினிஸ்டர் பொண்ணு மேல கையை வைக்கிற... உனக்கு ரொம்பவும் தைரியம் தான்..."

"மினிஸ்டர் பொண்ணைக் கல்யாணம் பண்ணும் அளவுக்கு எனக்குத் தைரியம் இருக்கிறது..." என்றான் அவனும் அமர்த்தலாக அழகான ஆங்கிலத்தில்...

அதைக் கேட்டு அவளால் முறைக்க மட்டுமே முடிந்தது...

"நீ பிசினஸ் பண்ணுகிறாயா...? இது என்ன புதுக் கதை...?"

"எல்லாம் பழைய கதை தான்..." என்றவனின் விழிகள் அவளது விழிகளை ஊடுருவி சென்றது...

அவனது பார்வையைச் சந்திக்கும் தைரியம் இல்லாதவளாய் அவள் தலையைக் குனிந்து கொண்டாள்... அதில் அவனது உதடுகளில் புன்னகை நெளிந்தது... சன்னமாக விசிலடித்தான்...

அவன் விசிலடித்ததில் கோபம் கொண்டு நிமிர்ந்து பார்த்தவளை கண்டு அவன் கண்சிமிட்டி சிரித்தான்...

"பிராடு... உண்மையைச் சொல்லுடா... எதுக்கு இந்தப் பொய் வேசம்...? என் அப்பாவுக்கு உன்னைப் பத்தின உண்மை தெரிந்தது நீ தொலைஞ்ச..." என்று எச்சரித்தவளை அவன் அசால்ட்டாகப் பார்த்து வைத்தான்...

அதில் அவளது இரத்த அழுத்தம் தான் எகிறியது... எதற்கு இந்தப் பொய், பித்தலாட்டம் என்று அவளது மனம் கொதித்தது...

"யார் தொலைஞ்சு போறாங்க என்பதை நான் உன்னைக் கைப்பிடிக்கும் போது பார்த்து கொள்ளலாம்..." என்று அழுத்தம் திருத்தமாய்த் தமிழில் கூறியவனைக் கண்டு அவளது இதழ்களில் புன்னகை வந்தமர்ந்தது...

"தமிழ் சொல்லி கொடுத்தவளிடமே உன் தமிழைக் காட்டுகிறாயா...?"

"இல்லையா பின்னே... என்னோட டீச்சர் அருமையான டீச்சர் மட்டுமல்ல அழகான டீச்சரும் கூட..." என்று அவளது அழகை பார்வையால் அள்ளி பருகியபடி உல்லாசமாகச் சிரித்தவன் மீனாட்சி அங்கு வருவதைக் கண்டு அவளை விட்டு விலகி அமர்ந்தான்...

"சாப்பிட வாங்க தம்பி..."

அன்போடு அழைத்த மீனாட்சி முன் அவன் பதவிசாக மரியாதையுடன் எழுந்து நின்றான்...

'அடப்பாவி... என்னமா நடிக்கிறான்...' என்று ஆவென மதுரகவி அவனைப் பார்த்தாள்... அவனோ கள்ளத்தனமாய் அவளைப் பார்த்து கண்சிமிட்டி சிரித்தான்...

ரிச்சர்ட் உண்ணும் வரை உடன் இருந்த மதுரகவி பிறகு வெளியில் கிளம்பினாள்... அதே நேரம் ரிச்சர்ட்டும் தானும் உடன் கிளம்பினான்... அவன் அவனது காரில் போய் விடுவான் என்று அவள் அசால்ட்டாகத் தனது காரிலேறி அமர்ந்து அதைக் கிளப்பும் போது அவன் முன்பக்கமாய் ஏறி அவள் அருகில் வந்தமர்ந்தான்...

"ஏய் என்ன பண்ற...? முதல்ல நீ கீழே இறங்கு... யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க...?"

அவள் பதற்றத்துடன் வெளிப்புறம் பார்த்தாள்...

"யார் பார்த்தால் எனக்கு என்ன...? நான் உன் கூடப் பேசணும்...?" என்றான் அவன் அழுத்தமாக இதுவரை இருந்த விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவனாக...

"என்ன பேசணும்...?"

"நமக்கு இடையில் பேசுவதற்கு விசயங்களா இல்லை..." என்றவனை நேர் கொண்டு பார்க்க முடியாது அவள் காரை கிளப்பினாள்...

கார் சாலையில் சீராகச் செல்லும் போது அவன் மெதுவே வாய்த் திறந்தான்...

"இப்போ நீ ரொம்ப மாறிட்ட... முன்பு இருந்த கலகலப்பான, துறுதுறுப்பான என்னுடைய மது இப்போது எங்கே போனாள்...?"

"ம்... அவள் செத்து போயிட்டாள்..." என்றாள் கோபமும், ஆதங்கமுமாய்...

"ஏன் பேபி இப்படிப் பேசுற...? அந்த மதுவை நான் ரொம்ப மிஸ் பண்றேன்..." என்றான் அவன் வருத்தமாக...

"ஓஹோ... மிஸ் பண்றவர் தான் ஐந்து வருடங்கள் கழித்து இப்போ என்னைத் தேடி வந்திருக்கீங்களோ...?" என்று கிண்டலுடன் கேட்டவளை கண்டு அவனில் இருந்த வருத்தம் மறைந்து உற்சாகம் வந்தது...

"புரிந்து கொள்ள இவ்வளவு நாட்களாகி விட்டது..."

"இப்போ மட்டும் புரிந்து விட்டதாக்கும்...?"

அதற்கு மர்மமான பார்வையை அவள் மீது செலுத்தியவனைக் கண்டு அவள் யோசனையானாள்...

"என்ன பதிலை காணோம்...?"

"உன்னை என்னுடன் அழைத்துக் கொண்டு போகாமல் நான் இந்தியாவை விட்டு கிளம்புவதாய் இல்லை..."

"அப்போ அது இந்த ஜென்மத்தில் நடப்பதற்கு இல்லை..." என்று கேலி குரலில் அவள் கூறினாலும் அதில் சிறிது வருத்தம் இழையோடியது...

"நிச்சயம் நம் திருமணம் இந்த ஜென்மத்தில் நடக்கும்... அதுவும் நான் என் வேலைகளை முடித்து விட்டு கிளம்புவதற்குள்..." என்றவனை விழிகள் மின்ன திரும்பி பார்த்தவளின் விழிகளில் நிராசை கொஞ்சம் எட்டி பார்த்தது...

அதற்குள் அவள் செல்ல வேண்டிய இடம் வந்து விட்டது... அவள் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்க அவனும் அவளைத் தொடர்ந்து இறங்கினான்... அந்த இடத்தை

நோக்கியவன் அப்படியே பார்த்தது பார்த்தபடி நின்று விட்டான் திகைப்புடன்...

அவனின் திகைப்பை உணர்ந்து அவள் அவனை மெதுவே அழைத்தாள்...

"ரிச்சி..."

அவளது அழைப்பில் அவளைத் திரும்பி பார்த்தவன், "பேபி... நீ எப்படி இங்கே...?"

அதில் அவளது முகம் அவமானத்தில் கன்றிப் போனது...

"செய்த தவறுக்குப் பிராயசித்தம் தேடித்தான்..." என்றவள் அவனது முகம் பாராது விறுவிறுவென முன்னால் நடந்தாள்...

அவன் யோசனையாய் அவளைப் பார்த்தபடி பின் தொடர்ந்தான்...

அன்றும் சரி, இன்றும் சரி அவனைப் பொருத்தவரையில் அவள் ஒரு புரியாத புதிர் தான்... அவன் அறிந்த பெண்களில் மதுரகவி மிகவும் வித்தியாசமானவள்... அதனால் தான் அவனது மனம் அவள் பால் ஈர்க்கப்பட்டது... அந்த ஈர்ப்பு சக்திக்கு ஆயுள் குறைவாக இருக்கும் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

ஆனாலும் அவள் மீதான அவனது ஈர்ப்பு இன்னமும் கொஞ்சமும் குறையவில்லை... அதனால் தான் இத்தனை வருடங்கள் கழித்தும் அவளைத் துரத்தி கொண்டு இங்கே வந்திருக்கிறான்...

********************

"மது..."

ஷாப்பிங் மாலில் யாரோ தன்னை அழைப்பதை உணர்ந்து திரும்பி பார்த்தாள் மதுரகவி... அவள் தாமரைக்காக உடன் வந்திருந்தாள்... அங்கு நின்றிருந்த தோழியைக் கண்டதும் முகம் எல்லாம் புன்னகையுடன்,

"ஹேய் மந்தி... எப்படிடி இருக்க...?" என்று அவள் முகம் மலர மந்தாகினியை அன்போடு அணைத்து கொண்டாள்...

"எனக்கென்ன உன் அப்பா புண்ணியத்தில் சந்தோசமா இருக்கேன்..." என்றாள் மந்தாகினி புன்சிரிப்புடன் இருபொருள்பட...

அதை உணராத மதுரகவியோ வெள்ளந்தியாய் அவளைப் பார்த்து சிரித்து வைத்தாள்...

"உனக்குத் திறமை இருக்கிறது... நீ முன்னேறி இருக்கிறாய்..."

தனது திறமையின் அளவை கற்பனையில் நினைத்து பார்த்த மந்தாகினியின் முகத்தில் கிறக்கமான மயக்கம் தோன்றியது... அந்தத் திறமை இருப்பதால் தானே ஆனானப்பட்ட செந்தில்நாதனை அவள் தனது கைப்பிடியில் வைத்திருக்கிறாள்...

"அப்புறம் உன் கணவர் எப்படி இருக்கிறார்...? இவ்வளவு நெருங்கிய தோழியாய் பழகிவிட்டு உன் கல்யாணத்திற்குக் கூட நீ என்னை அழைக்கவில்லை..." என்று எப்போதும் போல் இப்போதும் குறைப்பட்டுக் கொண்டாள் மதுரகவி...

"அவருக்கு என்ன நல்லாயிருக்கிறார்... நான் என்னடி பண்ண...? திடீர்ன்னு நடந்த கல்யாணம்... அதனால் யாரையும் அழைக்க முடியலை... அதுக்கு அப்புறம் அவர் வெளிநாடு போயிட்டார்... எப்போதாவது தான் வருவார்... அப்படி வரும் போது அவருடன் என்னுடைய நேரம் ஓடி போயிருது... இதில் யாரையும் நினைக்க எனக்கு நேரமில்லை..."

எல்லோரிடமும் கூறும் பொய்யை தோழியிடமும் சகஜமாய்க் கூறினாள் மந்தாகினி... அதை வெகுளியாய் ஏற்றுக் கொண்டாள் மதுரகவி...

"என்னைக் கேட்பது இருக்கட்டும்... நீ என்ன பண்ணி கொண்டு இருக்கிறாய்...? நீ எப்போது கல்யாண சாப்பாடு

போட போகிறாய்...?"

"இவ்வளவு நாள் ஃப்ரீயா இருந்தேன்டி... இப்போ அப்பா திடீர்ன்னு குருவி தலையில் பனங்காய் வைத்த மாதிரி பிசினசை என் தலையில் கட்டி விட்டார்..." என்றாள் மதுரகவி சோகமாக...

அதைக் கேட்டு மந்தாகினியின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது... ஆனால் மாறிய சுவடு தெரியாமல் சாமார்த்தியமாய் அதைத் தோழியிடம் இருந்து மறைத்தவள் தோழியைக் கண்டு ஒப்புக்கு சிரித்து வைத்தாள்... அதன் பின் அவள் மதுரகவியுடன் என்ன பேசினாள் என்று அவளுக்குத் தெரியாது... அவளது மனதில் ஆத்திரம் எரிமலையாய்க் கனன்றது...

வீட்டிற்கு வந்த மந்தாகினி செந்தில்நாதனின் வருகைக்காகக் கோபமாய்க் காத்திருந்தாள்... டெல்லி செல்லும் முன் அவர் தன்னைப் பார்க்க வருவார் என்று அவள் உறுதியாக நினைத்தாள்...

மதுரகவி கூறியது திரும்பத் திரும்ப அவளது காதில் ஒலித்தது... இதுநாள் வரை எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாது அவருடன் வாழ்ந்து வந்த மந்தாகினிக்கு மதுரகவியின் வார்த்தைகள் பொறாமையைத் தூண்டியது...

பள்ளி படிக்கும் காலத்திலேயே உடன் படித்த மதுரகவி மீது அவளுக்கு எப்போதும் பொறாமை உண்டு... மதுரகவியின் அழகு, அந்தஸ்து, படிப்பு என்று ஒவ்வொன்றையும் பார்த்துப் பொறாமை அடைவாள் மந்தாகினி... அவளது தந்தை ஓரளவிற்கு வசதி உடையவர் தான்... ஆனாலும் மதுரகவி அளவிற்கு அவளால் ஆடம்பரமாக வாழ முடியாது... அதனால் மதுரகவியைப் பார்க்கும் போது எல்லாம் மந்தாகினியின் மூச்சில் பொறாமை கனல் பறக்கும்...

இந்த நிலையில் தான் மந்தாகினி பனிரெண்டாவது படித்து முடித்த போது அவளது தந்தை இறந்து போனார்... அவர்

இறந்த பின்னர்த் தான் தெரிந்தது அவர் வாங்கி வைத்திருந்த கடன் விவரங்கள்... தாயும், மகளும் செய்வதறியாது முழித்துக் கொண்டிருந்தனர்...

வேறுவழியின்றி மந்தாகினி மதுரகவியிடம் உதவி கேட்டு போனாள்... அவளோ வெளிநாட்டிற்குப் படிக்கக் கிளம்பி கொண்டிருந்தாள்... அந்த அவசரத்திலும் அவள் மந்தாகினிக்கு உதவி செய்து விட்டு தான் கிளம்பி சென்றாள்... அதாவது தனது தந்தையை வந்து சந்திக்குமாறு தோழியிடம் கூறி அதற்கான ஏற்பாட்டைச் செய்துவிட்டே அவள் சென்றாள்...

அது தான் மதுரகவி வாழ்க்கையில் செய்த மிகப் பெரிய தவறு... அந்தத் தவறு தான் இன்று அவளது அன்னையின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி இருக்கிறது...

மந்தாகினி வேலை விசயமாகத் தான் செந்தில்நாதனை சந்தித்தது... ஆனால் முதல் பார்வையில் செந்தில்நாதனின் மனதினை அவள் மயக்கியதை அவள் அறியவில்லை... அது போல் தனது மயக்கத்தினை அவளிடம் சொல்ல செந்தில்நாதனுக்கு எந்தவித தயக்கமும் இருந்ததாகத் தெரியவில்லை... மனதில் பட்டதைப் பட்டென்று அவளிடம் போட்டு உடைத்தார்...

அவள் தனது மகள் மாதிரியான சின்னப் பெண், இன்னமும் மேஜராகாத ஒரு பதின்வயது பருவ பெண் என்பதைப் பற்றி எல்லாம் அவர் யோசிக்கவில்லை... அவளை வயது பெண்ணாய், மலர்ந்து மணம் வீசும் மங்கையாய், போகப் பொருளாய் தான் அவர் பார்த்தார்...

"இங்கே பாரம்மா... எனக்கு உன்னைப் பிடிச்சியிருக்கு... நீ உம்ன்னு ஒரு வார்த்தை சொன்னால் போதும்... உன் கஷ்டத்தை எல்லாம் போக்கி, உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சு தர நான் தயாரா இருக்கேன்... உனக்கு விருப்பம் இல்லை என்றாலும் பரவாயில்லை... நான் உன்னை வற்புறுத்தவில்லை..." என்று கொஞ்சமும் தயங்காது தனது தூண்டிலை வீசினார்...

அவர் அனுபவத்தில் அவளைப் போன்று எத்தனை பேரை பார்த்திருப்பார்... அவர் கூறியதை கேட்டு மந்தாகினி ஒன்றும் அதிர்ந்து போகவில்லை... தனக்குள் யோசித்தபடி அமர்ந்திருந்தாள்...

"வீட்டிற்குப் போய் யோசித்து நல்ல முடிவா சொல்லு..." என்றவரிடம் மௌனமாய்த் தலையாட்டி விட்டு வெளியில் வந்தாள்...

அந்தக் கணம் செந்தில்நாதனுக்குத் தெரிந்து போனது அவள் தன்வசம் என்று... அவரது உள்ளத்தில் உல்லாசம் பொங்கி வழிந்தது... அவர் அவளுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க நினைத்திருந்தால் அவரது மகனுக்கு அவளை மணம் முடித்து வைத்திருக்கலாம்... ஆனால் அவர் அதைச் செய்யவில்லை... அவளைப் பெண்டாள நினைத்தான் அந்தச் சண்டாளன்...

இறுதியில் அந்த விட்டில் பூச்சியும் அவரது பசப்பு வார்த்தைக்கு மயங்கி அவரது விருப்பத்திற்கு உடன்பட்டது... முதலில் மறுத்த அன்னையை மிரட்டி பிறகு சமாதானப்படுத்தி அவள் செந்தில்நாதனின் வாழ்க்கையில் தன்னைப் பிணைத்து கொண்டாள்...

அவளை மாதிரியான பெண்களுக்கு வேண்டியது முதலில் பணம், அடுத்துப் பாதுகாப்பு... இது இரண்டையும் செந்தில்நாதன் அவளுக்கு அள்ளி அள்ளி கொடுத்தார்... அதிலேயே அவளது மனம் திருப்திப்பட்டுக் கொண்டது...

அவர்களது உறவு முறையற்றதாக இருந்தாலும் அவள் அவருக்கு உண்மையாக இருந்தாள்... அவளது அன்பில் அவர் முதல் மனைவியை மறந்தவராய் அவளது கழுத்தில் தாலி கட்டி தனது இரண்டாவது மனைவியாக அவளை ஏற்றுக் கொண்டார்...

மதுரகவியிடம் எதைக் கண்டு பொறாமை பட்டாளோ அதை எல்லாம் செந்தில்நாதனின் மூலம் அடைந்து சந்தோசப்பட்டுக் கொண்டாள்...

ஆனால் இப்போது அவர் அவரது மகளுக்குத் தனியே தொழில் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதைக் கண்டு அவளது மனம் பொறாமையில் பொங்கியது...

மந்தாகினி நினைத்தது போல் செந்தில்நாதன் அன்று இரவு அவளைத் தேடி வந்தார்... வந்ததும் அவளிடம் அவர் தேடிய தேடலை உடனே தராது அவள் அலைக்கழிக்க அதில் அவர் யோசனையாய் விலகி அமர்ந்தார்...

"மினி... உனக்கு என்னாச்சு...? மூடு சரியில்லையா...?"

எப்போதும் இப்படி இருப்பவள் அவள் இல்லையே... அவரைப் பார்த்ததுமே அவளது ஒவ்வொரு செயலிலும் அப்படியொரு உற்சாகம் இருக்கும்... இன்று ஏன் இப்படி...? அவருக்குக் குழப்பமாக இருந்தது...

"நீங்க மதுவுக்குத் தனியே தொழில் வைத்து கொடுத்திருக்கீங்களா...?"

அவள் கேட்டதைக் கண்டு அவரது புருவம் யோசனையாய்ச் சுருங்கியது...

"ஆமாம் அதுக்கு என்ன இப்போ...?"

"நீங்க அந்தத் தொழிலை என் பெயருக்கு மாற்றணும்..." என்றவளை கண்டு அவருக்கு அப்படியொரு கோபம் வந்தது...

"உளறாதே..." என்றார் கோபத்தோடு...

"நான் உளறலை... நீங்க எனக்குத் தனியே தொழில் வச்சு தரணும்..."

"இப்போ அதுக்கான அவசியம் என்ன வந்தது...? உனக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் நான் செஞ்சு வச்சியிருக்கேனே... இதை விட உனக்கு என்ன வேண்டும்...?"

"மதுவுக்கும் எல்லா வசதிகளையும் செஞ்சு வச்சியிருக்கீங்களே..." என்றவளை ஒரு மாதிரியாய்

பார்த்தவர்,

"என் காலத்திற்குப் பிறகு அவளுக்கு என்று ஒன்று வேண்டாமா...?"

"அது மாதிரி உங்க காலத்திற்குப் பிறகு எனக்கும் ஒன்று வேண்டாமா...?"

"அவளும் நீயும் ஒண்ணு இல்லை மினி..." என்றவரது குரல் இறுகி போய் ஒலித்தது...

"ஏன் ஒன்றில்லை...? அவள் வயசு தானே எனக்கும்... நான் மட்டும் அநாதையா நடு ரோட்டில் நிக்கணுமா...? என்ன இருந்தாலும் அவள் உங்க மகள் இல்லையா... நான் உங்க வைப்பாட்டி தானே..." என்று கண்ணீர் வடித்தவளை கண்டு அவர் கொஞ்சமும் இரங்கவில்லை...

"ஆமாம் அவள் என் செல்ல மகள் தான்... அவள் வேறு... நீ வேறு தான்... நீ சொன்னது போல் நீ வைப்பாட்டி தான்... உன் எல்லை புரிந்து நீ நடந்து கொள்... வீணே இப்படி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிக்கிட்டு இருந்தேன்னு வையி அரவம் இல்லாமல் கொன்னு அடையாளம் தெரியாம புதைச்சிருவேன்..." என்று விரல் நீட்டி அவளை எச்சரித்தவர்,

"பணத்துக்காகத் தான்டி அப்பா வயசுள்ள என் கூடப் படுக்கச் சம்மதிச்ச... இன்னைக்கு என்ன புதுசா சிலிர்த்துக்கிற..." என்றவர் அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டார்...

அவளோ கோபத்தில் அவரின் அணைப்பில் இருந்து திமிறினாள்... அடுத்தக் கணம் அவரது கை அவளது கன்னத்தைப் பதம் பார்த்தது... அதில் அவள் பயந்து போய் அவரைப் பார்த்தாள்...

"என்னடி ரொம்பத் தான் துள்ளூற...? என் மகள் மாதிரி ஆகணும்ன்னு நீ கனவு காண்காதே... அவள் அவள் தான்... நீ நீ தான்... அதனால் நான் சொல்ற பேச்சு கேட்டு நடந்தால் உனக்குச் சேதாரம் கம்மியா இருக்கும்..." என்று

கோபமாய்க் கர்ஜித்தபடி அவளது முகம் நோக்கி குனிந்தார்...

அவர் சொன்னபடி எல்லாம் கேட்ட அந்தச் சின்னப் பெண்ணிற்கு அன்று சேதாரம் மிக அதிகமே...

செந்தில்நாதன் கிளம்பி சென்றதும் மகளின் அறைக்கு வந்த பவானி மகளின் நிலையைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டு அழுதார்...

"இதுக்குத் தான்டி சொன்னேன்... கூலோ, கஞ்சியோ கௌரவமா குடிக்கலாம்ன்னு... நீ தான் என் பேச்சு கேட்கலை... சரி அதுக்குப்புறமாவது நான் சொன்னதைக் கேட்டியா...? அதுவும் இல்லை... உனக்குச் சாமார்த்தியம் பத்தாதுடி... இப்பவும் ஒண்ணும் கேட்டு போகலை... வா, நாம எங்கேயாவது கிளம்பி போயிடலாம்..."

"எங்கே போக...?" என்று அன்னையிடம் எரிந்து விழுந்தவள்,

"நாம எங்கே போனாலும் நம்மைத் தேடி வந்து அந்தாள் கொல்லுவான்... உனக்குப் பரவாயில்லையா...?"

மகள் கூறியதை கேட்டு பவானி அதிர்ச்சியுடன் வாய் மூடி கொண்டார்...

எழ முடியாமல் எழுந்து சிரமத்துடன் குளியலறைக்குள் புகுந்த மந்தாகினி ஷவரை திறந்து விட்டு அதன் அடியில் நின்றாள்... உடலில் பல், நகம் பட்ட இடங்களில் எல்லாம் நீர் பட்டதில் எரிச்சலில் காந்தியது... அந்த எரிச்சல் அவளது மனதினை வலிமையாக்க உதவியது...

நேற்றுவரை செந்தில்நாதன் மீதிருந்த அவளது காதல் இன்று காணாமல் போனது... மனதில் அவர் மீது வன்மம் எழுந்தது...

மனம் என்பது நொடியில் மாறும் விந்தை உடையது...

மதுரகவி அந்த ஆதரவற்றோர் இல்லத்தில் இருந்தவர்களுக்குத் தன்னால் முடிந்த மட்டும் உதவி செய்து விட்டு வெளியில் வந்த போது பக்கவாட்டுப்

பகுதியில் இருந்த அந்த அறையின் ஜன்னல் ஒன்று திறந்திருந்தது... எப்போதும் மூடியிருக்கும் அந்த அறையின் ஜன்னல் இன்று திறந்திருந்ததைக் கண்டு இயல்பான ஆவலுடன் அவள் அதனுள்ளே எட்டி பார்த்தாள்...

அடுத்த நொடி உயரழுத்த மின்சாரம் பாய்ந்தது போல் அதிர்ந்து நின்றாள்...

ஏனெனில் அங்குச் சுமார் முப்பது சிறுவர், சிறுமிகள் வரிசையாகப் படுக்க வைக்கப்பட்டு இருந்தனர்... அவர்களுக்கு உயிர் இருக்கிறதா, இல்லையா என்று கூடத் தெரியவில்லை... அவர்களில் காணாமல் போன அந்த மூன்று சிறார்களும் இருந்தனர்...

கண்களில் அச்சத்தைத் தேக்கி அசையாது பார்த்து கொண்டிருந்தவள் பெருங்குரலெடுத்து கத்த எத்தனித்த போது பின்னால் இருந்து யாரோ அவளது வாயை இறுக மூடினர்...!!!

அதில் அவள் கண்கள் இருட்டி கொண்டு வர அந்த இடத்திலேயே மயங்கி சரிந்தாள்...!!!

மதுரமாகும்...!!!

"மது பேபி... நான் கூப்பிடுவது உனக்குக் கேட்கிறதா...?"

எங்கோ கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் தன்னவனின் குரல் ஒலித்தாலும் அவனின் காதல் மிகுந்த குரலும், அவனின் பிரத்யேக ஆங்கில உச்சரிப்பும் மதுரகவி அறியாததா...? ரிச்சர்ட்டின் குரல் அவளின் உயிரில் கலந்தது அல்லவா...

மெல்ல இமைகளை விரித்துப் பார்த்தவள் எழ முயற்சித்தாள்... தலை எல்லாம் கனமாய் இருப்பது போல் இருந்ததில் அவளுக்குத் தலை சுற்றிக் கொண்டு வந்தது...

"ஹேய் பேபி பார்த்து..." என்றவன் அவளை மீண்டும் படுக்க வைத்தான்...

"ரிச்சி..." என்று அவனது கைகளைப் பயத்துடன் பிடித்துக் கொண்டவளின் விழிகள் அளவுக்கு அதிகமாய்ப் பயத்தைப் பிரதிபலித்தது...

"என்ன பேபி...?" என்று தன்னைப் பார்வையால் வருடியபடி கேட்டவனைக் கண்டு,

"அந்த ஆசிரமத்தில்..." என்று சொல்ல துவங்கியவள் கண் முன் வரிசையாகப் படுக்க வைக்கப்பட்டு இருந்த அந்தப் பச்சிளம் குழந்தைகள் தோன்றினர்... அதை நினைத்தவளுக்கு மேனி நடுங்கியது... அப்போது தான் அவளுக்கு ஞாபகத்தில் வந்தது யாரோ தன்னைப் பின்புறம் இருந்து வாயை பொத்தியது...

சட்டென்று சுற்றும் முற்றும் பார்த்தவள் அது ஒரு மருத்துவமனை என்று புரிந்து கொண்டாள்...

"நான் எப்படி இங்கே...?"

"நான் தங்கியிருந்த ரிசார்ட் போகும் வழியில் உன்னுடைய காரை பார்த்தேன்... கார் மரத்தின் மேல் மோதி நிற்பதை

கண்டு பதட்டத்துடன் ஓடி வந்து பார்த்தால் நீ சுயநினைவு இல்லாமல் மயங்கி கிடந்தாய்..." என்றவன்,

"நீ மயங்கி இருந்ததைப் பார்த்ததும் என் மனசு கலங்கி போய்விட்டது... நல்லவேளை உனக்கு அடி எதுவும் படவில்லை" என்றவனின் விழிகளும் சேர்ந்து கலங்கியது...

எந்தவொரு உணர்ச்சிக்கும் ஆட்படாத ரிச்சர்ட் தனக்காகக் கண் கலங்குகிறானா...? அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அவள் அவனை வைத்த கண் வாங்காது பார்த்து கொண்டிருந்தாள்... இவன் தான் காதலித்த ரிச்சர்ட் தானா என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது... ஆனாலும் சந்தோசமாகவும் இருந்தது...

"பார்த்து காரை ஓட்ட கூடாதா பேபி..."

அவன் அப்படிக் கேட்டதும் தான் அவளுக்கு மீண்டும் அந்த நினைவு வந்தது...

"இல்லை ரிச்சி..." என்றவள் ஆசிரமத்தில் தான் பார்த்த நிகழ்வுகளைக் கூறினாள்... மயங்கிய தான் எப்படிக் காருக்குள் வந்தோம் என்று அவளுக்குத் தெரியவில்லை... அதையும் அவனிடத்தில் கூறினாள்...

அதைக் கேட்டு அவனது முகத்தில் கோபம் கொப்பளித்தது...

"உண்மையாவா சொல்ற..." என்று கேட்டவனிடம்,

"உண்மையாகத் தான் சொல்றேன்... என் கூட வா நான் காட்டுகிறேன்..." என்று எழுந்தவளை கண்டு,

"இப்போ வேண்டாம்... நீ படு..." என்க...

"இல்லை இல்லை... இப்பவே நீ என் கூட வா..." என்று அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினாள்...

இருவரும் ஆசிரமம் சென்று கேட்ட போது முதலில் அதன் நிர்வாகி அவர்களை அந்த அறையைப் பார்க்க அனுமதி அளிக்கவில்லை...

"நீங்க இப்போ எங்களைப் பார்க்க அனுமதிக்கலைன்னா நாங்க போலீசுக்கு போக வேண்டி இருக்கும்..." என்று அவள் அவரை மிரட்ட, உடன் சேர்ந்து கொண்டு ரிச்சர்ட்டும் மிரட்டினான்...

வேறுவழியின்றி அவர்களை அந்த அறையைப் பார்க்க அனுமதி அளித்தார் அதன் நிர்வாகி... அவர்கள் அங்குச் சென்று பார்த்த போது அந்த அறை வெற்று அறையாகக் காலியாக இருந்தது... அதைக் கண்டு திகைத்து விழித்தவள் ரிச்சர்ட்டின் கையைப் பிடித்துக் கொண்டு,

"இங்கே தான் அந்தக் குழந்தைகள் வரிசையாகப் படுத்திருந்தாங்க..." என்று கதறியவள் ஆத்திரத்தில் அந்த நிர்வாகியின் சட்டையைப் பிடித்துக் கொண்டு,

"உண்மையைச் சொல்லுடா... அந்தக் குழந்தைகள் உயிரோடு இருக்கா... இல்லை கொன்னுட்டீங்களா...?" என்று ஆவேசமாகக் கேட்க...

அதில் ஆத்திரம் அடைந்த நிர்வாகி ரிச்சர்ட்டிடம், "சார்... முதல்ல இவங்களை இங்கே இருந்து கூட்டிட்டு போங்க... இவங்களால ஆசிரமத்தின் பெயர் கெட்டுப் போகப் போகுது... சரியான பைத்தியமா இருக்கும் போலிருக்கு..." என்று இரைந்தார்...

"நானாடா பைத்தியம்... நீ தான்டா பைத்தியம்..." என்று கத்தியவளை அடக்கி வெளியில் அழைத்து வந்து காரிலேற்றினான் ரிச்சர்ட்...

"அவன் பொய் சொல்றான் ரிச்சி... நான் என் ரெண்டு கண்ணால் பார்த்தேன்... அந்தக் குழந்தைகள்... குழந்தைகள்..." என்று தேம்பியவள் துயரம் தாங்க மாட்டாது அவனது தோளில் சாய்ந்தாள்...

அவளை வாரியணைத்துக் கொள்ள அவனது கைகள் பரபரத்தது... ஆனால் அவளுக்கு அது எல்லாம் பிடிக்காது... அதனால் கைகளைத் தொங்க போட்டுக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான்...

சிறிது நேரம் அழுதவள் அவனிடம் இருந்து எந்தவொரு பதிலும் வராத காரணத்தால் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அப்போது தான் அவள் அதைக் கவனித்தாள்... அவன் அவளை அணைத்து ஒரு ஆறுதல் வார்த்தை கூடக் கூறவில்லை என்று...

"ரிச்சி... நீ கொஞ்சமும் மாறலைடா... அப்படியே தான் இருக்க... நான் அழுகிறது உன்னைக் கொஞ்சமும் பாதிக்கவில்லையா...? எப்படி இப்படி உன்னால் இருக்க முடியுது... உனக்குக் கொஞ்சமும் என் மீது காதலில்லையா...?" ஆதங்கத்துடன் கேட்டவளை விழிகள் சிவக்க பார்த்தவன்,

"யாருக்கு யார் மீது காதல் இல்லை..." அடக்கப்பட்ட கோபத்துடன் கத்தியவனைப் பயத்துடன் பார்த்தாள் அவள்... அவளது குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததோ என்னவோ மௌனமாய்த் தலை குனிந்து கொண்டாள்...

"உன் கலாச்சாரம் வேறு... என் கலாச்சாரம் வேறு... அதனால் தான் உன்னோட உணர்வுகளுக்கு, உன்னோட வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்து நான் என் கையைக் கட்டிக்கிட்டு அமைதியாக இருக்கிறேன்... இல்லைன்னா நான் உன்னிடம் நடந்து கொள்ளும் முறையே வேறு... இந்தக் கல்யாணம், அப்புறம் நீ ஒண்ணு சொல்வியே தாலி சென்ட்டிமென்ட் இது எல்லாம் எனக்குக் கிடையாது... இதோ இந்த நொடி இந்தக் காரில் உன்னுடன் நான் வாழ்ந்து விடத் துடிக்கிறேன்..." என்று தவிப்புடன் தலையைக் கோதி கொண்டவன்,

"இப்படியே எங்கேயாவது ஆளில்லாத தீவுக்கு உன்னைக் கடத்திட்டுப் போய்க் குடும்பம் நடத்த நான் தயார்... அதற்கு நீ தயாரா...? அப்படின்னா சொல்லு... இப்பவே இந்த நிமிசம் உன்னைக் கடத்திட்டுப் போகிறேன்... அந்தளவுக்குத் தீவிரமான காதல் என்னிடம் இருக்கிறது... உன்னிடம் அதே அளவிற்குக் காதல் இருக்கிறதா...?"

உணர்ச்சி வேகத்தில் படபடவெனத் தாய்மொழியில் தன் உணர்வுகளைக் கொட்டியவனைக் கண்டு அவள்

கண்ணிமைக்க மறந்து பார்த்திருந்தாள்... அவன் அவளிடத்தில் வலிய காதலை சொன்னவன் தான்... ஆனாலும் அப்போது எல்லாம் அவனிடத்தில் இப்படி ஒரு காதலை அவள் பார்த்தது இல்லை... அன்று அவள் எதிர்பார்த்த காதல் இன்று அவனிடத்தில் கொட்டி கிடக்கிறது... ஆனால் அவனுடன் செல்ல அவள் தனக்குத் தானே போட்டுக் கொண்ட முள் வேலி பெரிய தடையாக இருக்கிறது...

மதுரகவி கண்கள் கலங்க அவனைப் பார்த்திருக்க, அவனோ வெளிப்புறமாய்ப் பார்த்திருந்தான்... அவனுக்கு ஏனென்று தெரியவில்லை... தங்களுடைய காதலை அவள் ஏன் இவ்வளவு சிக்கலாக்கி கொள்கிறாள் என்று... அவளுக்கு அவனைப் பிடிக்கும்... அவனுக்கும் அவளை நிரம்பப் பிடிக்கும்... இதில் தேவையில்லாததைப் பிடித்துக் கொண்டு அவள் ஏன் தொங்குகிறாள் என்று அவனுக்குக் கோபம் வந்தது...

மாலை மங்கி கொண்டிருந்த அந்த வேளையில் சிவந்திருந்த அந்திவானம் அவனது வருத்தத்திற்குப் பெரிதும் ஆறுதலாக இருந்தது... அதில் அவனது கோபம், வருத்தம் எல்லாம் மறைந்ததில் அவள் புறம் திரும்பி பார்த்தான்... இன்னமும் தன்னையே இமைக்காது பார்த்து கொண்டிருந்தவளை கண்டு அவனது முகத்தில் புன்னகை மீண்டது...

"நீ ஏன் இப்படி இருக்க...? படிச்ச படிப்பிற்கான வேலை பார்க்கலை... உன்னோட லட்சியம், குறிக்கோள் எல்லாம் என்னவானது...?"

ரிச்சர்ட் கேட்டதும் மதுரகவி தனது பார்வையை அவனிடம் இருந்து திருப்பிக் கொண்டவள், "எதுவுமே பிடிக்கலை..." என்றாள் மனம் வெறுத்து...

"அது உன்னைப் பார்த்தாலே தெரியுது..." என்றவனின் பார்வை அவளை ஆராய்ச்சியாய் பார்த்து வைத்தது...

எளிமையான உடையில் ஏனோ தானோவென்று இருந்தவளை கண்டவன் மனதில் எப்போதும் கண்கள் குளிர அலங்காரம் செய்து கொண்டு புள்ளி மானாய் துள்ளி குதிக்கும் அந்த மதுரகவி கவிதையாய் வலம் வந்தாள்...

"அது தான் ஏன்...?" என்று அவன் கேட்டான்...

"நம்மைப் பத்தி பிறகு பேசுவோமா...? இப்போது காணாமல் போன அந்தக் குழந்தைகளை எப்படிக் கண்டுபிடிக்கிறது...? அதைச் சொல்லு ரிச்சி..."

"நீ சொன்னது போல் போலீசில் கம்ப்ளையிண்ட் கொடுக்கலாம்..."

அதுவே அவளுக்கும் சரியென்று பட்டது... அடுத்து அவர்கள் நேரே மாநகர ஆணையர் அலுவலகத்திற்கு வந்தார்கள்... ஆணையர் அவளது தங்கை தாமரையின் வகுப்பு தோழி கயல்விழியின் தந்தை விஜய் தான்... அதனால் எளிதில் அவரை நேரில் சந்திக்க முடிந்தது...

"அடடே மதுரகவி வாம்மா..." என்று வரவேற்றான் விஜய்...

"அங்கிள் இவர் ரிச்சர்ட்..." என்று ரிச்சர்ட்டை அவனிடம் அறிமுகப்படுத்தி வைத்தவள் ஆசிரமத்தில் தான் கண்ட விசயத்தை ஒன்று விடாது அப்படியே கூறினாள்...

அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்ட விஜய், "ஒரு கம்ப்ளையிண்ட் எழுதி கொடுத்துட்டு போம்மா... நான் விசாரிக்கிறேன்..."

"ரொம்ப நன்றி அங்கிள்..." என்று அவள் விஜயிடம் விடைப்பெற்று வெளியில் வந்தாள்... உடன் ரிச்சர்ட்டும்...

"இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா...?" என்று வரும் வழி எல்லாம் அவனிடம் புலம்பியபடி வந்தாள் மதுரகவி...

அவளது வீட்டில் அவளை இறக்கி விட்டவன் உடனே கிளம்பி விட்டான்... அவன் கண்ணில் இருந்து மறையும் வரை அவள் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்...

தவறு முழுவதும் அவள் மீது தான்... ஆனாலும் தன்னைத் தேடி வந்திருக்கும் காதலனை எண்ணி அவளது மனம் நெகிழ்ந்தது... ஆனாலும் இவ்வளவு தாமதமாக அவன் வந்தது குறித்து அவன் மீது அவளுக்குச் செல்ல கோபமும் வந்தது... அதையும் மீறி அவர்களது காதல் கை கூடுமோ என்கிற நிராசை பேராசையாக மாறித் தவித்தது...

இரவு வேலை முடிந்து வீட்டிற்கு வந்த விஜய் தனது மனைவி முத்துபேச்சியைத் தேடி சமையலறைக்குச் சென்றான்... அங்கே அவள் இரவு சமையலில் மும்முரமாக ஈடுபட்டு கொண்டிருந்தாள்...

"கண்ணம்மா..." என்ற அவனது விளிப்பில் முகம் மலர திரும்பியவள்,

"வா சாமி..." என்க...

"எத்தனை தடவை சொல்றது இந்தச் சாமி வேண்டாம்ன்னு..." என்று செல்ல கோபத்துடன் சிணுங்கியவன் அவளைப் பின்னால் இருந்து அணைத்துக் கொண்டு முன்னால் எட்டி பார்த்து,

"என்ன சமைக்கிறீங்க மினிஸ்டரம்மா...?"

"உங்க மூணு பேருக்கும் பிடிச்சது தான் சாமி..." என்று கூறி அவள் சிரிக்க...

"சாமின்னு சொல்லாதேன்னா கேட்கிறியா...?" என்றவன் தாபத்தோடு அவளது கழுத்தில் முகம் புதைக்க, கணவனது தொடுகையில் பாகாய் உருகியவள்,

"விஜூ..." என்று காதலாக அழைத்தவள் கண் மூடி கிறங்கி நின்றாள்...

"இப்போ எங்கேடி போச்சு உன் சாமி..." என்று கேலி குரலில் கேட்டவனைக் கண்டு விழி திறந்தவள்,

"அப்போ தானே நீ இப்படி ரொமான்ஸ் பண்ணுவ...? இல்லாங்காட்டி நீ உன் புள்ளைங்க கூடத் தானே இருப்ப..."

என்று கண்சிமிட்டி விசமமாய்ச் சிரித்தவளின் நெற்றியின் மீது விளையாட்டாக முட்டியவன்,

"இந்தப் பேச்சு பேசுற உன் வாயை..." என்றபடி மனைவியின் இதழ்களைத் தனது இதழ்களால் மூட எத்தனித்தவனின் உதடுகள் மீது கை வைத்து தடுத்தவள்,

"உம்ம மவன் எப்போன்னாலும் வந்து குதிப்பான்... ஜாக்கிரதை..." என்று கணவனை எச்சரித்தாள்...

அந்நேரம் சமையல் பொருட்களை வைக்கும் 'ஸ்டோர் ரூம்'இல் இருந்து ஒரு குரல் கேட்டது...

"நான் இங்கே இருக்கேன்ம்மா..." என்றபடி அவர்களது ஏழு வயது மகன் கனியமுதன் வெளியில் வந்தான்...

'பார்த்துக்கோ...' என்று விழிகளால் மகனை சுட்டி காட்டிய மனைவியைக் கண்டு விஜய் அசடு வழிந்தான்...

அடுத்து ஒரு குழந்தை வேண்டவே வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்தவனைக் கெஞ்சி கூத்தாடி மலையிறக்கி தவமாய்த் தவமிருந்து பெத்த மகன் அவளை அவளது கணவனுடன் ஆசையாய் ஒரு வார்த்தை பேச விட மாட்டான்... அவனுக்கு எப்போதும் அவன் அம்மா வேண்டும்... அவன் சரியான அம்மா கோண்டு...

"அக்கா என்ன செய்கிறாள்ன்னு பார்த்துட்டு வா..." என்று விஜய் மகனிடம் சொல்ல...

"அக்கா படிக்கிறாங்க..." என்று வெளியில் செல்லாது பதில் கூறியவன் சமையல் மேடை மீது ஏறி சட்டமாய் அமர்ந்து கொண்டான் அன்னையை விட்டு சிறிதும் அகலாது... அதைக் கண்டு முத்துபேச்சி களுக்கென்று சிரித்தாள்...

"தனியா என் கிட்ட மாட்டுவல்ல... அப்போ வச்சிக்கிறேன்டி..." என்று முணுமுணுத்த கணவனின் விலாவில் முழங்கையால் குத்தியவள்,

"கட்டிய பொண்சாதி கிட்ட பேசற பேச்சா இது... வச்சிக்கிறேன் அது இதுன்னு..." என்று அவள் கோபமாய்த்

தனது விழிகளை உருட்ட...

"அது இது எல்லாம் பொண்டாட்டி கிட்ட மட்டும் தான்டி வச்சிக்க முடியும்..." என்று சன்ன குரலில் பேசிய தகப்பனை முறைத்துப் பார்த்தான் சின்னவன்...

"ஆமாம், ஆமாம்... பெரிய ஹீரோ... ரொமான்ஸ் மன்னன்னு நினைப்பு..." என்று மனைவியவள் நொடித்தாள்...

"ஐயாவும் ஒரு காலத்தில் ஹீரோ தான்டி... என் ரொமான்ஸ்க்கு என்ன குறைச்சல்...?"

"ரொமான்ஸ்...? யாரு நீயி...? அட போ சாமி..." என்று வாய் மூடி சிரித்தவளை கண்டு அவன் அடிப்பது போல் பாவனைச் செய்ய...

"அப்பா... அம்மாவை அடிச்சீங்க கன் எடுத்து ஷூட் பண்ணிருவேன்..." என்று மகன் தந்தையை எச்சரித்தான்...

"எனக்கு வில்லன் நீ தான்டா..." என்று மகனின் தலையில் வலிக்காது குட்டியவன் குளிக்கச் சென்றான்...

அன்றிரவு பிள்ளைகள் உறங்கியதும் மனைவி அருகில் வந்த விஜய் அவள் பெரும் யோசனையில் இருப்பதைக் கண்டு,

"என்ன கண்ணம்மா இவ்வளவு தீவிரமான யோசனையில் இருக்கிற...?"

"எல்லாம் அந்தச் செந்தில்நாதனை நினைச்சு தான்... சென்ட்ரல் மினிஸ்டரானாலும் ஆனான்... அவனோட ஆட்டம் தாங்க முடியலை... கட்சியும் அவன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டேங்குது... வோட்டு வங்கி பாதிக்கப்படும்ன்னு பயந்து அவன் பின்னே போறாங்க... அவன் மீது அத்தனை ஊழல் புகார் இருக்கு..."

"நடவடிக்கை எடுக்கிறதா இருந்தா சட்ட ரீதியான நடவடிக்கையை எடுக்கணும்... இல்லைன்னா ஆதாரம் இல்லாமல் நடவடிக்கை எடுத்துட்டாங்கன்னு அவன் கூவுவான்..." என்றவன்,

"இன்னைக்கு அவனோட பொண்ணு எங்க ஆபிசுக்கு வந்திருந்தாள்..." என்று அவன் மதுரகவி வந்திருந்த விசயத்தைக் கூறினான்...

"யாரு மதுரகவியா...? ரொம்ப நல்ல பொண்ணு..." என்று கூறியவள் அந்தக் குழந்தைகளின் நிலையைப் பற்றிக் கவலைப்பட்டாள்... அதைத் தான் பார்த்துக் கொள்வதாகக் கூறியவன்,

"உன் கூடச் சமூகச் சேவைன்னு அப்படி இப்படின்னு அலையறதால அவள் நல்ல பொண்ணா...? என்னை மாதிரி அவளுக்கு வர போற பையனும் ரொம்பப் பாவம்..." என்று போலியாக வருத்தப்பட்டவனின் தோளில் செல்லமாய் அடித்தவள்,

"உண்மையில் அவள் நல்ல பொண்ணு தான்... அமைச்சர் பொண்ணுங்கிற எந்தப் பந்தாவும் கிடையாது... அவங்கம்மா மாதிரி..."

"என் மனைவியும் அப்படித்தான்... அமைச்சர் என்கிற பந்தா இல்லாம என் கையில் சமத்தா அடங்குவாங்களாக்கும்..." என்றவன் மனைவியை அணைத்துக் கொள்ள,

"நீ இப்படிச் சொல்லா விட்டாலும் இன்னைக்கு நான் உன்னை விடப் போறது இல்லை விஜூ..." என்று முத்துபேச்சி கணவனை விட வேகமாய்த் தழுவி கொண்டாள்...

அவளைப் போன்றே அவளது செயலும் அவனை அதிரடியாய்த் தாக்கியது... மனைவியைப் புரிந்தவனாய் அவனும் அவளுள் சுகமாய் மூழ்கி முத்தெடுக்கத் துவங்கினான்...

தொழிலுக்குத் தேவையான இடத்தைப் பார்ப்பதற்காக ரிச்சர்ட்டும், மதுரகவியும் தனியே வந்திருந்தார்கள்... உடன் திருச்செல்வனும் வருவதாக இருந்தது... அவனுக்கு ஒரு அவசர வேலை வந்ததும் தங்கையை மட்டும் தனியே அனுப்பி வைத்தான்...

ஏக்கர் கணக்கில் வளைத்து போடப்பட்டு இருந்த அந்த இடம் அவர்களது தொழிலுக்கு ஏற்றதாக இருந்தது...

"அருமையான இடம்..." என்று கூறியவனைத் திரும்பி பார்த்தாள் மதுரகவி...

கண்களில் குளிர் கண்ணாடி அணிந்து இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி அலட்சியமாய் ஆறடி உயரத்தில் கம்பீரமாய் நின்றிருந்தவனின் அழகு எப்போதும் போல் இப்போதும் அவளை மயக்கியது... அந்நேரம் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்... அவன் அப்படித் திரும்பி பார்த்ததும் மாட்டி கொண்ட தவிப்பில் அவள் திருதிருவென விழித்தாள்... அதைக் கண்டு அவனது உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது...

"இந்த இடத்தைப் பார்க்காமல் என்னைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயா...?" என்று கிண்டலாய் கேட்டவனிடம் அவள்,

"ரிச்சி... உண்மையைச் சொல்லு... நீ உண்மையில் தொழிலதிபனா...? இல்லை எனக்காக அது போல் நடிக்கிறாயா...?"

"என்னைப் பத்தி நீ என்ன நினைக்கிற...?" என்று கேட்டவன் கண்களில் இருந்து குளிர் கண்ணாடியை கழட்டி விட்டு அவளது விழிகளைக் கூர்ந்து பார்த்தான்...

அவனது பார்வையில் அவளது நெஞ்சம் சில்லிட்டது...

"நான்...?" என்று வார்த்தை வாராது தவித்தவளை கண்டு,

"பிச்சைக்காரன் என்று நினைத்தாயா...?" என்று கேட்டவனின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது...

"நான் அப்படி எல்லாம் நினைக்கலை..."

"பின்னே வேறு எப்படி நினைத்தாய்...?" என்று கேட்டவனின் முகத்தில் அப்படி ஒரு அடக்கப்பட்ட கோபம் இருந்தது...

அவனது கோபத்தில் விழி கலங்கியவளை கண்டு அவன் தன்னைச் சாந்தப்படுத்திக் கொண்டான்...

"பழசை எல்லாம் மறந்து விடு..." என்று எளிதாகக் கூறியவனை அவள் திகைப்பாய் பார்த்தாள்...

"நான் உன்னைப் பார்க்கணும்... உன் கூட இருக்கணும்... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு தான் இந்தத் தொழிலை வைத்து நான் இங்கே வந்தது... நீ மட்டுமே எனது குறிக்கோள்... இந்தத் தொழில் அல்ல..."

கடைசியில் அவள் நினைத்தது சரியே...

"அப்பாவுக்குத் தெரிஞ்சா கொன்னு போட்டுருவாரு..." என்றாள் விழிகளில் பயத்தைத் தேக்கி...

"அவர் சாதி, அந்தஸ்து இப்படி நிறையப் பார்ப்பார் ரிச்சி..."

"இது எல்லாம் என்னை நீ காதலிக்கும் போது உனக்கு ஏன் தோணலை...?" என்றவனைக் கண்டு அவள் உதடு கடித்துப் பேசாது இருந்தாள்...

காதலுக்குக் கண் இல்லை... அது போல் அவளது காதலுக்குத் தேசம் இல்லை... அப்போது நேசம் மட்டுமே கண் முன் நின்று அவளது கண்களை மறைத்தது... நிதர்சனம் உறைத்த போது தானே அவளுக்குக் காதலும் கசந்தது... அன்று கசந்த காதல் இன்று இனிக்கும் விந்தை தான் அவளுக்குப் புரியவில்லை...

"இந்தச் சாதி, அந்தஸ்து எல்லாம் தாண்டி ஒரு நாள் நீ என்னைத் தேடி வருவ பார்..." என்று கூறியவன் விறுவிறுவென முன்னால் செல்ல அவள் பாவமாய் அவனைப் பின்தொடர்ந்தாள்...

*****************

"பாப்பா... என்ன அலங்காரம் எல்லாம் பலமாயிருக்கு...?" என்று பவானி மகளிடத்தில் கேட்க...

"உங்க மாப்பிள்ளை வருகிறார்..."

கொஞ்சமும் அலட்டாது கூறிய மந்தாகினியை கண்டு அவர் தான் அதிர்ந்து போனார்...

"என்னது திரும்பவும் வர்றானா...? வந்து உன்னைப் புண்ணாக்குவதற்கா...? வேண்டாம் பாப்பா..." என்றார் அவர் கண்களில் பயத்தைத் தேக்கியபடி...

அன்று செந்தில்நாதனின் செய்கையில் மகள் ஒரு வார காலமாகத் துன்பப்பட்டது அவருக்குத் தானே தெரியும்...

"அவரைக் கோபப்படுத்தினால் தான்ம்மா அப்படி நடந்துக்குவார்... மத்தபடி நல்ல மனுசன் தான்... இந்த ஆறு வருசத்தில் அவர் எப்பவாவது என்னைக் கஷ்டப்படுத்தி இருக்கிறாரா...? அவருக்குள்ளும் நல்ல மனசு இருக்கும்மா..."

அவர்கள் பேசி கொண்டிருக்கும் போதே செந்தில்நாதன் அங்கு வருகை தந்தார்... புன்னகையுடன் வரவேற்ற மந்தாகினியை அவர் யோசனையுடன் பார்த்தார்... அன்று சண்டையிட்ட பின் இன்று தான் அவர் வருகிறார்...

"என்ன பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?" என்று மையலாகக் கேட்டவளை கண்டு தனது யோசனையைத் தள்ளி வைத்தவர் அவளை அணைத்துக் கொண்டார்...

"இப்படி நீ இணக்கமா இருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கிறது..." அவளது இணக்க நிலை எந்தளவிற்கு நன்றாக இருக்கிறது என்று ஆராய ஆரம்பித்தவரை அவள் தடுக்கவில்லை...

அவரது விருப்பத்திற்கு எல்லாம் அவள் விருப்பத்துடன் வளைந்து கொடுத்தாள்... கூடல் முடிந்து விலகி படுத்தவரை கண்டு அவள் மனம் இறுகி போனாள்...

'என்னையவா வைப்பாட்டின்னு சொன்ன...? இந்த வைப்பாட்டியோட பவர் என்னன்னு இனி தானே நீ பார்க்க போற...?' என்றவளின் கண்கள் அவரைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தது...

'மகா கனம் பொருந்திய மரியாதைக்குரிய மினிஸ்டர் செந்தில்நாதனின் விதி இந்த வைப்பாட்டி சின்னப் பெண்ணால் எழுதப்படப் போகிறது...' என்று நக்கலாய் நினைத்தவளின் விழிகள் அருகில் படுத்து அயர்ந்து உறங்கி கொண்டிருந்தவரை வன்மமாய்ப் பார்த்து வைத்தது...

மறுநாள் செந்தில்நாதன் முத்துபேச்சியைச் சந்திக்க வந்தார்... அமைச்சர் என்பதால் அவளும் உடனே அவருக்கு அனுமதி கொடுத்தாள்... வந்ததும் வராததுமாய் அவர் அவளிடத்தில் கோபத்தில் தாம்தூம் என்று குதித்தார்...

"என்னுடைய நிலங்களை எப்படிப் புறம்போக்கு நிலம்ன்னு சொல்லி முள்வேலி போட்டு ஆக்கிரமிப்பு பண்ணலாம்...? அது எல்லாம் என்னுடையது..." என்று ஆத்திரத்தில் அவர் எகிறினார்...

அவளோ கொஞ்சமும் அசையாது அவரைத் தீர்க்கமாய்ப் பார்த்தபடி, "புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிச்சா இது தான் நடக்கும் மிஸ்டர். செந்தில்நாதன்..." என்றாள் சிறிதும் அசராது...

அவர் அரசியலில் பழம் தின்னு கொட்டை போட்டவர் என்றால், அவள் பத்து வயதில் இருந்து அடிமட்டத்தில் இருந்து அதிரடியாய் அரசியலுக்கு வந்தவள்...

பலம் வாய்ந்த இருவரும் நேருக்கு நேர் மோதி கொண்டனர்...!

மதுரமாகும்...!!!

"மது..."

இரவு உணவு முடித்து விட்டு அறைக்குள் முடங்கிய மதுரகவியின் காதுகளில் அண்ணனின் அதிகாரம் கலந்த குரல் வேகமாய் வந்து தாக்கியது... அடுத்தச் சில நொடிகளில் அவளது அறை கதவு பெரும் அதிர்வுடன் திறக்கப்பட்டது... திருச்செல்வன் அவளது அறைக்குள் கோபத்துடன் பிரவேசித்தான்...

"நீ கமிஷனர் ஆபிசுக்கு போயிருந்தியா...?"

"ஆமாம்..." என்று ஆமோதித்தவள்,

"அண்ணா..." என்றபடி ஆசிரமத்தில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி அச்சத்துடன் கூறியவள்,

"அண்ணா... நம்ம செல்வாக்கை பயன்படுத்தி அதன் நிர்வாகியை பிடிச்சு விசாரிக்கச் சொல்லுண்ணா... பாவம், எத்தனை குழந்தைகள் தெரியுமா...?" என்றவளது கண்களில் கண்ணீர் அரும்பியது...

தங்கை சொல்வதை எல்லாம் பொறுமையுடன் கேட்ட திருச்செல்வன், "உனக்கு எதுக்கு இந்த ஊர் வம்பு... தொண்டு செய்யப் போனோமா, வந்தோமான்னு இருக்கணும்...? இப்படித் தேவையில்லாத ஆராய்ச்சியில் இறங்க கூடாது..."

"அண்ணா..."

"இங்கே பார் மது... சட்டம் இருக்கு... போலீஸ் இருக்காங்க... அவங்க பார்த்துக்குவாங்க... நீ உன்னைப் பத்திரமா பார்த்து கொள்..."

அவன் சத்தம் போட்டுக் கொண்டு இருக்கும் போதே செந்தில்நாதன் அங்கு வந்து விட்டார்... அவரைக் கண்டதும் மதுரகவி,

"அப்பா...." என்றபடி அழுது கொண்டே அவரது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... மகளை ஆதரவாக அணைத்துக் கொண்ட செந்தில்நாதன்,

"திரு இப்போ எதுக்கு மதுவை சத்தம் போடுற...?"

"அவள் பண்ணிட்டு வந்திருக்கிற காரியத்துக்கு..." என்று அவள் செய்த காரியத்தை அவரிடம் கூறியவன்,

"இவள் என்ன சாதாரண வீட்டு பொண்ணா இஷ்டத்துக்கு விரும்பிய இடத்துக்கு எல்லாம் போயிட்டு வர்றதுக்கு... இவள் எங்கே எங்கே போகிறாள்ன்னு பார்க்கவே ஒரு குரூப் கையில் கேமிராவோடு அலைஞ்சிக்கிட்டு இருக்கு... சரி ஏதோ சோசியல் சர்வீஸ் தானேன்னு நானும் இவ்வளவு நாளாய் விட்டு வச்சேன்... இவள் இப்படித் தொண்டு செய்றது நமக்கும் ஒரு அரசியல் விளம்பரம், ஆதாயம்ன்னு பேசாம இருந்தேன்... ஆனால் இன்னைக்கு இவள் பண்ணியது ரொம்பத் தப்புப்பா..."

"என்ன மதும்மா...? அண்ணன் கோபப்படும் அளவுக்கு இப்படி நடந்திருக்கியே... இனி இது போல் நடந்து கொள்ளாதே..."

"அப்பா... நான்..." மதுரகவி பேசும் முன் தடுத்த செந்தில்நாதன்,

"அண்ணன் சொல் பேச்சு கேள் மது..."

"இனியாவது புத்தியோடு நடந்து கொள்ளச் சொல்லுங்கப்பா..." என்ற திருச்செல்வன் தங்கையை முறைத்தபடி அறையை விட்டு வெளியேறினான்...

"மதும்மா... உனக்கு ஒண்ணும் ஆகலையே... நீ எப்படி அங்கிருந்து வந்த... யாரும் உன்னை ஃபாலோ பண்ணலையே..."

ரிச்சர்ட் தனக்கு உதவியதை சொல்ல நினைத்துத் தொண்டை வரை வார்த்தைகள் வந்த போதும் அதை அப்படியே விழுங்கி கொண்டவள்,

"நான் நைசா அங்கே இருந்து வந்துட்டேன்ப்பா..."

"நல்லது செய்தாய் மது... பார்த்து ஜாக்கிரதையாக இரும்மா..."

"அப்பா... நீங்களாவது இதை என்ன என்று கேட்க கூடாதா...? பாவம்ப்பா எல்லாம் சின்னஞ்சிறு குழந்தைகள்..."

"நிச்சயம்மா... என் செல்வாக்கை பயன்படுத்தி இதை என்னன்னு விசாரிக்கச் சொல்கிறேன்..." என்று அவர் மகளுக்கு ஆறுதல் அளிக்கும் போது மீனாட்சி அங்கு வந்தார்...

"என்னவாம் உங்க மகளுக்கு...? இன்னைக்கு ரொம்பச் செல்லம் கொஞ்சிக்கிட்டு இருக்கிறாள்..."

"உங்க மகன் என்னைத் திட்டிட்டு போயிட்டான்..." அன்னையிடம் புகார் வாசித்தாள் மதுரகவி...

"திருவா...?" மீனாட்சிக்கு பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... ஏனெனில் அவன் தங்கைகளிடம் நிரம்பப் பாசம் கொண்டவன்...

"மது... நீ ரெஸ்ட் எடு..." என்று மகளைப் பணித்த செந்தில்நாதன்,

"ஷ்... மீனு நீ ஒண்ணும் பேசாதே..."என்று மனைவியை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தார்...

"வர வர இவள் நடந்துக்கிறது கொஞ்சமும் சரியில்லை..." என்று அலுத்துக் கொண்டே மீனாட்சி வேலையாய் உள்ளே சென்றுவிட்டார்...

செந்தில்நாதன் யோசனையாய் அமர்ந்து விட்டார்...

*****************

பிரபல கல்லூரியில் இருந்த அந்த மாணவியின் அலைப்பேசியில் காணொளி குறுஞ்செய்தி ஒன்று வந்தது... அதைத் திறந்து உள்ளே சென்று பார்த்தவளின் விழிகளில் அச்சம் நிறைந்தது... அவளுக்குப் பயத்தில் வியர்வை ஆறாய் பெருகி வழிந்தது... அவளது கண்களை அவளால் நம்ப முடியவில்லை...

அவள் குளிக்கும் காட்சியை யாரோ காணொளியாக எடுத்திருந்தனர்... கைகள் நடுங்க அதை அணைத்தவளுக்கு ஊரில் அய்யனார் போன்று கோபத்துடன் முறைக்கும் தந்தையின் முகம் நினைவிலாடியது... பிற்போக்குவாதியான தந்தையிடம் போராடி வாதாடி கல்லூரியில் சேர்ந்தவளுக்கு இத்தகைய சோதனை வரும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை...

அந்நேரம் அவளது அலைப்பேசி அலறியது... தெரியாத எண்ணில் இருந்து வந்த அழைப்பு... அவளுக்கு இருந்த மனநிலையில் அதை எடுத்து பேச விரும்பவில்லை... அதனால் அழைப்பை துண்டித்து விட்டாள்...

'இப்போ நீ ஃபோன் எடுத்து பேசலைன்னா அந்த வீடியோவை நெட்டில் ஏத்தி விடுவேன்...' என்று வந்த மிரட்டல் குறுஞ்செய்தியை கண்டு திகைப்புற்றவளாய் பதட்டத்துடன் அந்த எண்ணிற்கு அவளே அழைத்தாள்...

"இன்னும் ஒரு மணி நேரத்தில் நாங்க சொல்கிற ஹோட்டலுக்கு நீ வந்து சேரணும்..." என்று கட்டளையாக ஒலித்தது மறுபக்கம் பேசிய ஆணின் குரல்...

"அந்த வீடியோவை டெலிட் பண்ணிருங்க... ப்ளீஸ்... எங்கப்பாவுக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்னு போட்டுருவாரு..."

"இங்கே பாரும்மா... நீ நாங்க சொன்னபடி கேட்டால் நாங்க எதுக்கு உங்கப்பா கிட்ட சொல்ல போகிறோம்... உங்கப்பா கிட்ட மட்டும் இல்ல வேறு யார் கிட்டேயும் சொல்ல

மாட்டோம்... ஆனா அதுக்கு நாங்க சொல்ற பேச்சை நீ சமத்தா கேட்கணும்..."

அந்த மாணவிக்கு வேறுவழி தெரியவில்லை... அதனால் அவர்கள் சொன்ன விடுதிக்கு சென்றாள்... அந்த ஆடம்பர நட்சத்திர விடுதியை அவள் பயத்துடன் பார்த்தாள்... மீண்டும் அவளது அலைப்பேசி அழைத்தது...

"ரூம் நம்பர் ....... போ..." என்று கட்டளையிட்டதும் அழைப்புத் துண்டிக்கப்பட்டது...

அந்த அறையின் முன் நின்று அவள் அழைப்பு மணியை ஒலிக்கச் செய்ததும் உடனே கதவை திறந்த நடுத்தர வயது ஆண் ஒருவன் ஆர்ப்பாட்டமாய் அவளை வரவேற்றான்... அவன் சமூகத்தில் பெரிய பொறுப்பில் இருக்கும் ஒரு அதிகாரி...

"வா... வா... உனக்காக எத்தனை நேரமாகக் காத்திருக்கிறது..." என்று அவளின் கைகளைப் பிடித்து அவன் உள்ளே இழுத்தான்...

அந்நிய ஆடவனின் தொடுகையில் அருவருப்பில் அவனது கையை உதறி தள்ளினாள் அவள்... அதற்கு அவன் சிரித்தபடி,

"ப்ரெஷ் பீஸ்ன்னு சொன்னப்போ நான் நம்பலை... ஆனா உன் கோபத்தைப் பார்க்கிறப்போ அது உண்மைன்னு தெரியுது..." என்றவன் அவளது திமிறலை பொருட்படுத்தாது முரட்டுத்தனமாக அவளை அறைக்குள் இழுத்து வந்து கதவை சத்தினான்... தானியங்கி கதவானது தானே தாழ்ப்பாள் போட்டுக் கொண்டது...

மீண்டும் அலைப்பேசி அடித்ததில் அவள் தன் முன் நின்றவனைப் பயத்துடன் பார்த்தாள்...

"ஃபோன் பேசுறதுக்கு எல்லாம் நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்..." என்றவன் கட்டிலில் அமர்ந்து பாட்டிலில் இருந்த மதுவை எடுத்து அப்படியே பருக ஆரம்பித்தான்... கூடவே பெண்ணவளின் அழகையும் சேர்த்து...

அலைப்பேசியை அவள் காதில் வைத்ததும், "அங்கே இருப்பவன் சொல் பேச்சு கேட்டு நடந்தால் உன்னோட மானம் போகாது... இல்லை இந்த நொடி அந்த வீடியோவை நெட்டில் போட்டு விடுவேன்..."

அழுது கொண்டே அழைப்பை துண்டித்த பெண் வேறுவழியின்றி அந்த ஆடவனை நோக்கி நடந்தாள்... அதில் சந்தோசம் அடைந்தவனாய் அவன் அவளை ஆசையாய் தழுவி கொண்டான்... ஊருக்குள் மானம் காக்க நான்கு சுவற்றுக்குள் தனது மானத்தை விலையாகக் கொடுத்தாள் அந்த இளம் பெண்...

அடுத்து வந்த மாதங்களில் இதுவே தொடர் கதையானது... முதலில் குளியலறை காட்சிகளை வைத்து மிரட்டியவன் இப்போது கூடல் காட்சியை அனுப்பி வைத்து அவளை மிரட்டினான்... அவன் யார் என்று கூடத் தெரியாது, முகம் காட்டாது பெண்ணவளை நாய்க்குட்டியாய் மாற்றி இருந்தான்...

முடிவில் அந்தப் பெண் கருவுற்றாள்... கர்ப்பத்தை மறைக்க இயலாது அவமானம் தாங்காது அவள் அங்கிருந்த கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள்...

இந்தப் பெண்ணின் மரணம் மற்ற மாணவர்கள் இடையே சந்தேகத்தைக் கிளப்பியது... எல்லாரும் நீதி கேட்டுச் சாலையில் இறங்கி போராடினார்கள்... அதன் விளைவு இதை விசாரித்த காவல்துறை அவள் கர்ப்பமாக இருப்பதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவளது காதலன் ஏமாற்றி விட்டதால் தற்கொலை செய்து கொண்டாள் என்று வழக்கை மூடி வைத்து விட்டது...

அதைக் கேட்ட அவளது தந்தை தனக்கு அப்படியொரு மகள் இருந்ததை மறந்து போனார்... தலையை முழுகியதோடு மகளின் நினைவுகளுக்கும் பெரிய முழுக்கு போட்டு விட்டார்... அதனால் சுலபமாக அந்தப் பெண்ணின் வழக்கு மூடி மறைக்கப்பட்டு விட்டது... அந்தப் பெண்ணின் உடல் அநாதை பிணமாய் எரியூட்ட பட்டது...

அபலை பெண்களின் அழுகுரல் இறைவனின் காதிலும் விழுவதில்லை போலும்... ஒருவேளை அந்த இறைவனும் ஆண் தானோ...? அதனால் தான் பெண்ணவளின் கண்ணீர் அவனது மனதினை கரைக்கவில்லையோ...

**********************

கட்சி மேலிடம் அழைப்பதாய் தகவல் வந்ததும் முத்துபேச்சிக்கு எல்லாம் புரிந்து போனது... அது எதற்காக என்று... ஆனாலும் அழைப்பை ஏற்று முதல்வரை நேரில் போய்ச் சந்தித்தாள்...

"முத்து... நீ எதுக்காகச் செந்தில்நாதனின் விசயத்தில் தலையிடுற... அவன் விசயத்தில் தலையிட்டால் அவன் கட்சியையே இரண்டாக உடைத்துத் தனிக் கட்சி ஆரம்பித்து விடுவான்... அதனால் அவனை ரொம்பவும் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்..."

"பார்த்து தான் கையாளுகிறேன் ஐயா... அவர் ஆக்கிரமிச்சது எல்லாமே புறம்போக்கு நிலங்கள்... மாநகராட்சிக்கு சொந்தமானது... இப்போ புதுசா சட்டம் போட்டு எல்லாப் புறம்போக்கு நிலத்தையும் கையகப்படுத்திக் கிட்டு இருக்கிறோம்... அதில் வீடில்லாத மக்களுக்கு வீடு, அவங்க வளர்ச்சிக்குத் தொழில்கூடங்கள் இப்படி ஏதாவது அமைச்சு கொடுக்கணும்... அதுக்காகத் தான் நான் இதைச் செய்தது... இதை எப்படி அவரோட சொந்த உபயோகத்திற்குக் கொடுக்க முடியும்...?"

முத்துபேச்சியைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும்... எதையும் நேர்மையுடன் செய்பவள்... மக்கள் செல்வாக்கு அதிகம் உடையவள்... அதே போல் தான் செந்தில்நாதனும்... குறுக்குவழியிலாவது தனது செல்வாக்கை தக்க வைத்துக் கொண்டு இன்றும் எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்குபவர்... என்ன செய்வது என்று முதல்வருக்குத் தெரியவில்லை...

இறுதியில் முத்துபேச்சியின் பக்கமே அவர் நின்றார்... என்றைக்கு இருந்தாலும் நேர்மை தானே வெல்லும்...

"சரி முத்து... நீ போ... நான் அவனைப் பார்த்துக்கிறேன்... அவன் செஞ்சதுக்கு வார்ன் பண்றேன்..." என்று கூறினார்...

முத்துபேச்சி விடை பெற்று வெளியில் வந்தாள்... அவளது மனதில் செந்தில்நாதனை பற்றிய யோசனைகளே...

இரவும் அதே யோசனையில் இருந்தவளை கண்டு விஜய், "என்ன யோசனை என் கண்ணம்மாவிற்கு...?" என்று கேட்டான்...

"ஒண்ணும் இல்லை விஜூ..." என்றவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

தன்னை மறந்து இருக்கும் நேரங்களில் மட்டுமே அவள் 'விஜூ' என்று அவனை அழைப்பாள்... அது எப்போதும் மகிழ்வான தருணங்களாகவே இருக்கும்... ஆனால் இன்று அவள் அப்படி அழைத்தது, அவளது செய்கை எல்லாம் அவளது மனதின் அலைப்புறுதலை எடுத்துச் சொல்வதாக இருக்கவும் அவன் அமைதியாக அவளது தலையை வருடி ஆறுதல் படுத்தினான்...

சிறிது நேரத்தில் மனைவியிடத்தில் இருந்து எந்தவித சத்தமும் வராது போகவும் அவன் குனிந்து அவளைப் பார்த்தான்... அவள் நன்கு உறங்கி போயிருந்தாள்...

"பேச்சு மட்டும் தான் ரௌடி ரங்கம்மா மாதிரி... ஆனால் மனசில் நீ இன்னும் சின்னக் குழந்தை தான்டி... அதுவும் அன்புக்கு ஏங்கும் என்னுடைய செல்ல குழந்தை..." என்றபடி அவன் காதலாய் அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

மறுநாள் காலையில் விஜய் எப்போதும் போல் கயல்விழியையும், கனியமுதனையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்குச் சென்றான்... பிள்ளைகளை இறக்கி விடும் போது தான் அந்தக் காரை கவனித்தான்... சில நாட்களாக யாரோ தன்னைத் தொடர்ந்து வருவது போலிருந்தது அவனுக்கு... தினமும் வேறு வேறு வாகனங்களில் வந்தாலும் அவர்கள் அவனைத் தொடர்வதை மட்டும் நிறுத்தவில்லை...

ஏன், எதற்கு என்று யோசித்துக் கொண்டே வந்தவனுக்கு அப்போது தான் அந்த விசயம் நினைவுக்கு வந்தது... அது ஒரு பக்கம் கவலையைக் கொடுத்த போதும் காவல்துறை அதிகாரியாய் அது மனதிற்கு மகிழ்ச்சியையும் கொடுத்தது...

'நீங்க எனக்கு விரிக்கிற வலையில் நீங்களே வலிய வந்து மாட்டிக்கப் போறீங்க... இந்த விஜய்யை அவ்வளவு சாதாரணமா நினைச்சிட்டீங்களா...?' என்று மனதிற்குள் கறுவியபடி தனது வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு கிளம்பினான்...

**********************

"கண்ணா... சமத்தா ஆடாம இருடா..." மதுரகவி அந்த ஒரு வயது குழந்தையிடம் கெஞ்சி கொண்டிருந்தாள்...

அதுவோ கண்களை உருட்டி கொண்டு இவளை பார்த்தபடி இடுப்பை அசைத்து அழகாய் நடனம் ஆடியது... அதைக் கண்டு அவளது மனம் மயங்கி போனது...

"சோ ஸ்வீட்..." என்று அதன் கன்னத்தில் முத்தமிட்டவளுக்கு அந்தக் குழந்தையின் கருமை நிறமோ, அழுக்கோ, அழகின்மையோ கவனத்தில் பதியவில்லை... மாறாக அதன் குறும்பும், மழலையும் மட்டுமே அவளது மனதினை மயக்கியது...

மதுரகவி தொண்டு நிறுவனத்துடன் சேர்ந்து இந்தக் கிராமத்திற்கு வந்திருந்தாள்... அழுக்காய் தெருவில் விளையாடி கொண்டிருந்த குழந்தைகளைக் குளிப்பாட்டும் வேலையை அவள் எடுத்து கொண்டாள்...

"நான் உதவட்டுமா...?" என்று ஆங்கிலத்தில் கேட்டபடி அவள் அருகே உரசி கொண்டு அமர்ந்தான் ரிச்சர்ட்...

எதிர்பாராத விதமாக அவனைக் கண்டதும் முதலில் அவள் திகைத்தாலும் அவனைப் பார்த்ததும் அவளது முகம் பூவாக மலர தவறவில்லை...

"நீ எப்படி இங்கே...?"

"உன்னோட ஆள் மதுரகவி இன்று உன்னிடம் தனியே மாட்டி கொள்ளப் போகிறாள் என்று ஒரு பட்சி வந்து சொல்லியது..." என்று கண்சிமிட்டியவனைக் கண்டு அவளது புன்னகை விரிந்தது...

"நான் உன்னிடம் மாட்டி கொள்ளப் போகிறேனா...? இல்லை நீ என்னிடம் மாட்டி கொள்ளப் போகிறாயா...?" என்று புருவம் உயர்த்தி மிடுக்காய் கேட்டவளை கண்டு அவனது மனம் அவள் வசமானது...

"எனக்கு ரொம்ப நாளா ஒரு டவுட் இருந்துக்கிட்டே இருந்தது..."

"என்ன டவுட்டாம்...?"

"லண்டனில் உள்ள பெண்களை எல்லாம் விட்டுட்டு நான் ஏன் உன் பின்னாடி சுத்துறேன்னு..." என்றவனை முறைத்து பார்த்தாள் அவள்...

"இந்த இடைப்பட்ட வருடங்களில் உன்னோட வாழ்க்கையில் எத்தனை பெண்கள் வந்து போனாங்களோ யாருக்கு தெரியும்...?"

இதைச் சொல்லும் போதே அவளது குரல் கமறியது... அவனுடைய கலாச்சாரம் அனைத்தும் தெரிந்து தானே அவள் அவனைக் காதலித்தாள்... ஆனாலும் பாழாய் போன காதல் மனம் அவ்வளவு எளிதில் சமாதானமாக மறுத்தது... தவறு தன் மீது இருந்தும் கூட...

"அப்படி இல்லை என்று நான் சொன்னால்..."

"ரிச்சி..." கண்கள் கலங்க அவனைப் பார்த்தாள் அவள்...

"ஒரு சின்னப் பெண் என்னைக் காதலிக்கும் போது ஒரு கண்டிசன் போட்டாள்... நான் வேறு பெண்களைப் பார்த்தால் என் கண்களை நோண்டி விடுவேன் என்று... அதற்குப் பயந்து இப்போ வரை நான் வேறு எந்தப்

பெண்களையும் பார்த்தது இல்லை..." கேலி போல் அவன் கூறினாலும் அதில் தீவிரமே இருந்தது...

அவனைக் காதலிக்கும் போது எல்லாம் அலைப்பாய்ந்த அவளது உள்ளம் இந்தக் கணம் முற்றிலும் அலைப்புறுதல் ஓய்ந்து ஆழ்கடல் போல் அமைதியானது...

"இந்தாம்மா... சின்னப் புள்ளையை இத்தனை நேரம் தண்ணியில் வச்சியிருந்தால் சளி பிடிச்சுக்காதா... நல்லா இருக்கிற புள்ளைக்குச் சளி பிடிக்க வைக்கிறதுக்குத் தான் நீ சேவை பண்றேன் கிளம்பி வந்திருக்கியோ..." என்று அவளைச் சத்தம் போட்டபடி அந்தக் குழந்தையின் தாய் குழந்தையைத் தூக்கி கொண்டு சென்றாள்...

அதைக் கண்டு மதுரகவி அசடு வழிந்தாள்...

"வா... இதற்கு மேல் இங்கே இருந்து என்ன பண்ண போகிறாய்...?" என்று எழுந்தபடி அவளுக்குத் தனது கையைக் கொடுத்தான்...

"இங்கு வேலைகளா இல்லை..." என்று கேட்டபடி அவனது கையைப் பற்றிக் கொண்டு எழுந்தவள், "வா... என் கூட..." என்றாள்...

ஒவ்வொரு வீடாகச் சென்று சுத்தம், சுகாதாரம் பற்றி எடுத்துக் கூறினார்கள்... திருமண வயதில் பெண்கள் இருந்தால் அவர்களுக்குத் திருமணம் பற்றிய அச்சத்தை, புரிதலை எடுத்து விளக்கினர்... அது போல் திருமணமான இளம் தம்பதியினருக்குக் குடும்பக் கட்டுப்பாடு பற்றியும் விளக்கினர்...

"ம்... நீ சொல்வது போல் நிறைய வேலைகள் இருக்கிறது தான்..." என்று அவன் ஆமோதித்து ஏற்றுக் கொண்டான்...

அவள் சிறு குழந்தைகளுக்கு நல்ல நல்ல கருத்துக்களை நகைச்சுவை கதைகளாகக் கூறிப் பாடமாக எடுத்தாள்... எளிமையாக இருந்த கதைகள் சிறியவர்கள் மனதில் ஆழப்பதிந்தது...

ரிச்சட் காதலியின் அழகான அபிநயங்களைக் கண்டு ரசித்தபடி அமர்ந்திருந்தான்... அவனுடைய சந்தோசம் அவள் தான் என்பதை நொடிக்கு நொடி உணர்த்திக் கொண்டிருந்தாள் அவனது காதலி... இத்தனை நாளாய் அவளை எப்படிப் பிரிந்து இருந்தோம் என்று அவனுக்கு மலைப்பாக இருந்தது... அதுவும் அவளுக்காகத் தானே என்று எண்ணும் போது அந்தச் சோகமும் சுகமாய் மாறிப் போனது...

அது போல் ரிச்சர்ட்டும் சிறியவர்களுக்கு அழகாய் ஆங்கிலப் பாடல்களைப் பாடியபடி ஆடி காண்பிக்க, அவனுடன் சேர்ந்து சிறுவர்களும் உற்சாகத்தில் கை தட்டி ஆர்ப்பரித்துச் சந்தோசமாய் ஆடி பாடினர்... அவனும் சந்தோச மிகுதியில் மதுரகவியின் கைகளைப் பிடித்து எழுப்பித் தன்னுடன் ஆட அழைத்தான்...

சிறிது வெட்கப்பட்டாலும் அவள் மறுக்காது அவனுடன் இணைந்து நடனம் ஆடினாள்...

"ரிச்சி... எப்போதும் போல் என்னை மயக்கிறடா..." என்று அவனது காதில் முணுமுணுத்தவளை அவன் வியப்பாய் பார்த்தான்...

அவள் தன்னை மறந்த நிலையில் அதைக் கூறியிருந்தாள்... அதை அவள் உணரவில்லை... அவளது கவனம் முழுவதும் குழந்தைகளிடம் இருந்தது... அதனால் தான் ஏதாவது கூறி அவளது கவனத்தைத் திசை திருப்ப விழையாது அவளின் அருகாமையை அவன் விரும்பி ரசித்தான்...

அன்று மதியம் கிராமத்தின் காரசாரமான சமையலை உண்ட ரிச்சர்ட்டின் விழிகள் இரண்டும் சிவந்து போய்க் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது... அவனால் அந்தக் காரத்தைத் தாங்க முடியவில்லை... இருந்தாலும் அந்த உணவை அவன் ரசித்து உண்டான்...

அவன் படும் பாட்டை இதயத்தில் உதிரம் வழிய பார்த்து கொண்டிருந்தாள் அவள்... தனக்காக அவன் கஷ்டப்படுவது

அவளுக்கு வருத்தமாக இருந்தது...

உண்டு முடித்து விட்டு சிறிது நேரம் ஓய்விற்காகக் காருக்குள் சென்று அமர்ந்த போது ரிச்சட்டும் அவளுடன் வந்தான்... வெயிலின் தாக்கம் தாங்க முடியாது தக்காளி பழம் போல் சிவந்திருந்தவனைக் கண்டு அவள் கார் கண்ணாடிகளை ஏற்றி விட்டு ஏசியைப் போட்டு குளிரை அதிகப்படுத்தினாள்...

"உனக்குத் தான் வெயில் ஒத்துக்காதே... பின்னே இங்கே வந்து எதுக்குக் கஷ்டப்படுற...?"

"நீ இங்கே இருக்கிறியே..."

கைகள் கொண்டு உதடு பக்கமாய் விசிறியபடி பதிலளித்தவனைப் பார்த்து அவளது மனம் உருகியது... கோவை பழம் போல் சிவந்திருந்த அவனது உதடுகளைக் கண்டு அவளுக்குப் பாவமாக இருந்தது...

"ரொம்ப எரியுதா ரிச்சி..."

"ம்... ரொம்ப..." என்றான் பாவமாக...

கண்கள் கலங்க அவனது உதடுகளை வருடி விட்டவளை அவன் இமைக்காது பார்த்தான்... அவனது விழிகளில் தெரிந்த ஏக்கத்தில் அடுத்த நொடி சிறிதும் யோசிக்காது அவள் தனது இதழ் கொண்டு அவனது இதழை மூடினாள்...

ரிச்சர்ட்டின் இதழின் வெம்மை தீர்ந்ததோ இல்லையோ அவனது மனதின் வெம்மை கொஞ்சம் கொஞ்சமாய்த் தீர்ந்தது... அவள் தன்னை விட்டு போனதிலிருந்து தவித்திருந்த அவனது மனம் அந்தக் கணம் மொத்தமாய்ச் சமாதானமாகியது...

ஆரம்பம் மட்டுமே அவளுடையதாக இருந்தது... முடிவு அவனது கைகளில் என்பது போல் அவன் அவளை விட்டு விலகவில்லை... மதுரகவி தான் வலுக்கட்டாயமாக அவனிடம் இருந்து விலகினாள்...

"என்ன ரிச்சி இது...?" அவள் கண்டிப்புடன் கேட்பது போலிருந்தாலும் அதில் பெருமளவு நாணமே இருந்தது...

"நீ போட்ட கோட்டை நானாக ஒரு போதும் தாண்ட மாட்டேன்... அதற்காகக் கோட்டை தாண்டி வந்தவளை கோட்டை விடவும் மாட்டேன்..." என்றான் அவன் வசீகரமான புன்னகையுடன்...

"எது எப்படியோ...? நீ நல்லா தமிழ் பேச கத்துக்கிட்ட..."

"உனக்குப் பிடிச்சது எல்லாம் எனக்குப் பிடிக்கும்... அதே போல் தான் இந்தத் தமிழும்..." என்றவன் அவளது கன்னத்தை வருடியபடி,

"நீ என் சுவாசம்... நீ தான் எனக்கு எல்லாமும்..."

அவனது வார்த்தையில் அவள் வெட்கி தலை குனிந்தாள்...

"நீ இத்தனை காதலை வைக்கும் அளவிற்கு நான் நல்லவள் கிடையாது ரிச்சி..."

"எனக்கு நீ நல்லவள் தான்..." என்றான் அவன் உறுதியாக...

"இந்த உலகத்தில் எல்லோருக்கும் நான் நல்லவளாகத் தான் இருந்திருக்கிறேன்... ஆனால் உனக்கு மட்டுமே நான் கெட்டவளாகப் போய் விட்டேன் ரிச்சி... என்னை மன்னித்து விடு..." என்று அவனது நெஞ்சில் சாய்ந்து அழுதவளை அவனது கரங்கள் ஆறுதலாய் அணைத்துக் கொண்டது...

காதலியே காதலுக்குத் தடையாக இருந்தால் அவர்களது காதல் எப்படிக் கை கூடும்... அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது அவளது மனதினை எப்படி மாற்றுவது என்று...

********************

அன்று வழக்கத்திற்கு மாறாய் தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டாள் மந்தாகினி... இன்னும் சிறிது நேரத்தில் செந்தில்நாதன் அங்கே வருகை தர

இருக்கிறார்... மனதில் வன்மத்துடன் தயாராகி அவருக்காக அவள் காத்திருந்தாள்...

தான் வந்ததும் ஓடி வந்து கதவை திறக்கும் மந்தாகினியை காணாது விழிகளைச் சுருக்கிய செந்தில்நாதன் பவானியிடம்,

"எங்கே உன் மகள்...?" என்று அதிகாரமாக அதட்டினார்...

"உள்ளே இருக்கிறாள்..." அவரது அதிகாரத்தில் பவானியின் நாக்கு உலர்ந்து போனது...

"இத்தனை நாள் கழிச்சு நான் வந்திருக்கிறேன்... என்னை வரவேற்காம உள்ளே அப்படி என்னத்தை வெட்டி முறிக்கிறாளாம்..." என்று கோபமாய்க் கத்தியபடி அறைக்குள் நுழைந்தவர் அங்கு அழகு தேவதையாய் நின்றிருந்த மந்தாகினியை கண்டதும் மதி மயங்கி போய் வாயடைத்துப் போனார்...

"மினி... இன்னைக்கு நீ ரொம்ப அழகாயிருக்க... முன்ன பார்த்ததை விட ஏதோ வித்தியாசமான அழகோட நீ இருக்க..." என்று கூறியபடி அவளை அணைத்தவரிடம் அவள் அந்த விசயத்தைக் கூறினாள்...

தீச்சுட்டது போல் அதிர்ந்து போனவர் அடுத்த நொடி அவளை விட்டு விலகி நின்றார்... அவரது அதிர்வை கண்ட மந்தாகினியின் விழியில் அப்படியொரு திருப்தி எழுந்தது...

நான்கு சுவற்றுக்குள் இருந்தாலும் பெண்ணவள் நினைத்தால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும்... இந்த இரண்டையும் செய்திட துணிந்து பலம் பொருந்திய செந்தில்நாதனுடன் மோத அவள் தயாராக நின்றாள் அஞ்சாது...!!!

மதுரமாகும்...!!!

"மிஸ்டர். செந்தில்நாதன்... உங்க குடுமி என் கையில்..."

தெனாவெட்டாய் கூறிய மந்தாகினியை கூர்ந்து பார்த்தார் செந்தில்நாதன்... அவளது இந்த அலட்சிய பாவம் அவருக்குப் புதிது... அவளது விழிகளில் தெரிந்த தீவிரம் அதை விட அவருக்குப் புதிது... என்னவானது இவளுக்கு...?

"நீ என்ன சொல்ல வர்ற எனக்குப் புரியலை...?"

"அடேங்கப்பா ஆனானப்பட்ட மினிஸ்டருக்கு புரியாதாக்கும்..." என்று நக்கலாகக் கூறிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவள் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அவரைத் திமிராய் பார்த்தாள்... அதில் அவரது கோபம் கிளர்ந்தது...

"என்னடி புதுசா திமிர் எல்லாம் காண்பிக்கிற...?"

"இனி எல்லாமே புதுசு தான்... ஆனால் விசயம் என்னவோ அதே அரதப் பழசு தான்..."

"கொஞ்சம் புரியும்படியா பேசுறியா...?"

"நிச்சயமாய்... அதை விளக்காமல் என் நினைவு நடக்காதே..." என்று புதிர் போட்டவள்,

"உன் மகளுக்காகப் பார்த்து வைத்திருக்கும் தொழிலை இப்போ உடனடியாக என் பெயருக்கு மாற்றிக் கொடு..."

அவளின் ஏக வசனத்தில் அவர், "ஏய்..." என்று குரலை உயர்த்தியபடி ஆவேசமாக அவளை அடிக்கக் கையை ஓங்கி விட்டார்...

"அடிடா... நல்லா அடி... எனக்கு ஒண்ணும் பயமில்லை... ஆனா அதுக்கு முன்னாடி எந்தச் சமுதாயத்தில் நீ மாலை, மரியாதையோடு இருக்கியோ அந்தச் சமுதாயத்தில் உன்னைத் தலைக்குனிய வைக்கலை என் பெயர் மந்தாகினி இல்லைடா..."

"என்ன மிரட்டுறியா...?" என்று கூறியபடி அவர் அவளை ஓங்கி அறை விட்டார்... கன்னத்தைப் பிடித்தபடி வலியை அசராது தாங்கி கொண்டவள் சிறிதும் திமிர் குறையாது,

"மிரட்டல் இல்லை... உண்மை... நீ எனக்குச் செய்ய வேண்டியதை செய்ய மறுத்தால் உனக்கும் எனக்குமான உறவை ஊருக்கு முன்னாடி அம்பலப்படுத்துவேன்..."

"என்னடி சொன்ன...?" என்று ஆக்ரோசமாய் அவள் அருகில் வந்தவர் அவளது கழுத்தை பிடித்து நெறித்தார்...

"அதுக்கு முன்னாடி உன்னைக் கொன்னு புதைச்சிருவேன்டி... நீ உயிரோடு இருந்தா தானே... இப்படி எல்லாம் பேசுவ..."

அவளது உயிர் அவரது கையில் ஊசலாடி கொண்டிருந்த அந்த நிலையிலும் அவள் பெருங்குரலெடுத்து சிரித்தாள்... அதைக் கண்டு அவரது கைகள் மேலும் அவளது கழுத்தை இறுக்கியது...

"கொல்லுடா... எங்கே என்னைக் கொல்லு பார்க்கலாம்... இப்போ நீ என்னைக் கொல்லுறதை இங்கே இந்த ரூமில் இருக்கிற கேமிரா அப்படியே வீடியோ எடுத்து லைவ் டெலிகாஸ்ட் செய்து உலகம் முழுவதும் பரப்பி விடும்... அதுக்கு எல்லாம் ஆள் செட் பண்ணிட்டேன்... எனக்கு நல்லது செய்றதுக்கும் ஆள் இருக்காங்க... அதுக்கு அப்புறம் உன்னோட மரியாதை என்னாகிறது... நல்ல மனுசன்ங்கிற உன்னோட நிலை என்னவாகிறது..."

அதில் அவரது கை தளர்ந்தது... சுற்றும் முற்றும் அந்த அறையைக் கலவரமாய்ப் பார்த்தபடி அவர்,

"என்ன சொல்ற...?"

"உனக்கும் எனக்குமான அந்தரங்கத்தை நான் வீடியோ எடுத்துட்டேன்... இப்போ நான் கேட்டதை நீ செய்யலைன்னா உன்னை மீடியாவில் நாறடிச்சிருவேன்... இதில் நானும் சேர்ந்து தான் அவமானப்படப் போகிறேன்... அது பரவாயில்லை... உன் கூட நான் படுக்க நினைச்சப்பவே

எல்லாத்துக்கும் துணிஞ்சு தான் இறங்கினேன்... அதனால் எனக்கு எந்தவித அவமானமும் இல்லை... துக்கமும் இல்லை... ஆனா உன்னைச் சும்மா விட மாட்டேன்... உன்னைக் கேவலப்படுத்தி இனி எந்தவொரு எலெக்சனிலும் நிக்க முடியாதபடி பண்ணிருவேன்..."

அவளது பேச்சு கேட்டு அவர் திகைத்து நின்றார்...

"இங்கே நாலு சுவத்துக்குள் இருந்து கிட்டே என்னால் உன்னை அவமானப்படுத்த முடியும்... ஒரு பெண் நினைச்சா என்ன வேணும்ன்னாலும் செய்ய முடியும்... ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும்... நான் உன்னை ஆக்கணுமா, அழிக்கணுமான்னு நீயே முடிவு பண்ணிக்கோ..."

"இங்கே பார் தேவையில்லாம என்னைப் பகைச்சுக்காதே... அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..." என்று அவர் அவளை மிரட்டினார்...

"உன்னால் என்னை என்ன செய்ய முடியும்...? மிஞ்சி போனால் என் உயிரை எடுக்க முடியும்... தாராளமா எடுத்துக்கோ... ஆனால் அதுக்கு முன்னாடி உன் உயிரை எடுத்துட்டு தான்டா நான் போவேன்..."

அவர் என்ன பதில் பேசுவது என்று தெரியாது விழித்தார்...

"இங்கே பார்... நான் கேட்டதை நீ கொடுத்து விட்டால் இது எதுவும் நடக்கப் போறது இல்லை... அதனால் நான் சொன்னதை நீ செய்தால் போதும்..."

"அது எப்படி முடியும்...? அது மதுவுக்கு என்று ஆரம்பித்தது..."

"அது எனக்குத் தேவை இல்லாதது... என்ன செய்வியோ, ஏது செய்வியோ எனக்குத் தெரியாது... எனக்கு அந்தத் தொழில் என் கைக்கு வரணும்... அவளுக்குக் கிடைக்கிற எல்லாம் எனக்கும் கிடைக்கணும்... அதனால் தான் உன் வயசை கூடப் பொருட்படுத்தாமல் உன்னுடனான உறவை நான் ஏத்துக்கிட்டேன்... மதுவை விட நான் ஒரு படி மேலே இருக்கணும்... எல்லாத்திலும்..."

மந்தாகினியின் அக அழுக்கினை அப்போது தான் அவர் அறிந்தார்... ஸ்தம்பித்துப் போனவராய் அவர் அவளைத் திகைப்பாய் பார்த்தார்...

"என்ன பார்க்கிற...? இது ஆரம்பம் தான் இன்னும் நிறைய இருக்கு... என்னைப் பார்த்து நீ வைப்பாட்டின்னா சொன்ன... அந்த வைப்பாட்டிக்கு என்ன பவர் இருக்குன்னு இனி தான் நீ பார்க்க போகிற..."

முதன்முறையாய் அந்தச் சின்னப் பெண்ணிடம் அவர் பணிந்து போனார்... அவள் அருகே அமர்ந்து அவளது தோளில் கை போட்டு அணைக்க வந்தவரின் கையை அவள் ஆத்திரத்துடன் தட்டி விட்டாள்...

"இங்கே பார் மினி... உனக்கு நான் என்ன குறை வச்சியிருக்கேன்...? எல்லா வசதிகளும் செஞ்சு கொடுத்து உன்னை ராணி மாதிரி வச்சிருக்கேன் தானே... இன்னும் உனக்கு என்ன வேணும்...?"

அவரது வார்த்தையில் அவள் அவரை ஏறிட்டு பார்த்தாள்... அவளது உதடுகள் எதையோ சொல்ல துடித்தது... ஆனால் அதை எல்லாம் சொன்னால் புரிந்து கொள்ளும் அளவிற்குச் செந்தில்நாதன் மனித பிறவி கிடையாது... ஐந்தறிவு கொண்ட மிருகம்... அதனால் அவள் அமைதி காத்தாள்...

"ஏன் இப்படிப் பண்ற மினி...?"

"நான் சொன்னது ஆரம்பம் தான் மிஸ்டர். செந்தில் நாதன்... இன்னும் நிறைய இருக்கு... இப்போதைக்கு இதை முதலில் நிறைவேத்துங்க..." என்றவளை அவர் வெறித்துப் பார்க்க... அவளும் அவரது பார்வையைச் சளைக்காது தாங்கி நின்றாள்...

அதற்கு மேல் ஒன்றும் பேசாது விருட்டென்று கிளம்பி சென்று விட்டார் அவர்... அவர் சென்றதும் பவானி அந்த அறைக்குள் பிரவேசித்தார்... இருவரும் பேசி கொண்டதை அவர் வெளியில் இருந்தபடி ஒட்டு கேட்டு விட்டார்...

"இப்போ தான் கண்ணு நீ சரியான முடிவு எடுத்து இருக்க... மனுசனா இவன், மிருகம்... மிருகத்து கிட்ட நாமளும் மிருகமா தான் மாறணும்..." என்ற தாயை வெறித்துப் பார்த்தவள் அடுத்தக் கணம்,

"அம்மா..." என்று கதறியபடி அவரை அணைத்து கொண்டாள்...

"நான் அவரை எவ்வளவு நம்பினேன்... ஆனால் கடைசியில் என்னை வெறும் உடல் சுகத்துக்காக மட்டுமே பயன்படுத்திக் கிட்டார்ன்னு நினைக்கிறப்போ எனக்கு நெஞ்சே வெடிச்சிரும் போலிருக்கும்மா... இனி இவரை நம்பி எந்தப் பிரயோஜனம் இல்லை... எனக்குன்னு ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக்கப் போறேன்... அதுக்கு எனக்குப் பணம் வேணும்... நிறையப் பணம் வேணும்மா..."

கண்களில் ஆசை மின்ன கூறியவளை அவளது தாய் ஆதரவாய் அணைத்துக் கொண்டார்... இந்த இழி நிலைக்குத் தங்களைத் தள்ளி விட்ட விதியை மனதில் சபித்தார் அவர்...

"அம்மா..."

"என்னடா...?" என்றார் அவர் கனிவாக...

"நான் போன மாசம் டேப்லெட் போடலை..."

"உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சியிருக்கு...?" அவர் கோபமாய்க் கத்தினார்...

"ஆமாம்மா... பைத்தியம் தான் பிடிச்சியிருக்கு... எத்தனை நாளைக்குத் தான் நான் இப்படிச் செக்ஸ் அடிமையா இருக்கிறது... பதினேழு வயசில் ஆரம்பிச்ச இந்த வாழ்க்கை இதோ இப்போ எனக்கு இருபத்தி மூணு வயசாகுது... கிட்டத்தட்ட ஆறு வருசமா அடிமை மாதிரி வாழ்கிறேன்... அவர் இங்கே வர்றப்போ எல்லாம் அவரைச் சந்தோசப்படுத்திக் கிட்டு... ஒரு வேசி மாதிரி வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்... எனக்கும் மனசு இருக்குன்னு ஏன் அவருக்குத் தெரியாம போச்சு... அந்த மனசை

அவரோட வார்த்தையால் கொன்னுட்டார்... இனி எனக்கு அவர் தேவையில்லை... வாழ்க்கைக்குத் தேவையான பணம், எனக்கே எனக்குன்னு ஒரு குழந்தை... இது போதும் எனக்கு... உங்களுக்கு நான் இருக்கிற மாதிரி அது எனக்குக் கடைசி வரை இருக்கும்... அது போதும் எனக்கு... அது போதும் எனக்கு..." என்று கூறியபடி கதறி அழுதவளை அவரால் ஆறுதலாய் அணைத்துக் கொள்ளத் தான் முடிந்தது...

அவரால் கூட அவளது வேதனையைக் குறைக்க முடியவில்லை...

செந்தில்நாதனால் எந்தவொரு முடிவும் எடுக்க முடியவில்லை... அருமை மகளுக்கு என்று ஆசை ஆசையாக ஆரம்பிக்கப்பட்ட தொழில் இது... இதை எப்படி மந்தாகினி பெயருக்கு மாற்றுவது...? அப்படியே அவர் மாற்றினாலும் அது அவரது மகனுக்குத் தெரிந்து விடும்... அவன் கேட்கும் கேள்விக்கு அவரிடத்தில் விடை இல்லை... என்ன செய்வது என்று தெரியாது அவர் தலையைப் பிடித்துக் கொண்டார்...

********************

அதே கல்லூரியில் அதே விடுதியில் தங்கியிருந்து படிக்கும் இன்னொரு மாணவிக்கு அதே போல் ஒரு காணொளி வந்தது... கூடவே அதே போல் அலைப்பேசியில் மிரட்டலும் சேர்த்து... ஆனால் அவள் மற்ற பெண்களைப் போன்று பயப்படாது தைரியமாக அந்தக் காணொளியை எடுத்து சென்று காவல்துறை மாநகர ஆணையரிடம் நேரில் சென்று புகார் அளித்தாள்...

"நான் எதுக்கு சார் இதுக்கு எல்லாம் பயப்படணும்...? நான் யார் கூடயாவது ஊர் சுத்தினேனா...? இல்லை ஒழுக்கம் கெட்டு போனேனா...? நான் குளிப்பதை அந்தரங்கமாய் வீடியோ எடுத்துப் பெருந்தவறு செய்த அவங்களைத் தான் இந்தச் சமுதாயத்தின் முன் தலை குனிய வைக்கணும்... தவறு செய்யாத நான் ஏன் தலை குனியணும்...?" என்று ஆத்திரமாய்ப் படபடத்த அந்தக் கல்லூரி மாணவியைப்

பார்க்கும் போது விஜய்க்கு தனது மனைவி முத்துபேச்சியின் நினைவு வந்தது...

அவளும் அப்படித் தானே அநீதி கண்டு பொங்குவாள்...

"கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும்..." அமர்த்தலாகக் கூறிய விஜயை கண்டு அந்த மாணவிக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது...

"சார் கம்ப்ளையிண்ட் எழுதி கொடுக்கவா..."

"எதுவும் வேண்டாம்மா... நாங்க சொல்றதை மட்டும் நீ கேட்டால் போதும்..." என்ற விஜய் அந்த மாணவிக்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கூறினான்...

அதைக் கேட்டு அவளுக்குக் கலவரமாக இருந்தது போலும் அவனை நம்பிக்கையின்மையுடன் பார்த்தாள்...

"போலீசிலும் நல்லவங்க இருக்காங்க... எங்களை நம்புங்க... நிச்சயம் இந்தத் தவறை செய்றவன் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்..." என்று வாக்குறுதி கொடுத்து அவளை அனுப்பி வைத்தான்...

அன்றிரவு ஒரு மாதிரியாக இருந்த விஜய்யிடம், "என்ன சாமி...? ஏன் ஒரு மாதிரியா இருக்க...?"

மனைவியின் சாமி என்ற அழைப்பு கூட அவனுக்கு உறைக்கவில்லை... அவள் அவனை உலுக்கவும் தான் அவன் திடுக்கிட்டவனாய் நிகழ்காலத்திற்கு வந்தான்...

மனைவியிடம் அந்த மாணவி கொடுத்த புகாரினை கூறியவன் குரலில் அத்தனை வேதனை இருந்தது... பதின்வயது பருவ பெண்ணின் தந்தையின் வருத்தமாய் இருந்தது அவனது வருத்தம்...

"இவனுங்க எல்லாம் என்ன மனுசங்க...? ச்சீ..." என்று கோபமும், அருவருப்புமாய்க் கூறியவனைக் கண்டு அவளுள்ளும் அதே கோபமும், அருவருப்பும் எழுந்தது...

"எனக்கு என்னமோ அந்தக் காலேஜ் நிர்வாகத்தின் மேல் தான் சந்தேகமா இருக்கு... ஏன்னா ஹாஸ்டல் பாத்ரூமில் கேமிரா வைக்கிறதுன்னா அவ்வளவு சுலபம் இல்லை... நிச்சயம் இதுக்குப் பின்னாடி நிர்வாகம் இருக்கணும்... இது சாதாரணப் படிக்காத ரௌடிகளோட வேலையில்லை... நிச்சயம் இது படிச்ச கிரிமினல்களோட வேலையாகத் தான் இருக்கணும்.." என்றவள் திடுமென ஞாபகமாய் வந்தவளாய் தனக்குத் தெரிந்த அந்த விசயத்தைக் கணவனிடம் கூறினாள்...

"என்ன...? என்ன சொல்கிறாய்...?" அவன் பரபரப்புடன் கேட்டான்...

"அப்படித் தான் இருக்கணும்... கன்ஃபார்மா தெரியலை..."

"இவ்வளவு போதும் கண்ணம்மா... இனி நான் ஜமாய்ச்சிர்றேன்..." என்றவனைக் கண்டு அவள் பெருமையாகத் தலையாட்டினாள்...

அந்த மாணவியை வைத்தே அந்தக் கும்பலை தனது வலையில் மாட்ட வைத்தான் விஜய்... ஆனால் மாட்டிய கும்பலிடம் தேவையான ரகசியத்தைக் கறந்து கொண்டவன் அடுத்து தான் செய்ய வேண்டிய செயலை நிதானமாய்ச் செயல்படுத்த ஆரம்பித்தான்...

முத்துபேச்சி கூறியதால் மீனா அந்த ஆசிரமத்திற்கு வருகை தந்திருந்தாள்... அங்கிருந்த முதியோர்கள், சிறுவர்கள் அனைவருக்கும் அவர்கள் சார்பில் அன்றைய ஒரு நாள் உணவு வழங்கப்பட்டது... அமைச்சருக்கு தெரிந்தவள் என்பதால் அவள் அந்த ஆசிரமத்தில் எல்லா இடங்களுக்கும் இலகுவாகச் சென்று வருவாள்... அப்படி ஒரு அறைக்குள் அவள் சென்ற போது குப்பைகள் போல் பொருட்கள் வாரியிறைக்கப்பட்டு இருந்த அந்த அறையில் அந்தச் சாக்குப் பைகள் வித்தியாசமாக இருந்தது...

என்னவாக இருக்கும் என்று மனதில் ஆர்வம் உந்தி தள்ள அவள் அதைத் திறந்து பார்த்தாள்... எல்லாம் பணக் கட்டுகள்... அப்படியே அதிர்ந்து போய் அங்கிருந்து ஓடி

வந்து விட்டாள்... ஆசிரமத்தின் வாயிலுக்கு வந்தவள் தனது கணவன் பாண்டியனுக்கு அழைத்தாள்...

"சொல்லுடி என் தங்கமீனு..." என்று காதலில் ஜொள்ளிய பாண்டியனின் வார்த்தைகள் கூட அவளது காதில் ஏறவில்லை...

"மாமா..."

மனைவியின் குரலில் இருந்த பதற்றத்தை உணர்ந்தவனாய் அவன், "சொல்லு புள்ள..." என்க...

"இங்கே... ஆசிரமத்தில்..."

"ஆசிரமத்துக்கு என்னவாம்...?"

"சாக்குப் பை நிறையப் பணம் இருக்கு மாமா..."

"என்ன புள்ள சொல்ற...?" அவனது குரல் விறைப்புற்றது...

"உண்மையா மாமா..." என்றவள் தான் பார்த்ததை அப்படியே அவனிடத்தில் கூற...

"முதல்ல நீ அங்கிருந்து கிளம்பி பத்திரமா வீட்டுக்கு போ... நான் இந்த விசயத்தை விசய் கிட்ட சொல்லுறேன்..." என்று அழைப்பை துண்டித்தவன் முதலில் அழைத்தது விஜயை...

ஏனெனில் முத்துபேச்சியிடம் சொன்னால் அவள் அதிரடியாகக் காரியத்தில் இறங்கி விடுவாள்... அதில் அவளுக்கு ஏதேனும் ஆபத்து வருமா என்று அவள் சிறிதும் யோசிக்க மாட்டாள்... அதனால் தான் அவன் விஜயிடம் கூறியது...

அடுத்தப் பத்து நிமிடத்தில் விஜய் ஆசிரமத்திற்கு அருகில் இருந்த காவல் நிலையத்திற்குக் கூறி அதை என்னவென்று விசாரிக்கச் சொன்னான்... கூடவே மீனாவையும் அங்குப் போகச் சொன்னான்... விஜய் துணையிருக்கும் தைரியத்தில் மீனாவும் உடன் சென்று பணக் கட்டுகளைக் காட்டி கொடுத்தாள்... அவள் கூறியது

போல் அங்குப் பணக் கட்டுகள் மூட்டை மூட்டையாகக் கட்டி வைக்கப்பட்டு இருந்தது...

இருபது நிமிடங்களில் விஜய்யும் அங்கு வந்து விட்டான்... கைப்பற்ற பட்ட பணம் அனைத்தும் வருமானவரி துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டது... ஆசிரம நிர்வாகியை விசாரித்த போது விஜயின் கண்களில் அந்த விசயம் தென்பட்டது... அதைப் பார்த்ததும் தனது விசாரணையை மேலோட்டமாக முடித்துக் கொண்டு அவன் கிளம்பி விட்டான்...

ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருந்து ஒற்றைக்கால் தவம் இருக்கும் கொக்கு போல் அவனது நடவடிக்கை ஒவ்வொன்றும் அவ்வளவு நிதானமாக இருந்தது...!

******************

இரவு மின் விளக்கின் வெளிச்சத்தில் அந்த விருந்தினர் மாளிகை பகல் போல் ஜொலித்தது... ரிச்சர்ட்டும், செந்தில்நாதனும் எதிர் எதிர் திசையில் அமர்ந்திருந்தனர்... செந்தில்நாதன் தனது கைகளில் இருந்த மது பானத்தை உள்ளே தள்ளி கொண்டிருந்தார்...

ரிச்சர்ட்டோ அதைத் தனது கையில் வைத்தபடி அவரைப் பார்த்திருந்தான்... அவனது நாட்டில் இது எல்லாம் சகஜம் தான்... ஆனால் இப்போது செந்தில்நாதனின் முன் மது அருந்த மனமில்லாது அவன் அமர்ந்திருந்தான்... அவர் தன்னிடம் ஏதோ பேச முயற்சிப்பதை உணர்ந்தவனாய் அவரைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"மிஸ்டர். ரிச்சர்ட்... உங்களால் எனக்கு ஒரு காரியமாக வேண்டுமே..." ஆங்கிலத்தில் கேட்டவரை கண்டு,

"சொல்லுங்க மிஸ்டர். செந்தில்நாதன்..." என்றவனது பார்வை அவரைக் கூர்மையாய் அளவிட்டது...

"இந்தத் தொழில் ஒப்பந்தத்தை நான் வேறு ஒரு ஆளுக்கு மாற்றிக் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்... அதனால் நீங்க

இந்த ஒப்பந்தத்தை ரத்து பண்ணிட்டு மீண்டும் நான் சொல்றவங்களோட ஒப்பந்தம் பண்ணினால் நல்லாயிருக்கும்..."

"நான் உங்களோடு தொழில் ஒப்பந்தம் சைன் பண்ண தான் இங்கு வந்தது... அதுவும் நேரில்... இல்லை என்றால் எங்க கம்பெனியில் இருந்து வேறு ஒருவர் வந்திருப்பார்... நீங்கள் மினிஸ்டர் என்பதால் தான் நானே வந்தது..."

'உங்களுக்காக இல்லை உங்க மகளுக்காக வந்தேன் மிஸ்டர்... நான் வந்ததே அவளை என்னவளாக்கி கொள்ளத் தான்... அதை எப்படி நான் வேண்டாம் என்பேன்...' மனதிற்குள் நினைத்தபடி அவரைப் பார்த்தான்...

"இவங்களுக்குப் பின்னாடியும் நான் தான் இருப்பேன்... என்னோட ஃபுல் சப்போர்ட் உங்களுக்கு உண்டு... இப்போ மாதிரியே எல்லா வசதிகளையும் நான் உங்களுக்குச் செய்து கொடுக்கிறேன்... நீங்க கவலைப்பட வேண்டாம்..."

அவன் அதற்காகத் தான் மறுக்கிறானோ என்று அவர் அவசரமாய் இடை மறித்துச் சொன்னார்...

"உங்க மகளை விட முக்கியமான அந்த நபர் யார்...?"

ரிச்சர்ட்டின் கேள்வி அவரது மனதினை குத்தி கிழித்தது... செந்தில்நாதனின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது...

"அது யார்ங்கிறது முக்கியம் இல்லை... அவங்களுக்குச் சப்போர்ட்க்கு நான் இருப்பேன்... இதுக்கு நான் உத்திரவாதம் அளிக்கிறேன்..." என்று உறுதியான குரலில் கூறிய செந்தில்நாதன் பின் கண்ணைச் சிமிட்டியபடி,

"ரிச்சர்ட்க்கு அந்த மாதிரி பழக்கம் எல்லாம் உண்டோ..." என்று கேட்க...

"எந்த மாதிரி...?" அவன் புரியாது கேட்டான்...

"அதான் லேடிஸ் மேட்டர்... நான் சொன்னதுக்கு ஒத்துக்கிட்டு நீங்க ஒப்பந்தம் பண்ணினீங்கன்னா நீங்க இங்கே இருக்கிற வரை உங்களை வித விதமாய்க்

கவனித்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு... எல்லாமே பேமிலி கேர்ள்ஸ்... அதுவும் காலேஜ் கேர்ள்ஸ்... ஃபிரஷ் பீஸ்... நீங்க நல்லா என்ஜாய் பண்ணலாம்..."

ஆங்கிலேயனான அவனுக்கே அவரது பேச்சு அருவருப்பைக் கொடுத்தது... அவர்களது கலாச்சாரத்தில் இது எல்லாம் சகஜம் தான் என்றாலும் அவரது பேச்சு அருவருப்பை மீறி ஒருவித கோபத்தினை ஏற்படுத்தியது... அவன் நிதானமாக அவரைப் பார்த்தான் பின்பு,

"எனக்கு வேறு எந்தப் பெண்ணும் வேண்டாம்... உங்க மகள் மதுரகவி தான் எனக்கு வேண்டும்... அவளை ஒரு நாள் இரவு அனுப்பி வைங்க..." என்றான் சிறிதும் அலட்டி கொள்ளாது...

"டேய்..." என்று அவனது சட்டையைப் பிடித்து விட்டார் செந்தில்நாதன்...

"அவள் என் மகள்டா... என்னோட இளவரசி... அவளைப் போய்... உனக்கு எவ்வளவு தைரியம்...? உன்னை இங்கேயே கொன்னு புதைச்சா கூடக் கேட்க ஆள் கிடையாது..."

"அவ்வளவு சாதாரணமா என்னை நினைச்சுக்காதீங்க மிஸ்டர். செந்தில்நாதன்... நான் காணாம போனா அடுத்த நொடி எங்க எம்பசி ஆளுங்க உங்களிடம் வந்து தான் என்கொயரி பண்ணுவாங்க... அப்போ எல்லா உண்மையும் தெரிஞ்சிரும்..." என்றான் அவனும் சளைக்காது...

"அதுக்காக நீ வாய்க்கு வந்ததைப் பேசி விடுவாயா...?"

"நீங்க சொன்ன எல்லாக் காலேஜ் பொண்ணுங்களும் உங்க மகள் மாதிரி குடும்பப் பெண்கள் தான்... அவங்களை இந்த வேலைக்குப் பயன்படுத்தும் போது உங்களுக்கு ஏன் இந்தக் கோபம் வரலை... ஏன்னா அவங்க எல்லாம் உங்க மகள் இல்லை என்பதாலா...?"

மந்தாகினி கேட்ட கேள்வி போல் ரிச்சர்ட்டும் கேட்டதில் அவர் தளர்ந்து போய் அமர்ந்து விட்டார்...

"எனக்கு வேறு எந்தப் பெண்ணும் வேண்டாம் மிஸ்டர். செந்தில்நாதன்... எனக்கு உங்க பெண் மது தான் வேண்டும்... இல்லை என்றால் மதுவுடனான இந்த ஒப்பந்தம் அப்படியே இருந்துட்டு விட்டு போகட்டும்..."

அவன் அழுத்தி சொன்ன விதத்திலேயே தெரிந்தது அவன் மதுரகவியை விடப் போவதில்லை என்று... ஒரு தந்தையாய் அவரது மனம் மகளுக்காக வருந்தியது... அதே சமயம் மந்தாகினியால் அவரது அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வருவதை அவர் விரும்பவில்லை... மனம் இரண்டு பக்கமும் ஊஞ்சலாட அவர் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டார்...

அவரைப் பார்த்துக் கொண்டிருந்த ரிச்சர்ட்டின் முகத்தில் சிறிதும் இளக்கம் இல்லை... அவனது முகம் அப்படி ஒரு இறுக்கத்தில் இருந்தது...

கடைசியில் அவர் அரசியல் வாழ்க்கைக்காக மகளின் வாழ்க்கையை அழிக்கத் துணிந்தார்... அவர் நாடு முழுவதும் அசிங்கப்படுவதை விட மகள் வெள்ளைக்காரனிடம் மட்டும் அசிங்கப்படுவது பரவாயில்லை என்று நினைத்தான் போலும் அந்தக் கேவலமான எண்ணம் கொண்ட தகப்பன்...

பெண்களைப் போகப் பொருளாகப் பார்க்கும் ஆணுக்கு தாய், தாரம், மகள் என்கிற வித்தியாசம் தெரியாது போலும்... அவர்களுக்கு வேண்டியது ஒரு பெண்... அப்படி ஒரு கீழ்த்தரமான மனநிலையில் செந்தில்நாதன் இருந்தார்...

"ஓகே ரிச்சர்ட்... நாளை காலை என் மகள் உங்களிடம் வருவாள்... தொழிலை பற்றிப் பேசுவதற்காக... அவளை உங்க வசப்படுத்துவது உங்க சாமர்த்தியம்..." என்று கூறியவர் அவன் முகம் பார்க்காது விருட்டென்று எழுந்து சென்று விட்டார்...

அவர் சென்றதும் ரிச்சர்ட்டின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது... அதன் விளைவாய் அவன் தனது கையில்

இருந்த கண்ணாடி கோப்பையை இறுக்கி பிடித்தான்... அதில் அது அழுத்தம் தாங்காது நொறுங்கி அவனது கைகளில் குத்தி இரத்தத்தை வழிய செய்தது... கையில் ஏற்பட்ட காயத்தின் வலியை விட அவனது மனம் அதிகமாய் வலித்தது...

மறுநாள் மதுரகவி ரிச்சர்ட்டை பார்க்க போகும் ஆர்வத்தில் அவனுக்குப் பிடித்த இளஞ்சிவப்பு நிறத்தில் புடவை அணிந்து கொண்டு பிரத்யேக அலங்காரத்துடன் கிளம்பினாள்... மீனாட்சி கூட அவளது அலங்காரம் கண்டு வாயை பிளந்தார்...

"அதிசயமா இருக்கு... நம்ம மதுவா இது...?"

செந்தில்நாதன் குற்றவுணர்வோடு தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தார்... ஒரு தவறை மறைக்க மேலும் மேலும் அவர் தவறு செய்து கொண்டே போகிறார்... இது எல்லாம் அவர் தவறான மனிதர் இல்லை என்று இந்தச் சமுதாயத்திற்கு நிரூபிப்பதற்காக...

"உங்க மதுவே தான்..." என்று அன்னையின் கன்னத்தில் முத்தமிட்டு உற்சாகமாகக் கிளம்பிய மதுரகவி காரிலேறி அதை வேகமாய்க் கிளப்பினாள்...

ரிச்சர்ட் தங்கியிருந்த விருந்தினர் மாளிகை வந்து அடைந்தவளை வாசலில் நின்று வரவேற்றான் அவன்... அவனது வரவேற்பு கூட அவளது கருத்தில் பதியவில்லை... அவனது வலது கையில் இருந்த கட்டு தான் முதலில் அவளது கண்ணில் பட்டது... நேற்று கண்ணாடி கோப்பை உடைந்து கீறியதில் உண்டான காயம் இது...

"ரிச்சி... என்ன இது இவ்வளவு பெரிய காயம்...?" என்று பதறியபடி கேட்டவளிடம் பதில் சொல்லாது அவன் வீட்டை நோக்கி நடக்க, அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்...

அவன் தனது படுக்கையறைக்குள் நுழைய அவளும் அவனிடம் கேள்வி கேட்டபடி அவனின் பின்னே நாய்க்குட்டியாய் வந்திருந்தாள்... அப்போது தான் ரிச்சர்ட்

அந்தக் காரியத்தைச் செய்தான்... அறை கதவை தாளிட்டு விட்டு கதவின் மீது சாய்ந்தவன் அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தான்...

அவனது செயலில், பார்வையில் பாவையவளின் மனம் படபடத்தது... அவளுக்குப் பயத்தில் வியர்த்து வழிந்தது...

"ரிச்சி... எதுக்குக் கதவை மூடுற...? நாம வெளியில் போய்ப் பேசலாம்..."

அவளின் பேச்சினை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

"என் அம்மா ஒரு விபச்சாரின்னு தெரிந்து தானே நீ என்னை விட்டு போன... கடைசியில் இப்போ உன் நிலைமையும் அது தான்னு உனக்குத் தெரியுமா...?"

காதலனின் வார்த்தையில் அவளது மனமும், தேகமும் வெடவெடத்தது... அவள் அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்...

"உன் அப்பா எதுக்குத் தெரியுமா உன்னை என் கிட்ட அனுப்பி இருக்கிறார்..." என்றவன் அவளது விழிகளைச் சந்திக்க முடியாது வேறு பக்கம் பார்த்துக் கொண்டு,

"என்னைச் சந்தோசப்படுத்துவதற்காக..." அவன் சொன்னதைக் கேட்டு அவள் பேந்த பேந்த விழித்தாள்...

"அதாவது இன்று ஒரு நாள் மட்டும் என் ஆசை நாயகியாய் என்னுடன் என் படுக்கையில் நீ..." மேலே சொல்லி கொண்டு போனவனின் எந்தவொரு வார்த்தையும் அவளது காதில் விழவில்லை...

வேரற்ற மரம் போல் உணர்வுகளற்று அப்படியே தொய்ந்து போய்த் தொப்பென்று கீழே அமர்ந்தாள்... அவளது ஜீவன் எல்லாம் அவனது வார்த்தையில் அப்படியே வடிந்து போனது...

அவளுக்கு இதுவும் வேண்டும்... இன்னமும் வேண்டும்... அவள் செய்த காரியத்திற்கு அவளுக்கு இந்தத் தண்டனை

தேவை தான்... சிறிது நேரம் யோசித்தவள் பின்பு தீர்மானித்தவளாய் எழுந்து அவன் அருகில் வந்து தனது இரு கைகளையும் அவன் புறம் நீட்டி,

"என்னை எடுத்து கொள் ரிச்சி..." என்றாள் முழு மனதாய்...

தன்னை அவனுக்கு முழுமையாய் அளித்துத் தான் அவனுக்கு இழைத்த பாவத்தின் கணக்கினை தீர்க்க நினைத்தாள் அவள்... அதற்காகவே காத்திருந்தது போல் ரிச்சர்ட்டின் கரங்கள் காற்று கூட இடையில் புகாதபடி அவளை இறுக்கமாய் அணைத்து கொண்டது...!!!

மதுரமாகும்...!!!

ஆறு வருடங்களுக்கு முன்...

பதினேழு வயது மதுரகவி இலண்டன் மாநகரம் செல்லும் மகிழ்ச்சியில் தரையில் கால் பதியாது மிதந்து கொண்டிருந்தாள்... அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது அவளுக்கு... அவளுக்குப் பிடித்த கணினி படிப்பை படிப்பதற்கு அவளுக்குப் பிடித்த ஊருக்கு செல்கிறாள்... இந்தப் பதினேழு வயதில் அவள் சுற்றாத நாடுகள் இல்லை... தந்தையின் செல்வ செழிப்பு, பதவி அதற்குப் பெரிதும் உதவியது...

நன்றாகப் படிக்கும் மகளை வெளிநாட்டில் படிக்க வைக்க வேண்டும் என்று தந்தை ஆசைப்பட்டார்... அவரது ஆசைப்படி அவளும் சந்தோசத்துடன் கிளம்பி விட்டாள்...

"அம்மா... தேவையானது எல்லாம் எடுத்து வச்சாச்சா..." என்று தனது கையில் இருந்த பட்டியலை சரி பார்த்துக் கொண்டே கேட்ட மகளிடம் மீனாட்சி,

"எல்லாம் எடுத்து வச்சாச்சு... எதுக்கும் நீயும் ஒரு தடவை செக் பண்ணிக்கோ..." என்க...

எல்லாவற்றையும் அவள் சரி பார்த்துக் கொண்டிருந்த போது அவளது அண்ணன் திருச்செல்வன் அங்கு வந்தான்...

"மது..."

அவன் அழைத்ததும் அவளது முகம் சுருங்கி விட்டது... என்ன என்பது போல் அவனைப் பார்த்தாலும் அவள் வாய் திறந்து பேசவில்லை...

"நான் சொன்னது எல்லாம் ஞாபகத்தில் இருக்கிறது தானே..."

"ம்... ம்... ம்..." என்று தலையை உருட்டியவளின் முகத்தை நிமிர்த்தியவன்,

"வாழ்க்கையை நல்லா என்ஜாய் பண்ணு... அதை நான் வேண்டாம்ன்னு சொல்லலை... ஆனால் தேவையில்லாம காதல், அது இதுன்னு கண்ட கர்மத்தை இழுத்துட்டு வந்துராதே... நம்ம குடும்பத்துக்குக் காதல் எல்லாம் சரி வராது..."

"மீறி காதலிச்சா தூக்கி போட்டு மிதிப்பீங்க... அப்படித் தானே..." என்று கோபமாய்க் கேட்டவளிடம் அவன் சிரித்துக் கொண்டே,

"அப்படியே தான் மது..." என்றான்...

"நீங்க காதலிக்கவே மாட்டீங்களா அண்ணா..."

"நிச்சயம் நான் காதலிப்பேன்... ஆனால் அந்தப் பெண் என் மனைவியாக மட்டுமே இருப்பாள்..."

"சேஃப்டி லவ்..."

"அதுவும் ஒரு சுகம் தான் மது..." என்றவன்,

"இத்தனை காலம் தூக்கி வளர்த்த அப்பா, அம்மாவுக்கு நீ நன்றிக்கடன் செலுத்துவதாக இருந்தால் அது அவங்க சொன்ன பையனுக்கு நீ கழுத்தை நீட்டுவது மட்டுமே... என்ன புரிஞ்சதா...?"

சகோதரன் சொல்வதும் உண்மை தான்... அதற்காகக் காதலித்தவர்களைப் பிரித்து அடித்து உதைக்க வேண்டுமா...? ஒரு தடவை அண்ணன் இது போல் அலைப்பேசியில் பேசி கொண்டிருந்ததைக் கேட்டதில் இருந்து அவனிடம் அவளுக்கு அதிகப் பயம்... திருச்செல்வனுக்கு இது தெரியாது... அதனால் அவன் எப்போதும் போல் சாதாரணமாக இருந்தான்...

மதுரகவிக்கு விமான நிலையம் செல்லும் போது இருந்த தைரியம் அதனுள் நுழையும் போது காணாமல் போனது... விழிகள் கலங்க அன்னையைப் பார்த்தாள்... மகளின் ஏக்கத்தினை அந்தத் தாயும் கண்டு கொண்டாரோ என்னமோ...

"இதுக்குத் தான் படிச்சு படிச்சு சொன்னேன்... உன்னை இங்கேயே படிக்கச் சொல்லி... கேட்டால் தானே..." என்று அவர் புலம்பத் துவங்கினார்...

"அம்மா... இப்படியே உங்க கைக்குள் வைத்து அவளைப் பாதுகாத்து கிட்டே இருந்தால் அவள் எப்படி இந்த உலகத்தைத் தைரியமாய் எதிர் கொள்வாள்...? பெண் என்பவள் தைரியமா இருக்கணும்மா..." என்று திருச்செல்வன் அன்னையை அடக்கி விட்டான்...

செந்தில்நாதனுக்கும் அவனுக்கும் இங்குத் தேர்தல் வேலைகள் இருந்ததால் அவர்களால் அவளுடன் செல்ல முடியவில்லை... இதோ இப்போது கூடத் தங்களது கட்சி சார்பில் அவர் பிரதமரை சந்திக்க டெல்லி சென்று இருப்பதால் அவரால் மகளை வழியனுப்ப வர முடியவில்லை... ஆனால் அவளுக்கான ஏற்பாடுகளை எல்லாம் பக்காவாகச் செய்து முடித்திருந்தனர்...

"மது... நீ தனியாகத் தங்கினால் தனிமையா ஃபீல் பண்ணுவேன்னு தான் என் பிரெண்ட்டோட..."

"பிரெண்டோட பிரெண்டோட பிரெண்ட் வீட்டில் தங்க வைக்க ஏற்பாடு பண்ணியிருக்கீங்க... அப்படித் தானே அண்ணா...?" குறும்பாய் கேட்டு தலை சரித்துப் புன்னகைத்த தங்கையவளை கண்டு அவனுக்கும் சிரிப்பு வந்தது...

"உன்னோட வாய் இருக்கே..." என்று சிரித்தவன்,

"அதனால் பாதுகாப்பை பற்றிப் பயப்பட வேண்டாம்... அவங்க வீட்டின் சின்னப் பையன் நீ படிக்கப் போகும் யுனிவர்சிட்டியில் தான் படிக்கிறான்... அதனால் பயம் இல்லாது அவன் கூடவே போயிட்டு வந்திரு... நான் அவன் கிட்ட ஏற்கெனவே சொல்லி வச்சியிருக்கேன்..."

"அதெல்லாம் வேண்டாம் அண்ணா... என்னுடைய வேலையை நானே பார்த்துக்கிறேன்..." என்றாள் அவள் அவசரமாய் இடைமறித்து...

"உன் வேலையை நீ தான் பார்த்துக்கணும்... அதாவது சாப்பிடுவது, தூங்குவது, நடப்பது எல்லாம் நீ தான் செய்ய வேண்டும்..." என்று கேலி செய்தவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் மதுரகவி...

திருச்செல்வன் இது போல் கேலி, கிண்டல் செய்து அவள் பார்த்தது இல்லை... படித்து முடித்தவுடன் அரசியலுக்கு வந்ததாலோ என்னமோ அவன் எப்போதும் சற்று விறைப்புடன் சுற்றிக் கொண்டு இருப்பான்... யாரும் எளிதில் நெருங்க முடியாத ஒரு வளையத்தைத் தன்னைச் சுற்றி எப்போதும் போட்டிருப்பான்...

"ஆமாம் அண்ணா... கேட்கணும்ன்னு நினைச்சேன்... அந்த வீட்டில் ரெண்டு பசங்க இருக்காங்களே... என்னை எப்படித் தைரியமா அங்கே அனுப்பறீங்க..."

"உன் அண்ணனை பத்தி அவங்க ரெண்டு பேருக்கும் நல்லா தெரியும்... அதை விட எனக்கு என் தங்கை மேல் நம்பிக்கை இருக்கு... ஆண் நண்பர்கள் இருப்பதில் தவறு இல்லை மது... ஆனால் அது ஒரு எல்லைக்குள் இருக்க வேண்டும்... அந்த எல்லையைத் தாண்டாது வைத்திருப்பது உன் கைகளில் தான் இருக்கிறது..."

அண்ணன் கூறிய நம்பிக்கை என்கிற வார்த்தையில் மதுரகவியின் மனம் நெகிழ்ந்தது...

"ஷ்யூர்ண்ணா..." என்று அவள் உறுதி அளித்தாள்... இதுநாள் வரை அவளிடத்தில் இருந்த பயம் சற்று அகன்று இருந்தது...

"மதும்மா... டேக் கேர்..." என்று அவளை அணைத்து விடுவித்தான் அந்த அன்பு சகோதரன்...

கற்பாறைக்குள்ளும் ஈரம் இருக்கும் போலும்...

அதன் பிறகு தாய், தங்கை இருவரிடமும் பிரியா விடைப்பெற்று விமானத்தில் ஏறினாள்... வான் வழி பயணம் செய்து அவள் இலண்டன் மாநகரத்தில்

வந்திறங்கிய போது அவளுக்காக விருந்தினர் வீட்டின் இரண்டாவது மகன் காத்திருந்தான்...

"ஹாய்... ஐயம் அகில்... ஆர் யூ மதுரகவி...? அம் ஐ ரைட்...?" ஆர்ப்பாட்டமாய் அறிமுகப்படுத்திக் கொண்டு கை நீட்டியவனிடத்தில் அவளும் மகிழ்ச்சியாய் கை குலுக்கினாள்...

ஏனெனில் அகில் இவளை விட இரண்டு வயது அதிகமாக இருந்தான்... அதனால் அவளுக்கு அவனைக் கண்டதும் இயல்பாகவே ஒரு தோழமை உணர்வு எழுந்தது... அது போலவே அவனும் வீடு வந்து சேரும் வரை அவளிடத்தில் விடாது பேசி கொண்டே வந்தான்... ஆங்கிலமும், தமிழும் கலந்த அவனது பேச்சு அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது... பதிலுக்கு அவளும் கலகலப்பாக வாயாடினாள்...

"வாம்மா மது..." என்று அன்போடு வரவேற்ற ஆகாஷ், அகிலின் அன்னை உஷாவை மதுரகவிக்கு மிகவும் பிடித்துப் போனது... பெண் குழந்தைகள் இல்லாததால் அவருக்கும் அவளை மிகவும் பிடித்துப் போனது...

"இது உன் வீடு போல் நினைச்சுக்கோம்மா... அங்கிள் காலையில் ஆபிசுக்குப் போனால் நைட் தான் வருவார்... அப்படியே லீவில் வீட்டில் இருந்தாலும் அவர் இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது... அதற்கு எல்லாம் சேர்த்து வச்சு இதோ இந்த அகில் ஒருந்தன் போதும்... இவன் மட்டும் வீட்டில் இருந்தால் வீடே ரெண்டு பட்டு போகும்..." என்றார் மகனை கேலி செய்து...

"நமக்கும் அமைதிக்கும் ரொம்பத் தூரம் மது... நல்லா சாப்பிடறதுக்கும், நல்லா பேசுறதுக்கும் தான் வாயை கடவுள் கொடுத்து இருக்கிறார்ன்னு நம்பும் கட்சியைச் சேர்ந்தவன் நான்... சோ நான் நல்லா சாப்பிடுவேன்... நல்லா பேசுவேன்..."

"நானும் உன்னை மாதிரி தான் அகில்..." என்று அவள் உற்சாகமாய்க் கூறிக் கொண்டு அவனது கைகளில் 'ஹைபை' அடித்துக் கொண்டாள்...

அவளாலும் பேசாமல் இருக்க முடியாது... அதே போல் சாப்பிடாதும் இருக்க முடியாது...

"மது... உனக்கு என்ன வேணும்னோ கூச்சப்படாம கேளு... நான் செஞ்சு தர்றேன்... இல்லை உனக்கு விருப்பம்ன்னா நீயே செஞ்சு சாப்பிடு... நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்... இன்னையில் இருந்து நீயும் இந்த வீட்டுப் பெண் தான்..." என்று அவர் சொல்லி கொண்டிருக்கும் போதே அவரது மூத்த மகன் ஆகாஷ் உள்ளே வந்தான்...

அவன் வட இந்திய கதாநாயகனை போன்று சிவந்த நிறத்துடன், மீசையில்லாது அழகாய் இருந்தான்...

"இது என் பெரிய பையன் ஆகாஷ்... இங்கே பாங்க்கில் வொர்க் பண்றான்..." என்று அவளிடத்தில் மகனை அறிமுகப்படுத்தி வைத்தார் உஷா...

"அண்ணாவோட பிரெண்டோட பிரெண்டோட பிரெண்ட்... அம் ஐ ரைட்...?" என்று கேட்டு புன்னகைத்த அந்தச் சிறு தேவதை பெண்ணைக் கண்டு அவனும் ஆமோதிப்பாய் பதிலுக்குப் புன்னகைத்தான்...

"ஆகாஷ் என்னை மாதிரி கிடையாது... சைலண்ட் கில்லர்..." என்று சகோதரனை கிண்டலடித்தான் அகில்...

"அங்கிள் மாதிரின்னு சொல்லு..." என்று கூறி சிரித்தவளை கண்டு வியப்பாய் புருவங்களை உயர்த்தினான் ஆகாஷ்...

"நான் தான் சொன்னேன் ஆகாஷ்..." என்றார் உஷா...

"ஓ..." என்ற ஆகாஷ் அதற்கு மேல் பேசாது உணவு உண்டு விட்டு அலுவலகத்திற்குச் சென்று விட்டான்...

மதுரகவியும், அகிலும் பல்கலைக்கழகத்திற்குக் கிளம்பி சென்றனர்... அங்குச் சென்று அவளுக்கு எல்லாவற்றையும் காட்டி விளக்கிய அகில்,

"நம்மூர் மாதிரி இங்கே கிடையாது... இங்கே வகுப்பறையில் படிப்பதை விட நாம் வெளியில் சென்று தேடி படிப்பது தான் அதிகம் இருக்கும்..."

அது அவளுக்குத் தெரியும் தானே... ஒரேடியாகக் காலையில் இருந்து மாலை வரை வகுப்பில் அடைந்து கிடக்கத் தேவையில்லை என்பதே அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது...

அகில் தனது அலைப்பேசி எண்ணை அவளுக்குக் கொடுத்தவன்,

"உன்னுடைய வகுப்பு முடிந்ததும் கூப்பிடு... நான் வந்து உன்னை கூட்டிட்டு போகிறேன்..."

"அகில்..." என்று தயங்கியவளை கண்டு,

"எல்லாம் நீ பழகும் வரை... அதுக்கு அப்புறம் நீயே தனியே போய்க் கொள்..."

அதுவும் அவளுக்குச் சரியாகப் பட்டது... சரியென்று தலையசைத்து விட்டு நடந்தவள் கண்ணில் அங்கு அழகாய்ப் பூத்திருந்த ஆரஞ்சும், சிவப்பும் கலந்த ரோஜா பூ அவளது மனதினை கவர அதைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு அழகு பார்த்தாள்...

"ஊர் புத்தி லண்டன் வந்தும் போகவில்லையே..." என்றபடி அவள் பின்னால் வந்து நின்றான் அகில்...

"ஹி... ஹி... அது வந்து அகில்..."

"கிளாஸ்க்கு நேரமாச்சு... ஓடு ஓடு..." என்று அவன் அவளை விரட்ட...

"இதோ கிளம்பிட்டேன்..." என்று அவனிடம் உரைத்தவள் தனது வகுப்பறையைத் தேடி ஓடினாள்...

அப்படி வேகமாக ஓடும் போது எதிரில் வந்தவனை இடித்துக் கொண்டு தடுமாறி கீழே விழுந்தாள்...

"சாரி..." என்று அவளிடம் மன்னிப்பை வேண்டியது ஒரு குரல்...

"பரவாயில்லை..." என்று ஆங்கிலத்தில் கூறியபடி எழுந்தவள் தனது பொருட்களைச் சேகரித்துக் கொண்டு நிமிர்ந்தாள்...

"எக்ஸ்க்யூஸ்மி..."

அந்த ஆணின் குரலில் திரும்பியவள் அவனின் முகத்தைப் பார்க்காது அவன் கையில் இருந்த ரோஜா மலரை பார்த்து முகம் மலர்ந்தவளாய் அதை வாங்கியபடி அவனிடம்,

"தேங்க்யூ... தேங்க்யூ..." என்று நன்றி உரைத்தவள் தனக்குள்,

"நல்லவேளை உனக்கு எதுவும் அடிபடலை..." என்று தமிழில் கூறியபடி அந்தப் பூவிற்கு ஒரு முத்தத்தைக் கொடுத்தவளாய் அவனைச் சிறிதும் கவனிக்காது அங்கிருந்து ஓடி விட்டாள்...

அவன் தான் ரிச்சர்ட் வில்லியம்ஸ்... ஒரு வேலையாக இங்கு வந்திருந்தவன் முதன்முதலாக மதுரகவியை அங்குத் தான் சந்தித்தான்... பார்பி டால் போன்று அழகாய் இருந்த அந்தச் சின்னப் பெண்ணை அவன் ஆச்சிரியமாய்ப் பார்த்தான்...

அவளைப் பார்த்ததுமே அவனுக்குத் தெரிந்து போனது அவள் ஒரு இந்திய பெண் என்று... அவளது சிறு பிள்ளைத்தனமான செயல் ஒவ்வொன்றும் அவனைப் பெரிதும் ஈர்த்தது... அதுவும் அவள் கடைசியாய் கொஞ்சி கொஞ்சி பேசிய கிள்ளை மொழி அவனது மனதினை கிள்ளி சென்றது... அது எந்த மொழி என்று தெரிந்து கொள்ள அவனுள் ஆர்வம் முளைத்தது... அந்த மொழியைக் கற்று தேர்ந்திட அவனது மனம் ஆசை கொண்டது...

மலருக்கு முத்தமிட்ட அந்த மலரினும் மென்மையான அவளது செர்ரி இதழ்கள் அவன் கண் முன் வலம் வந்து அவனை இம்சித்தது... கடமை அவனை அழைக்கத் தனக்குள் புன்னகைத்து கொண்டவனாய் தலையைக் கோதி கொண்டு அந்த இடத்தை விட்டு அவன் அகன்றான்...

நாட்கள் அது பாட்டிற்குச் சென்றது... மதுரகவிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அங்கு வாழும் முறை பழகி போனது... ஊரும் மிகவும் பிடித்துப் போயிற்று... அந்த வார இறுதியில் அகிலின் வீட்டில் விருந்து வைத்தார்கள்... ஆகாஷ் மற்றும் அகிலின் நண்பர்கள் நிறையப் பேர் அதில் கலந்து கொண்டார்கள்... மதுரகவியும் அதில் கலந்து கொண்டாள்...

அந்த விருந்திற்கு ஆகாஷின் நண்பன் ரிச்சர்ட் வருகை தந்திருந்தான்... அவளுக்கு அவனை யாரென்று தெரியாது... அதனால் அவள் அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை... ஆனால் அவனுக்கு அவளை நன்கு அடையாளம் தெரிந்தது...

கறுப்பு நிறத்தில் முட்டிக்கால் வரையிலான 'ஃப்ராக்' எனப்படும் எளிமையான பருத்தி உடையில் அவள் அவனது கவனத்தைப் பெரிதும் ஈர்த்தாள்... ஒப்பனை இல்லாத அவளது கள்ளங்கபடமற்ற பால்நிலா முகம் அவனது மனதில் ஆழ பதிந்தது... பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது அவளது அதீத அழகு... நண்பர்களுடன் அவன் பேசி கொண்டிருந்த போதும் அவனது விழிகள் அவள் மீதிருந்து நொடி பொழுது கூட அகலவில்லை...

ரிச்சர்ட்டின் பார்வையை உணராது மதுரகவி எப்போதும் போல் உஷாவிற்குத் தேவையான உதவிகளைச் செய்து கொண்டிருந்தாள்... விருந்திற்குத் தேவையான உணவு வகைகளை அவர் சமைத்து தர அவள் அங்கு வந்து அடுக்கி வைத்துக் கொண்டு இருந்தாள்...

"மது... இந்த ஃபிஷ் ஃப்ரையைக் கொஞ்சம் பார்த்துக்கோ... நான் இந்தக் கூல்ட்ரிங்க்ஸை கொடுத்துட்டு வந்திர்றேன்..."

"அதை என் கிட்ட கொடுங்க ஆன்ட்டி..." என்று பழச்சாறு அடங்கிய அந்தப் பெரிய தட்டை அவள் தனது கைகளில் வாங்கிச் சென்றாள்...

எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டு வந்தவள் ரிச்சர்ட் அருகில் வரும் போது அகில் அவளைத் தடுத்து,

"நான் கொடுத்துக்கிறேன்... நீ உட்கார்..." என்று கூறிவிட... அவள் சிரித்தபடி உள்ளே சென்று விட்டாள்...

அதைக் கண்டு ரிச்சர்ட் எரிச்சலுடன் தனது கை முஷ்டியை அமர்ந்திருந்த நாற்காலியின் முனையில் குத்தினான்...

எல்லோரும் உணவு உண்டு விட்டு விச்ராந்தியாக அமர்ந்திருந்த போது ரிச்சர்ட்டை எல்லோரும் பாட சொல்ல... அவனும் பிகு பண்ணாது கிட்டார் வாசித்துக் கொண்டே பாடினான்...

"See her
Dreamin'
Don't wake me
'Cos it's real
Angel
Come fly
Through the sky
I see
A distant light
It's burning so bright
A mystical sight
A glorious flight
In the moonlight

So it's a secret I can tell you 'bout
What I saw, it was astounding now
Want this feeling forever in my life

Can you see her
Am I dreamin'
Please don't wake me
'Cos it's real
She's my angel

Angel
Can you see her
Am I dreamin'
Please don't wake me
'Cos it's real

She's my angel
She's my angel
Angel
She's my angel"

அப்போது தான் மதுரகவி அவனைக் கவனித்துப் பார்த்தாள்... ஆறடி உயரமும், ஆங்கிலேயனுக்குரிய சிவப்பும், வெள்ளையும் கலந்த நிறத்தில் இருந்தவனின் தலை முடியும், விழியும் மட்டும் கருப்பும், பழுப்பும் கலந்து வித்தியாசமாக இருந்தது... பார்ப்பவர் மனதினை சுண்டி இழுக்கும் வண்ணம் அத்தனை அழகாய் இருந்தான் அவன்...

அவனது குரலும், அவனது அழகும் அந்தப் பதின்வயதிற்குரிய மயக்கத்தைக் கொடுக்க அவள் வாயை பிளந்து கொண்டு அவனை ஆச்சிரியமாகப் பார்த்தாள்... மற்றபடி அவள் மனதில் காதலோ, கல்மிசமோ எதுவும் இல்லை... அவனைக் கண்ட போது ஒரு 'ஹீரோ வொர்ஷிப்' மட்டுமே அவளிடத்தில் தோன்றியது... திரையில் காணும் நாயகனை கண்டு ஏற்படும் பரவசம், ஈர்ப்புப் போன்றது அது...

மதுரகவி தன்னைப் பார்ப்பது உணர்ந்து ரிச்சர்ட்டின் விழிகள் மின்னியது... அவனது மனதில் உற்சாகம் கொப்பளித்ததில் முகத்தில் அப்பட்டமாய்ச் சந்தோசம் தெரிந்தது...

பிறகு கிடைத்த தனிமையில் அவளிடம், "ஹாய் ஏஞ்சல்... வாட்ஸ் யுவர் நேம்...?" என்று அவன் அவளிடத்தில் பெயரை கேட்ட போது அவளது மதி மயங்கி தான் போனது...

"மதுரகவி..." போதையுறும் பெயரை கவிதை போன்று அழகாய் உச்சரித்த அவளது இதழ்களைப் பார்த்து கொண்டிருந்தவன்,

"மத்துரகவ்வி... ரைட்...?" என்று கேட்க...

அவன் தனது பெயரை அழுத்தி சொன்ன விதத்தில் அவள் சட்டென்று சிரித்து விட்டாள்...

"மதுரகவி... நீங்க மதுன்னே கூப்பிடுங்க..." என்று ஆங்கிலத்தில் கூறியவளை கண்டு,

"மது... அழகாயிருக்கிறது... இதன் அர்த்தம் என்ன...?"

மதுவிற்கான அர்த்தத்தை அவள் கூறிய போது,

"பொருத்தமான பெயர்..." என்று அவன் சொன்ன போது அவளையும் அறியாது அவளது கன்னத்தில் சிவப்புப் பூக்கள் பூத்தது...

அன்றைய நாளுக்குப் பிறகு மதுரகவி ரிச்சர்ட்டை மறந்து போனாள்... ஆனால் அவன் அவளை மறக்கவில்லை... இரண்டாவது நாள் அவள் வகுப்பு முடிந்து போகும் போது அவள் முன் வந்து நின்றான் கையில் அழகிய ஆரஞ்சு மற்றும் சிவப்பு நிறம் கலந்த ரோஜா பூங்கொத்துடன்...

அவனைக் கண்டு முகம் சுருங்கியவள் அவனது கையிலிருந்த பூங்கொத்தை கண்டு முகம் மலர்ந்தாள்...

"வாவ்... எவ்வளவு அழகு...? இல்லையா...?" என்று அவனைப் பார்த்து கேட்டுக் கொண்டே குதூகலித்தவளை கண்டு அவன் சிரித்தபடி,

"இது உனக்குத் தான்..." என்றபடி அவள் முன் நீட்டினான்...

அதில் திகைத்துப் போனவளாய்ப் பின்னால் ஒரடி நகர்ந்தவள் பயத்துடன் அவனைப் பார்த்து, "எதுக்கு...?" என்று கேட்டவளின் பெண் மனம் அவளை எச்சரித்தது...

"உனக்குப் பிடிக்கும்ன்னு நான் வாங்கிட்டு வந்தேன்..."

"அதான் ஏன்னு கேட்கிறேன்...?" என்று கேட்டுக் கொண்டே அவள் நடக்கத் துவங்க... அவனும் அவளுடன் இணைந்து நடந்தபடி,

"ஏன்னா... நான் உன்னைக் காதலிக்கிறேன்..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனைக் கண்டு அச்சத்துடன் அவள் அப்படியே நின்று விட்டாள்...

அந்தக் கணம் ரிச்சர்ட் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து பூங்கொத்தை அவள் முன் நீட்டியபடி, "ஐ லவ் யூ..." என்று காதலுடன் கூற... அவளோ பயத்தில் பேந்த பேந்தவென விழித்தாள்...

அவர்களைக் கடந்து சென்ற சிலர் இவர்களை வாழ்த்தி விட்டு செல்ல, சிலர் புன்னகையுடன் கடந்து சென்றனர்... அதில் ஒரு பெண் அவளது தோளை தட்டி,

"அழகான பையனை மிஸ் பண்ணி விடாதே..." என்று அறிவுரை கூறி விட்டு சென்றாள்...

அதில் சுயவுணர்வு அடைந்தவள் ரிச்சர்ட்டை கோபமாய்ப் பார்த்தாள்...

"எனக்கு என்ன வயது தெரியுமா...? பதினேழு... நான் படிக்கத் தான் இங்கு வந்திருக்கிறேன்... டூயட் பாட இல்லை..." என்று கோபத்துடன் படபடத்தவளை கண்டு நிதானமாய் எழுந்து நின்றவன்,

"சோ வாட்...?" என்றான் அமைதியான குரலில்...

அதில் அவளுக்குத் தான் கடுப்பாகி போனது... ஆத்திரத்தில் அவனிடத்தில் படபடவென வார்த்தைகளைக் கொட்டினாள்...

"என்ன...? சின்னப் பெண்ணை ஏமாற்ற திட்டம் போடுகிறாயா...? இந்த வேலை எல்லாம் என் கிட்ட நடக்காது..." என்று படபடத்து விட்டு அவள் செல்ல... அவளின் பின்னேயே வந்தவன்,

"ஏமாற்றுவதற்காக யாராவது காதலிப்பாங்களா...?"

அவன் வளர்ந்த கலாச்சாரத்திற்கு அவளது கூற்று அவனுக்குச் சுத்தமாகப் புரியவில்லை...

"இல்லையா பின்னே... காதல் என்கிற பெயரில் ஒரு பெண் பின்னால் சுற்றுவது பின் அவளை நல்லா உபயோகப்படுத்தி விட்டுக் கை கழுவிட்டு போவது... இது தானே உங்களை மாதிரியான ஆண்களின் வேலை..." என்று படபடத்தவளை அவன் கை பிடித்துத் தடுத்தான்...

அவள் பயத்துடன் அவனது கையில் இருந்து தனது கையை விடுவித்துக் கொள்ளப் போராட... அதைக் கண்டு அவனே தனது கையைத் தளர்த்தினான்... பின்பு அதைக் கண்டு கொள்ளாது,

"பழகி பார்த்த பின்பு பிடிக்கலை என்றால் விலகி போக வேண்டியது தானே... இதில் என்ன தப்பிருக்கு...?"

அவனது கலாச்சாரம் அப்படித் தான்... விருப்பம் இருந்தால் சேர்ந்து வாழ்வது... பிறகு பிடிக்கவில்லை என்றால் பரஸ்பர புரிதலுடன் விலகி போய் விடுவது... அதையும் மீறி பிடித்தம் நீடித்தால் மட்டுமே திருமணம் என்கிற பந்தத்திற்குள் நுழைவது... அதனால் அவள் பேசியது அவனுக்குச் சற்றுக் குழப்பமாக இருந்தது...

ஒருவனை மட்டுமே நேசித்து, சாகும் வரை அவனை மட்டுமே சுவாசித்து வாழ்ந்து உயிர் நீக்கும் தமிழ் மரபில் வந்தவளுக்கு அவன் பேச்சு கேட்டு அப்படி ஒரு கோபம் வந்தது... மேலே படபடவெனப் பேச போனவள் சற்று நிதானித்தாள்...

'இவன் யார் எனக்கு...? இவனிடம் எதற்கு இத்தனை விளக்கம் கொடுக்க வேண்டும்...? பிடிக்கவில்லை என்றால் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டுப் போய்க் கொண்டே இருப்போம்...' என்று நினைத்தவள்,

"ஐயம் சாரி... எனக்குக் காதல் பிடிக்காது... அதுக்கான ஆளும் நான் கிடையாது..." என்று தன்மையாகக் கூறி விட்டு அவள் அவனை விட்டு விலகி சென்றாள்...

அவள் கூறியதை கேட்டு அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாக அவன் செல்லும் அவளைப் புன்னகையுடன் பார்த்தபடி நின்றிருந்தான்...

மறுநாள் மதுரகவி கல்லூரிக்காகப் பேருந்தில் பயணம் செய்த போது அவள் அருகில் வந்தமர்ந்த ரிச்சர்ட்,

"குட் மார்னிங் ஏஞ்சல்..." என்று அவளைப் பார்த்துக் கண் சிமிட்ட...

அவள் திகைத்து போய் எழ முயன்ற போது அவனது கை அழுத்தமாய் அவளது கையைப் பற்றி இருக்கையில் உட்கார வைத்தது... அந்தக் கணம் அவனது முகத்தில் அப்படி ஒரு தீவிரம் இருந்தது...

அதே தீவிரத்துடன் அவனது வார்த்தைகளும் வெளிவந்தது... அதைக் கேட்டு அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்... அவளது இயங்காத கருவிழிகளின் கதிர் வீச்சில் அவனது இதயம் இயங்க மறுத்தது... அதில் மனதினை பறி கொடுத்தவனாய் அவன் மீண்டும் தனது காதலினை கூறினான் அவளிடத்தில்...

"ஐ லவ் யூ பேபி..."

மதுரமாகும்...!!!

"நான் இன்னும் கன்னி பையன் தான்... நான் காதலிக்கும் ஒரே பெண் நீ தான்... நான் காதல் சொன்ன முதல் பெண்ணும் நீ தான்..." என்று மிகவும் தீவிரத்துடன் கூறிய ரிச்சர்ட்டை பார்த்து மதுரகவி அரண்டு போனாள்...

அடுத்து அவன் காதல் கூறியது கூட அவளது காதில் ஏறவில்லை... அவன் முதலில் கூறிய வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று கூட அவளுக்குத் தெரியாது... ஆனால் அடுத்து அவன் கூறிய வார்த்தைகளில் அவள் உண்மையில் அரண்டு தான் போனாள்...

'என்னடா இது... இவன் இப்படிச் சீரியசா சொல்கிறானே...' மனதிற்குள் புலம்பியபடி அவள் அமர்ந்திருந்தாள்... அவன் தன் கையைப் பற்றி இருப்பதைக் கூட அவள் உணரவில்லை...

"ஒரு இந்திய நண்பனிடம் நீ சொன்ன வார்த்தைக்கு என்ன அர்த்தம்ன்னு கேட்டேன்... அவன் தான் சொன்னான்... உங்க ஊர் கலாச்சாரம் பத்தி... நிச்சயம் நான் உன்னை ஏமாத்த மாட்டேன்..." என்றவன் அவளது உள்ளங்கையில் சத்தியம் பண்ணுவது போல் தனது கையை வைத்தான்...

அப்போது தான் அவளுக்கு அது உறைத்தது... வெடுக்கென்று தனது கையை இழுத்து கொண்டாள்... அவனும் அவளை வற்புறுத்தவில்லை...

"இப்போ எனக்குப் பதில் சொல்லு..." என்றான் தீவிரமான குரலில்...

"எனக்குப் பிடிக்கவில்லை..."

"யார்...? நானா...?"

"ஏன் உன்னைச் சொல்ல மாட்டேன்னு நினைப்பாக்கும்...? உன்னையும், உன் காதலையும் எனக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை..."

அதற்குள் அவள் இறங்க வேண்டிய இடம் வந்து விட அவள் எழுந்து செல்ல, அவனும் அவளைப் பின் தொடர்ந்தான்...

"இப்படி என் பின்னாடியே வராதே... பிடிக்கலைன்னா விட்டுர வேண்டியது தானே..." என்று முணுமுணுத்தவளை கண்டவன் மனதில் சற்று வருத்தம் எழுந்தது...

"உனக்குப் பிடிக்காததைச் செய்யக் கூடாதுன்னு தான் நினைக்கிறேன்... ஆனால் உன் விசயத்தில் என் பேச்சை என்னால் கேட்க முடியவில்லை... நீ வேணும்ன்னு அடம்பிடிக்கும் என் மனசை என்ன சொல்லி சமாதானப்படுத்துவேன்..."

"அடப்பாவி... தமிழ் சினிமா பார்க்காமலே இப்படி டயலாக்கா அள்ளி விடுறானே... பேசாம இவன் தமிழ் படத்தில் நடிக்கப் போகலாம்... ஆளும் ஹீரோ மாதிரி அழகா தான் இருக்கான்... கலெக்சன் சும்மா பிச்சுக்கும்..."

காதல் வசனம் பேசியவனைக் கண்டு அவள் வாய் விட்டு புலம்பினாள்... அவள் பேசும் மொழி அவனுக்குப் புரியவில்லை... ஆனாலும் அது தன்னைப் பற்றித் தான் என்பதை அவன் புரிந்து கொண்டான்...

"என்ன சொல்ற...? எனக்குப் புரியலை..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"அடம்பிடிக்கும் மனசை அடக்கி வைன்னு சொன்னேன்... நான் எல்லாம் உனக்குச் செட்டாக மாட்டேன் மிஸ்டர்... ஓகேவா...? பை..." என்று கூறி விட்டு அவனின் பதிலை எதிர்பாராது சென்று விட்டாள்...

'அடங்கு என்று சொன்னால் என் மனம் அடங்கி விடுமா...?' அவன் தனக்குள் கேட்டபடி நின்றிருந்தான்...

அவனது இயல்புக்கு மாறாக அவன் அவள் பின்னே சுற்றி வருகிறான்... அது அவனுக்கும் புரிந்து தான் இருந்தது... ஆனாலும் காந்தமாய் ஈர்க்கும் இந்தச் சின்னப் பெண்ணிடம் அவன் மேலும் மேலும் தோற்று தான் போகிறான்...

அடுத்தடுத்த நாட்கள் ரிச்சர்ட் அவள் பின்னே வருவதும் அவள் கண்டு கொள்ளாது போவதும் தொடர்ந்தது...

'இவனுக்கு வேற வேலையே இல்லையா...? இப்படிப் பின்னாலேயே வந்து கொண்டு இருக்கிறான்... பரவாயில்லை, சம்பளம் இல்லாத செக்யூரிட்டி... கவலையை விடு மது...' என்று தனக்குள் சமாதானமாய்ச் சொல்லி கொள்வாள்...

அன்று விடுமுறை தினம்... ஆகாஷ் நண்பர்களுடன் சேர்ந்து வெளியில் சென்று இருந்தான்... உஷாவும், கதிரும் நண்பர் ஒருவர் அழைத்திருந்தார் என்று அவரது வீட்டிற்குச் சென்று

இருந்தனர்... அதனால் வீட்டில் மதுரகவியும், அகிலும் மட்டுமே தனித்து இருந்தனர்...

இருவரும் வாய்க்கு ஓயாது வேலை கொடுத்துக் கொண்டு பொழுதை போக்கி கொண்டு இருந்தனர்... அது தான் சாப்பிடுவதும், பேசுவதும்... நேரம் சென்று கொண்டிருப்பது தெரியாது அரட்டை அடித்துக் கொண்டு இருக்கும் போது ரிச்சர்ட் அங்கு வந்தான்...

அகில் அவனைக் கண்டதும் உற்சாகமாய்ப் பேச துவங்க, மதுரகவி தனது கூட்டுக்குள் சுருங்க துவங்கினாள்... அவளது இயல்பு நிலை காணாது போயிருந்தது... ஏனெனில் ரிச்சர்ட்டின் பார்வை அப்படி இருந்தது... அதே சமயம் அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது... ரிச்சர்ட்டை ஏதாவது செய்ய வேண்டும் என்பது போல் கோபம் வந்தது...

அதற்கான சந்தர்ப்பம் மதிய உணவு உண்ணும் போது அவளுக்குக் கிடைத்தது... அவள் தான் எல்லோருக்கும் உணவை எடுத்து வந்து கொடுத்தாள்... ரிச்சர்ட்க்கு கொடுக்கும் உணவில் மட்டும் மிளகு தூளை அள்ளி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்... மிளகாய் தூளின் காரத்தை விட மிளகு தூளின் காரம் மிகவும் காட்டமாய் இருக்கும்... என்ன செய்தாலும் தொண்டை எரிச்சல் போகாது... அதனால் அவள் அதைத் தேர்ந்தெடுத்தாள்...

உணவு உண்ணும் போதே ரிச்சர்ட்டிற்கு அதன் காரம் உச்சந்தலைக்குச் சர்ரென்று ஏறியது... அதைக் கண்டு அவள் நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி உணவை தொடர்ந்தாள்... அது அவளின் வேலை என்று தெரிந்து கொண்டவன் உணவு அனைத்தையும் அமைதியாக உண்டான்... அவனது செய்கையை வியப்பாய் பார்த்தவள் அவனது முகத்தைக் கண்டதும் வியப்பு மறந்து பதற்றம் அவளைத் தொற்றிக் கொண்டது...

காரத்தின் விளைவால் முகம் எல்லாம் சிவந்து இருக்க, கண்கள் கலங்கி இருந்தது... உதடுகள் இன்னமும் இரத்த சிவப்பாய் சிவந்து காணப்பட்டது... அந்நேரம் அகிலின் நண்பன் அவனை அலைப்பேசியில் அழைத்தான்... அவன்

நண்பனுடன் சுவாஸ்யமாய்ப் பேசியபடி உண்டு கொண்டு இருந்தான்...

மதுரகவி மெல்ல எழுந்து சமையலறைக்கு வந்தாள்... அவள் பின்னேயே ரிச்சர்ட்டும் வந்தான்...

"இப்போதாவது என் காதலை ஏற்றுக் கொள்வாயா...?" என்று பரிதாபமாகக் கேட்டவனைக் கண்டு அவளுக்கு மிகவும் பாவமாகப் போய்விட்டது...

"காதல் கிடக்கட்டும்... முதலில் உன் வாயை பார்... காரம் சாப்பிட்டதால் எப்படிச் சிவந்து போயிருக்கிறது என்று..."

"முதலில் நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்..."

"சொன்னால் கேள்..." என்றவள் அவனது கஷ்டம் கண்டு மனம் பொறுக்காது ஐஸ் கட்டியை எடுத்து அவனிடம் கொடுத்தாள்... அதை வாங்காது அவன் அவளைப் பார்க்க, அவள் சலிப்புடன் அவனைப் பார்த்தாள்...

"இங்கே பார்... உன்னோட கலாச்சாரம் வேறு... என்னோட கலாச்சாரம் வேறு... எங்க வீட்டில் காதலுக்குச் சம்மதம் சொல்ல மாட்டாங்க... அவங்களுக்குப் பிடிக்காததை நான் பண்ணவும் மாட்டேன்... இது தான் என் நிலை..." என்று அவள் எடுத்து கூறிய போதும் அவன் அசையவில்லை... அமைதியாக அவளைப் பார்த்தான்...

"சரி உன் வழிக்கே வருகிறேன்... நீ காதலிக்கும் ஒரே பெண் மற்றும் காதல் சொன்ன முதல் பெண் எல்லாம் நான் மட்டுமே என்று வைத்துக் கொள்வோம்... இது நிரந்தரமா...? இல்லை இடையில் என்னை விட்டு விட்டு நீ போய் விடுவாயா...?"

அவளது பேச்சு கேட்டு அவன் நெற்றியை நீவி விட்டுக் கொண்டான்...

"தெரியலை... இதுவரை எந்தப் பெண்ணிடம் இது போல் உணர்ந்தது இல்லை... இனிமேல் இது போல் உணர்வேனா என்றும் சொல்ல தெரியலை... ஆனால் உன்னை ஏமாத்த

மாட்டேன்... உன் மீதான காதலுக்கு நான் உண்மையா இருப்பேன்..."

அவன் வளர்ந்த கலாச்சாரம் அவனை மிகவும் குழப்பியது... அத்தோடு மதுரகவியின் வார்த்தைகளும்...

"நீ சொல்வது வேறு... நான் சொல்வது வேறு... எனக்கான பதிலை நீ தேடி கண்டுபிடி... அதற்குப் பின் நீ என்னைக் காதலிக்கலாம்... என்ன சரியா...?"

அவள் கேட்டதற்கு அவன் ஒன்றும் பேசாது சென்று விட்டான்... அவளும் பிரச்சினை தீர்ந்தது என்று நிம்மதியாக இருந்தாள்... ஆனாலும் ஐஸ் கட்டியை வாங்காது போய் விட்டானே என்று அவளது மனம் கையில் இருந்த ஐஸ் கட்டியை போன்று அவனுக்காகப் பரிதாபமாய் உருகியது...

மதுரகவி எப்போதும் போல் கல்லூரிக்கு சென்று வந்து கொண்டு இருந்தாள்... நாட்கள் அமைதியாகக் கழிந்தது... ஆனாலும் சில சமயம் அவளது விழிகள் ரிச்சர்ட்டை எதிர்பார்த்து தேடும்... அவனைக் காணவில்லை என்றதும் நிம்மதி எழும் அதே நேரம் 'இவ்வளவு தானா இவனது காதல்' என்கிற ஏமாற்றமும் ஒருங்கே சேர்ந்து எழும்... தேடல் மெல்ல மெல்ல ஏக்கமாக மாறிக் கொண்டு இருந்ததை அவளே அறியவில்லை...

ஒரு நாள் மதுரகவி கல்லூரி மரத்தடியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்... அப்போது அவள் முன் நிழலாடியது... யாரென்று அவள் நிமிர்ந்து பார்த்த போது அங்கே ரிச்சர்ட் நின்று கொண்டு இருந்தான்... அவனைக் கண்டதும் அவளையும் அறியாது ஒரு சந்தோசம் எழுந்தது... அவனைப் பார்த்து வரவேற்பாய் மென்மையாய் புன்னகைத்தாள்... அதில் முகம் மலர்ந்தவனாய் அவன்,

"நீ கேட்ட கேள்விக்கு நான் பதில் கண்டுபிடித்து விட்டேன்..." என்க...

அதைக் கேட்டு அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்... ஏனோ தெரியவில்லை அவளது இதயம் சத்தமாய் மத்தளம் வாசித்தது... என்ன சொல்ல போகிறானோ என்று திக்திகென்று துடிக்கும் மனதுடன் அவனை இமைக்காது பார்த்தாள்... அதற்கான காரணம் அவளுக்கு மெல்ல புரிய ஆரம்பித்தது...

அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன் பின்பக்கமாய் மறைத்து வைத்திருந்த ஆரஞ்சு மற்றும் சிவப்பு நிறம் கலந்த ரோஜா பூங்கொத்தை அவள் முன் நீட்டியவன்,

"நான் காதல் சொன்ன முதல் பெண்ணும் நீ தான்... நான் காதல் சொல்லும் கடைசிப் பெண்ணும் நீ தான்... நான் காதலிக்கும் ஒரே பெண்ணும் நீ தான்..."

ரிச்சர்ட்டின் வார்த்தையில் கண்கள் கலங்கி போனது அவளுக்கு... காதல் அவளுக்குப் பிடிக்காதது தான்... ஆனால் இந்த ஆண்மகனின் காதல் அவளுக்கு மட்டுமே வேண்டும் என்பது போல் ஒரு எண்ணம் எழுந்தது அவளுள் வேகமாக...

"இப்போது என் காதலை ஏற்றுக் கொள்கிறாயா...?" என்று கேட்ட போதும் அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை... அவனை அவ்வளவு பிடித்திருந்த போதும்...

"என்னை ஏன் காதலிக்கிற ரிச்சி...?"

"இது என்ன அபத்தமான கேள்வி...? எல்லோரும் எதுக்குக் காதலிப்பாங்க...?"

"கேட்டதுக்குப் பதில் சொல் ரிச்சி..."

"ம்... இதுக்கு என்ன பதில் சொல்றது...? பார்பி டால் மாதிரி அழகா இருக்கிற உன்னைப் பார்த்ததும் எனக்குப் பிடித்துப் போனதை சொல்லவா...? இல்லை எந்நேரமும் உன் கூடவே இருக்கணும்ன்னு அடம்பிடிக்கும் என் மனதினை பற்றிச் சொல்லவா...?"

"அப்போ நான் அழகா இருப்பதால் தான் உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா...?"

"ம்... அப்படியும் வச்சுக்கலாம்..." என்றான் அவன் புன்சிரிப்புடன்... காதலை ஏற்றுக் கொள்வதற்குள் இத்தனை கேள்விகள் கேட்கும் அவளைக் கண்டு அவனுக்கு வெகு சுவாரஸ்யமாக இருந்தது...

"ஒரு நாள் இல்லை ஒரு நாள் இந்த அழகு என்னை விட்டு போயிரும்... அப்போ உன்னோட நிலை என்ன ரிச்சி...? அப்பவும் நீ என்னைக் காதலிப்பியா...?"

அவளது வார்த்தையில் இப்போது அவன் திகைத்துப் போனான்...

"எனக்கு வயசாகக் கூடும்... அப்போது என் தோல் சுருங்கி இந்த அழகு குறைந்து போகும்... நாளுக்கே விபத்தில் என் முகம் அகோரமாகி போகலாம்... இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரம் இல்லை... அப்படி இருக்கும் போது உன்னுடைய காதல் என்னவாகும் ரிச்சி...?"

"எந்த நிலையிலும் நான் உன்னை விட்டு போக மாட்டேன் மதூ... நீ கிழவியானாலும் இந்தக் கிழவன் உன்னைக் காதலித்துக் கொண்டே இருப்பான்..."

அவன் 'ஐ லவ் யூ' என்று சொல்லும் போது வராத காதல் அவனது இந்த வார்த்தைகளில் வந்தது...

"உண்மையாவா ரிச்சி...?" அப்போதும் அவளது சந்தேகம் அவளை விட்டு போகவில்லை...

"ப்ராமிஸ் பேபி..."

அவன் சொன்னதும் கண்ணீர் மல்க அவன் கைகளில் இருந்த பூங்கொத்தை வாங்கிக் கொண்டாள்... அதில் அவனது முகம் மலர்ந்தது...

"என்னைக் காதலிக்கிறியா பேபி...?" என்று கேட்டவனை ஏறிட்டு பார்க்காது,

"ம்... ம்... ம்..." என்று தலையசைத்தவள் வெட்கத்துடன் அந்தப் பூங்கொத்தில் முகத்தைப் புதைத்து கொண்டாள்...

அடுத்த நொடி ரிச்சர்ட்டின் இறுகிய அணைப்பில் அவள் இருந்தாள்... அவள் திகைத்து போய் அவனைப் பார்க்க... அவனோ,

"மதூ... மை லவ்..." என்று காதலோடு அவள் முகம் நோக்கி குனிந்தான்...

அடுத்து அவன் செய்யப் போகும் செயலின் விபரீதத்தை உணர்ந்தவளாய் அவனின் பிடியில் இருந்து திமிறிக் கொண்டு வெளியில் வந்தாள் அவள்... வலிய ஆண் அவன் நினைத்து இருந்தால் அவளை அடக்கி அவளது இதழ்களைச் சுவைத்து இருக்கலாம்... ஆனால் அவளின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து விலகி நின்றான்...

"ஏன் பேபி...?" தாபத்தோடு புரியாது வந்தது அவனது வார்த்தைகள்...

"இது எல்லாம் இப்போ வேண்டாம்..."

அதில் அவனது முகத்தில் புன்னகை தவழ்ந்தது...

"பிறகு எப்போது வேண்டுமாம்...?"

"அது... அது... நம் கல்யாணத்துக்கு அப்புறம்..."

அவன் முகம் பார்ப்பதற்கு லஜ்ஜையுற்றவளாய் வேறு எங்கோ பார்த்தபடி கூறியவளின் முகம் சிவந்து போயிற்று... அவள் பேசியது அவனுக்குச் சிரிப்பை வரவழைத்த போதும், அவளது வெட்கம் அவனை ரசிகனாய் மாற்றி அவளை ரசிக்க வைத்தது...

"இப்போவே நாம் கல்யாணம் பண்ணிக்கலாமா...?"

"என்னது...?" என்று திகைத்துப் போய்ப் பார்த்தவளை கண்டு அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"நீ தானே சொன்ன... உன்னை நெருங்கணும்ன்னா நாம் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு... அதுக்குத் தான்..."

"ரிச்சி... இனி இது மாதிரி லூசுத்தனமா பேசின, அடி பின்னிருவேன்..." என்று ஒற்றை விரல் நீட்டி அவனைப் பார்த்து மிரட்டியவளின் குழந்தைத்தனமான செய்கையில் பெரிதும் ஈர்க்கப்பட்டவனாய் கை கட்டி அமைதியாய் விலகி அமர்ந்தான்...

அவனது வலிமையான உடல் உறுதியின் முன் மலர் போன்ற அவளின் மெல்லிய தேகம் தாக்கு பிடிக்க முடியாது என்று தெரிந்து இருந்தும் அவன் அவளது வார்த்தைக்குக் கட்டுப்பட்டு விலகி நின்றான்...

"இங்கே பார் ரிச்சி... இது எங்க கலாச்சாரம் கிடையாது..." என்று தமிழ் கலாச்சாரம் பற்றி அவனுக்குப் பக்கம் பக்கமாக அவள் எடுத்துரைக்க அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்தவன்,

"ஆனால் உங்க ஊர் சினிமாக்களில் இப்படிக் காண்பிப்பது இல்லையே..." என்றான் நமட்டு சிரிப்புடன்...

"அது நீ ஏதாவது ஹிந்தி சினிமா பார்த்திருப்ப... எங்க தமிழ் சினிமாவில் அப்படி எல்லாம் கிடையாது..." என்றாள் அவள் சிறிதும் விட்டு கொடுக்காது கெத்தாக...

"நானும் தமிழ் சினிமாவை தான் சொல்கிறேன்... உனக்காக, உங்க கலாச்சாரத்தைக் கத்து கொள்வதற்காக இத்தனை நாட்களில் எத்தனை தமிழ் சினிமா பார்த்து இருப்பேன் தெரியுமா..."

"அட நாசமாய்ப் போச்சு...." என்று தமிழில் கூறியபடி தலையில் கை வைத்தாள் அவள்...

"கலாச்சாரத்தைக் கத்துக்கிறதுக்கு உனக்கு வேறு ஒண்ணும் தோணலையா...? சினிமா தான் பார்க்க தோணுச்சா...? இந்தக் கொடுமையை நான் எங்கே போய்ச் சொல்வேன்..." என்று புலம்பியவளின் வார்த்தைக்கு அர்த்தம் புரியாது அவன்,

"என்ன சொல்ற...?" என்று கேட்க...

"ம்... சோத்துக்கு உப்பில்லை... சுரைக்காய்க்கு பருப்பில்லைன்னு சொல்றேன்..." என்று அதற்கும் அவனிடம் காய்ந்தாள் தமிழில்...

"ம்ப்ச்... நீ என்ன சொல்றேன்னு எனக்கு ஒண்ணும் புரியலை... முதலில் நான் தமிழ் கத்துக்கணும்... அப்போ தான் உன்னை இன்னும் முழுசா புரிஞ்சிக்க முடியும்..."

'ஆஹான்... ஒரு ஆடு வலிய வந்து மாட்டுதே... பிடிச்சு பிரியாணி போட்டுற வேண்டியது தான்...' மனதில் குதூகலமாய் நினைத்த மதுரகவி,

"நான் உனக்குத் தமிழ் சொல்லி தர்றேன் ரிச்சி..." என்க...

"வாவ் பேபி... உண்மையாவா...?"

"எஸ் ரிச்சி டார்லிங்..." என்று மிதப்பாய் கூறியவளை கண்டு அவனது இதழ்கள் விரிந்தது புன்னகையில்...

"இந்த அழகான டீச்சர் சொல்லி கொடுப்பதாக இருந்தால் எனக்கு ஓகே..." என்று அவளை நோக்கி நீண்ட அவனது வலிய கரத்தின் மீது தன் கையிலிருந்த பேனாவை வைத்து பட்டென்று ஒரு அடி வைத்தவள்,

"தொட கூடாது..." என்றாள் கண்டிப்புடன்...

"ம்ஹூம் அப்புறம்... உன்னுடைய கண்டிசன்ஸ் எல்லாம் மொத்தமாய்ச் சொல்லிவிடு... அதை எல்லாம் நான் செய்யாமல் இருக்கிறேன்..."

"முதலில் நீ என்னைத் தொட்டு பேச கூடாது... பக்கத்தில் உட்கார்ந்தால் இரண்டடி தள்ளியே உட்காரணும்... அப்புறம் என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் பார்க்க கூடாது... அப்படி மீறி பார்த்தேன்னா உன் கண்ணு ரெண்டையும் நான் நோண்டிருவேன்..." என்று சைகையோடு பாவனையாய் சொன்னவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அப்புறம் சிகரெட், ட்ரிங்க்ஸ் எல்லாம் எனக்குச் சுத்தமா பிடிக்காது... இது எல்லாம் நீ குடிக்கக் கூடாது... அப்புறம்..."

அவனோ ஆங்கிலேயன்... வித்தியாசமான கலாச்சாரத்தைக் கொண்டவன்... பெற்றோர்களுக்கே கட்டுப்படாது சுதந்திரமாய் வளரும் குடும்பப் பின்னணியைக் கொண்டவன்... அப்படிப்பட்ட ஒருவன் தனது கட்டளையைத் தவறாது பின்பற்றுவானா...? அல்லது அவன் நல்லவனா? இல்லை இந்தப் பழக்கங்கள் எல்லாம் கொண்ட கெட்டவனா? என்று தெரியாது சிறு பிள்ளைத்தனமாய் அவள் அவனிடத்தில் தனது கோரிக்கையைக் கட்டளையாக விதித்தாள்...

என்னே ஒரு விந்தை...! அவனும் புன்னகையுடன்,

"ஷ்யூர் பேபி... நீ சொல்ற எல்லாத்தையும் நான் கேட்கிறேன்... நீ என்னைக் கல்யாணம் பண்ணி கொள்வாயா...?" என்று உடனே ஒத்துக் கொண்டான்...

"நான் என்ன சொல்லிக்கிட்டு இருக்கேன்... நீ என்ன பேசிக்கிட்டு இருக்க... மரமண்டை, மரமண்டை..." என்று தமிழில் திட்டியவள் அவனிடம்,

"முதலில் ஒழுங்கா காதல் செய்... அதுக்குப் பிறகு தான் கல்யாணம்..."

"நானும் காதல் செய்யத் தானே கேட்கிறேன்..." என்று முணுமுணுப்பாய் கூறியவனைச் சந்தேகமாய்ப் பார்த்தவள்,

"என் கண்டிசனோடு இதையும் சேர்த்து கொள்... இப்படி இரட்டை அர்த்தத்தில் நீ ஒரு போதும் பேச கூடாது..."

அவளின் வயதிற்கேற்ப அவள் விதிமுறைகளை அடுக்கி கொண்டே போக, அவனும் எல்லாவற்றிற்கும் சரி சரி என்று சம்மதித்தான்... அந்தக் குட்டி தேவதையிடம் அப்படி ஒரு மயக்கம் அவனுக்கு இருந்தது...

இறுதி வரை அவன் சொன்ன சொல்லை காப்பாற்றினான்... ஆனால் அவள் தான் அதைக் காப்பாற்றாது பாதியில் அவனை விட்டு விட்டு ஓடி வந்து விட்டாள்...

அவர்களது காதல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போனது... அது போல் தான் ரிச்சர்ட்டின் தமிழும்... வீட்டினருக்கு பேசும் போது மட்டும் அவளது மனசாட்சி குற்றவுணர்வில் தவிக்கும்... ஆனால் ரிச்சர்ட்டை பார்த்ததும் அவளுக்கு எல்லாம் மறந்து போகும்... பழகிய வரை அவனிடத்தில் அவள் அவனைப் பற்றி எதுவும் கேட்கவில்லை... என்ன வேலை பார்க்கிறாய்...? என்ன சம்பளம்...? அவனது குடும்பப் பின்னணி என்ன...? இப்படி எதையும் கேட்காது காதல் அவளது கண்களை மறைத்தது...

பின்னே அவள் செய்யும் ஒவ்வொரு குழந்தைத்தனமான செயலையும் திட்டாது புன்னகையுடன் ரசிக்கும் காதலன் யாருக்கு கிடைக்கும்... அவளது பாசையில் சொல்ல போனால் அவன் அவளுக்கு வாய்த்த ஒரு அடிமை... அதற்காக அவளையும் சும்மா சொல்ல கூடாது... அவனுக்காக உயிரையும் தர கூடச் சித்தமாகி இருந்தாள்... சின்னப் பெண் தான் என்றாலும் காதல் அவள் மனதில் வலுவான தடத்தைப் பதித்து இருந்தது...

அவனும் அவளை ரொம்பவும் கட்டுப்படுத்த மாட்டான்... அது போல் அவளுக்காகப் பதறி துடிக்கவும் மாட்டான்... அவள் வீட்டு நினைவில் அழுது சோகமாய் இருந்தால் கூட வேறு எதையாவது பேசி அவளது மனநிலையை மாற்றி விடுவான்... அதற்காகக் கவலை கொள்ள மாட்டான்...

"நீ என்னைக் கண்டுக்கவே மாட்டேங்கிற ரிச்சி..." என்று அவள் கூட அவனிடம் சண்டை போடுவாள்...

"நான் உனக்கு ஆறுதல் சொல்வதாலோ இல்லை நீ அழுவதாலோ எதுவும் மாறப் போவதில்லை... அதனால் நாம் நம் துயரத்தில் இருந்து நாமளே தான் வெளிவரணும்..." என்றவனைக் கண்டு முறைத்துக் கொண்டு கொஞ்ச நேரம் பேசாது இருப்பாள்... பிறகு

பழையபடி அவள் அவனிடம் லொடலொடக்க ஆரம்பித்து விடுவாள்...

இந்நிலையில் ஒரு நாள் ரிச்சர்ட் அவளைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான்... அவனது அன்னையிடம் அவளை அறிமுகப்படுத்த வேண்டும் என்று... அவளும் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு உற்சாகமாய் அவனுடன் கிளம்பி சென்றாள்... ஏனெனில் அவர் அவளது வருங்கால மாமியார் ஆயிற்றே...

இலண்டன் மாநகரில் அப்படி ஒரு இடம் இருப்பது அப்போது தான் அவளுக்குத் தெரியும்... அதன் சூழ்நிலை அவளது முகத்தைச் சுளிக்க வைத்தது... ஆனாலும் காதலனுக்காகப் பொறுத்து கொண்டாள்... அவள் அவனைத் தானே காதலிக்கிறாள்... அவனது வசிப்பிடத்தை அல்லவே...

அழுக்கான அடுக்குமாடி குடியிருப்பில் மூலையில் இருந்த அந்த வீட்டின் முன் நின்றவன் கதவில் சாவி போட்டுத் திறந்தான்...

"அம்மா வீட்டில் இல்லையா...?"

"இருக்காங்க..." என்றவனைப் புதிராகப் பார்த்தாள் அவள்... ஆனாலும் ஒன்றும் பேசாது அவனுடன் வீட்டினுள் நுழைந்தாள்...

அங்குக் கண்ட காட்சியில் அதிர்ந்து போய் அவள் அப்படியே நின்று விட்டாள்... ஏனெனில் ரிச்சர்ட்டின் அன்னை ஒரு கையில் சிகரெட்டுடனும், மறு கையில் மது கோப்பையுடனும் காட்சி அளித்தார்... ஏற்கெனவே போதை தலைக்கேறி தான் அவர் அமர்ந்திருந்தார்...

அந்தக் கணம் அவளது மனக்கண்ணில் மங்களகரமாய்த் தோற்றமளிக்கும் தனது அன்னை மீனாட்சியின் தோற்றம் வலம் வந்தது...

"மாம்... என்ன பண்றீங்க...? நான் மதுரவை கூட்டிட்டு வர்றதா சொல்லி இருந்தேனே..." என்றான் ரிச்சர்ட் தாயை கண்டிக்கும் குரலில்...

"யார் வந்தால் எனக்கென்ன...? நான் இப்படித் தான்..." என்று கத்த துவங்கியவரை கண்டு மதுரகவி பயந்து போனவளாய் ரிச்சர்ட்டின் பின்புறம் மறைந்து கொண்டாள்...

அதற்கு மேல் அங்கு இருக்காது அவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டான்... வழக்கமாய் அவர்கள் அமரும் அவளது கல்லூரி மரத்தடி வரும் வரை அவர்களது மௌனம் நீண்டது...

"சாரி பேபி..." என்று மன்னிப்பு கேட்டவனை ஏறிட்டு பார்த்தவளின் பார்வையில் இருந்த தவிப்பை அவனால் உணர முடியவில்லை... அது ஏனென்றும் அவனுக்குப் புரியவில்லை...

"அம்மா இப்படிப் பண்ணுவாங்கன்னு நான் நினைக்கலை... காலையில் அவங்க கிட்ட சொல்லிட்டு தான் வந்தேன்... ப்ச்..." என்று இயலாதவனாய் அவன் கூற...

"உன் அம்மாவுக்கு இந்தப் பழக்கம் எல்லாம் முதலில் இருந்தே உண்டா ரிச்சி..."

"இல்லை மதூ..." என்றவன் துயரத்துடன் தொலைவில் வெறித்தான்...

"அவங்க நல்லா தான் இருந்தாங்க... ஆனால் காதல்ங்கிற பெயரில் ஒருத்தன் அவங்களை ஏமாத்திட்டு போயிட்டான்... அதிலிருந்து இப்படி ஆகிட்டாங்க... அந்தத் தொடர்பில் பிறந்தவன் தான் நான்... என்னை வளர்க்க ரொம்பக் கஷ்டப்பட்டாங்க... கடைசியில் வேறுவழியில்லாது அவங்க தன்னோட உடம்பை வித்து என்னை வளர்த்தாங்க..."

"ரிச்சி..." அதிர்ச்சியுடன் அவள் அவனைப் பார்த்தாள்...

நிச்சயம் அவளால் தாங்கி கொள்ள முடியாத பேரதிர்ச்சி இது... அவரது குடி பழக்கத்திற்கே நடு நடுங்கி போனவள் இப்போது இதைக் கேட்டு சர்வாங்கமும் ஒடுங்கி போய் அமர்ந்து இருந்தாள்...

"ஆம் பேபி..." அவன் வருத்தத்துடன் அவளைப் பார்த்தான்...

எந்த நாடாக இருந்த போதும் இந்தத் தொழில் கேவலமானது தான்... அதனால் ஏற்பட்ட அவமானங்கள் அவனது மனதில் காயமாய்... ஆனால் அவன் அதை பற்றி அவளிடத்தில் கூறவில்லை... சின்னப் பெண் என்று கூறாது விட்டு விட்டானோ... ஒருவேளை அப்படி அவன் கூறி இருந்தால் அவள் அவனை முழுவதுமாய்ப் புரிந்து இருப்பாளோ... இறுதியில் சின்னப் பெண் சிறு பிள்ளைத்தனமாய் அவனை விட்டு விலகி போய் விட்டாள்...

"ரிச்சி..." என்றழைத்தபடி அவனது தோள் சாய்ந்து அமர்ந்தவளை ஒன்றும் பேசாது அவன் தாங்கி கொண்டான்...

அவன் பதிலுக்கு அவளை அணைக்க முற்படவில்லை... ஏனெனில் அது அவளுக்குப் பிடிக்காது... ஏனோ அவனுக்கும் அந்த அமைதி தேவைப்பட்டது போலும்... அமைதியாய் பொழுது கழிந்தது... மாலை மங்கி இருட்டி கொண்டு வருவது போலிருக்கவும் அவன் தான் அவளை அழைத்தான்...

"பேபி..."

அதில் கலங்கிய விழிகளைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள் அவனைப் பார்த்து, "பை ரிச்சி..." என்க...

"பை பேபி... பார்த்துப் பத்திரமா போ..." என்று அவன் அக்கறையாய்க் கூறினான்...

என்றும் அவன் அப்படிக் கூற மாட்டான்... இன்று ஏனோ அவன் அப்படிக் கூறினான்... அவனது அக்கறையில் அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... அதை அவனிடம் காட்டாது விறுவிறுவென நடந்து சென்று விட்டாள்...

அது தான் அவர்களது கடைசிச் சந்திப்பு என்றால் அவன் அவளைத் தடுத்து நிறுத்தி இருப்பானோ...? விதி விதித்திருக்கும் பாதையை அறியாது அவன் செல்லும்

அவளைப் பார்த்தபடி வெகு நேரம் அசையாது நின்றிருந்தான்...

மதுரமாகும்...!!!

இன்று...

அடர்ந்த, இருண்ட காட்டின் நடுவில் நின்று கொண்டிருந்த மதுரகவியின் ஒரு புறம் சிங்கம், மற்றொரு புறம் புலி இரண்டும் கண்களில் வேட்டையாடும் வெறியுடன் அவள் மீது பாய்வது போல் ஆக்ரோசமாய் நின்று கொண்டிருந்தது... அவளுக்குப் பயத்தில் நாக்கு உலர்ந்து போனது... எப்படித் தப்பிப்பது என்று தெரியாது அவள் அச்சத்தில் நடுங்கி கொண்டு இருக்கும் போது சிங்கம், புலி இரண்டும் ஒன்று சேர்ந்து அவளது தந்தை செந்தில்நாதனின் உருவமாய் மாறி அவள் மீது பாய முற்பட்ட போது அவள் பயத்தில்,

"ரிச்சி..." என்று அலறியபடி எழுந்து அமர்ந்தாள்...

முகத்தில் வியர்வை துளிகள் அரும்பியிருக்க அவளது விழிகள் சுற்றும் முற்றும் அச்சத்துடன் பார்த்தது... பார்த்த மாத்திரத்தில் தெரிந்து போனது அது ரிச்சர்ட்டின் அறை என்று... அப்போது தான் அவளது புத்தியில் உறைத்தது தான் அங்கு வந்ததன் நோக்கம்...

"என்னை எடுத்து கொள் ரிச்சி..." என்றவளை அவனது கரங்கள் ஆவேசத்துடன் தழுவி கொண்டது அவளது நினைவில் எழுந்தது...

அந்தக் கணம் காதலனின் இறுகிய அணைப்பில் தெரிந்த காதலில் இப்போது கூட அவளது உள்ளமும், உடலும் சிலிர்த்தது... ஆனால் அதன் பிறகு என்ன நடந்தது என்று அவளுக்குச் சுத்தமாய் நினைவு இல்லை... மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திப் பார்த்தாள்... ம்ஹூம் ஒன்றும் நினைவுக்கு வரவில்லை... அவனிடத்தில் அவளுக்கு மயக்கம் இருக்கிறது தான்... அதற்காக இப்படி எதுவுமே ஞாபகம் இல்லாத அளவிற்கு அவன் மீது அப்படி என்ன மயக்கமோ என்று அவள் தன்னைத் தானே திட்டி கொண்டாள்...

"மது..." பதற்றத்துடன் அவளை அழைத்தபடி அங்கு வந்து சேர்ந்தான் ரிச்சர்ட்...

காதலனை கண்டதும் அவளது விழிகளில் கண்ணீர் தேங்கி நிற்க, "ரிச்சி..." என்று கூவி கொண்டு எழ போனவள் தன்னிலை உணர்ந்து பதட்டத்துடன் அப்படியே அமர்ந்தாள்...

விலகி கீழே கிடந்த முந்தானையை அவரசமாய் எடுத்து மேலே போட்டு கொண்டவள் அப்போது தான் படுக்கையைக் கவனித்துப் பார்த்தாள்... அவள் தலையில் வைத்திருந்த மல்லிகை பூ படுக்கை எங்கும் சிதறியிருந்தது... படுக்கை விரிப்பு கசங்கி இருந்தது போல் அவளது புடவையும் கசங்கி இருந்தது... அதற்கு மேல் அங்கு என்ன நடந்திருக்கக் கூடும் என்பதை அறியாத அளவிற்கு அவள் ஒன்றும் அறியாமை உடையவள் அல்ல...

"மது..."

அவளின் அருகில் அமர்ந்து அவளது முகத்தில் படிந்திருந்த முடி கற்றையை விலக்கி அவளது காதோரமாய்ச் சொருகி விட்ட ரிச்சர்ட் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்... அவனது மென்மையான செய்கையில் அவளது உள்ளம் உருகி அவனது காலடியில் விழ தான் செய்தது... ஆனாலும் நடந்து முடிந்த செயல் அவளது மனதினை இறுக செய்தது... தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் படுக்கையில் இருந்து எழுந்தாள்...

"ஏன் மது கத்தின...? எதுவும் கெட்ட கனவு கண்டாயா...?" அவளது கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தியவன் அவளைப் பார்த்து கேட்டான்...

"கெட்ட கனவு தான்..." என்று கூறும் போதே அவளது விழிகளில் கரகரவெனக் கண்ணீர் வழிந்தது...

ஆம், நடந்து முடிந்த தவறை கெட்ட கனவாக எண்ணி தான் மறக்க வேண்டும்... காதலனாக இருந்தாலும் முறை தவறிய உறவு தவறு தான்... தான் கெட்டுப் போனது கெட்டுப்

போனது தானே... நினைக்க நினைக்க அவளது அழுகை பெருகியது...

"ஹேய் பேபி... எதுக்கு அழுற...?"

அவளைத் தன் மடி மீது அமர்த்தி அவளது விழிகளின் நீரை அவன் துடைத்து விட்ட போது அவள் தனது கட்டுப்பாட்டை மீறி அவனது நெஞ்சில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள்... அவள் எதற்காக அழுகிறாள் என்பது அவனுக்குப் புரியாத போதும் அவளை அணைத்து, முதுகை வருடி,

"ரிலாக்ஸ் பேபி..." என்று அவன் அவளுக்கு ஆறுதல் சொல்ல தவறவில்லை...

சிறிது நேரம் அழுதவள் பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு அவனை விட்டு விலகி எழுந்தவள் அவனது முகம் பார்க்காது,

"நான் கிளம்பறேன் ரிச்சி..."

"எங்கே...?"

"இது என்ன கேள்வி...? என் வீட்டுக்கு தான்..."

"அதுக்கு நான் விட மாட்டேன்..." என்றவனைத் திடுக்கிட்டு போனவளாய் அவள் திரும்பி பார்த்தாள்... அவளது பார்வை கூர்மையுடன் அவனைப் பார்த்தது...

"ஏன்...?"

"எனக்கு நீ வேணும்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"சாரி ரிச்சி... இந்தக் கேவலத்தை இனி என்னால் செய்ய முடியாது..." என்றாள் அவளும் உறுதியான குரலில்...

"ஓ..." என்றான் அவன் ஒரு மாதிரியான குரலில்...

"உனக்குச் செய்த பாவத்திற்கான கணக்கை நான் என்னைக் கொடுத்து நேர் செய்துட்டேன்... இதற்கு மேல் நமக்குள் எந்த ஒரு உறவும் இல்லை..." என்றவள்

மனதிற்குள் இந்த இழிநிலைக்கு ஆளாக்கிய தனது தலைவிதியை சபித்தாள் கோபமாய்...

காதலன் கையால் தொங்க, தொங்க தாலி கட்டி கொண்டு அவனைக் கணவனாய் ஏற்றுக் காதல் மனைவியாய் தன்னை அர்ப்பணிக்கும் நாளிற்காக ஏக்கத்துடன் காத்திருந்தவள் இப்படி ஒரு அதிர்ச்சியான நிகழ்வை சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை... மனம் பாரமாய்க் கனத்துப் போனது... இதயம் இரண்டு துண்டானது போல் வலித்தது...

ரிச்சர்ட் காதலியின் முகத்தில் வந்து சென்ற உணர்வுகளை அவதானித்தபடி எழுந்தவன் அவள் அருகில் வந்து,

"ஒன் மினிட்..." என்றவன் தனது அலைப்பேசியை எடுத்து யாருக்கோ அழைத்தான்... மறுபக்கம் அழைப்பை எடுத்ததும்,

"மிஸ்டர். செந்தில்நாதன்..." என்று அழைத்தபடி அவன் அலைப்பேசியை 'ஸ்பீக்கர் மோட்'இல் போட்டான்...

ரிச்சர்ட் தனது தந்தையின் பெயரை கூறியதும் அவளது உடல் நாண் போல் விறைப்புற்றது... இனி அவரது முகத்தில் எப்படி முழிப்பது என்று ஆயாசமாக இருந்த அதே சமயம் அவரை நினைத்து அத்தனை அருவருப்பாக இருந்தது...

"உங்க பொண்ணு மது இனி என் கூடத் தான் இருப்பாள்..."

கொஞ்சமும் அலட்டி கொள்ளாது கூறிய காதலனை அவள் திகைப்புடன் பார்த்தாள்...

"டேய்... என்ன சொல்ற...? உன் வேலை முடிஞ்சது என்றால் அவளை அனுப்பி விடு... அதை விட்டுட்டு இது என்ன பேச்சு...?" என்று செந்தில்நாதன் கோபத்தில் எகிறினார்... கோபத்தில் மரியாதை பறந்து போனது...

"ஒரு நாளில் முடிந்து விடக் கூடிய உறவா இது...?" என்றவன் காதலியின் கன்னத்தை மென்மையாய் வருடி விட,

"தொடாதே..." என்று அவள் அவனது கையைத் தட்டி விட்டாள்... அவனது பேச்சில் அவளுள் கோபம் முகிழ்த்தது...

அதை மறுமுனையில் கேட்ட செந்தில்நாதனுக்கு ஆத்திரம் வந்தது... ஆனால் ஆத்திரம் கொள்ள முடியாதபடி அவரது கைகள் அவர் செய்த தவறின் பெயரில் கட்டப்பட்டு இருக்கிறதே...

"என்னடா சொல்ற...?"

"உங்களுக்கு உங்க காரியம் ஆகணும்... அதே போல் எனக்கு என் காரியம் ஆகணும்... அதுக்கு உங்க மகள் என் கூடவே இருக்கணும்... அதாவது நான் இந்தியாவில் இருக்கும் வரை அவள் என்னைச் சந்தோசப்படுத்திக் கொண்டு... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா...? உங்க மகளைப் போல் யாரும் எனக்கு இது போல் கம்பெனி கொடுத்தது இல்லை... ஹவ் ஸ்வீட் கேர்ள் ஷி இஸ்... அவள் மீதான என்னுடைய மோகம் ஒரு நாளில் தீர்ந்து விடாது... இன்னும் இன்னும் அவள் எனக்கு வேண்டும்..." என்றவனது குரலில் அத்தனை கிறக்கம் இருந்தது...

அவனது பேச்சை கேட்டு செந்தில்நாதன் பேச்சற்றுப் போனார் என்றால், மதுரகவி அதிர்ச்சியுடன் காதலனை பார்த்தாள்... ரிச்சர்ட் இப்படி எல்லாம் வில்லன் போல் பேசுவானா என்று நம்ப முடியாது அவளது மூளை மரத்துப் போனது... அவள் அறிந்த ரிச்சர்ட் அவனைப் போல் வெள்ளை மனசுக்காரன், குழந்தை உள்ளம் கொண்டவன்... அவளது அன்பை நாடும் ஒரு மழலை போன்றவன்... இப்படித் தானே அவள் அவனை உருவகப்படுத்தி வைத்திருந்தாள்...

அவனா இப்படி எல்லாம் பேசுவது...? நம்ப முடியாது இடிந்து போனவளாய் செயலிழந்து போய்த் தொப்பென்று கட்டிலில் அமர்ந்தாள்... அவளின் நிலை கண்டு பதறி போய்த் திரும்பி பார்த்த ரிச்சர்ட் தனது வலது கரத்தை அவளை நோக்கி நீட்ட முயன்றவன் பின் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கரத்தை இழுத்துக் கொண்டான்...

"ரிச்சர்ட்... நீ பேசுவது கொஞ்சமும் சரியில்லை..." ஆத்திரத்தில் செந்தில்நாதனின் குரல் நடுங்கியது...

"நீங்க செய்வதும் தான் சரியில்லை..." என்று அழுத்தமாய் உரைத்தவன் தனது பேசும் தோரணையை மாற்றிக் கொண்டு,

"இனி மது என்னுடன் தான் இருப்பாள்... நான் இந்தியா விட்டு போகும் போது உங்கள் மகளை உங்களிடம் ஒப்படைத்து விட்டு போகிறேன்..."

"ப்ச்... ரிச்சர்ட் விதண்டாவாதம் பேசாதே... இங்கே அவளைக் காணாது என் மனைவி, மகன் கேட்கும் கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது..."

"அப்போ மது என் கூட இருப்பதில் உங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை... அப்படித் தானே...?"

அலைப்பேசி வழியே அவரது மனதினை ஊடுருவது போல் ஒலித்தது அவனது குரல்... அதற்குப் பதில் பேசாது மௌனம் சாதித்தார் செந்தில்நாதன்...

"உங்களோட அமைதியை உங்க விருப்பமா நான் எடுத்துக்கிறேன்... இனி உங்க மகளைப் பற்றிய கவலையை விட்டு விடுங்கள்... நான் அவளை மகாராணி போல் பார்த்து கொள்கிறேன்..." இதைச் சொல்லும் போது அவனது விழிகள் தன்னவளை காதலுடன் வருடி சென்றது...

"படுக்கையிலா...?" எக்காளத்துடன் ஒலித்தது செந்தில்நாதனின் குரல்...

"அதுக்குத் தானே அவளை அனுப்பி வச்சீங்க...?" என்றவனது கேலி குரலில் மதுரகவி உடல் இறுகி போனது... அதே போல் அவளது மனதும்...

"உங்க மனைவி, மகனிடம் நான் சொல்வதை அப்படியே சொல்லி விடுங்கள்... மது என்னிடம் கம்பெனி நிர்வாகம் பற்றிப் படிப்பதற்காக என்னுடன் இருக்கிறாள் என்று..."

'தொழில் நிர்வாகம் படிப்பதற்கா...? இல்லை படுக்கை நிர்வாகம் படிப்பதற்கா...?' அவளது மனம் கசந்து போனது...

"உங்களது பிரச்சினை தீர்ந்தது அல்லவா... இனி கவலை இல்லாது நீங்க உங்க வேலையைப் பாருங்கள்... நான் என் வேலையைப் பார்க்கிறேன்... அதாவது உங்க பெண்ணைக் கொஞ்சும் வேலையை..." என்று கூறி விட்டு சிரித்தவனின் சிரிப்பில் தந்தை, மகள் இருவரின் மனதும் எரிச்சலில் எரிந்தது...

"அப்போ நான் சொன்னது...?" செந்தில்நாதன் இழுத்தார்... அவரது கவலை அவருக்கு...

"நிச்சயம் நடக்கும்... அதற்குக் கொஞ்ச நாட்கள் பொறுங்கள்... அந்த நாள் எப்போது என்று நான் பிறகு சொல்கிறேன்..." என்று அவன் அமர்த்தலாகக் கூறிவிட்டு அலைப்பேசியை அணைத்து விட்டான்...

"மது..." என்றழைத்தபடி அவள் அருகில் அமர்ந்தவனை அவள் தீயாய் உறுத்து விழித்தாள்...

"பேபிக்கு என் மேல் என்ன கோபம்...?" என்றவனது கை அவளை நோக்கி நீண்டது...

"ரிச்சி... நீயா இப்படி எல்லாம் பேசியது...?" என்று அழுகையும், அதிர்ச்சியும் கலந்த குரலில் கேட்டபடி அவள் அவனது கையைப் பட்டென்று தட்டி விட்டாள்...

அதற்குப் பதில் பேசாது அவன் மௌனம் சாதித்தான்... ஆனால் தனது பார்வையை அவள் மீதிருந்து வேறு எங்கும் திருப்பவில்லை...

"நீ இப்படின்னு என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை..."

"அதான் இப்போ நம்பியாச்சு இல்லையா..." என்று கூறியபடி எழுந்தவன், "சீக்கிரம் கிளம்பு... நாம் இங்கிருந்து போயாகணும்..."

"நான் செத்தாலும் உன் கூட வர மாட்டேன்..." என்று அழுத்தமாய்க் கூறியவளின் முழங்கை பற்றி

ஆத்திரத்துடன் தூக்கி நிறுத்தியவன்,

"நீ செத்தாலும் உன்னை என்னுடன் கொண்டு போவேன்... அதை நீ தடுக்க முடியாது..." என்று கூறியவனின் விழிகள் இரண்டும் அடக்கப்பட்ட ஆத்திரத்தில் சிவந்திருந்தது...

அவனது வார்த்தைகள் அவளுள் ஆத்திரத்தை கிளப்பி விட அவள் அவனைச் சராமாரியாகத் தாக்க துவங்கினாள்...

"ஏன்டா இப்படிப் பண்ணின...? நான் உன்னை எவ்வளவு நம்பினேன்...? என்னோட ரிச்சி என் சம்மதம் இல்லாம என்னைத் தொட மாட்டான்னு எத்தனை நம்பிக்கை உன் மேல் வச்சிருந்தேன்... ஆனா நீ நான் சுயநினைவு இல்லாதப்போ என்னை... என்னை..." என்று கூறியவளின் குரல் அழுகையில் தேம்பியது...

அழுகை பீறிட்ட போதும் அவனை அடிப்பதை அவள் நிறுத்தவில்லை... அவனும் அவள் கொடுத்த அடிகளை அசையாது வாங்கிக் கொண்டு அமைதியாக மரம் போல் நின்றிருந்தான்... அவனது முகம் உணர்ச்சிகளைத் தொலைத்து இறுகி போயிருந்தது... அவனது விழிகள் இரண்டும் இமைக்காது காதலியை பார்த்துக் கொண்டிருந்தது...

ஒரு கட்டத்தில் ஓய்ந்து போனவளாய் அடிப்பதை நிறுத்தியவள் அவனைக் கண்டு இரு கரம் குவித்து, "ப்ளீஸ் ரிச்சி... இதுக்கு மேல் அசிங்கப்பட என்னால் முடியாது... என்னை விட்டு விடு... நமக்குள் நடந்ததையும் மறந்து விடு..." என்று கெஞ்சினாள்...

"அதை உன்னால் மறக்க முடியுமா...?" என்று கேட்டவனது பார்வை அவளைத் துளைத்து எடுத்தது...

அவளோ மொழியறியாத மழலையாய் பதில் சொல்ல தெரியாது விழித்து நின்றாள்... அடுத்த நொடி அவள் ரிச்சர்ட்டின் இறுகிய அணைப்பில் இருந்தாள்...

"விடு என்னை..." சுயவுணர்வு பெற்று அவள் திமிற துவங்க... அவனோ தனது பிடியை சிறிதும் தளர்த்தாது

மேலும் இறுக்கினான்...

"அதுக்காக இப்படி ஒரு கேவலமான வாழ்க்கையை என்னால் தொடர முடியாது..."

"நான் உன் காதலன் மது..."

"கணவன் இல்லையே..." என்றவளை ஒரு பார்வை பார்த்தவன் தனது பிடியை தளர்த்தி விட்டு,

"உன்னிடம் அதற்கான முழு உரிமையை நான் எடுத்து ரொம்ப நேரமாச்சு... என்ன புரிந்ததா...? அதனால் அடம்பிடிக்காம என்னுடன் கிளம்பும் வழியைப் பார்..."

"உன்னுடன் என்னைக் கூட்டிட்டுப் போனால் நான் தற்கொலை பண்ணி செத்து போயிருவேன்..." என்றவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

அதைக் கேட்டு அவன் தன் விழிகளை வேதனையுடன் மூடி திறந்தவன், "என்னை மீறி எதுவும் நடக்காது என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது..." என்றவன் அங்கிருந்த அலமாரியை திறந்து அவளுக்கான உடையை எடுத்துக் கொடுத்தான்...

"குளித்து விட்டு வா... நாம் கிளம்பலாம்..."

அவன் கூறியதன் அர்த்தம் புரிந்தவளின் மேனி அவமானத்தில் கூசி போனது... உடல் குறுகி போனவளாய் நின்றிருந்தவளின் தோளை பற்றி மென்மையாய் வருடிபடி,

"யோசிப்பதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை மது..." என்று கூற... விலுக்கென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தவள்,

"என்னுடைய சந்தர்ப்ப சூழ்நிலையை உனக்குச் சாதகமா பயன்படுத்திக்கிட்ட ரிச்சி... ஆனால் இதற்கான விளைவுகளை இனி தான் நீ சந்திக்க நேரிடும்..." என்று வெறுப்புடன் கூறியவளை கண்டு அவன் வசீகரமாய்ப் புன்னகைத்தான்...

"விளைவுகள் விபரீதமானாலும் அது இனிய விபரீதமானால் எனக்கு மிகவும் சந்தோசமே..." என்று கண்சிமிட்டி சிரித்தவனின் தலையில் ஓங்கி ஒன்று போட்டால் என்ன என்று அவளுக்கு எரிச்சலாக வந்தது... அப்படிச் செய்ய முடியாதபடி மனதிலிருந்த காதல் தடுத்தது...

ஒன்றும் பேசாது குளியலறையை நோக்கி நடந்தவளை கண்டு, "பாத்ரூம் சாவி என்னிடம் தான் இருக்கிறது... அதனால் உள்ளே போய் ஏதாவது ஏடாகூடமாக நடந்து கொள்ளணும்ன்னு நினைக்காதே... பத்து நிமிசம் தான் உனக்கான நேரம்..." என்று கூறியவனைக் கண்டு எரிச்சலுடன் திரும்பி பார்த்தவள் அவனைக் கண்டு முறைத்து விட்டு சென்றாள்...

அவளின் முறைப்பை புன்னகையுடன் எதிர்கொண்டவன் அதே புன்னகையுடன் கட்டிலில் அமர்ந்தான்... சற்று முன் நிகழ்ந்த நிகழ்வுகள் எல்லாம் அவன் கண் முன் படமாய் ஓடியது... தன்னவள் வேண்டும் என்கிற தாபம் மீண்டும் அவன் மனதில் அலைகடலாய் ஆர்ப்பரித்தது... மென்மையாய் படுக்கையைத் தடவியவன் கைகளில் காதலியின் தலையில் இருந்து உதிர்ந்த மல்லிகைப்பூ தட்டுப்பட்டது...

அதை எடுத்துக் கையில் வைத்து பார்த்தவனுக்கு அவளது கூந்தலில் முகம் புதைத்து மெய்மறந்து இருந்த நினைவு எழுந்தது... அந்தக் கணம் அவனது உதட்டில் ரசனையான முறுவல் எழுந்தது... எந்தப் பெண்ணிடமும் இல்லாத ஒன்று இந்தப் பெண்ணிடத்தில் மட்டும் இருப்பதாய் அவனுள் ஒரு மாயத் தோற்றம்... ஆனால் அவனுக்கு அது தான் மயக்கும் தோற்றம்... கள்ளம் கபடம் இல்லாத அவளது அன்பிற்கு அவன் என்றும் அடிமை அல்லவா... அதனால் தானே இத்தனை வருடங்கள் கழித்தும் அவள் அவனைக் கவர்ந்து இழுத்து இங்கே வரவழைத்து இருக்கிறாள்...

இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ பெண்களை அவன் கடந்து வந்திருக்கிறான் தான்... இல்லை என்று சொல்ல

முடியாது... ஆனால் அவர்களில் யாரும் அவனைத் திரும்பி பார்க்க வைத்தது இல்லை... இப்படித் தன்னை மறந்த மயக்க நிலைக்குக் கொண்டு சென்றது இல்லை... இதோ கோபமாய்ப் பேசும் இந்தக் கணம் கூட மதுரகவி அவனைக் காந்தமாய் ஈர்ப்பது அவனுக்கே புதுமையாய்...

திடுமென ஞாபகம் வந்தவனாய் அவன் குளியலறை கதவை பார்த்தான்... பின் வேகமாய்க் கதவை நோக்கி விரைந்து சென்று தட்டினான்...

"மது... மது..." அடுத்த நொடி கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தவள் அவனைக் கண்டு முறைத்தாள்...

"நான் ஒண்ணும் செத்து போகலை..." அவளது வார்த்தையில் வேதனையுடன் அவளைப் பார்த்தவன் பின் தனது உணர்வுகளை மறைத்துக் கொண்டு,

"நான் தான் சொன்னேனே... அப்படி ஒரு நிலை வர விட மாட்டேன்னு..." என்று அமர்த்தலாகக் கூற...

"என் அப்பா தான் பொய்யாய்ப் போனார் என்றால் நீயும் பொய்யாகி விட்டாய் ரிச்சி... நான் நம்பிக்கை வைத்த ஆண்கள் இருவரும் பொய்த்து போயிட்டீங்க..." என்றவளின் பேச்சை கண்டு கொள்ளாது அவனது பார்வை அவளை ரசனையுடன் மேலிருந்து கீழாகப் பார்த்து வைத்தது...

அந்த அவலநிலையிலும் காதலனது பார்வையில் அவள் லஜ்ஜையுற்று முகம் சிவந்தவளாய் அதை அவனுக்குக் காட்ட விருப்பம் இல்லாது முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றாள்...

"இந்த ட்ரெஸ் உனக்கு ரொம்ப அழகாயிருக்கு..." என்று தான் வாங்கி வந்த சுடிதாரை அவனே புகழ்ந்து கொண்டான்...

"ஆனாலும் நீ கட்டும் புடவை போல் அத்தனை அழகில்லை..." அவன் அப்படிச் சொன்னதைக் கேட்டு அவள் அவனைத் திரும்பி பார்க்க... அவனோ அவளது இடையை

வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்... அதைக் கண்டு அவள் அவனை முறைத்தாள்...

"நீ இப்படிப் பார்த்த... உன் கண்ணு ரெண்டையும் நோண்டிருவேன் நோண்டி..." என்றாள் கோபத்துடன்...

பதினேழு வயது பாவையாய் அன்று அவள் தன்னை மிரட்டியது இப்போது அவனது நினைவில் எழ சட்டென்று அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"என் பிழைப்பு உனக்குச் சிரிப்பா இருக்கா...? நல்லா சிரிச்சுக்கோ ரிச்சி... நல்லா சிரிச்சுக்கோ..." என்று உணர்வில்லாத குரலில் கூறியவள் அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தாள்...

"இப்படி உட்கார எல்லாம் நேரமில்லை... கிளம்பு... கிளம்பு..." என்று அவளை அவசரப்படுத்திக் காரிலேற செய்தான் அவன்... அதாவது கத்தி முனையில் அவளைக் கடத்துவது போல்...

காரிலேறும் முன் கடைசி முயற்சியாக அவள் அவனைப் பார்த்து இறைஞ்சுதலுடன், "வேண்டாம் ரிச்சி... என்னை விட்டு விடு..." என்று கெஞ்சினாள்...

"விடுவதாக இருந்திருந்தால் ஆறு வருடத்திற்கு முன் நீ என்னை விட்டு விட்டு போனப்பவே விட்டுட்டு போயிருப்பேன்..." என்று முகமும், குரலும் இறுக கூறியவன்,

"மது... இந்த டிராமா எல்லாம் வேண்டாம்... நான் ஒண்ணும் கெட்டவன் இல்லை... முதலில் அதை நீ புரிஞ்சிக்கணும்..."

"இப்போ நீ செய்யும் காரியம் கெட்டது இல்லாமல் வேறு என்ன...?" என்று வெறுப்புடன் கூறியவளை கண்டு,

"இதற்கு நீ தான் சம்மதம் தெரிவித்தாய்... நான் இல்லை... கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட நான் ஒண்ணும் முட்டாள் இல்லை..."

"உன்னை என் ஹீரோவாக நினைத்தேன்... ஆனால் நீ பக்கா வில்லன்டா..." வெறுப்பாய் கூறியவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள...

"ஓகே... நான் வில்லனாகவே இருந்து விட்டுப் போகிறேன்... எனக்குத் தேவை, நீ என் அருகில் இருப்பது மட்டுமே... அதுக்காக நான் எந்தளவுக்கும் இறங்குவேன்... எதையும் செய்யத் துணிவேன்... உன் பாசையில் சொல்லணும் என்றால் வில்லன் மாதிரி..." என்றவன் அவளை வலுக்கட்டாயமாகக் காரில் திணித்துத் தானும் உடனேறி காரை கிளப்பினான்...

அவளது கார் அம்போவென்று அங்கு நின்று கொண்டிருந்தது...

**********************

ரிச்சர்ட்டிடம் பேசிய செந்தில்நாதன் அடுத்து என்ன செய்வது என்று தெரியாது திகைத்து போய் அமர்ந்திருந்தார்... அவர் ஒன்று நினைக்க விதி வேறு வழியில் அல்லவா பயணிக்கிறது... அவரது அத்தனை திட்டமும் ரிச்சர்ட்டின் பேச்சால் தவிடு பொடியாகி விட்டதே... அந்த எரிச்சலில் அவர் அமர்ந்திருக்கும் போது அவரது அலைப்பேசியில் குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி கேட்டது... அதைத் தொடர்ந்து மந்தாகினியின் அழைப்பு அபசகுனமாய் வந்தது...

"என்ன சொல்லு...?" என்றார் சற்றும் குறையாத எரிச்சலுடன்...

"செந்தில்... உங்களது பாசமான மினி என்கிற அழைப்பு இல்லாம நான் ஒரு சுத்து இளைச்சு போயிட்டேன்..." நக்கல் குரலில் மந்தாகினியின் குரல் மறுபுறம் ஒலித்தது...

"இப்போ இது ரொம்ப முக்கியம்..." அடக்கப்பட்ட கோபத்தில் கத்தினார் அவர்...

"எனக்கு ரொம்ப முக்கியம் அமைச்சரே..." என்று கிண்டலாய் உரைத்தவள்,

"உனக்கு வந்த மெசேஜை எடுத்து பாரு எது முக்கியம்ன்னு புரியும்..." என்று அமர்த்தலாகக் கூறியவள் அழைப்பை துண்டித்து விட்டாள்...

என்னமோ ஏதோ என்று பயந்தபடி வேகமாய்க் குறுஞ்செய்தியை எடுத்து பார்த்தவர் அடுத்த நொடி செய்வதறியாது தளர்ந்து போனார்... மந்தாகினியுடன் அவர் உல்லாசமாய் இருந்த காணொளி தான் அது... அப்போது சந்தோசத்தைக் கொடுத்தது இப்போது எரிச்சலை கொடுக்கப் பார்க்க சகிக்காது உடனே அதை அணைத்து விட்டார்...

சிறு வயதில் இருந்து பல குற்றங்கள் புரிந்தவர் அவர்... அதனால் தான் அவரால் எந்த ஒரு குற்றவுணர்வும் இல்லாது பல தவறுகளை அசால்ட்டாகச் செய்ய முடிந்தது... அதைப் பற்றி அவர் சிறிதும் கவலைப்பட்டது கிடையாது... அவரது குற்றங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவரது அரசியல் வாழ்வில் மதிப்பு, மரியாதை அதிகரித்தது... பதவி, பணம் இரண்டும் சேர்ந்து அவருக்குச் செல்வாக்கான இடத்தில் இருந்து மனைவியை வர செய்தது... அதில் அவரது இறுமாப்பு இன்னமும் அதிகரித்தது...

ஆனால் இன்று அத்தனை இறுமாப்பும் அழிந்து போனது அவரது பிழையால்... இந்தப் பிழையில் இருந்து அவர் எப்படித் தப்பிக்கப் போகிறார் என்று அவருக்குத் தெரியவில்லை... மந்தாகினியை ஆள் வைத்து தொடர்ந்தும் பார்த்து விட்டார்... அவளுக்கு அவர் தந்த வீட்டை தலைகீழாய் புரட்டி போட்டும் பார்த்து விட்டார்... எந்தவித ஆதாரமும் அவருக்குச் சிக்கவில்லை...

அவளைக் கொன்று விடும் ஆத்திரம் அவருள் எழுந்த போதும் அதைச் செய்ய விடாது தடுத்தது இந்தக் காணொளி மிரட்டல்... இதோ அதை இன்று நேரிடையாகப் பார்த்த போது அவர் இன்னமும் அரண்டு போனார்... பதவி ஆசை அவரைத் தைரியம் இழக்க செய்தது...

மீண்டும் அலைப்பேசி அழைத்தது... மந்தாகினி தான்... வேறுவழி இல்லாது அதை உயிர்ப்பித்தார்...

"என்ன... கண்ணும், மனசும் குளிர பார்த்து ரசிச்சீங்களா மிஸ்டர். செந்தில்நாதன்...? அப்பப்பா என்ன ஒரு உலகமகா நடிப்புடா சாமி... இந்த வருச ஆஸ்கர் அவார்டு உனக்குத் தான் கொடுக்கணும்..." என்று கேலி செய்து சிரித்தவளை கண்டு அவரால் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது...

"என்ன நான் சொன்னதைச் செஞ்சியா இல்லையா...?"

"இது உடனே செய்ய முடியாது... எனக்குக் கொஞ்ச நாள் அவகாசம் கொடு..."

"எதுக்கு என் உயிரை எடுக்கிறதுக்கா...?"

"நீ தான் என் உயிரை எடுக்கிற... உனக்கு என்ன குறை...? எல்லா வசதிகளும் செஞ்சு கொடுத்துச் சொகுசா தானே வச்சியிருக்கேன்..."

"எனக்கு நான் நினைச்சது நடக்கும் வரை குறை இருந்து கொண்டே தான் இருக்கும்..."

"நான் எல்லோரையும் சமாளிக்கணும்... முக்கியமா திருவை சமாளிக்கணும்... மதுவை விட்டு வேறு யாருக்கோ இந்தத் தொழில் ஒப்பந்தத்தைக் கொடுத்தால் முதலில் அவன் தான் என் கிட்ட சண்டைக்கு வருவான்..."

"சரி எத்தனை நாள் டைம் வேணும்...?"

"ஒரு மாசம்..." அவள் கூறுவதை நிறைவேற்ற எத்தனை நாளாகும் என்று அவருக்கே தெரியவில்லை... அது ரிச்சர்ட்டின் கைகளில் அல்லவா இருக்கிறது...

"ம்... ம்... சரி... பழகிய தோசத்திற்குச் சம்மதிக்கிறேன்..." ஏதோ போனால் போகிறது என்று கூறியபடி அலைப்பேசியைத் துண்டித்தவளை கண்டு அவரது உள்ளம் கொதித்தது...

'இந்த ஆதாரம் மட்டும் என் கிட்ட மாட்டட்டும்... அதுக்கு அப்புறம் உன்னை அணு அணுவாய் சாகடிக்கிறேன்டி...' மனதில் கறுவியபடி அலைப்பேசியை முறைத்து பார்த்தார் அவர்...

"என்னங்க..." என்றபடி அங்கு வந்த மனைவியைக் கண்டதும் அவரது முகம் எரிச்சலை துடைத்தெறிந்து புன்னகையைப் பூசி கொண்டது...

"என்ன மீனும்மா...?"

"காலையில் போன மது இன்னமும் வீடு வந்து சேரலை..." மாலை மயங்கி இருள் கவிழ்ந்து விட்டதை மீனாட்சி உணர்த்தினார்...

"ஓ சாரி மீனு... எலெக்சன் வேலையில் இதைச் சொல்ல மறந்துட்டேன்... நம்ம மது வேலையைக் கத்துக்கிறதுக்காக ரிச்சர்ட் கூடப் போயிருக்கிறாள்..."

"எந்த வேலையைக் கத்துக்கிறதுக்கு...? எங்கே...? இப்படி வயசு பொண்ணை ஒருத்தனை நம்பி தனியா அனுப்பலாமா...?" சராமாரியாகத் தாயாய் பொறுப்பாய் கேள்வி கேட்டவரை திணறலாய் பார்த்தவர்,

"நாம மது பெயரில் ரிச்சர்ட் கூடச் சேர்ந்து கம்ப்யூட்டர் கம்பெனி ஆரம்பிக்கப் போகிறோம்ன்னு உனக்குத் தான் தெரியுமே... அது தொடர்பான வேலையைக் கத்துக்கிறதுக்குத் தான் போயிருக்கிறாள்..." என்று சமாளித்தவரை கண்டு புரியாது பார்த்தவர்,

"எல்லாம் சரி தான்... அதுக்கு ஏன் இப்படித் திடீர்ன்னு அவளை அனுப்பணும்...?"

"வேலைகள் திடீர்ன்னு தான் வரும்... நான் அமைச்சர்டி... என் மகள் மேல் கை வைக்க எவனுக்குத் தைரியம் இருக்கு..." என்று அவர் மீசையை முறுக்கி கொள்ள... அதைக் கண்டு மீனாட்சி நிம்மதியாய் புன்னகைத்தார்...

"அந்தத் தைரியத்தில் தான் நான் நிம்மதியாய் இருக்கேன்..." என்றவர் உள்ளே சென்றுவிட...

செந்தில்நாதன் நிம்மதி பெருமூச்சு விட்டார்... இந்தச் சிக்கலில் இருந்து வெளியில் வருவதைப் பற்றித் தான் அவர் யோசித்தாரே தவிரத் தனது மகளின் நலத்தைப் பற்றியல்ல...

******************

ரிச்சர்ட் மதுரகவியை விமானத்தில் அழைத்துக் கொண்டு வந்த இடம் மும்பை மாநகரம்... பணக்காரர்கள் வசிக்கும் இடத்தில் இருந்த அந்தப் பிரமாண்ட, ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பினுள் இருந்த ஒரு வீட்டினுள் அவளை அழைத்து வந்தான்...

"வெல்கம் மது..." அவன் அழைத்தும் உள்ளே வராது முரண்டு பிடித்தவளை ஒரு பார்வை பார்த்தவன் பின்பு தனது இரு கைகளில் அவளை அப்படியே அலேக்காகத் தூக்கி கொண்டு வீட்டினுள் நுழைந்தான்...

"டேய் விடுடா..." என்று அவள் திமிறியபடி அவனை அடிக்க... அவனோ சிரித்தபடி அடிகளை வாங்கிக் கொண்டவன்,

"நல்ல ரொமான்ட்டிக் சீன் இல்லையா..." என்றவன் அதற்கு மேலும் காதலை சேர்க்க எண்ணி அவளின் இதழின் மீது தனது இதழை பதித்தான் மென்மையாக...

அவனைத் தள்ளிவிட எண்ணி உயர்ந்த அவளது கைகள் அப்படியே அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்துக் கொண்டது... அவனது இதழொற்றலில் அவளது காதல் மனம் உருகி தான் போனது...

அந்தக் கணம் அவளுக்கு ஒன்று புரிந்தது... அவன் தன்னை வலுக்கட்டாயமாகக் கடத்தி கொண்டு வரவில்லை... அவள் தான் தானாக அவனுடன் வலிய வந்திருக்கிறாள் என்று... காத்திருந்த காதல் மனம் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டதோ...??? ஆம் என்பதே அதற்கான விடையாகக் கிடைத்தது...

அடுத்தக் கணம் அவளது விழிகளில் விழிநீர் துளிர்த்தது தனது இழிநிலையை எண்ணி தாங்க முடியாது...!!!

மதுரமாகும்...!!!

ஒற்றை இதழொற்றலில் தீர்ந்து விடும் தாபமா ஆணின் தாபம்...? மேலும் மேலும் காதலியிடம் மூழ்க சொல்லி துடித்த மனதினை முயன்று அடக்கி கொண்டு ரிச்சர்ட் மதுரகவியை விட்டு விலகினான்... ஆனால் அவனைப் போன்று உணர்வுகளைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை போலும்... அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்த கரங்களுடன் அவனது கைகளில் பூக்குவியலாய் தவழ்ந்தவளின் முகம் எண்ணற்ற உணர்வுகளைப் பிரதிபலித்தது...

அவளது மூடிய இமைகளுக்குள் விரிந்த கனவுகள் அப்பட்டமாய்த் தெரிந்தது அவளது இதழில் வழிந்த ரகசிய புன்னகையில்... அதில் மேலும் வசீகரிக்கப்பட்டவனாய் ரிச்சர்ட் அவளை ஆசையுடன் பார்த்தபடி நின்றிருந்தான்...

"மது..."

ரிச்சர்ட்டின் காதலான அழைப்பில் மெல்ல விழி திறந்தாள் மதுரகவி... அவளது விழிகள் இரண்டிலும் பிரதிபலித்த காதலில் அவன் பேச்சற்றுப் போனான்... இக்கட்டான சூழ்நிலையில் கத்தி முனையில் கடத்தி வந்தவனிடத்தில் ஒரு பெண் இத்தனை காதல் கொள்வாளா...? அவனது பெண்ணவள் அந்த நிலையிலும் அவன் மீது காதல் கொள்கிறாளே... இது என்ன மாதிரியான காதல்...? அவனுக்கே அது விளங்கவில்லை... ஆனால் அவளது காதல் அவனுக்கு நிரம்பப் பிடித்திருந்தது அந்தப் பெண்ணவளை போல்...

"பதினேழு வயசில் உன் கண்களில் வழிந்த மயக்கம், கொஞ்சமும் குறையவில்லை இப்போதும்..." என்று கூறியபடி அவளது விழிகளில் முத்தமிட்டவன்,

"ஐ லவ் யூ பேபி..." என்று காதலாய் கூற...

அவன் முதலில் கூறியதை கேட்டு முகம் மாறியவள் அவனது கரங்களில் இருந்து கீழே இறங்க முற்பட்டாள்...

அவன் அதைத் தடுக்க முயன்ற போது அவள் அவனை நோக்கி,

"உனக்குக் கை வலிக்கும் ரிச்சி..."

"எனக்குக் கை வலிக்கிறதா இல்லையா என்று நான் தான் சொல்லணும்..." என்றவன் அவளைச் சோபாவில் அமர வைத்து தானும் உடன் அமர்ந்தான்...

"இப்போ தான் நிம்மதியா இருக்கு..." என்றவன் அவளை அணைத்துக் கொண்டான்... அவளும் அவனது அணைப்பில் வாகாய் அடங்கி அமர்ந்தாள்...

காதலனது கைகள் அவளது இடையைத் தழுவி இருந்தது... ஆனால் அதில் கிஞ்சித்தும் காமம் இல்லை... அவளது கழுத்து வளைவில் அவன் முகம் புதைத்து அமர்ந்திருந்தான் தான்... ஆனால் அதில் கிஞ்சித்தும் தாபம் இல்லை... மாறாகத் தாயிடம் அன்பை, அரவணைப்பை எதிர்பார்க்கும் சேயின் நிலையை ஒத்து இருந்தது அவனது அணைப்பு... அதை அவளும் உணர்ந்தவளாய் அவனைத் தாயாய் அரவணைத்து கொண்டாள்... அதில் முற்றிலும் மனம் நெகிழ்ந்தவனாய் அவன் அவளது மடியில் தலை வைத்து படுத்து ஆறுதல் தேடினான்...

பிறந்ததில் இருந்து யாரும் அவனை அன்பு காட்டி வளர்த்தது இல்லை... அது போல் அவனும் யாரிடமும் அன்பு எதிர்பார்த்துக் காத்திருந்தது இல்லை... வாழ்க்கையை அதன் போக்கில் வாழ பழகி இருந்தவனுக்குக் காதலியின் இந்தப் பாசம், அனுசரணை மிகவும் தேவையாக இருந்தது... அதே சமயம் புதுமையான உணர்வினையும் கொடுத்தது... மொத்தத்தில் உணர்வுகளுக்கு ஆட்படாத அந்த ஆண்மகனின் விழிகளிலும் ஒரு துளி கண்ணீரை சுரக்க செய்தாள் மதுரகவி தனது தன்னலமற்ற காதலால்...

எவ்வளவு நேரம் அவன் அப்படியே படுத்திருந்தானோ... பிறகு சுதாரித்துக் கொண்டு எழுந்தவன்,

"இரவு உணவுக்கு என்ன வேண்டும்...?" என்று கேட்டபடி அலைப்பேசியைக் கையில் எடுத்தான்...

"இங்கே நாம் சமைக்க முடியாதா...?" வீட்டை சுற்றிலும் விழிகளை ஓட்டியபடி அவள் கேட்டாள்...

"நாம் வருகிறோம்ன்னு எல்லாப் பொருட்களும் வாங்கி வைக்கச் சொல்லியிருந்தேன்... எல்லாம் தயாராகத் தான் இருக்கிறது... ஆனால் இன்னைக்கு எதுவும் செய்ய வேண்டாம்... நீ ரெஸ்ட் எடு..."

"அப்படி என்ன வெட்டி முறித்தேனாம்...? ரெஸ்ட் எடுப்பதற்கு...? ஃப்ளைட்டில் தானே பறந்து வந்தேன்..." என்றவளை புரியாத ஒரு பார்வை பார்த்தவன் பின்பு சட்டென்று சிரித்து விட்டான்...

"இப்போ எதுக்கு இப்படிச் சிரிக்கிற...?" என்று அவனை மிரட்டியபடி அவள் கண்களை உருட்ட...

"ஐயோ பயமாயிருக்கே..." என்று அவன் போலியாகப் பயந்தது போல் கூறினாலும் அவனது உதட்டின் சிரிப்பு சற்றும் குறையவில்லை...

"த்ச்சு... சொல்லிட்டு சிரிடா..." என்று சிணுங்கியவளின் விழிகளுக்குள் உற்று பார்த்தவன்,

"நீ இவ்வளவு புத்திசாலியா இருக்கியேன்னு நினைச்சேன்... அதான் சிரிப்பு வந்திருச்சு..." அப்போதும் அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"ஏன் என் புத்திசாலித்தனத்துக்கு என்னவாம்...? அங்கே விட இங்கே அதிகமா தான் இருக்கு..." என்று அவள் முறுக்கி கொள்ள...

"உண்மையில் இங்கே விட அங்கே தான் காதல் அதிகமாய் இருக்கிறது..." என்று காதலோடு கூறியவனின் கைகள் அவளை வளைத்துப் பிடித்தது அதே காதலோடு...

"உனக்கு ஏதாவது சாக்கு சொல்லிட்டு என்னைக் கட்டிப்பிடிக்கணும்... போடா..." என்றவள் அவனை விட்டு

விலகாது அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்... அவளது குழந்தைத்தனமான காதலில் அவன் மனம் நெகிழ்ந்து போனான்...

அதன் பிறகு இருவருக்கும் பிடித்த உணவை அவன் வீட்டிற்கே தருவிக்க... அவள் அவனுடன் சேர்ந்து உணவினை பாத்திரத்தில் எடுத்து வைத்து உதவினாள்... பின்பு அவனை அமர வைத்து தட்டு எடுத்து வைத்தவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"நீயும் உட்கார்... நாம் சேர்ந்து சாப்பிடலாம்..." என்க...

"நீ முதலில் சாப்பிடு ரிச்சி..." என்றவள் சகஜமாய் அவனுக்கு உணவு பரிமாறினாள்...

அவனுக்கு விவரம் தெரிந்ததில் இருந்து பசித்தால் அவனே எடுத்து வைத்து சாப்பிட்டு தான் பழக்கம்... இது போல் யாரும் அன்போடு பரிமாறியது இல்லை... மனம் நெகிழ அவன் அவளைப் பார்த்திருந்தான்...

"இங்கே என்ன பார்வை...? சாப்பிடு ரிச்சி..." என்று உரிமையோடு அதட்டியவளை கண்டு அவனது குறும்பு தலை தூக்க...

"நீ ஊட்டி விட்டால் நான் சாப்பிடுகிறேன்..." என்று வம்பிழுத்தான்...

"ஏன் நான் ஊட்டி விட மாட்டேன்னு நினைச்சியா...?" என்று அமர்த்தலாகக் கேட்டவள் அடுத்த நொடி அவனுக்கு ஊட்டி விட... கண்கள் பனிக்க அவன் அதை வாங்கிக் கொண்டான்...

அதே சமயம் அவளது கண்களில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது... அவன் பதறி போனவனாய் அவளைத் தனது மடியில் அமர்த்தி அவளது விழிகளைத் துடைத்து விட்டான்... ஆனால் நிற்காது அது பெருகி வழிய அவன் இயலாதவனாய் அவளைப் பார்த்தான்...

"பேபி... நீ இப்படி அழுதால் எனக்கும் அழுகை வருது..." என்று குரல் கரகரக்க பாவம் போல் கூறியவனின் குரலில் அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனது சட்டை காலரை இரு கைகளால் பிடித்துக் கொண்டு,

"இது என்னுடைய எத்தனை நாள் கனவு தெரியுமா ரிச்சி...?" அதில் அவன் திகைத்து போய் அவளைப் பார்த்தான்...

"இடைப்பட்ட இந்த ஆறு வருசமா நான் கண்ட கனவு வாழ்க்கை இது ரிச்சி... உன்னைப் பிரிஞ்சு வந்தாலும் மனசில் உன் கூடத் தான் வாழ்ந்துட்டு இருக்கேன்... உனக்குச் சமைச்சு நானே பரிமாறி, ஊட்டி விடணும்... உன்னைச் சின்னக் குழந்தை போல் பார்த்துக்கணும்... இப்படி நிறைய ஆசைகள் எனக்குள் இருக்கு... அது இன்னைக்கு நனவான போது என்னால் என்னைக் கண்ட்ரோல் பண்ண முடியலை... உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன் ரிச்சி..."

அவளது காதல் மனம் அறிந்த போது அவன் பேச்சற்றுப் போனான்...

"மிஸ் பண்ணிய வாழ்க்கையை எல்லாம் இனி மிஸ் பண்ணாம அனுபவிப்போம்... என்ன சரியா...?" என்று காதல் வழியும் விழிகளுடன் கேட்டவனிடத்தில் அவளது தலை தானாக அசைந்து சம்மதம் தெரிவித்தது...

அவள் அவனுக்கு ஊட்டி விட, அதே போல் அவனும் அவளுக்கு ஊட்டி விட... இருவரும் பேசி கொண்டே உண்டதில் நேரம் கடந்து கொண்டே இருந்தது...

அவள் களைப்பாக இருப்பதை உணர்ந்தவன், "நீ ரொம்ப டயர்டா இருக்க... நீ போய்த் தூங்கு பேபி..." என்று அவளை மடியில் இருந்து எழுப்பி விட்டான்...

இருவரும் சேர்ந்து உணவு மேசையைச் சுத்தம் செய்து விட்டு பின்பு அவன் அவளை அழைத்துக் கொண்டு படுக்கையறைக்கு வந்தான்... படுக்கையைக் கண்டதும் அவளது உடல் விறைப்புற்றது... அவனோ அது

தெரியாதவனாய் அவளுக்கு வேண்டிய இரவு உடையை எடுத்து அவளிடம் கொடுத்தவன்,

"நீ குளிச்சிட்டு படு... எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது..." என்று கூறி விட்டு அவளின் பதிலை எதிர்பாராது சென்று விட்டான்...

அதில் நிம்மதி அடைந்தவளாய் அவள் சுவற்றில் சாய்ந்து நின்றாள்...

வரவேற்பறை சோபாவில் வந்தமர்ந்த ரிச்சர்ட் தனது மடிகணினியை உயிர்ப்பித்தான்... அவனுக்காகவே ஆன்லைனில் காத்திருந்தவரிடம் அவன் பேச துவங்கினான்...

"மது எப்படி இருக்கிறாள்...?"

"மது பாதுகாப்பாக என்னுடன் இருக்கிறாள்..." இதைச் சொல்லும் போதே அவனது முகத்தில் அத்தனை புன்னகை நிறைந்து இருந்தது...

"செந்தில்நாதன் அமைச்சர் என்பதால் தகுந்த ஆதாரம் இல்லாமல் அவர் மீது கை வைக்க முடியாது... அதனால் கொஞ்சம் பொறுமையாகப் போக வேண்டியிருக்கு மிஸ்டர். ரிச்சர்ட்... எதிலுமே அவர் நேரிடையாகச் சம்பந்தப்படவில்லை... அது தானே இங்குச் சிக்கலாக இருக்கிறது..."

"எல்லோரின் வாக்குமூலமும் அவரை நோக்கி தானே கை காட்டுகிறது..."

"ஆம்... ஆனால் அது மட்டுமே வழக்குக்குச் செல்லாது... இது காழ்ப்புணர்ச்சி காரணமாக ஜோடிக்கப்பட்டது என்று சொல்லி இதிலிருந்து அவர் தப்பிவிட வாய்ப்பு அதிகம் இருக்கிறது... அதற்குப் பிறகு நீங்க என்ன, அந்த ஆண்டவனே நினைத்தாலும் அவர் மீது கை வைக்க முடியாது... அதனால் எலி தானாகப் பொறியில் வந்து மாட்டும் வரை நாம் காத்திருந்து தானாக வேண்டும்..."

"அதற்குள் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ..." ரிச்சர்ட்டின் முகத்தில் கவலை படர்ந்தது...

"எந்த அசம்பாவிதமும் நடப்பதற்கு நான் விட மாட்டேன்... என்னை நம்புங்க மிஸ்டர். ரிச்சர்ட்..."

"உங்கள் மீது நம்பிக்கை இருக்கிறது... இனி இது உங்கள் கைகளில் தான் இருக்கிறது..." என்று முடித்துக் கொண்ட ரிச்சர்ட் அவரிடம் விடைப்பெற்று ஆன்லைனில் இருந்து வெளியில் வந்தான்...

பின் தனது மின்னஞ்சலில் இருந்து அவனது அலுவலகத்திற்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பி வைத்தான்... அதன் பின்னரே அவனுக்கு நிம்மதியாக இருந்தது... அந்நேரம் இலண்டனில் இருந்து அவனுக்கு அழைப்பு வந்தது... அதைக் கண்டு அவனது முகம் மாறியது...

"சொல்லுங்க..." என்றான் மொட்டையாக...

"என் மீது பாசம் இல்லையா ரிச்சர்ட்... எதுக்கு இந்தக் கோபம்...?" ஆங்கிலத்தில் அந்தக் குரல் அவனிடத்தில் உருகியது...

"இத்தனை வருடங்களாக இல்லாத பாசம் இப்போது எங்கே இருந்து வரும்...?" என்று முகத்தில் அடித்தார் போன்று அவன் கூற... மறுமுனை மௌனம் சாதித்தது...

"உங்களுடைய வயதின் காரணமாகத் தான் நான் இந்த வேலையைச் செய்வது... மத்தபடி எனக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... என்னை விட்டால் போதும்... எனக்கு அப்படி ஒரு எரிச்சலாக இருக்கிறது..."

"இனி இது தான் உன் அடையாளம்..."

"என் அடையாளம் மிஸஸ். ரோசலினின் மகன் என்பது மட்டுமே..."

"உன் பெயர் பின்னால் இருக்கும் வில்லியம்ஸ் என்கிற குடும்பப் பெயர் உனக்கு வேண்டாமா...?"

"என்னை வேண்டாம் என்று சொன்ன குடும்பத்தின் பெயர் எனக்கும் தேவையில்லை..." என்று பட்டென்று வார்த்தைகளைத் தெறிக்க விட்டவன் பின் நிதானித்து,

"ப்ச்... இதுக்குத் தான் நான் அதிகம் பேசுவதில்லை... பேசினால் உங்களுக்கும் எனக்கும் வீண் மனக்கஷ்டம் தான்... அதனால் முடிந்தவரை நீங்க என் கிட்ட பேசுவதை, என்னைச் சந்திப்பதை தவிர்க்க பாருங்கள்..." என்று கண்டிப்பும், கறாருமாய்க் கூறியவன் அழைப்பை துண்டித்து விட்டான்...

பிறகு எதையும் சிந்தித்துப் பார்க்க பிடிக்காதவனாய் சோபாவில் சாய்ந்தமர்ந்து கொண்டு விழிகளை மூடி கொண்டான்... எத்தனை நேரம் அப்படியே அமர்ந்திருந்தானோ திடுமென நினைவு வந்தவனாய் எழுந்து படுக்கையறை நோக்கி சென்றான்...

அங்கு மதுரகவி அழுகையில் கரைந்து கொண்டு இருப்பது அவளது முதுகு குலுங்கியதில் இருந்து தெரிந்தது... வேக எட்டுக்கள் வைத்து அவளை அடைந்தவன்,

"பேபி..." என்று அவள் தோள் மீது கை வைக்க...

"ரிச்சி..." என்றழைத்தபடி அவள் அவனது இடுப்பை கட்டி கொண்டு வயிற்றில் முகம் புதைத்தாள்...

"ஏன் அழற...?" அவளது முகத்தை நிமிர்த்தி முடியை கோதி வாஞ்சையுடன் பார்த்தபடி கேட்டவனைக் காண காண அவளது விழிகளில் கண்ணீர் பெருகியது...

"நம் வாழ்க்கை எப்படி எல்லாம் ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணி இருந்தேன்... ஆனால் இப்படி...?" என்று அவள் மேலே சொல்ல முடியாது தேம்பினாள்...

"இதில் என்ன இருக்கு பேபி...?" எதற்காக இவள் இப்படி அழுது கரைகிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை...

"நான் ரொம்பக் கேவலமான பெண் இல்லையா ரிச்சி... கேவலமான பெண் தான் இப்படி எல்லாம் நடந்து

கொள்வாள்..." என்று கூறியபடி மீண்டும் அவள் அழுகையில் கரைய அதில் அவனது மனம் கரைந்து போனது...

"யார் சொன்னது நீ கேவலமான பெண் என்று... நான் இல்லாது இந்த இடத்தில் வேறு யாரும் இருந்திருந்தால் இப்படித் தான் நடந்து இருப்பாயா...?"

அவனது கேள்வியில் அதிர்ச்சி அடைந்தவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்ணீர் அப்படியே நின்று விட்டது...

"முடியாது இல்லையா...? இப்போதாவது புரிந்து கொள்... இதற்கு என்ன அர்த்தம் என்று..."

ரிச்சர்ட் அவளது விழிகளைத் துடைத்து நெற்றியில் முத்தமிட்டவன், "குட்நைட்..." என்று கூறியபடி எழுந்தான்... அவள் வியப்பாய் அவனைப் பார்த்தாள்...

"நம் காலம் நீண்டு இருக்கிறது பேபி... உன் விருப்பம் இல்லாது உன்னைத் தொட்டேன் என்பது தானே உன் குற்றச்சாட்டு... இனி நீயே தான் விரும்பி என்னைத் தேடி வரணும்... நான் வர மாட்டேன்..." என்று உறுதியாகக் கூறியவனின் வார்த்தையில் அவளது மனம் கலங்கி தவித்தது...

"ரிச்சி... என் மீது கோபமா...?" அதற்கும் அவள் தவித்துப் போனாள்... காதல் அவளை அந்தளவிற்கு ஆட்டி படைத்தது...

"ச்சேச்சே... உன் மீது எனக்குக் கோபமே வராது பேபி... நீ என்னோட செல்ல பேபி..." என்று அவன் அவளது கன்னம் பற்றிக் கொஞ்சியவன்,

"இனி உன் விருப்பம் இல்லாது எதுவும் நடக்காது என்கிற உத்திரவாதத்தை நான் உனக்குத் தருகிறேன்..."

"நான் தவறாகப் பேசியிருந்தால் சாரி ரிச்சி..."

"இப்போ நீ என்ன சொல்ல வர்ற... நான் ஹீரோவா இருக்கிறதா...? இல்லை வில்லனா மாறவா...?" என்று நமட்டு சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவள் கலக்கம் மறைந்து முறைத்து பார்த்தாள்...

"நீ ஹீரோன்னு நான் சொன்னேனா...? நீ வில்லன் தான்டா... அதான் வில்லன் பார்க்கும் வேலையை ஏற்கெனவே பார்த்து விட்டாயே... பிறகு என்ன கேள்வி வேண்டி கிடக்குது..." என்றவளிடம் பழைய கோபம் திரும்பலானது...

"அது தெரியாமல் பார்த்தது... இப்போது பெர்மிசன் கேட்பது தெரிந்து பார்ப்பதற்கு..." என்று கண்ணைச் சிமிட்டியவனின் கள்ளத்தனத்தில் அவள் மனம் மயங்கி தான் போனது அந்த அசாதாரணச் சூழ்நிலையிலும்...

"அது இந்த ஜென்மத்தில் நடக்காது..." என்று கத்தியவள் கட்டிலில் இருந்த தலையணையை எடுத்து அவன் மீது தூக்கி எறிந்தாள்... அதை லாவகமாய்ப் பிடித்தவன்,

"நடக்கும்... நடக்காததைப் பற்றி நான் சொல்வதில்லை..." என்று கூறியவனின் குரலில் அப்படி ஒரு உறுதி இருந்தது...

"என்னோட பலவீனத்தை நீ பயன்படுத்திக்கப் பார்க்கிற ரிச்சி..."

"நிச்சயமாய் இல்லை பேபி..." என்று தலையசைத்து மறுத்தவன்,

"நான் எந்த அர்த்தத்தில் சொன்னேன் என்பதைப் போகப் போகப் புரிந்து கொள்வாய்..." என்று முடித்துக் கொண்டவன் அறையை விட்டு வெளியில் போகப் போனான்... பின்பு நின்று அவளிடம்,

"கதவை தாளிட்டு கொள்..." என்று கூற... அவள் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள்...

"பின்னே தூக்க கலக்கத்தில் நான் உன்னை ஸ்வாகா பண்ணிட்டேன்னு நீ குற்றம் சாட்டினால் நான் என்ன பண்றது...?" என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு,

"டேய் ரிச்சி..." என்று கழுத்தை நெறிப்பது போல் இரு கைகளை உயர்த்தியபடி அவள் அவன் அருகில் வர அவன் தன் கையிலிருந்த தலையணையை அவளது கைகளில் திணித்து விட்டு,

"எஸ்கேப்..." என்று அலறியபடி அறையை விட்டு ஓடி விட்டான்...

அவனது செயலில் சிரித்தபடி கதவை மூடியவள் எச்சரிக்கை உணர்வுடன் தாளிட்டு கொண்டாள்... அவள் மனதில் இருந்த சஞ்சலம் முழுவதுமாய்த் தீரவில்லை... ஆனாலும் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்துத் தனிமை கொடுத்து விலகி சென்ற காதலனை அவளுக்குப் பிடிக்கத் தான் செய்தது...

'அவன் என்ன செய்தாலும் உனக்குப் பிடிக்கும்... அந்தளவுக்கு உனக்கு முத்தி போச்சு...' என்று அவளது மனசாட்சி அவளைக் கேலி செய்தது...

'ஆமாம்... அதுக்கென்ன உனக்கு...?' என்று அவள் மனசாட்சியை அலட்சியப்படுத்தினாள்...

மறுநாள் மதுரகவி எழுந்த போது ரிச்சர்ட் வெளியில் செல்வதற்குத் தகுந்தார் போன்று உடை உடுத்தி கொண்டு தயாராக இருந்தான்...

"குட்மார்னிங் பேபி... நல்லா தூங்கினியா...?"

"ம்... ம்..." என்று சோபாவில் சரிந்து அமர்ந்தவளுக்குத் தூக்கம் இன்னும் மிச்சம் இருந்தது...

அப்போது அவள் கண் முன் அவளது அலைப்பேசியை நீட்டினான் ரிச்சர்ட்...

"இது எப்போ எடுத்துட்டு வந்த...?" ஆச்சிரியத்துடன் கேட்டபடி அவள் அதை வாங்க...

"உனக்கு மறந்துட்டு வர்றது தானே வேலை... நான் ஞாபகமாய் எடுத்துட்டு வந்தேன்..." என்றவனை ஒரு பார்வை பார்த்தவள் பின் அமைதியாகி போனாள்...

"அம்மா கிட்ட பேசணுமா? வேண்டாமா...?"

அன்னையிடத்தில் என்னவென்று பேசுவாள்...? தந்தை சரியில்லை என்றா...? அல்லது தனது இழிநிலையைக் குறித்துப் பேசுவதா...? தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்து விட்டாள்...

"என்ன பேபி...?"

"வேண்டாம்..." என்று அவள் மறுத்தாள்... அதற்கு மேல் அவன் ஒன்றும் பேசவில்லை...அசால்ட்டாய் தோளை குலுக்கி கொண்டான்...

"சீக்கிரம் ரெடியாகி வா..."

"நான் எங்கேயும் வரலை..." என்றாள் எரிச்சலுடன்...

"வரணும்... வந்து தான் ஆகணும்... இல்லைன்னா நானே உன்னைக் கிளப்பி விடவா...?" என்று அருகில் வந்தவனைக் கண்டு அவள் பயத்துடன் பின்னால் நகர்ந்தாள்...

"அந்தப் பயம் இருக்கிறது அல்லவா... ஒழுங்கா கிளம்பி வரும் வழியைப் பார்..." என்று அவன் கட்டளையிடும் தொனியில் கண்டிப்புடன் கூறினான்...

"நீ என்னை மிரட்டி காரியம் சாதிக்கிற ரிச்சி..." என்று எரிச்சலுடன் மொழிந்து விட்டு எழுந்தவள்,

"கிளம்பு, கிளம்புன்னு சொன்னால் மட்டும் போதாது... மாத்திக்கிறதுக்கு ட்ரெஸ் எங்கே...?"

சின்னக் குழந்தை போல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அங்கே இருக்கும் அலமாரியில் இருக்கிறது..." என்றான் புன்சிரிப்புடன்...

"எல்லாம் ப்ளான் பண்ணி தான் செஞ்சிருக்க... வில்லன்டா நீ..." என்றவள் அறையை நோக்கி செல்ல...

அவனோ அவளை வேதனையுடன் பார்த்திருந்தான்... பின்பு 'பேசுவது என் காதலி தானே' என்று மனதினை தேற்றி கொண்டவனின் முகத்தில் புன்னகை மீண்டது... அந்தச் சந்தோசத்தில் அவன் சமையலறை நோக்கி சென்றான்...

குளித்து முடித்து அங்கு வந்தவளின் தோற்றம் கண்டு சன்னமாய் விசிலடித்தபடி, "நாட் பேட்..." என்றவன்,

"இன்னைக்கு ஈவினிங் ஷாப்பிங் போயிட்டு உனக்குச் சேரி வாங்கிட்டு வரலாம்..." என்க...

"எதுக்கு...? அது எல்லாம் ஒண்ணும் வேண்டாம்..." என்றவளின் கை தானாகத் துப்பட்டாவை வைத்து தனது இடையை மறைத்தது... அதைக் கண்டு அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"இதற்குத் தான்..." கண்சிமிட்டி சிரித்தவனின் சிரிப்பில் மனம் மயங்கியவளாய் நின்றிருந்தவளின் தோள் பற்றி நாற்காலியில் அமர வைத்தவன் அவளுக்குத் தட்டு வைத்து பரிமாறத் துவங்கினான்...

"நீ உட்கார் ரிச்சி..."

"மூச்... சாப்பிடு..." என்றவன் தானும் உண்ண அமர்ந்தான்...

தட்டில் இருந்த பிரட் டோஸ்ட்டும், கண்ணாடி குவளையில் இருந்த ஆரஞ்சு பழச்சாறையும் கண்டு அவள் முகத்தைச் சுளித்தாள்...

"எனக்கு இது வேண்டாம்..."

"ஏன்...?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்...

"எனக்கு எங்க ஊர் இட்லி, தோசை, பூரி, பொங்கல் தான் வேணும்... அப்புறம் ஃபில்டர் காஃபியும்..." என்றவள்,

"இது எல்லாம் தெரிஞ்ச ஒரு சமையல்க்காரரை வேலைக்கு வை ரிச்சி..."

"நோ பேபி... நமக்குப் பிரைவேசி வேணும்... அதனால் நோ சர்வண்ட்ஸ்... நாம தான் வேலை பார்த்தாகணும்..."

"கஞ்சப்பிசினாறி ரிச்சி... போடா..." என்று அவள் மூஞ்சை தூக்கி வைத்துக் கொள்ள...

"வேணும்ன்னா நான் சமைச்சு உனக்குத் தர்றேன்..." என்றான் புன்முறுவலுடன்...

"ஐயோ வேண்டாம்... அதுக்கு இந்தப் பிரட் டோஸ்ட்டே எனக்குப் போதும்..." என்றவள் வேகமாய் உண்ண துவங்கினாள்...

அவன் புன்சிரிப்புடன் அவளைப் பார்த்தபடி உண்ண ஆரம்பித்தான்... வெகுவருடங்களுக்குப் பின் அவன் நிறைவாய் உணர்ந்தான்... தன்னவள் வருகையால் வாழ்க்கை முழுமை அடைந்து விட்டது போல் அவனுள் ஒரு தோற்றம்...

**********************

மாநகரக் காவல்துறை ஆணையர் விஜயின் அதிரடி உத்தரவின் பெயரில் அந்தப் பிரபல தனியார் கல்லூரியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது... அப்போது அங்குப் பெண்கள் விடுதி அறையில், குளியலறையில், கல்லூரி வளாகத்தில் இருந்த பெண்கள் கழிவறையில் என்று எல்லா இடங்களிலும் வைக்கப்பட்டு இருந்த ரகசிய கேமிராக்களை எல்லாம் கண்டுபிடித்து எடுத்தவர்கள் இது தொடர்பாகக் கல்லூரி முதல்வரையும், விடுதி நிர்வாகியையும் சராமாரியாகக் கேள்வி கேட்டு கிடுக்கிப்பிடி போட்டனர்...

எல்லாச் செய்தித்தாளிலும் இந்தச் செய்தி முக்கியத்துவம் பெற்றது... இதுவரை தற்கொலை செய்து இறந்து போனதாய் எண்ணியிருந்த மாணவிகளின் மரணத்தில் சந்தேகம் கொண்டு மீண்டும் அந்த வழக்கை கையில் எடுத்து விசாரிக்க ஆரம்பித்தது காவல்துறை...

இதனால் பெரும் ஆத்திரம் அடைந்தார் செந்தில்நாதன்... கட்சி தலைமையகத்தில் முத்துபேச்சியை நேரில் சந்தித்த போது அவர் அவளிடம் எகிறினார்...

"உனக்கும், உன் புருசனுக்கும் வேறு வேலை இல்லையா...? எந்நேரமும் என்னைப் பின்தொடர்வது தான் வேலையா...? இப்போ எதுக்கு உன் புருசன் காலேஜில் ரெய்ட் பண்ணி இருக்கிறான்...?" என்று அவர் சத்தம் போட்டு கத்தியதை பொறுமையுடன் கேட்டவள்,

"எதுக்கு இத்தனை சத்தம் மிஸ்டர். செந்தில்நாதன்... கொஞ்சம் சத்தத்தைக் குறைங்க..." என்றவள் பின் நிதானமாய் அவரைப் பார்த்து,

"உங்களுக்கும் அந்தக் காலேஜுக்கும் என்ன சம்பந்தம்...?" என்று கேட்டவளை அவர் அதிர்ச்சியுடன் பார்த்தார்...

தவளை தன் வாயால் கெடும் என்பது இது தானோ...!!!

மதுரமாகும்...!!!

"அது என்னோட காலேஜ்ன்னு நான் உன் கிட்ட சொன்னேனா...? சொன்னேனா...?" என்று மனதில் பயந்தபடி வெளியில் முத்துபேச்சியிடம் கோபமாய் எகிறினார் செந்தில்நாதன்...

"அதைத் தான் நானும் கேட்கிறேன்... பிறகு எதுக்கு என் கிட்ட வந்து கத்திக்கிட்டு இருக்கீங்கன்னு..."

"அந்தக் காலேஜ் என்னோட நண்பனோடதுன்னு உனக்கு நல்லாவே தெரியும்... வேணும்ன்னே அங்கே கேமிரா எல்லாம் நீங்களே செட் பண்ணி வச்சிட்டு நிர்வாகம் பண்ணிய வேலைன்னு பொய் சொல்றீங்க... அவன் மூலமா என்னை மாட்ட வைக்க நீயும், உன் புருசனும் திட்டம் போடுறீங்க... அது இந்தச் செந்தில்நாதன் கிட்ட நடக்காது..." என்று கோபத்தில் படபடத்தவரை அவள் நிதானத்தைக் கைவிடாது அமைதியாகப் பார்த்தாள்...

"இந்த விசயத்தில் உங்க நண்பர் பாடு, என் கணவர் பாடு... இதை வைத்து நீங்களும் நானும் மோதி கொள்ள வேண்டாமே மிஸ்டர். செந்தில்நாதன்..." ஊடுருவும் பார்வையுடன் கூறிய முத்துபேச்சியை நேருக்கு நேர் சந்திக்க முடியாது அவர் வேறு பக்கம் பார்த்தார்...

"உங்களை மாட்ட வைக்கணும்ன்னா இந்த ஒரு வழி தான் இருக்கா என்ன...? அதுக்குப் பல வழிகள் இருக்கு... ஏதாவது ஒரு வழியில் நீங்க மாட்டாமலா போயிருவீங்க... அப்போ நீங்களும், நானும் நிதானமா ஆற அமர உட்கார்ந்து பேசுவோம்..." என்று அமர்த்தலான குரலில் கூறியவள் அங்கிருந்து விறுவிறுவெனச் சென்று விட்டாள்...

வீறு கொண்டு வீர நடை பயின்று செல்லும் அவளைக் கண்டு அவரது முகத்தில் முத்துக்களாய் வியர்வை துளிகள் அரும்ப ஆரம்பித்தது... மந்தாகினியால் ஏற்படும் தொல்லை, மகளது பிரச்சினை, கல்லூரியில் நடத்தப்பட்ட நடவடிக்கை எல்லாம் சேர்ந்து எதற்கும் அஞ்சாத செந்தில்நாதனை அஞ்ச செய்து தைரியத்தை இழக்க

செய்தது... அதன் விளைவினால் இயலாமையில் எழும் ஆத்திரம் அவரது அறிவுக்கூர்மையை மழுங்க செய்தது...

அந்நேரம் அவரது அலைப்பேசி அழைத்தது... திருச்செல்வன் தான் அவரை அழைத்தான்...

"இவன் வேற...?" அவர் எரிச்சலுடன் முனங்கி கொண்டே அலைப்பேசியை உயிர்ப்பித்தார்...

"மதுவை ஏன் ரிச்சர்ட் கூட அனுப்பி வச்சீங்க...? அம்மா இப்போ தான் என் கிட்ட விசயத்தைச் சொன்னாங்க... அவள் கல்யாணமாகாத பெண்... நாளைக்கு மீடியா அவளைப் பத்தி தப்பா எழுதினால் பெரிய பிரச்சினையா போயிரும்ப்பா... எந்த வேலையாக இருந்தாலும் அவள் நம் வீட்டில் இருந்து கத்துக்கிடட்டும்..." என்று எடுத்தவுடன் சகோதரனாய் அவன் அக்கறையில் படபடத்தான்...

"டேய்... நிறுத்துடா... நான் அவளோட அப்பா... அதை விட அமைச்சர்... என்னை மீறி எதுவும் நடந்து விடாது... நடக்கவும் நான் விட மாட்டேன்... அவளுக்கு யாராலும் எந்தக் கெடுதலும் வராமல் நான் பார்த்துக்கிறேன்..."

'அவளுக்குக் கெடுதல் நினைக்கத் தான் நீ இருக்கியே...' அவரது மனசாட்சி நேரம் காலம் தெரியாமல் குரல் கொடுத்தது...

"இருந்தாலும்..." அவன் இழுக்க...

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... இன்னைக்குத் தலைவர் கிளம்பி அங்கே வருகிறார்... தென்மாவட்டத்தில் இருந்து தான் தேர்தல் பிரச்சாரம் ஆரம்பிக்கிறது... அதனால் அவர் எல்லாம் முடித்துக் கொண்டு இங்கே வரும் வரை நீ அவர் கூடவே இருந்து கவனிச்சிக்கணும்... அதில் நீ எந்தக் குறையும் வைக்கக் கூடாது... இந்தச் சட்டமன்ற தேர்தலில் நம் கட்சி தான் ஜெயிக்கணும்... அதுக்கு நாமும் ஒரு காரணம்ன்னு தலைவர் மனசில் நல்லா பதியணும்... என்ன புரிஞ்சதா...?"

"அதைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்கப்பா... நான் தலைவர் கூடவே இருந்து நல்லா கவனிச்சிக்கிறேன்..." என்றவன்,

"அப்பா..." என்று இழுத்தான்...

"என்ன திருச் சொல்லு...?"

"நம்ம காலேஜில் ரெய்டுன்னு கேள்விப்பட்டேன்..."

'போச்சுடா...' என்று மானசீகமாக அவர் தலையில் கை வைத்தார்...

"ஆமா திரு..." பதில் சொல்ல முடியாது அவர் தடுமாறினார்...

"உங்க பிரெண்ட்டை நம்பி பொறுப்பைக் கொடுத்ததுக்கு அந்தாளு பண்ணி வச்சியிருக்கிற வேலையைப் பார்த்தீங்களா...? அங்கே கேமிரா இருந்ததைப் பத்தி மீடியா என்னென்னமோ எழுதுது..."

"திரு... மீடியா இப்படித் தான்டா இல்லாதது பொல்லாதது எல்லாம் எழுதும்... விசாரணை தான் நடந்துக்கிட்டு இருக்கு... பார்க்கலாம்..."

"அவரை அரெஸ்ட் பண்ணினா சிக்கலா போயிரும்ப்பா... தேவையில்லாம நம்ம பெயர் கெட்டு போயிரும்..." என்றவனைக் கண்டு பல்லை கடித்தவர்,

"அப்பாவை நம்பு திரு... நான் இருக்கும் போது நீ ஏன் கவலைப்படுற...?"

"சரிப்பா..." என்று நிம்மதியுடன் அவன் அழைப்பை துண்டித்தான்... இன்னும் ஒரு மாதத்திற்கு மகனது தொல்லை இருக்காது என்று எண்ணியவராய் அவர் அலைப்பேசியை அணைத்தார்...

செந்தில்நாதன் யோசனையுடன் அப்படியே நின்றிருந்தார்... திருச்செல்வன் அவர் சொல்லும் பணியைச் செய்து கொண்டு அவருக்காக உழைப்பவன்... தந்தை எதையும்

சரியாகச் செய்வார் என்கிற நம்பிக்கையில் அவன் எதையும் ஆராய மாட்டான்... மொத்தத்தில் அவன் அவரது அடிமை... அந்தளவிற்கு அவன் அவருக்குக் கட்டுப்பட்டவன்... அதனால் தான் அவரது பல தவறுகள் அவனுக்குத் தெரியாமல் இருக்கிறது... இனியும் தெரிய விடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்...

*********************

மும்பை மாநகர வீதியில் காரை லாவகமாய் ஓட்டிய ரிச்சர்ட்டை அதிசயமாய்ப் பார்த்தாள் மதுரகவி... அவளின் பார்வையை உணர்ந்தார் போன்று அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"என்ன பேபி...?"

"உனக்கு எப்படி இங்குள்ள ரோடு எல்லாம் தெரியும்...?" இன்னமும் அவளது ஆச்சிரியம் குறையவில்லை...

"நாலு வருசமா இங்கே வந்து, போய்க் கொண்டு இருக்கிறேன்..."

"ரிச்சி..." என்று திகைப்புற்றவளாய் அவனைப் பார்த்தவள்,

"ஒரு தடவை கூட நீ என்னை வந்து பார்க்கவில்லையே..." என்றாள் குற்றம் சாட்டும் குரலில்...

"நான் வேண்டாம் என்று விலகி போனவள் நீ... பிறகு நான் எப்படி உன்னைத் தேடி வர முடியும்...?" என்று அவன் பதில் கேள்வி கேட்ட போது அவளால் பதில் பேச முடியவில்லை...

"ஒருவேளை உனக்குக் கல்யாணமாகி இருந்தால்...? அதனால் தான் உன்னை விட்டு விலகி இருப்பது நல்லது என்று நினைத்தேன்..."

"இப்போ மட்டும் ஏன் வந்தே...?"

அவளது குரலில் இருந்த ஆற்றாமையை உணர்ந்து கொண்டவனின் உதடுகளில் புன்னகை அரும்பியது...

"இப்போது தானே தெரிந்தது... என் மது பேபிக்கு கல்யாணமாகலை என்று... சரியென்று இங்கு வந்து பார்த்தால் என் மது பேபி அப்போது இருந்த காதலுக்குக் கொஞ்சமும் குறையாத காதலுடன் எனக்காகக் காத்திருப்பது தெரிந்தது... அது தெரிந்த பின்பும் உன்னைக் கை நழுவ விட நான் என்ன முட்டாளா...?"

அவனது பதிலில் அவளது முகம் மாறியது... எந்த மாதிரியான நடவடிக்கையைக் கையாண்டு அவன் தன்னைத் தக்க வைத்திருக்கிறான் என்று நினைத்தவள் மனம் சுணங்கி போனது... ஆனாலும் மனதில் இருந்த காதல் அவளை மீண்டும் மலர செய்தது...

"அதைத் தான் நானும் கேட்கிறேன்... அது எப்படி உனக்குத் தெரியும்ன்னு...?"

"உன்னைப் பத்திய எல்லா விசயங்களும் எனக்குத் தெரியும்... உன்னைப் பத்தி மட்டுமல்ல உன் குடும்பத்தார் அத்தனை பேரின் டீட்டெய்ல்சும் என் கைகளில்..." என்றவனைப் புரியாது பார்த்தவள்,

"அது எப்படி...?" என்க...

ரிச்சர்ட் அவளைப் புதிராகப் பார்த்தவன் மேலே ஏதோ சொல்ல போகும் முன் அவனது அலைப்பேசி அழைத்தது... எடுத்து பார்த்தவன் அவளிடம்,

"உன் அம்மா..."

"அவங்க தான்னு உனக்கு எப்படித் தெரியும்...?"

"இது உங்கம்மா நம்பர் தானே..." என்றபடி அலைப்பேசியை அவளின் முன் நீட்டினான்...

ஆம், அது அவளது அன்னையின் அலைப்பேசி எண் தான்... ஆனால் அதை உயிர்ப்பித்துப் பேச முடியாதபடி அவளது மனம் உயிர்ப்பிழந்து போயிருந்தது... அவளது அலைப்பேசி சார்ஜ் இல்லாது அணைந்திருக்க வேண்டும்... அதனால்

தான் அவர் ரிச்சர்ட்டின் மூலம் அவளைத் தொடர்பு கொள்ள நினைத்து இருக்கிறார்...

அவரிடம் என்னவென்று பேசுவது...? தனது குரலை வைத்தே தன் மனநிலையை எளிதாகக் கணித்து விடக் கூடியவர் அவர்... அவரிடம் உண்மையைக் கூறிவிடலாம் தான்... ஆனால் அதைச் செய்ய விடாது தடுத்தது இரண்டு காரணங்கள்... ஒன்று அவர் கணவர் மீது வைத்திருக்கும் காதல்... மற்றொன்று அவள் தன் காதலன் மீது வைத்திருக்கும் காதல்... மொத்தத்தில் காதல் அவளைப் பாடாய்ப் படுத்தியது...

"பேசு பேபி..." என்றவனை ஒரு பார்வை பார்த்தவள் அலைப்பேசியை அணைத்து அவனது சட்டை பையில் போட்டாள்...

அவளது உரிமையான அந்தச் செய்கையில் அவனது முகத்தில் புன்னகை மலர்ந்தது... அவளது கைப்பற்றி அதில் மென்மையான முத்தமிட்டான்... அவனது செய்கையில் அவள் மனதில் இருந்த அத்தனை சஞ்சலமும் சடுதியில் காணாமல் போனது... அவளது புன்னகை மீண்டது...

"இப்போ வேண்டாம்... பிறகு பேசுகிறேன்..." என்று அவள் கூறினாள்...

ரிச்சர்ட் புன்முறுவலுடன் காரை நிறுவன வளாகத்தினுள் செலுத்தினான்... அப்போது தான் அவளும் அந்த நிறுவனத்தைப் பார்த்தாள்... அவ்வளவு பெரிய கட்டிடத்தைப் பார்த்தவள் ஆவென்று ஆச்சிரியத்தில் வாய் பிளந்தாள்...

"ரிச்சி... நீ இங்கேயா வேலை பார்க்கிறாய்...?" என்று அறியாமையுடன் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"கம்பெனி பெயரை படித்துப் பார்... உனக்குப் புரியும்..."

செயற்கை நீரூற்றுடன் கிரானைட் கற்களின் மீது பித்தளை எழுத்துக்களில் பளபளத்த நிறுவனத்தின் பெயரை சத்தமாகப் படித்தவள்,

"ஆமாம், இதுக்கு என்ன...?"

"தொழில் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடும் போது தூங்கி கொண்டு இருந்தாயா...?"

ஆம், அன்று அவள் கற்பனையில் கண்ட நினைவில் மனம் கசந்து இருந்தது இப்போது நினைவில் எழுந்து மேலும் மனம் கசக்க செய்தது...

"அதுக்கு என்ன இப்போ...? அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்...?"

"எப்படி நீ மட்டும் இவ்வளவு புத்திசாலியா இருக்கிற பேபி...?"

அவனது கேலிக்கு பதிலடி கொடுக்க நினைத்து அவள் வாய் திறக்கும் முன் கார் நின்றது... அதனால் அவளும் வாயை மூடி கொண்டாள்... காவலாளி ரிச்சர்ட் புறம் இருந்த கதவை திறந்து விட அவன் கம்பீரமாக இறங்கினான்... அவனது கம்பீரத்தை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தவளுக்குத் தான் இறங்க வேண்டும் என்பதே சுத்தமாய் மறந்து போயிருந்தது... அவன் மீதிருந்த பார்வையை அகற்றாது இமைக்காது அவள் அவனைச் சைட் அடித்துக் கொண்டிருந்தாள்...

ரிச்சர்ட் அவள் புறம் வந்து கார் கதவை திறந்து வைத்து, "வெல்கம் மதுரகவி மேடம்..." என்று விரிந்த புன்னகையுடன் தன்னவளை வரவேற்றவன் தனது வலக்கையை அவள் புறமாய் நீட்டினான்...

தன்னவனின் கையைப் பற்றியபடி இறங்கிய மதுரகவி இன்னமும் வியப்பு மாறாது அந்த நிறுவனத்தையும், ரிச்சர்ட்டையும் மாறி மாறி பார்த்தாள்... அவனது வருகைக்காகக் காத்திருந்த பொது மேலாளர்

பூங்கொத்துடன் அவனை வரவேற்றார்... அதே போல் அவளுக்கும்... எல்லாமே அவளுக்கு வியப்பை அளித்தது...

"உனக்குப் பிடித்த ஆரஞ்சு மற்றும் சிவப்பு நிறம் கலந்த ரோஜா பூங்கொத்து... பிடித்திருக்கிறதா...?" காதோரம் வருடி சென்ற ரிச்சர்ட்டின் குரலில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"ரொம்ப, ரொம்ப... தேங்க்ஸ் ரிச்சி..." என்றாள் விழியில் வழியும் நேசத்துடன்...

"வெல்கம் பேபி..."

அவளது நன்றிக்கும், வருகைக்கும் சேர்த்து கூறியவன் அவளைக் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான்... அங்கு வேலையில் ஆழ்ந்திருந்த அனைவரும் அவனுக்குக் கொடுத்த மரியாதையை அவளுக்கும் சேர்த்து கொடுத்ததை நினைத்து அவளுக்கு அத்தனை கர்வமாக, பெருமையாக இருந்தது... எல்லாம் நொடி நேரம் தான்... அடுத்த நொடி தன்னுடைய இழிநிலையை உணர்ந்தவளாய் முகம் கறுக்க அவனது கைப்பிடியில் இருந்து தனது கையை உருவி கொள்ள முனைந்தாள்...

"ஏன்...?" என்று கேட்டவன் தனது பிடியை சிறிதும் தளர்த்தவில்லை...

"ப்ளீஸ் ரிச்சி..."

விழிகளில் நீர் திரையிட அவள் அவனை ஏறிட்டு பார்த்த போதும் அவன் கொஞ்சமும் மனம் இரங்காது அவளது கையைப் பிடித்த பிடியை விடாது தனது அறைக்கு அழைத்துச் சென்றான்... அவளோ எந்தவொரு உணர்வும் இல்லாது பலியாடு போல் அவனுடன் நடந்தாள்... உள்ளே வந்ததும் தானியங்கி கதவு தானாக மூடி கொண்டதும் தனது பிடியை தளர்த்தியவன்,

"என்ன பிரச்சினை உனக்கு...?"

அவனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது தலை குனிந்தவளை கண்டு அவன் அருகில் வந்து அவளது முகத்தை நிமிர்த்தி,

"சொல்லு பேபி..." அவனது குரலில் இருந்த மென்மை அவளது வாயை திறக்க வைத்தது...

"இங்கே வேலை செய்றவங்க என்னைப் பத்தி என்ன நினைச்சிருப்பாங்க...?" என்று வேதனையில் முகம் கசங்கியவளை கண்டு,

"நீ நாடறிஞ்ச மினிஸ்டர் பொண்ணு... உன்னுடன் எங்க கம்பெனி போட்டிருக்கிற ஒப்பந்தமும் நாடறிஞ்சது... இதில் நீயும், நானும் சேர்ந்து வொர்க் பண்ண போறதை பத்தி நினைக்க என்ன இருக்கிறது...?" என்றான் அவன் கொஞ்சமும் அலட்டி கொள்ளாது... அதில் சஞ்சலம் அடைந்த அவளது மனம் நிம்மதி அடைந்தது...

"அப்போ இது உன் கம்பெனியா ரிச்சி..." 'ஆம்' என்பது போல் விழி மூடி திறந்தான் அவன்...

"உண்மையாவா...? அப்போ நீ இந்தளவுக்குப் பணக்காரனா இல்லையே..." சந்தேகமாய்க் கேட்டவளை கண்டு,

"என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்...?" என்று கேட்டவனின் பார்வை அவளைத் துளைத்து எடுத்தது...

"அது... அது வந்து..."

அதானே அவனைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்...? அவனது பெயர் ரிச்சர்ட் என்பதைத் தவிர... அவளது திணறலில் அவனது முகம் மென்மையுற்றது...

"ரொம்ப யோசிக்க வேண்டாம் பேபி... இப்போது உன்னைத் திருமணம் செய்யுமளவுக்கு என்னிடம் வசதி இருக்கிறது... சோ டோன்ட் வொர்ரி..."

"என்னைக் குத்தி காட்டுறியா...?" என்று கேட்டவளின் குரல் ஒரு மாதிரியாய் ஒலித்தது...

"ச்சேச்சே... ஆனாலும் உண்மை அது தானே..." என்றபடி அவளை அழைத்து வந்து அங்கு ஒரு பக்கமாய்ப் போடப்பட்டு இருந்த நாற்காலியில் அவளை அமர செய்தவன்,

"இது தான் உன் சீட்... இன்னையில் இருந்து வேலையைக் கற்று கொள்..." என்று கூறிவிட்டு தனது நாற்காலியில் போய் அமர்ந்தான்...

அதன் பிறகு ரிச்சர்ட் அங்கிருந்த கணினியில் மூழ்கியவன் அவளைச் சுத்தமாய் மறந்து போனான்... கணினி படிப்புப் படித்திருந்த போதும் மதுரகவிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... சுற்றும் முற்றும் பார்த்தவளுக்குப் பிரமிப்பாய் இருந்தது... அதே சமயம் அவளது மனதில் ஆயிரம் கேள்வி முளைத்தது... கேள்விகளுக்கான விடையை வேண்டி அவள் ரிச்சர்ட் புறம் திரும்பினாள்... அவனோ வேலையில் தீவிரமாய் மூழ்கி இருந்தான்...

அவளது வழக்கமான குறும்புத்தனம் தலை தூக்க அவனை நோக்கி மெல்ல அடி எடுத்து வைத்தாள் அவள்... அவனது பின்பக்கமாய் வந்தவள் அவனது தோள் வளைவின் வழியாகக் கணினி திரையை எட்டிப்பார்த்தாள்... அமர்ந்திருந்த போதும் அவன் அத்தனை உயரமாக இருந்தான்... அதனால் அவள் எக்கி பார்க்க, அவனோ வலக்கையால் அவளது முகத்தை வருடினார் போன்று பிடித்தவன் அவளது தலை மீது தனது தலையைச் சாய்த்து லேசாக இடித்தபடி,

"இங்கே என்ன வேலை...?" என்று கேட்டான் கேலியாய்...

"இல்லை அது வந்து... உண்மையில் உனக்கு வேலை தெரியுமா...? இல்லை நீ கம்ப்யூட்டரில் கேம் விளையாடுகிறாயோன்னு பார்த்தேன்..." என்றவளை போலியாக முறைத்து பார்த்தவன் தன் முன்னிருந்த பெயர் பலகையை அவள் புறம் திருப்பி,

"வேலை தெரியாது போனால் இந்தப் பதவியை யாரும் கொடுக்க மாட்டாங்க..." என்று அவன் கூற...

'Richard Villiams, CEO' என்று பொன் எழுத்துக்களால் பொறித்திருந்த பெயர் பலகையைக் கண்டு அவள் அசடு வழிந்தாள்... அதில் மனதை பறி கொடுத்தவனாய் அவன்,

"சோ க்யூட் பேபி..." என்று அவளது கன்னத்தில் இதழ் பதித்தான்... அதில் கோபமுற்றவளாய் அவள் அவனைத் தள்ளி விட்டு விலகியவள்,

"வேலை கொடுக்காது இது என்ன ரிச்சி...?" என்ன முயன்றும் கோபமாய் வர வேண்டிய அவளது வார்த்தைகள் சிணுங்கலாய் வெளிவந்தது...

"வேலை தானே கொடுத்து விட்டால் போச்சு..." என்றவன் அவளுக்கு உண்மையாகவே வேலை கொடுத்தான்...

"நான் என்ன உன் செக்ரட்டரியா...? மெயில் அனுப்புற வேலை எல்லாம் எனக்குக் கொடுக்கிற..."

"நிச்சயமாய் நீ என் செக்ரட்டரி தான்... அதுவும் பெர்சனல் செக்ரட்டரி... ஆபிஸ், வீடு இரண்டிற்கும் சேர்த்து..." என்று குறும்பாய் கூறியவன் கண்சிமிட்டி சிரித்தான்...

"என்னது...?" என்று அவள் கண்களை உருட்டினாள் கோபமாக...

"உண்மையைத் தானே சொன்னேன்..." என்று கூறியவனை ஆன்லைனில் வந்த வாடிக்கையாளர் அழைக்க... அவனது கவனம் அதில் சென்றது...

அவனைப் பார்த்துக் கொண்டே இருக்கையில் வந்தமர்ந்தவளுக்கு மனம் சற்றுச் சுணங்கத்தான் செய்தது... கண்கள் லேசாகக் கரிக்கத் துவங்கியது... பின் ஆழ்ந்த மூச்சு இழுத்து விட்டுத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டு அவன் கொடுத்த வேலையைச் செய்யலானாள்...

பதினோரு மணிக்கு 'வெஜிடேபிள் சாலட்' மற்றும் 'சூப்' வந்தது... அதைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்தாள் அவள்...

"இதுக்குத் தான் வெள்ளைக்காரனை காதலிக்கக் கூடாது... காய்ந்த வறட்டியையும், இலைதளைகளையும் திங்க

வேண்டியதாய் இருக்கு... காலக்கொடுமை..." என்று புலம்பியவள் அதைத் திரும்பி கூடப் பார்க்கவில்லை...

அடுத்தப் பத்து நிமிடத்தில் அவள் முன் சுட சுட பாவ் பாஜியும், மசாலா தேநீரும் கொண்டு வந்து வைக்கப்பட்டது... முகம் மலர ஆர்வத்துடன் அதைப் பார்த்தவள் அதைக் கொண்டு வந்து வைத்த கைகளை அடையாளம் கண்டு நிமிர்ந்து பார்த்தாள்... அங்கு ரிச்சர்ட் முறைத்துக் கொண்டு நின்றிருந்தான்...

"ஹி ஹி..." என்று அசடு வழிந்தவளை கண்டு கொஞ்சமும் இளகாது,

"நான் வெள்ளைக்காரன் தான்... ஆனால் என் காதலிக்கு என்ன பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும்..."

"அப்படியா...? எனக்கு என்னென்ன பிடிக்கும்ன்னு சொல்லு பார்க்கலாம்..." மோவாயில் கை வைத்துக் கொண்டு அவள் கதை கேட்கும் ஆர்வத்துடன் அவனைப் பார்த்தாள்...

"அதற்கான நேரம் இப்போது இல்லை... வீட்டிற்குப் போய் அந்தக் கதையைச் சாவகாசமாய் நாம் பேசலாம்... இப்போது வேலையைப் பார்..." என்று விறைப்புடன் கூறியவன் தனது இருக்கைக்குச் சென்று அமர்ந்து வேலையில் மூழ்கி போனான்...

"வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன்னு படத்துக்கு ஏன் பெயர் வச்சான்னு இப்ப தானே புரியுது... அட போடா ரொம்பத் தான் அலட்டிக்கிற..." என்று முணுமுணுத்தவள் பாவ் பாஜியையும், தேநீரையும் ஒரு பிடி பிடித்தாள்...

ஓரக்கண்ணால் அவளைப் பார்த்த ரிச்சர்ட்டிற்குச் சிரிப்பு வந்தது... இன்னமும் சிறு குழந்தை போல் நடந்து கொள்ளும் அவளது குழந்தைத்தனம் எப்போதும் போல் அவனை ஈர்த்தது...

"வழியுது துடைச்சுக்கோ..." திடுமென ஒலித்த அவனது குரலில் திடுக்கிட்டு போனவளாய் அவள் வேகமாய் வாயை

துடைத்தாள்... அதைக் கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"டேய் ரிச்சி... பொய்யாடா சொல்ற...?" இருந்த இடத்தில் இருந்து அவள் கனல் பார்வையை அவன் புறம் வீசினாள்...

"உண்மையில் வழிஞ்சது பேபி..."

"அதெல்லாம் ஒண்ணும் வழியலை... நீ பொய் சொல்ற போடா..."

"நீ என்னைப் பார்த்து ஜொள்ளு வடிச்சதை தான் சொன்னேன்... டீயை இல்லை..."

அவள் தேநீர் அருந்தி கொண்டே, மும்முரமாய் வேலை பார்க்கும் காதலனின் அழகை, அவன் பார்க்கவில்லை என்கிற தைரியத்தில் ரசித்துப் பார்த்ததை எண்ணி இப்போது நொந்து கொண்டாள்...

"போடா... உனக்கு வேறு வேலையில்லை..." என்று கூறியவள் தனது வேலையில் ஆழ்ந்து விட்டாள்...

அன்று மாலை வரை அவனுக்கு வேலை இருந்து கொண்டே இருந்தது... அவள் ஏதோ கொஞ்சம் வேலை செய்தாள்... மீதி நேரம் அவனை ரசிப்பதை வேலையாகக் கொண்டிருந்தாள்... பின்பு அவன் அவளை அழைத்துக் கொண்டு கடைவீதிக்குச் சென்றான்... அவளுக்கு வேண்டிய புடவைகளை அவன் வாங்கிக் குவித்த போது அவளால் முறைக்க மட்டுமே முடிந்தது... தடுக்க முடியவில்லை... அதை அவன் நமட்டு சிரிப்புடன் கண்டு கொள்ளாது தனது வேலையில் கவனமாய் இருந்தான்... அது தான் புடவையைத் தேர்ந்து எடுக்கும் வேலையில்...

பின் இரவு உணவு முடித்துக் கொண்டு இருவரும் வீடு திரும்பிய போது இருட்டி இருந்தது... இருவரும் தங்களது அறையை நோக்கி சென்றனர்... அருகருகே இருந்த அறைகளின் வாயிலின் முன் வந்து நின்றவர்கள் பிரிய மனமில்லாது அப்படியே பார்த்தபடி நின்றிருந்தனர்... அவன் தான் சுதாரித்துக் கொண்டு,

"குட்நைட் பேபி..." என்று முணுமுணுத்தான்...

அவள் லேசாகத் தலையசைத்தபடி கதவை திறந்து கொண்டு உள்ளே சென்று விட்டாள்... அவனும் தனது அறைக்குச் சென்றான்... அவன் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு மடிகணினியை எடுத்துக் கொண்டு அமரும் போது அறை கதவு தட்டப்பட்டது...

"எஸ் கம்மின் பேபி..."

அவன் சொன்னதும் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தவள், "எனக்குத் தூக்கம் வரலை ரிச்சி..." என்று கூற...

அவன் மடிகணினியை அணைத்து விட்டு அவளை இரு கரம் நீட்டி அழைக்க... அவளோ வெகு ஜாக்கிரதையாக,

"அங்கே பால்கனிக்குப் போய்ப் பேசுவோமா...?" என்று கேட்க...

அவளின் எச்சரிக்கை உணர்வை கண்டு புன்னகைத்தவன், "ஓ எஸ்..." என்றபடி எழுந்தவன் பால்கனி நோக்கி செல்ல... அவள் அவனைப் பின்தொடர்ந்தாள்...

அங்கிருந்த ஊஞ்சலை கண்டதும் மதுரகவி குதூகலத்துடன் ஓடி சென்று அதில் அமர்ந்தவள், "வா, வா ரிச்சி... கம் க்விக்..." என்று உற்சாகமாய்க் குரல் கொடுக்க...

அவளது உற்சாகம் கண்டு அவனுள்ளும் உற்சாகம் எழுந்தது... சந்தோசத்துடன் அவளருகில் வந்தமர்ந்தான்...

"ஊஞ்சலை ஆட்டி விடு ரிச்சி..." என்று அவள் மகாராணி போல் கட்டளையிட்டு விட்டு அதில் சாய்ந்து அமர்ந்து கொள்ள... அவன் சிரித்தபடி காலால் அதை உந்தி தள்ள... ஊஞ்சல் மெதுவே தாலாட்டு பாடுவது போல் மெல்ல அசைந்தது...

வானில் வலம் வந்த மூன்றாம் பிறையை ரசித்துப் பார்த்தவள், "ம்... இப்போ சொல்லு ரிச்சி... எனக்கு என்னவெல்லாம் பிடிக்கும்ன்னு..."

"உனக்கு ஆரஞ்சு சிவப்பு நிறம் கலந்த ரோஜா பிடிக்கும்..." தான் அவளை முதன்முதலில் பார்த்த போது நிகழ்ந்த நிகழ்வை மனதில் கொண்டு அவன் அப்படிக் கூறினான்...

"ம்... அப்புறம்..." அவள் சுவாரசியமாய்க் கேட்டபடி அவன் பக்கமாய்த் திரும்பி அமர்ந்து கொண்டாள்...

"பேபிக்கு அவளோட அப்பா, அம்மா, தங்கையை ரொம்பப் பிடிக்கும்... ஆனால் அண்ணனை பிடிக்காது..."

திருச்செல்வனைப் பற்றி அவன் கூறியதும் அவளது முகம் மாறியது... தன்னைச் சமாளித்துக் கொண்டு புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்... அதை அவன் கண்டு கொண்டான்...

"உனக்கு ஒண்ணு தெரியுமா பேபி... உன் மேல் அதிகப் பாசம் வைத்திருப்பது உன் அண்ணன் தான்..."

"அவனை விடு ரிச்சி... வேறு ஏதாவது பேசு..."

"ஓகே... அப்புறம் உனக்கு உன் வீட்டு நாய்க்குட்டி ரொம்பப் பிடிக்கும்... அப்படியே உன் பின்னால் நாய்க்குட்டி போல் சுற்றும் இந்த ரிச்சியையும்..." என்று அவன் கேலி போல் உண்மையைக் கூறி சிரித்தான்...

"ரிச்சி..." லஜ்ஜையுற்றவளாய் சிணுங்கி கொண்டே அவள் முகம் திருப்பிக் கொள்ள...

அவளது முகத்தைப் பற்றித் தன் புறம் திருப்பியவன், "எனக்கு என்ன பிடிக்கும்ன்னு நீ கேட்கவில்லையே...?"

"அட ஆமாமில்ல... சொல்லு, சொல்லு..." என்று அவள் ஆர்வமாக அவனைப் பார்த்தாள்...

"எனக்குப் பிடித்தது எல்லாம் என் மது பேபி மட்டுமே..."

காதலனின் தன்னலமற்ற காதலில் பெண்ணவள் முற்றிலும் கரைந்து போனாள்...

"ரிச்சி..."

அவனது தனது இரு கைகளையும் விரிக்க... அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாய் அவள் விம்மியபடி அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்... எல்லோருக்கும் இந்த வரம் கிடைக்காது... வேண்டாம் என்று காரணம் கூடச் சொல்லாது விலகி வந்தவளை நிறை குறையோடு நேசிக்கவும் உயர்ந்த மனம் வேண்டும்... அதில் தளும்பத் தளும்பக் காதல் நிறைந்திருக்க வேண்டும்... அது அவளது காதலனிடத்தில் இருக்கிறது...

அவனது இந்தக் காதலுக்காகத் தானே அவள் அவனுடன் இருக்கிறாள்... அவன் மீது கோபம் இருந்த அதே சமயம் காதலும் இருக்கிறதே... அந்தக் காதல் தானே அவனது நிறை குறைகளோடு அவனை ஏற்றுக் கொள்ளத் துடிக்கிறது...

'ரிச்சி... நீ என்னை எடுத்துக் கொண்டது கூடத் தவறில்லை... அது நான் உனக்குச் செய்த பாவத்திற்கான பரிகாரம்... ஆனால் என் அப்பாவிடம் நீ பேசிய வார்த்தைகளை என்னால் ஜீரணிக்க முடியவில்லையே... ஏன் அப்படிப் பேசின ரிச்சி...? கடைசியில் நீயும் அவரைப் போல் என்னை அந்த மாதிரி பெண்ணாக எண்ணி விட்டாயே...' என்று மனம் குமுறியவள்,

'சரி பரவாயில்லை விடு... யார் அப்படி நினைத்தது...? என் காதலன் நீ தானே... ஆனால் நீ அப்படிச் சொன்னதிலும் ஒரு நல்லது இருக்கிறது... உன்னுடன் இருக்கும் இந்தக் கொஞ்ச காலம் மட்டுமே நான் சந்தோசமாக வாழ போகிறேன்... உன்னுடன் இருக்கும் ஒவ்வொரு நொடியையும் பொக்கிசமாக என் மனதினுள் சேமித்து வைக்கப் போகிறேன்... எனக்கு இந்தச் சில நாட்கள் வாழ்க்கை போதும்... அதற்குப் பின் என் உயிர் போனாலும் பரவாயில்லை... நிம்மதியுடன் உயிர் துறப்பேன்... கடைசிவரை நீயும், நானும் ஒன்று சேர முடியாது போய்விட்டதே ரிச்சி...' என்று அவள் மனதிற்குள் அழுது கரைந்தாள்...

தனது வாழ்வின் இறுதி அத்தியாயம் நெருங்கி கொண்டிருக்கிறது என்பதை மதுரகவி உணர்ந்தே இருந்தாள்... அதற்கு அவள் தன்னை மனமுவந்து தயார்படுத்திக் கொண்டாள்...!!!

மதுரமாகும்...!!!

"அப்புறம் வேறு என்னென்ன எனக்குப் பிடிக்கும் சொல் ரிச்சி...?"

தன்னை முயன்று சமாளித்துக் கொண்டு ரிச்சர்ட் நெஞ்சில் இருந்து முகத்தை நிமிர்த்திய மதுரகவி அவனை அண்ணாந்து பார்த்து ஆர்வமாய்க் கேட்டாள்... அவளது ஆர்வம் மின்னும் கண்கள் அவனை மயக்கியது... அவளது பிறை நெற்றியில் முத்தமிட்டவன்,

"எல்லோருக்கும் பௌர்ணமி நிலவு பிடிக்கும் என்றால், உனக்கு மட்டும் பிறை நிலவு பிடிக்கும்..."

"பரவாயில்லை, என்னைப் பத்தி நல்லா தான் தெரிஞ்சு வச்சியிருக்க..." என்று அவள் அவனைச் சிலாகித்துப் பாராட்டினாள்...

"ராப் பாடல்களை நல்லா சத்தமா வச்சிக்கிட்டு அதிரடியா ஆட்டம் போட பிடிக்கும்..."

"ஹி, ஹி... இதையும் உன் கிட்ட சொல்லிட்டேனா...?" என்று அசடு வழிந்தாள் அவள்...

"நீ பேசிய ஒவ்வொரு வார்த்தையும் இங்கே..." என்று தனது இதயத்தைச் சுட்டிக்காட்டியவன்,

"பத்திரமாக இருக்கிறது..." என்க...

அவள் கண்கள் கலங்க அவனது இதயப் பகுதியை வருடி கொடுத்தாள்... துரோகம் செய்தவளையும் நேசிக்கப் பரந்த மனம் வேண்டும் அல்லவா... அவள் மனம் நெகிழ்ந்து போனாள்... அவள் தனக்குள் கரைவதை காண சகிக்காதவனாய்,

"என் பேபி எப்போதும் சொல்வாள்... வாய் இருப்பதே நல்லா சாப்பிடறதுக்கும், பேசுவதற்கும் தான் என்று..." என்று அவன் கிண்டலடிக்க...

"ரிச்சி..." அவன் கூறியதை கேட்டு அவள் செல்லமாய்ச் சிணுங்கினாள்...

"குறும்பும், துருதுருப்பும் நிறைந்த அந்த மது இப்போது எங்கே போனாள்...? ரொம்ப அமைதியான இந்த மது எனக்குப் பிடிக்கலை... ஐ மிஸ் ஹர் அ லாட்..."

அவனது பேச்சில் அவள் விலகி அமர்ந்தாள்... அவனும் அவளை அருகில் அழைக்க எல்லாம் இல்லை... ஊடுருவும் பார்வையுடன் அவளைப் பார்த்திருந்தான்...

"உன்னைப் பிரிஞ்ச அன்னைக்கே அந்த மது செத்து போய்விட்டாள்..." என்று அவன் முகம் பார்க்காது கூறியவளை கண்டு அவன் வேதனையில் ஆழ்ந்தான்...

"ச்சு, என்ன பேபி இது...? ஏன் இப்படிப் பேசுற...?" என்றவனை ஏறிட்டு பார்த்தவளின் முகத்தில் தெரிந்த தவிப்பில் அவன் அவளை இழுத்து ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்... தாய் பறவையைத் தேடும் சேய் குஞ்சாய் அவளும் அவனுடன் ஒன்றி கொண்டாள்...

"உன்னைப் புரிஞ்சிக்காமலா நான் உன்னை விட்டு விலகி இருந்தேன்..." என்றவனை அவள் திகைப்பாய் பார்த்தாள்...

"நீ என்னை இரண்டு நாட்களாகப் பார்க்க வரவில்லைன்னு நான் உன்னைத் தேடி ஆகாஷின் வீட்டுக்கு வந்தப்போ நீ என்னைப் பார்க்க மறுத்தியே, அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா...?"

ஏன் இல்லை...? அவளுக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது... எத்தனை வேதனையுடன், அழுகையை அடக்கி கொண்டு, அவள் அவனிடத்தில் பொய் பேசினாள் என்பது அவளுக்கு மட்டும் தானே தெரியும்...

"நீ என் முகம் கூடப் பார்க்க விரும்பாது, அறைக்குள் இருந்தபடி நான் உன்னை விட்டு விலகி போகணும்ன்னு நீ சொன்னப்போ, உன் குரலில் இருந்த வலி, வேதனையை எல்லாம் என்னால் புரிஞ்சிக்க முடிஞ்சது... அதுக்கான காரணத்தைத் தெரிஞ்சிக்கணும்ன்னு நான் நினைச்சேன்...

ஆனா அப்படிக் கேட்பது கூட உன்னைப் பாதிக்குமோங்கிற பயத்தில் தான் நான் விலகி போனேன்... அதுக்குப் பிறகு நான் உன்னைப் பார்க்க முயற்சிக்கலை... ஏன்னா உனக்குப் பிடிக்காததைச் செய்ய எனக்கு மனம் வரலை... அதே சமயம் நீ ஏன் அப்படிச் சொன்னேன்னு என் மனசில் கேள்வி ஓடிக்கிட்டே இருக்கும்..."

"அதுக்கு அப்புறம் நானும் என் வேலையில் பிசியாகிட்டேன்... இடையில் ஒரு நாள் அகிலை சந்தித்த போது உன்னைப் பத்தி அவன் கிட்ட கேட்டேன்... நீ இந்தியாவில் இருக்கிறதா சொன்னான்... சரி, அவ்வளவு தான் நீ என்னை மறந்துட்டேன்னு நான் நினைச்சிக்கிட்டேன்... எனக்கான வாழ்க்கையை நான் வாழ ஆரம்பிச்சேன்... ஆனாலும் மனதின் ஓரத்தில் உன்னைப் பற்றிய நினைவுகள் அழியாமல் இருந்துக்கிட்டே இருந்தது..."

"நான் எப்படி ரிச்சி உன்னை மறப்பேன்...? நான் காதலித்தது உன்னை மட்டும் தான்... என் வாழ்வில் வந்த ஒரே ஆண் நீ மட்டும் தான்..." என்று கண் கலங்கியவளை கண்டு,

"இது இதற்காகத் தான்... இந்த ஒரு காரணத்திற்காகத் தான் நானும் உன்னை மட்டுமே நினைத்திருந்தது..." என்று கண்கள் மின்ன கூறியவனை அவள் வியப்பாய் பார்த்தாள்...

அவளாவது தமிழ் பெண்... அவளது கலாச்சாரம் அப்படி... ஆனால் அவன் ஆங்கிலேயன்... காலுக்கு உதவாத செருப்பைக் கழட்டி எறிவது போல், நாள் ஒன்றுக்கு ஒரு பெண் என்று பெண்களை விதவிதமாய் மாற்றிக் கொள்ளும் கலாச்சாரப் பின்னணியைக் கொண்டவன் அவன்... அவன் தன்னில் மட்டும் நிலைத்து இருப்பதாய் கூறியது அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

"என் அம்மாவோட ஏமாற்றமோ என்னமோ, எனக்குக் காதலில் பெரிசா ஆர்வம் இருந்தது இல்லை... பதிமூணு வயசில் இருந்து பல காதல்களைக் கடந்து வந்தவன் நான்...

ஆனால் யாரும் என்னைப் பெரிதாய் ஈர்த்தது இல்லை... இந்தப் பெண்ணைப் போல்..." என்று அவளது விழிகள் மீது முத்தமிட்டவன்,

"கையில் ரோஜா பூவோடு ஓடி வந்து பூக்குவியலாய் என் மீது மோதியவளை என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது..." அவன் தன்னைத் தான் கூறுகிறான் என்பதை உணர்ந்தவளாய் காதலோடு அவனை அணைத்திருந்த தனது கைகளில் அணைப்பை இறுக்கி கொண்டாள்...

"பார்த்த நொடி உன்னில் காதலில் விழுந்து விட்டேன்... ஆனால் நீ இது நிலையான காதலான்னு கேட்டப்போ கூட எனக்கு இதுக்கான பதில் சொல்ல தெரியலை... எனக்கு யோசிக்க டைம் தேவைப்பட்டது... அப்போது தான் ஒரு பார்ட்டியில் ஜோஸ்னாவை சந்தித்தேன்..."

"அது யார் ஜோஸ்னா...?" விழிகளில் கொலைவெறியுடன் அவனை முறைத்து பார்த்தாள் மதுரகவி...

"நான் எந்தத் தவறும் செய்யவில்லை பேபி..." என்று புன்சிரிப்புடன் இரு கைகளையும் சரணடைவது போல் உயர்த்தினான் ரிச்சர்ட்...

உயர்த்திய அவனது கைகளைப் பிடித்துத் தனது இடை மீது தவழ விட்டவள் அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டு,

"அது நீ என்னைத் தேடி வந்த போதே புரிஞ்சிருச்சு... மேலே சொல் ரிச்சி..." என்க... அவன் மேலே தொடர்ந்தான்...

"அன்றிரவு அவள் என்னைப் படுக்கைக்கு அழைத்த போது தான் நான் என்னை உணர்ந்தேன்... என் மனசில் நீ எவ்வளவு ஆழமாய்ப் பதிஞ்சு இருக்கிறாய் என்பதை அறிந்து கொண்டேன்... அவளிடம் சாரி சொல்லிட்டு வந்துட்டேன்... என்னைப் பற்றி அவள் என்ன நினைத்தாளோ... நான் ஆண் தானா என்று கூடச் சந்தேகப்பட்டு இருக்கலாம்..."

அவனது மனவுணர்வுகளை அவனது தாய்மொழியில் அழகாகச் சொன்ன போது அவள் பிரமித்துப் போய்விட்டாள்... இந்திய ஆண்மகனுக்குக் குறையாத காதலை அவன் கொண்டிருந்தது அவளுக்குப் பெருமையாக இருந்தது... அவளது காதல் சரியான ஆணிடத்தில் தான் மலர்ந்து இருக்கிறது என்று அவளுக்கு அத்தனை கர்வமாக இருந்தது...

"ரிச்சி... நீ எனக்கு மட்டுமேயான ஆண்... எனக்கு மட்டுமே..." என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறியவளின் வார்த்தைகள் நடுங்கியது...

"நான் உனக்கு மட்டுமே சொந்தமானவன்..." என்று கூறிக் கொண்டே அவன் அவளது தலை கோதி கொடுத்து அவளை ஆறுதல் படுத்தினான்...

"அதுக்குப் பிறகு தான் உங்க ஊர் கலாச்சாரத்தைத் தெரிந்து கொண்டேன்... நீ கேட்டதன் ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தமும் புரிந்தது... அந்த அர்த்தத்தோடு வாழ்க்கையை வாழ்ந்து பார்த்திட நான் ஆசைப்பட்ட போது நீ என்னை விட்டு விலகி போயிட்ட..."

என்ன முயன்றும் அவனது குரலில் இருந்த வேதனையை, ஏமாற்றத்தை அவனால் மறைக்க முடியவில்லை... நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் வேதனையில் சுளித்திருந்த அவனது புருவங்களை நீவி விட்டு அவனது வேதனையைக் குறைக்க முயன்றாள்... அவளது முயற்சி புரிந்தவனாய் அவளது கரத்தினைப் பிடித்து அவளது விரல் நுனியில் மென்மையாய் முத்தமிட்டவன்,

"எந்தவொரு உணர்வுக்கும் ஆட்படாதவன், கட்டுப்படாதவன் நான்... ஆனால் நீ என்னைப் பெரும் புயலாய் சுழற்றி அடித்தாய்... என்னால் உன்னை மறக்க முடியவில்லை... இயல்பாக என் வாழ்க்கை சென்று கொண்டு இருந்தாலும் எப்போதும் என் மனதினை நீ அரித்துக் கொண்டு இருந்தது எனக்கு மட்டும் தான் தெரியும்..."

"சாரி ரிச்சி... அப்போ நமக்குள் இருந்த ஏற்றத்தாழ்வு என்னை ரொம்பவும் பயமுறுத்தியது... நாடறிஞ்ச அமைச்சர் பொண்ணு நான்... நீயோ...?" சங்கடமாய் நிறுத்தியவள் அவனைப் பார்த்தாள்... அவனோ புன்னகை மாறாது 'மேலே சொல்' என்பது போல் அவளைப் பார்த்திருந்தான்...

"நீயும், நானும் சேர முடியாதுன்னு நானா ஒரு முடிவுக்கு வந்திட்டேன்... எனக்கு என் அப்பா, அண்ணா மீது ரொம்பப் பயம்... அவங்க நம்ம காதலை ஏத்துக்க மாட்டாங்கன்னு தான் நான் விலகியது... தப்பு தான்... எல்லாத் தப்பும் என் மீது தான்... அந்த வயசில் அது மட்டும் தான் தோணுச்சு... எங்கு இருந்தாலும் நீ நல்லா இருக்கணும்ன்னு தான் நான் உன்னை விட்டு பிரிஞ்சேன்..."

கடைசி வார்த்தைகளை அவள் கூறிய போது அவன் அவளை உற்று நோக்கினான்...

"என்ன ரிச்சி...?" அவள் புரியாது கேட்கவும்...

"ஒன்றுமில்லை... அதுக்குப் பிறகு நீ ஏன் படிப்பதற்கு லண்டன் வரவில்லை...? ஒரு வருசத்தோடு படிப்பை நிறுத்திட்டு நீ இந்தியா போய்விட்டதா அகில் சொன்னான்..." அதைக் கேட்டு அவளது முகம் மாறியது... நொடி நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டவள்,

"அதான் சொன்னேனே ரிச்சி... நீ மீண்டும் என் வாழ்க்கையில் வருவதைத் தவிர்க்க தான் நான் இந்தியாவில் இருந்து விட்டேன்னு..."

"ஓ..." என்றான் ஒரு மாதிரியான குரலில்...

"சத்தியமா ரிச்சி..." என்று பாவம் போல் கூறியவளை கண்டு அவன் சிரிப்புடன்,

"உன்னை நம்பாமலா...? கட்டாயம் நம்புகிறேன்..." என்றவனை அவள் பெருத்த நிம்மதியுடன் பார்த்தாள்...

"அந்த வயசில் நம்ம காதலை நினைச்சுப் பயம் தான் எழுந்தது... உங்கம்மாவை பார்த்த பிறகு தான் நிதர்சனம்

என் முகத்தில் அறைந்தது... அந்தஸ்து பேதம் காரணமா நாம சேர முடியாதுங்கிற பயத்தில் தான் நான் உன்னைப் பிரிஞ்சு வந்தது... ஆனால் வயது ஏற ஏற தான் என்னோட முட்டாளத்தனம் எனக்குப் புரிய ஆரம்பித்தது... நான் செய்த தவறின் அளவும்... ரொம்பக் கஷ்டமான காலம் அது ரிச்சி... மனசளவில் நான் ரொம்பவும் உடைஞ்சு போயிட்டேன்... எதிலும் ஒரு பற்றற்ற நிலை... அதனால் தான் தொண்டுகள் செய்றதில் என் மனசை திருப்பினேன்... என்ன முயற்சித்தும் என்னால் உன்னை மறக்க முடியலை... அதனால் தான் வீட்டில் வரன் பார்த்த போது கூட இன்னும் ஒரு வருசம், ஆறு மாசம்ன்னு இப்படித் தள்ளி போட்டுக்கிட்டு வந்தேன்..." என்றவளை தொடர்ந்து அவன் மேலும் தொடர்ந்தான்...

"நீ விலகி வந்த கொஞ்ச நாளில் என் தாத்தா என்னைத் தேடி வந்தார்..."

"உனக்குத் தாத்தா எல்லாம் இருக்கிறாரா...?" சந்தோசமாய்க் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அப்பா இருக்கும் போது தாத்தா இருக்க மாட்டாரா...?" என்று அவளைக் கேலி செய்தவன்,

"அவர் பெரிய பணக்காரர்... அவரது ஒரே மகன் தான் என் அப்பா... உல்லாச பேர்வழி... அவரிடம் சின்ன வயசில் மயங்கி வாழ்க்கையைத் தொலைச்சவங்க தான் என் அம்மா... அப்போ அம்மா வசதி இல்லாதவங்கன்னு தாத்தா அவங்களை ஏத்துக்கலை..."

"உங்க ஊரிலும் இது எல்லாம் பார்ப்பாங்களா...?"

"எந்த ஊராக இருந்தாலும் அந்தஸ்து பேதம் ஒன்று தானே... அதனால் தான் அம்மாவோட வாழ்க்கை திசைமாறி போயிருச்சு... இந்த நேரத்தில் அப்பா இறக்கவும், தாத்தா எனக்கு மட்டும் அங்கீகாரம் கொடுத்து தன்னுடைய வாரிசா அறிவிக்க நினைச்சார்... ஆனால் அம்மாவை ஏத்துக்க அவர் தயங்கினார்..."

அவளும் அதற்காகத் தானே அவனை விட்டு விலகியது... மனம் கனக்க அமைதியாக இருந்தாள்...

"அம்மாவை ஏத்துக்காததால் நானும் அவரை ஏத்துக்க மறுத்து விட்டேன்... பிறகு அவரோட வயோதிகம் காரணமா தொழிலை பார்க்க முடியலைன்னு சொன்னப்போ, வேறுவழி இல்லாமல் தொழிலை கையில் எடுத்தேன்... அது கூட ஒரு விதத்தில் நல்லதா போச்சு... அதனால் தானே நான் உன்னைத் திரும்பப் பார்க்க முடிந்தது..."

"நான் கூட உன்னைப் புரியாமல் பேசிட்டேன் ரிச்சி..." பின்னே பணக்காரனான அவனைப் போய் அவள் 'நீ பணக்காரனா...?' என்று கேட்டால்...? அவளைப் போல் ஒரு முட்டாள் யாரும் இல்லை...

"வந்தப்போ உன் மேல் கொஞ்சம் கோபம் இருந்தது... ஏன் பாதியில் என்னை விட்டுட்டு போன என்று...? விலை மாதர்களுக்கான புனர்வாழ்வு மையத்தில் நீ தொண்டு செய்ததை நான் பார்த்த போதே உன்னை உணர்ந்துட்டேன்... நீ எங்கம்மாவுக்காகத் தான் என்னை விட்டு வந்தேன்னு... அது போல் தான் நீயும் பதில் சொன்ன, 'பிராயசித்தம் தேடி' என்று... அந்தக் கணம் உன் மீதிருந்த கொஞ்சநஞ்ச கோபமும் போயிருச்சு... உன் மீது காதல் தான் அதிகரிச்சது... இப்போ இன்னமும் அதிகமாய்..." என்றவனது வார்த்தையில் இருந்த அதே நேசம் அவனது விழிகளிலும் வழிந்தது...

அதன் பிறகு நடந்த சம்பவத்தைப் பற்றி அவள் கேட்கவில்லை... அது ஒன்று மட்டுமே அவளுக்கு வருத்தத்தைக் கொடுத்தது... அது போல் அவனும் அதைப் பற்றிய பேச்சை எடுக்கவில்லை... இதில் அவன் மீது தான் தவறு இருக்கிறது... ஆனால் அந்தத் தவறினை மனம் விட்டு சொல்ல முடியாத சூழ்நிலை அவனுடையது... அதனால் அவனும் மௌனம் காத்தான்... இருவரும் அந்த மோனநிலையைக் கலைக்காது அமைதியாக அமர்ந்திருந்தனர்...

வெகுநேரம் கழித்து ரிச்சர்ட் அவளை அழைத்த போது அவள் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்... அவனது கையணைவில் நிம்மதியாய், பாதுகாப்பாய் உறங்கி கொண்டிருப்பவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை நெளிந்தது...

"என் மீது இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாய் தானே... பின்னே எதற்காக என் மீது இத்தனை சந்தேகம்...? ம்..."

அவள் விழித்திருப்பது போல் அவளுடன் உரையாடியவன் அவளைப் பூக்குவியலாய் தனது கைகளில் அலுங்காது அள்ளி கொண்டு அவளது அறை நோக்கி சென்றான்... அங்குப் படுக்கையில் அவளைப் படுக்க வைத்து போர்வையைப் போர்த்தி விட்டவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு நிமிர்ந்தான்...

"என்னால் என்னைக் கண்ட்ரோல் பண்ண முடியவில்லை... என்னை மீறி உன்னிடம் தவறாக நடந்து கொள்வேனோ என்று பயமாக இருக்கிறது... சீக்கிரம் என்னைப் புரிந்து கொள் பேபி... அப்போது தானே நான் உன்னை என்னவளாக்கி கொள்ள முடியும்..." என்றவன் அவளது மதி முகம் நோக்கி குனிந்து,

"அப்படி ஒரு நாள் என் வாழ்வில் வருமா பேபி...?" என்று ஏக்கத்துடன் கேட்டான்...

காத்திருந்த காதலின் ஏக்கத்தினை அவனது விழிகள் இரண்டும் பிரதிபலித்தது... உண்பது, உறங்குவது போல் அவனது நாட்டில் ஆண், பெண் உறவும் சகஜமான ஒன்று... இப்படி உணர்வுகளை அடக்கி கொண்டு யாரும் வாழ்ந்தது இல்லை... அவனுக்குமே இந்த வாழ்க்கை முறை மிகவும் புதிது... அதே சமயம் இது பிடித்திருக்கவும் செய்தது, அதிசயமாய்...

காதலில் உணர்வுகளை அடக்கி கொண்டு காத்திருக்கும் போது, காதலி மீதான காதல் அதிகரித்து அவள் வேண்டும் என்கிற வெறி மனதிற்குள் பெரிதாய் வியாபித்து, மனதினை உணர்வுகள் ஆழிப்பேரலையாய் ஆட்டுவிப்பது,

அவனுக்குமே மிகவும் பிடித்திருந்தது... அந்த வெறி தான் அவனை அவள் ஒருத்தி மீது மட்டுமே ஒழுக்கமாக நிலைக்கச் செய்கிறது...

அந்தக் கணம் இந்திய குடும்பக் கட்டமைப்பின் மீது அவனுக்குப் பெரும் மதிப்பு எழுந்தது... தானும் அது போல் காதல் மனைவி, குழந்தைகள் என்று வற்றாத காதலுடன் காலம் முழுவதும் ஒரே குடும்பமாய் மகிழ்வாய் வாழ வேண்டும் என்று அவன் பேராசை கொண்டான்... அதற்குக் காதலி அவனைத் தேடி அவளாக வர வேண்டும்...

"வருவாள்... வராமல் எங்கே போய்விடப் போகிறாள்...? அவளுக்கு என்னை மட்டும் தான் பிடிக்கும்..." என்று ஆணாய் கர்வம் கொண்டவன் அதே மகிழ்வுடன் தனது அறையை நோக்கி சென்றான்...

மறுநாள் காலையில் மதுரகவி எழுந்த போது தான் தனது அறையில் இருப்பதைக் கண்டு அவசரமாய்ச் சுற்றும் முற்றும் பார்த்தாள்... ரிச்சர்ட்டை எங்கும் காணவில்லை... தன்னைத் தூக்கி வந்து படுக்க வைத்து விட்டு அவன் சென்றிருக்க வேண்டும் என்று எண்ணியவளின் முகத்தில் வெட்கத்தின் சாயல்... குளியலறைக்குள் புகுந்து தன்னைச் சுத்தம் செய்து கொண்டு வந்தவள் நேரே அவனைத் தேடி சென்றாள்...

சமையலறையில் ரிச்சர்ட் மிகுந்த சிரமத்துடன் வெங்காயத்தை நறுக்கி கொண்டு இருந்தான்... அவனது வலக்கையில் இருந்த அந்தப் பெரிய கட்டு வெங்காயம் வெட்டுவதற்குத் தடையாக இருந்தது... அதைக் கண்டு பதறியவளாய் அவன் அருகே வந்தவள்,

"நீ போ ரிச்சி... நான் செய்றேன்..." என்க...

"நீ இரு பேபி... டூ மினிட்ஸ் நூடில்ஸ் தான்..." என்று கண்சிமிட்டி சிரித்தான் அவன்...

நேற்று அவள் கூறியதற்காக அவன் சமைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டவள் அவனை வாஞ்சையுடன்

பார்த்தாள்...

"அதே இரண்டு நிமிசம் தான் எனக்கும் தேவைப்படும்... நீ இங்கே உட்காரு..." என்று சமையலறையில் இருந்த திண்டில் அவனை அமர சொன்னவள் தானே சமைக்க ஆரம்பித்தாள்...

பத்து நிமிடத்தில் நூடில்ஸ்சும், காபியும் தயார் செய்து உணவு மேசை மீது வைத்தவள் அவனை அழைத்தாள்... அவன் உண்ண அமர்ந்த போது அவளே அவனுக்கு ஊட்டி விட்டாள்...

"ஸ்பூன் வைச்சுச் சாப்பிட்டுக்கிறேன்... நீயும் சாப்பிடு..." என்று அவன் கூற...

இங்கு வந்த அன்றும் அவன் இது போல் கூறியதை நினைவுப்படுத்தியவள், "நான் உன்னைச் சரியாகவே கவனிப்பது இல்லை ரிச்சி..." என்று அவள் கவலைப்பட...

"நீ கவனிப்பது என்றால் இப்போ கூட நான் ரெடி பேபி..." என்று அவன் விசம சிரிப்புடன் கூற...

"போ ரிச்சி... உனக்கு வேறு வேலை இல்லை..." என்று சிணுங்கியவள் அவனது கையிலிருந்த காயத்தை வருடியவாறு,

"இது எப்படி வந்தது...?"

அவள் கேட்டதும் அவனது முகம் கோபத்தினைத் தத்தெடுத்தது... அதே கோபத்துடன் அவன் வெறுப்புடன் வார்த்தைகளை உமிழ்ந்தான்...

"எல்லாம் உன் அப்பா பேசிய பேச்சால் வந்தது... என்ன மனுசன் அவன்...? பெத்த பெண்ணைப் போய் இப்படி...? எங்க கலாச்சாரத்தில் கூட இப்படிக் கிடையாது..." என்று அன்று நடந்ததை அவளிடம் கூறியவனுக்கு அப்படி ஒரு ஆத்திரம் வந்தது... அதைக் கேட்டு அவள் நத்தையாய் தனக்குள் சுருண்டு போனாள்...

"அந்த நொடி நான் தீர்மானிச்சேன்... இனியும் உன்னை அந்தாள் கிட்ட விட்டு வைக்கக் கூடாதுன்னு... என் கூடவே உன்னைப் பாதுகாப்பாய் கூட்டிட்டு வந்திரணும்ன்னு... அது போல் உன்னைக் கூட்டிட்டும் வந்துட்டேன்..." என்றவன் அவளது முகம் பற்றி,

"இனி எந்த ஆபத்தும் உன்னை அண்டவிடாது நான் பார்த்து கொள்வேன்..." என்று அவன் கூறிய போது அவனது காதலை உணர்ந்தவளாய் அவளது முகம் பூவாய் மலர்ந்தது...

"ரிச்சி... நான் உன்னை நம்பறேன்... ஐ லவ் யூ ரிச்சி... ஐ லவ் யூ..." இரண்டு நாட்களாக அவளது மனதினை உறுத்தி கொண்டிருந்த சஞ்சலம் அந்தக் கணம் முற்றிலும் அகன்று விட்டது...

அவளது வார்த்தையில் அவனது முகத்திலும் புன்னகை மீண்டது...

"ரிச்சி..."

"என்ன பேபி...?" கேள்வி அவளிடத்தில் இருந்தாலும் அவனது கை அவளுக்கு ஊட்டிவிட மறக்கவில்லை...

"இன்னைக்கு லீவ் போட்டு வீட்டில் இருக்கலாமா...?"

"இன்னைக்கா...? ம்ஹூம், அது முடியாதே பேபி... முக்கியமான ப்ராஜெக்ட் இருக்கிறதே..." என்று அவன் இழுக்க...

"மண்டு ரிச்சி..." என்று அவனது தலையில் செல்லமாய்க் கொட்டி விட்டு அவள் எழுந்து சென்றுவிட... அவனோ அவள் செல்வதை மர்ம புன்னகையுடன் பார்த்திருந்தான்...

'நீ என்னை நெருங்கி வர இன்னும் தூரமிருக்கிறது பேபி...' என்றவன் மனதில் அதற்கு அதிக நாள் தேவையில்லை என்றே தோன்றியது...

இருவரும் அலுவலகம் கிளம்பும் போது ரிச்சர்ட்டின் அலைப்பேசியில் அவளின் அன்னை அவளை

அழைத்தார்... வேறுவழியின்றி, மறுக்க வழியில்லாது அவள் அதை உயிர்ப்பித்துப் பேசினாள்...

"உன் ஃபோன் என்னவானது மது...?"

"அம்மா... அது வந்து..." அவள் திக்கி திணற...

"சார்ஜ் போட மறந்துட்டியா...?"

"ஆமா, ஆமா..."

"நல்ல பொண்ணு போ... அப்பா சொன்ன இடத்தில் தானே தங்கியிருக்க... பாதுகாப்புக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லையே... பார்த்து பத்திரமா இரு..."

அன்னை கூற, கூற அவளுக்குக் கண்ணீர் வந்தது... எல்லாவற்றிற்கும் உம், உம்மென்று கூறியவள் அலைப்பேசியை அணைத்தாள்... அடுத்த நொடி ரிச்சர்ட்டின் கரம் அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டது...

"சியர் அப் பேபி... அம்மான்னா அப்படித் தான் கேள்வி கேட்பாங்க... நாளைக்கு நீயும் நம்ம குழந்தைங்க கிட்ட இப்படித் தான் கேள்வி கேட்பாய்... அப்போ நான் தான் நம்ம குழந்தைகளுக்குச் சப்போர்ட் பண்ணணும்... உங்கம்மா கேட்கும் கேள்விக்கு என்னாலேயே பதில் சொல்ல முடியாது... சோ என்னைப் போல் நீங்களும் அமைதியா போயிருங்கன்னு..." என்று அவன் கேலி செய்து அவளது மனதினை மாற்ற முயன்றான்...

அவனது வார்த்தையில் அவள் சந்தோசத்தில் பேச்சிழந்து போய் நின்றாள்... பெற்ற தந்தையிடம் இருந்து அவளைக் காப்பாற்ற நினைத்தவன், அவளும் அவனும் மனமொத்து வாழ போகும் வாழ்க்கையைப் பற்றிக் கற்பனையில் வாழ்பவனின் காதல் எப்படிப் பொய்த்து போக முடியும்...? அன்று எதுவும் நடந்திருக்காது... ரிச்சர்ட் தன்னிடம் இருந்து எதையோ மறைக்கிறான் என்பதை அவள் நன்கு உணர்ந்து கொண்டாள்...

ஆனால் அடுத்த நொடி அவளது முகம் புஸ்ஸென்று சுருங்கி போனது... பிறகு ஏன் தந்தையிடம் அப்படி மிரட்டலாய் பேசி அவளை அழைத்துக் கொண்டு வந்தான்... அது ஒன்று தான் அவளுக்குப் புரியவில்லை... அப்போது அவன் கூறிய வார்த்தைகள் ஒன்றும் சாதாரண வார்த்தைகள் அல்லவே... அந்த வார்த்தைகள் இப்போதும் அவளது மனதினை குத்தீட்டியாய் குத்தி கிழிக்கிறதே... உதிரம் வடியும் மனதோடு நெஞ்சம் கனக்க அவனைப் பார்த்து,

"போகலாமா ரிச்சி..." என்க...

"என்ன பிரச்சினை உனக்கு...? ஏன் முகம் சரியில்லை...?" என்று அவன் விடாப்பிடியாய் கேட்க...

"ஏன் ரிச்சி, நீ அப்பா கிட்ட அது மாதிரி பேசின...? மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு... நான் அந்த மாதிரி பொண்ணா...?"

"லூசு பேபி... இதற்குத் தானா இத்தனை வருத்தம்... இங்கு வந்த அன்னைக்கே இதற்கு நான் பதில் சொல்லிட்டேனே... என்னைத் தவிர வேறு யார் கூடவும் நீ இப்படி நடந்து கொள்ள மாட்டாய்ன்னு... உன் அப்பா மாதிரியான ஆளுங்க கிட்ட அப்படிப் பேசாமல் வேறு எப்படிப் பேசுவது...? உங்க மகளை நான் என்னுடன் கூட்டிட்டு போகவான்னு அவரிடம் அனுமதி கேட்க சொல்றியா...? அப்படியே உங்கப்பா என் மகளை உன்னுடன் கூட்டிட்டு போன்னு விட்டுருவாரா என்ன...? இரண்டுமே சாத்தியம் இல்லை... அதனால் தான் அவரது வழியில் போய் அவரது வாயை அடைத்தேன்... நான் பேசிய வார்த்தைகள் தப்பு தான்... என்னை மன்னிச்சிக்கோ... ஐயம் சாரி... ஆனால் என் நோக்கம் நீ தான்... உன்னைக் காப்பாத்தணும் என்பது மட்டுமே..."

எதற்காக அவன் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அவள் அவனிடத்தில் கேட்க மறந்து போய் அவனது காதலில் உருகி போய் நின்றிருந்தாள்...

"ரிச்சி..."

"நான் உன்னைத் தப்பா சொல்வேனா பேபி... இந்த ஊர், உலகமே என் அம்மாவை தப்பா சொன்னப்போ நான் எங்கம்மாவை முழுமையாய் நம்பியவன், நேசித்தவன்... அப்படிப்பட்ட நான் உன்னைத் தவறாகப் பேசுவேனா...?" என்று அவன் கூறிய போது அவள் இன்னமும் உருகி விட்டாள்...

"ரிச்சி..." என்று அவள் அழுகையுடன் அவனை அணைத்து கொண்டாள்...

"இனி உன் கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வடிய கூடாது... இனி நீ எப்போதும் சிரிச்சிக்கிட்டே இருக்கணும்... உன்னோட நல்லது, கெட்டது எல்லாவற்றிலும் உன் ரிச்சி உனக்குத் துணை இருப்பான்..." என்று கூறியவனை ஏறிட்டு பார்த்தவளின் முகம் எல்லையில்லா வேதனையைப் பிரதிபலித்தது... சட்டென்று முகபாவனையை மாற்றிக் கொண்டவள் அவனைக் கண்டு புன்னகைத்தாள்...

அவளது முகபாவனையை அவன் கவனித்துக் கொண்டு தான் இருந்தான்... ஆனால் என்னவென்று அவன் கேட்கவில்லை... அவனுக்குத் தன் மீது நம்பிக்கை இருந்தது... அவனைத் தாண்டி தான் எந்தவொரு ஆபத்தும் அவளை நெருங்க முடியும்... அதனால் தான் அவன் தைரியமாக இருந்தான்... ஒருவேளை அவன் அப்பொழுதே அதைப் பற்றிக் கேட்டிருந்தால் வர போகும் விபரீதத்தைத் தடுத்து இருக்கலாமோ...

மனிதன் ஒரு கணக்கு போட்டான் என்றால், காலம் வேறு ஒரு கணக்கு போட்டுக் காத்திருந்தது...

*****************

காலையில் செந்தில்நாதன் டெல்லி கிளம்புவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்... மீனாட்சி அவருடன் இருந்து உதவி செய்து கொண்டிருந்தார்... அந்நேரம் வேலை செய்யும் பெண் அங்கு வந்து

காவல்துறை அதிகாரி வந்திருப்பதாக அறிவித்து விட்டு செல்ல...

செந்தில்நாதன் குழப்பத்துடன் வெளியில் செல்ல, மீனாட்சியும் அவரைப் பின்தொடர்ந்தார்...

காக்கி உடுப்பில் மாநகரத் துணை ஆணையர் மூர்த்தி விறைப்புடன் அமர்ந்திருந்தார்... உடன் சில காவலர்கள் வேறு...

"வாங்க தம்பி... எப்படி இருக்கீங்க...? வீட்டம்மா சௌக்கியமா...? என்ன சாப்பிடறீங்க...?" என்று அன்போடு கேட்ட மீனாட்சியைப் பார்த்த மூர்த்திக்கு வருத்தமாக இருந்தது... இந்த அன்பான பெண்மணிக்கு அரக்கன் உருவில் கணவனா என்று...

"நான் அஃபிசியலா வந்திருக்கேன் மேடம்..." என்று விறைப்புடன் கூறியவர்,

"நீங்க உள்ளே போறீங்களா மேடம்...? நான் சார் கிட்ட தனியா என்கொயரி பண்ணணும்...?" என்று அவர் கூற... மீனாட்சி குழப்பமான முகத்துடன் கணவனைப் பார்த்தபடி உள்ளே சென்றார்...

அவர் உள்ளே சென்றதும் மூர்த்தி மிடுக்குடன் செந்தில்நாதனை பார்த்தார்... அவரோ ஊடுருவும் பார்வையுடன் மூர்த்தியை பார்த்திருந்தார்...

"அந்தக் காலேஜ் உங்களோடதுன்னு சொல்றாங்களே உண்மையா, மிஸ்டர். செந்தில்நாதன்...?"

"நினைச்சேன்... இப்படிக் கேள்வி கேட்க சொல்லி உங்க ஹையர் ஆபிசர் சொல்லி அனுப்பிச்சாரா...?" விஜயை மனதில் வைத்துக் கொண்டு கடுப்புடன் கேட்டார் அவர்...

"கேட்கிறதுக்கு மட்டும் பதில் சொன்னால் நல்லது..." என்றார் மூர்த்தி அமர்த்தலான குரலில்...

"என்னோடது இல்லை..." என்று அவர் மறுக்க...

"ஆனால் உங்க நண்பர் வேறு ஒரு கதை சொல்கிறாரே மிஸ்டர்..." என்று நக்கலாய் கூறியவர்,

"காலேஜில் நடந்த அத்தனை குற்றங்களுக்கும் நீங்க தான் சூத்திரதாரின்னு..."

"அதற்கு என்ன ஆதாரம்...?" என்று கேட்டார் செந்தில்நாதன் சிறிதும் தெனாவெட்டு குறையாதவராய்...

"ஆதாரங்கள் இருக்கப் போய்த் தான் நான் விசாரணைக்கு வந்திருக்கிறேன்..." என்றவர்,

"இது வெறும் விசாரணை தான்... ஒத்துழைப்புக் கொடுத்தால் நன்றாக இருக்கும்... ஒத்துழைக்க மறுத்தால் கைது செய்து எங்களது விசாரணையைத் தொடர நேரிடும்..."

மூர்த்தியின் கறார் குரலில் செந்தில்நாதன் பெட்டி பாம்பாய் அடங்கி விட்டார்... வெறும் விசாரணை தானே... தானே முன்வந்து ஏன் குற்றவாளி மாதிரி காட்டி கொள்ள வேண்டும் என்று எண்ணியவராய் மூர்த்திக் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதிலளிக்கத் துவங்கினார்... மூர்த்தியின் முக்கால்வாசி கேள்விகளுக்கு அவரிடத்தில் பதில் இல்லை...

"ஒத்துழைப்பு கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி சார்... தேவைப்பட்டால் நாங்க மீண்டும் வருவோம்..." என்று விடைப்பெற்று சென்ற மூர்த்தியை பார்த்த செந்தில்நாதனுக்கு ஆத்திரமாக வந்தது... இதற்கு என்ன தீர்வு என்று யோசிக்க ஆரம்பித்தார்... ஏனெனில் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே...

*********************

அன்றிரவு, "ரிச்சி..." என்றழைத்தபடி ரிச்சர்ட்டின் அறைக்குள் கதவை கூடத் தட்டாது உள்ளே நுழைந்தாள் மதுரகவி...

அப்போது தான் குளித்து முடித்து ஷார்ட்ஸுடன் வெளியில் வந்தவனின் வெற்று மார்பு கண்டு லஜ்ஜையுற்றவளாய் திரும்பி நின்று கொண்டவள்,

"சாரி ரிச்சி..." என்க...

"எதுக்கு...?" என்றான் அவன் புரியாதவனாக...

"முதலில் நீ சர்ட்டை போடு ரிச்சி..."

சங்கோஜத்துடன் ஒலித்த அவளது குரலில் அவள் முன் வந்து நின்றவன், தன் கையிலிருந்த துண்டை எடுத்து அவளது இடையைச் சுற்றி போட்டு அவளை அருகில் இழுத்து அவளது முகம் நோக்கி குனிந்து,

"ஏன்...?" என்று விசமத்துடன் கேட்க...

"அச்சோ போ ரிச்சி... உனக்கு வெட்கம் இல்லை... ஆனால் எனக்கு வெட்கமாக இருக்கிறது..." என்றவள் அவனது பிடியில் இருந்து நழுவி ஓடி வந்து பால்கனியில் அடைக்கலமானாள்...

ரிச்சர்ட் சிரித்தபடி டீசர்ட்டை எடுத்து போட்டுக் கொண்டு அவளைத் தேடி வந்தான்... ஊஞ்சலில் அமர்ந்திருந்தவளின் அருகில் வந்தமர்ந்தவன்,

"இப்போ உனது வெட்கம் போய் விட்டதா...?" என்று கேட்க...

"ம்... ம்..." என்று கூறியவள் அவனது முகம் பார்க்க முடியாது நாணத்தில் தலை கவிழ்ந்தாள்...

அவனோ அவளது வெட்கத்தினை ரசித்தபடி கைகளைக் கட்டி கொண்டு அமர்ந்திருந்தான்... திடுமென அவனை நிமிர்ந்து பார்த்தவள் அந்த வார்த்தைகளைக் கூறினாள்...

"நானே விரும்பி கேட்கிறேன்... நானே உன் மேல் ஆசைப்பட்டுத் தேடி வந்திருக்கிறேன்... நீயும், நானும் நமக்கான வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கலாமா ரிச்சி...? எனக்கு இதில் முழுச் சம்மதமே..." என்றவளின் கை தானாக அவன் முன் நீண்டது... கிடைத்த வாய்ப்பை நழுவ விடாது

அவனது கரம் அவளது கரத்தினைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டது...!!!

மாயமாகும்...!!!

"கயலு... படிச்சது போதும்... போய்த் தூங்கு கண்ணு..."

நள்ளிரவு பன்னிரெண்டு மணி வரை படித்துக் கொண்டிருந்த மகள் கயல்விழியைப் படுக்கப் போகச் சொன்னாள் முத்துபேச்சி...

"இன்னும் கொஞ்சம் நேரம் தான்ம்மா..."

பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு நெருங்குவதால் கயல்விழி சிரத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தாள்... மகள் அப்படிக் கூறியதும் அவளைத் தொந்திரவு செய்ய விருப்பம் இல்லாது, படிக்கச் சொல்லி விட்டு மகனிடம் வந்தாள்... அவ்வளவு நேரம் அலைப்பேசியில் விளையாண்டு விட்டு இப்போது தான் அவன் படுத்தான்... கேட்டால் நாளை விடுமுறை என்று சமாளிப்பு வேறு... உருவத்தில் மட்டுமல்லாது, குணத்திலும் கணவனைக் கொண்டு இருக்கும் அவனைக் கடிய அவளுக்கு மனம் வருவது இல்லை...

சிறிது நேரத்தில் விஜய் அங்கு வந்து சேர்ந்தான்... தந்தையைக் கண்டதும் புன்னகைத்து அவனை வரவேற்ற கயல்விழி, அவனிடம் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு அதன் பின்னரே தூங்க சென்றாள்... விஜய் குளித்து, சாப்பிட்டு முடிக்கும் வரை பொறுமை காத்த முத்துபேச்சி அதன் பின்னரே பேச்சை துவங்கினாள்...

"விஜூ..." மனைவியின் அந்தச் செல்ல அழைப்பில் கணவனது விழிகளில் அப்பட்டமாய் மயக்கம் தெரிந்தது...

"சொல்லு கண்ணம்மா..." என்று அவன் அவள் புறமாய் நன்கு சரிந்தமர...

"சீரியஸ் மேட்டர் விஜூ... நேரா உட்கார்ந்து கேளு..." அவளது கண்டிப்புக் குரலில் அவன் நேராக அமர்ந்து கொண்டு,

"என்ன விசயம் சொல்லு பேச்சி...?"

"செந்தில்நாதனை மாட்ட வைக்க வசமாய் ஒரு விசயம் சிக்கியிருக்கு..." என்றவளை அமைதியாய் அவன் பார்த்தான்... அவனிடம் சிக்கியிருக்கும் விசயங்களும் பெரியளவு தான்... அதனால் வந்த அமைதி இது...

"எவ்வளவு பெரிய விசயம் சொல்லியிருக்கேன்... நீ என்னடான்னா இப்படிப் புத்தர் மாதிரி பார்க்கிற..." அவள் கேட்ட பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"ஒண்ணும் இல்லை... நீ மேலே சொல்லு..."

"அவன் தன்னோட பொண்ணு மதுவுக்குக் கம்ப்யூட்டர் கம்பெனி ஆரம்பிக்கிறதுக்காக ஏக்கர் கணக்கில் நிலங்களை, அதுவும் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிச்சு இருக்கான்... இப்போது தான் அது ஆதாரத்தோடு என் கையில் சிக்கி இருக்கிறது... இந்த ஒரு விசயம் போதாதா, அவன் மீது நடவடிக்கை எடுக்க...?"

விஜய் யோசித்தவனாய், "நிச்சயம் உன்னோடது நல்ல ஆரம்பமா இருக்கும்... அதன் பின்னர் நான் அவனைத் தொடர்ச்சியா மடக்கிறது ரொம்ப ஈசி... ஆனால் இதில் மது சம்பந்தப்பட்டு இருப்பதால் கொஞ்சம் பார்த்து செய் கண்ணம்மா... பாவம் அந்தப் பொண்ணு..."

"ம்... அது தான் எனக்கும் யோசனையா இருக்குது..."

"என் மேல் நம்பிக்கை இருந்தால் நான் சொல்லும் வரை நீ அவன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது..."

"போ விஜூ... உன் மேல் நம்பிக்கை இல்லாமலா என் வாழ்க்கையை உன்னிடம் கொடுத்து இருக்கேன்..." என்று அவள் கோபம் போல் முறுக்கி கொள்ள...

"ஆமாம், ஆமாம்... பெரிய நம்பிக்கை வச்சிருந்த... போடி அங்கிட்டு... என் மேல் நம்பிக்கை இருந்திருந்தால் நமக்குள் நடந்த உறவை என்னிடம் சொல்லியிருப்ப... இல்லை மகள் உண்டான போதாவது என்னிடம் சொல்லியிருக்கலாம்... இது எதையும் சொல்லாது என்னை விட்டு விலகத் துடித்தவள் தானே நீ..."

அவனது இந்த மனக்காயம் என்றும் ஆறாது... அந்தளவிற்கு அவனது மனம் வேதனை அடைந்திருந்தது, அவளது செயலில்... தன்னவள் தன்னை நம்பவில்லையே என்று...

"எல்லாம் உனக்காகத் தான் விஜூ... உன் குடும்பம் மீது உனக்கு இருந்த பாசம்... அவங்களுக்காகத் தான் நான் உன்னை விட்டு விலகி போனேன்..." என்றவள்,

"ப்ச்... இப்போ எதுக்குப் பழசை பேசிக்கிட்டு... இன்னைக்கு உனக்கு ட்ரீட் தரலாம்ன்னு நினைச்சிருந்தேன்... இப்போ நீ கோபமா இருக்க... அதனால் பரவாயில்லை, வேறு ஒரு நாள் தர்றேன்..." என்றவள் பிள்ளைகளின் அறை நோக்கி செல்ல...

அவன் விரைந்து வந்து அவளைப் பின்னால் இருந்து தூக்கியவன், "கோபம் எல்லாம் ட்ரீட்க்கு கிடையாது கண்ணம்மா... என் கண்ணம்மாவிடம் நான் கோபம் கொள்ள முடியுமா...? அதுவும் இந்த மாதிரி நேரத்தில்..." என்று குறும்பாய் கண்சிமிட்டி சிரித்த கணவனைக் கண்டு அவள் வாய் விட்டு நகைக்க...

"உன் மகன் எழுந்திருக்கப் போறான்டி... எனக்கு வில்லன் வெளியில் இல்லை... வீட்டில் தான்..." என்றவன் அவளை அவசரமாகத் தங்களது அறைக்குத் தூக்கி சென்று அறை கதவை கைகளால் மூடியது போல் அவளது வாயையும் மூடினான், தனது இதழ் கொண்டு...

மறுநாள் விஜய் மனைவி கூறிய விசயத்தை அப்படியே ரிச்சர்ட்டிடம் கூறி இதற்கு என்ன செய்வது என்று ஆலோசனை கேட்டான்... அதைப் பற்றிச் சற்று சிந்தித்த ரிச்சர்ட்,

"நான் செந்தில்நாதனிடம் பேசிவிட்டு இதற்கு ஒரு முடிவை கூறுகிறேன்... அது போல் எந்தக் காரணம் கொண்டும் மதுவின் பெயர் வெளியில் வர கூடாது... என் கம்பெனி பெயர் வந்தால் கூடப் பரவாயில்லை... அதை எப்படிச் சமாளிப்பது என்று எனக்குத் தெரியும்... அதுவரை இந்த

விசயத்தை ஆற போடுங்கள்..." என்று அவன் கேட்டு கொண்டதன் பேரில் விஜய் அமைதி காத்தான்...

அடுத்தக் கணம் ரிச்சர்ட் செந்தில்நாதனுக்கு அழைப்பு விடுவித்தான்... அதற்காகவே அவர் காத்திருந்தார் போன்று உடனே அவனது அழைப்பை எடுத்து பேசினார்...

"என்ன முடிவு எடுத்திருக்கிற ரிச்சர்ட்...?"

மகளின் நலன் மீது அக்கறை கொள்ளாது அவரது காரியத்தில் கண்ணாய் இருந்த செந்தில்நாதனை கண்டு அவனுள் ஆத்திரம் எழுந்தது... ஆனால் இது ஆத்திரம் காட்ட வேண்டிய நேரம் இல்லையே... அறிவை தீட்ட வேண்டிய நேரம் என்பதால் அவன் அமைதியாகப் பேச முயன்றான்...

"உங்களுக்குச் சாதகமான முடிவு தான்..."

அவன் கூறியது கேட்டு அவர் அகமகிழ்ந்து போனார்... பெரிய பிரச்சினையில் இருந்து தப்பித்து விட்டது போல் அத்தனை நிம்மதியாய் இருந்தது அவருக்கு...

"ரொம்பச் சந்தோசம்... ஒப்பந்தம் போடுவதற்கு நீங்க எப்போ இங்கே வர போறீங்க...?" சந்தோசத்தில் அவரது பேச்சில் மரியாதை திரும்பி இருப்பதை உணர்ந்து அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

"என்னால் அங்கே எல்லாம் வர முடியாது... நீங்க லீகல் ஃபார்மாலிட்டீஸ் முடித்து விட்டுப் பேப்பர்சை எனக்கு அனுப்பி வைங்க... நான் கையெழுத்து போட்டு தருகிறேன்..."

"ம்ஹூம், அது சரி வராது..." என்று அவர் உறுதியாய் மறுத்தார்... அவன் அவரை ஏமாற்றி விட்டால்...?

"அப்படி என்றால் நீங்க இங்கே வாங்க..."

"நீ எங்கே இருக்கிறாய்...?"

"உங்க மகளை என்னுடன் கூட்டி கொண்டு வந்திருக்கிறேன்... இன்னமும் நான் இருக்கும் இடத்தைப்

பற்றி அறிந்து கொள்ள நீங்க விரும்பவில்லையா...? அதிசயமாக இருக்கிறது..."

இதற்கு என்னவென்று அவர் பதில் கூறுவார்... தனது மனதின் எண்ணத்தைச் சொல்லாது அவர் மறைத்து விட, அதை அறிந்தவனாய் மறுபுறம் இருந்த ரிச்சர்ட்டின் முகம் கடினமானது...

"நான் இங்கே மும்பையில் தான் இருக்கிறேன்... நீங்க வருவதாக இருந்தால் இங்கே வாங்க..."

"ஓ..." என்றார் அவர் யோசனையுடன்... அவரது குள்ளநரி மூளை குறுக்கு வழியில் போவதை அறிந்தவனாய் ரிச்சர்ட் ஒரு முடிவு எடுத்தவனாய் அலைப்பேசியை அணைத்தான்...

நேரே தனது காதலியின் முன் வந்து நின்றான் ரிச்சர்ட்... அன்று ஞாயிறு என்பதால் மதுரகவி அவளது கைவண்ணத்தைச் சமையலில் காட்டிட எண்ணி காலை உணவிற்காக இட்லி, சாம்பார் செய்து கொண்டிருந்தாள்... தென்னிந்திய உணவான இட்லி எனப்படும் 'சாஃப்ட் ரைஸ் கேக்'கிற்கு ரிச்சர்ட் என்றும் அடிமை... அதுவும் காரம் குறைவாய், வெல்லத்தின் இனிப்பு சுவையோடு, நெய் மிதக்கும் சாம்பாரில் இட்லியை மூழ்கடித்து உண்பது என்றால் அவனுக்கு மிகவும் பிடிக்கும்...

சாம்பார் வைப்பதற்காகக் குக்கரில் காய்கறிகளை வதக்கி கொண்டிருந்தவளின் பின்புறமாய் வந்து நின்று அவளை அணைத்தவன் அவளது தோள் வளைவில் நாடி பதித்து அவள் காய்கறியை வதக்கும் அழகினை ரசித்தபடி,

"இன்னும் ஒரு ஒன் அவர் தான் உனக்கு டைம் பேபி... நீ ரெடியாகி என் கூட வர்ற..."

"எங்கே ரிச்சி...?" அவனது அருகாமையை உள்ளுக்குள் ரசித்தபடி அவள் கேட்க,

"அது சஸ்பென்ஸ்..." என்று கண்சிமிட்டியவனைப் போலியாக முறைத்தபடி காய்கறி கலவையில் புளி

கரைசல் ஊற்றி பருப்பு சேர்த்து, காரம் உப்பு சரி பார்த்து குக்கரை மூடி வைத்து விட்டு அவன் புறம் திரும்பியவள்,

"ஆனாலும் நீ ரொம்பச் சஸ்பென்ஸ் வைக்கிற ரிச்சி..." என்று சிணுங்கியவளின் சிணுங்கலின் அர்த்தம் புரிந்தவனாய் அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

நேற்று நிகழ்ந்த நிகழ்வு அவளுள் இன்னமும் பசுமையாய்... அவளே விரும்பி தன்னை எடுத்து கொள் என்றதும், நீட்டிய அவளது கையை அழுத்தமாய்ப் பிடித்தவன் அவளை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டான்... அதற்கு மேல் அவனது கைகள் முன்னேறவில்லை...

"ரிச்சி..." என்று அவள் அவனை அழைத்த போது, எங்கோ வெறித்துக் கொண்டிருந்த தனது பார்வையை அவள் பக்கமாய்த் தாழ்த்தியவன்,

"என்ன பேபி...?"

"நான் உனக்கு வேண்டாமா...?"

"வேண்டும் தான்..."

"அப்போ ஏன்...?" பாவையவளாய் வெளிப்படையாய் அதைப் பற்றி அவனிடத்தில் கேட்க முடியவில்லை...

"அதற்கு என்று ஒரு நேரமிருக்கிறது பேபி... அந்த நேரம் இதுவல்ல..." புன்னகையுடன் கூறியவனை வியப்பாய் பார்த்தவள் பின் மெதுவே,

"ரிச்சி... அன்னைக்கு... நமக்குள்..." என்று நிறுத்தி விட்டு அவள் அவனைத் தயக்கமாய்ப் பார்த்தாள்...

"நமக்குள்...?" அவன் புரியாது அவளைப் பார்க்க...

"நமக்குள் எதுவும் நடந்ததா...? அதாவது சம்திங், சம்திங்..."

அவள் கேட்ட தினுசில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... முயன்று அதை அடக்கியபடி,

"இதுக்கான பதிலை நமக்குள் சம்திங் சம்திங் நடக்கும் போது சொல்கிறேன்... இப்போது இல்லை..." என்று கூறியவன் அவளைத் தனது மடியில் படுக்க வைத்துக் கொண்டான்...

அவன் வேறு கதைகள் பேசி அவளது மனதினை திருப்ப, அவளும் தனது மனதினை அவனது பேச்சில் திருப்பியவள் சிறிது நேரத்தில் நிம்மதியாய் உறங்கி போனாள்... குனிந்து அவளைப் பார்த்தவனின் முகத்தில் புன்னகையின் சாயல்... குழந்தைத்தனம் மாறாது இருக்கும் தன்னவளை கண்டு அவனது முகம் கனிந்தது...

"என்ன நின்னுக்கிட்டே தூக்கமா...?" ரிச்சர்ட் கேட்டதும் மதுரகவி நேற்றைய நினைவு கலைந்து அவனைப் பார்த்தாள்...

அவனோ சாம்பாரை தாளிதம் செய்து பாத்திரத்தில் ஊற்றி, இட்லி பாத்திரத்துடன் சேர்த்து உணவு மேசை மீது வைத்து விட்டு, சமையலறையையும் சுத்தம் செய்து முடித்திருந்தான்...

"ப்ச்... நான் செய்திருப்பேனே ரிச்சி..." என்று அவள் சலித்துக் கொள்ள...

"யார் செய்தால் என்ன...? வேலை முடிந்தால் சரி..." என்று அவன் கூற...

பிறந்த மழலை போன்று சிவந்திருந்த அவனது கரங்களைத் தனது கரங்களால் பிடித்தவள், "நேத்து நைட் சமையல் செய்யும் போது லேசாகக் கடுகு வெடித்து உன் கையில் பட்டதற்கே உன்னால் எரிச்சல் தாங்க முடியவில்லை... ரொம்பக் கஷ்டப்பட்ட ரிச்சி... இனிமேல் இது எல்லாம் நீ செய்யக் கூடாது... நான் மட்டும் தான் செய்வேன்... என்ன புரிந்ததா...?" என்று அவன் மீதான தனது அக்கறையையும் மிரட்டலாய் கூறியவளை கண்டு அவன் பேச்சற்று போனவனாய் மௌனமாய்த் தலையசைத்தான்...

தாயை போல் பாசம் காட்டிய காதலியை கண்டு அவனது மனம் நெகிழ்ந்து போனது...

"இப்படியே என்னைப் பார்த்துக் கொண்டு இருந்தால் ஒரு மணி நேரம் என்ன, மூன்று மணி நேரம் கழித்துக் கூட நம்மால் கிளம்ப முடியாது..." கைகளைக் கட்டி கொண்டு தலையைச் சாய்த்து புன்னகையுடன் கூறியவளை கண்டு சிரித்தவன்,

"என்னுடன் வா..." என்று கூறியபடி அவளது அறை நோக்கி நடந்தான்...

"ரிச்சி... நான் குளிக்கப் போகிறேன்... நீ உன்னோட ரூமுக்கு போ..." என்று அவன் முன் வந்து வழிமறித்தார் போன்று நின்று கொண்டு அவள் கூற...

"நான் உன் ரூமுக்கு வராமல் எப்படிச் சம்திங், சம்திங் நடக்குமாம்..." என்று நமட்டு சிரிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் 'ஙே'வென விழித்தாள்...

"பயப்படாதே... என்னுடன் வா..." என்று அவளை அழைத்துக் கொண்டு அவளது அறைக்குள் நுழைந்தவன் அங்கிருந்த அலமாரியை திறந்து அவள் உடுத்துவதற்குத் தேவையான புடவையைக் கண்களால் அலச ஆரம்பித்தான்...

அவளோ கட்டிலில் அமர்ந்து கால் மேல் கால் போட்டபடி அவனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்... இறுதியாய் அவன் தங்க சரிகை இழையோடிய வெண்பட்டு புடவையைத் தேர்ந்தெடுத்து அவள் முன் நீட்டியவன்,

"இதை உடுத்தி கொண்டு தயாராகு..." என்க...

"ம்... சரி..." எதிர் கேள்வி கேட்காது சம்மதம் சொன்னவளை கண்டு அவனது புன்னகை விரிந்தது...

அதே சந்தோசத்துடன் தனது அறைக்கு வந்தவன் குளித்துத் தயாராகி அடுத்தப் பத்து நிமிடத்தில் வெளியில் வந்தான்... அவன் வந்த போது மதுரகவி இன்னமும் வந்திருக்கவில்லை... அதனால் உணவு மேசைக்கு

வந்தவன் இட்லியை சிறு துண்டுகளாக வெட்டி இரு கிண்ணத்தில் போட்டு வைத்து விட்டு அவளுக்காகக் காத்திருந்தான்... அவள் வந்த பின்னர் அதன் மீது சாம்பார் ஊற்றி கொள்ளலாம் என்று எண்ணி அதை மட்டும் அவன் செய்யவில்லை...

சில நிமிடங்கள் தாமதத்திற்குப் பின் மதுரகவி அவனின் முன் அழகு தேவதையாய் தரிசனம் அளித்தாள்... வெண்பட்டு உடுத்தி அதற்கு ஏற்றார் போல் தங்க ஜிமிக்கி அணிந்து, கழுத்தில் நீண்ட தங்க ஆரம், கைகளில் தங்க வளையல்கள் என்று காண்பதற்கு அப்சரஸ் போலிருந்தாள் அவள்...

"வாவ் பேபி..." வியப்பை விரிந்த விழிகளில் காட்டியபடி எழுந்தவன் வேகமாய் அவள் அருகில் வந்தான்...

"ரொம்ப அழகாயிருக்கப் பேபி..." என்று மையலுடன் கூறியவனை மேலும் கீழுமாய்ப் பார்த்தவளின் விழிகளிலும் அவனுக்குக் குறையாத மயக்கம் தோன்றியது...

அவளது புடவைக்குப் பொருத்தமாய் வெளிர் பழுப்பு நிற சட்டையும், அடர் பழுப்பு வண்ண பேண்ட்டும் அணிந்து ஆணழகனாய் கம்பீரமாய் நின்றிருந்தவனின் அழகு, 'இவன் என்னவன்' என்று அவளைக் கர்வம் கொள்ள வைத்தது...

"நீயும் தான் ரிச்சி..." என்று கிசுகிசுப்பாய் ஒலித்த அவளது குரலில் அவன் மேலும் கிறங்கி தான் போனான்... தன்னை முயன்று சமாளித்துக் கொண்டு,

"சாப்பிட்டு விட்டு கிளம்பலாம்..." என்று அவன் கூற... அவள் உணவு மேசையை நோக்கி நடந்தாள்...

இருவரும் உண்டு விட்டு கிளம்பினர்... மதுரகவிக்கோ சஸ்பென்ஸ் தாங்கவில்லை... எங்கே, எங்கே என்று கேட்டு அவனை நச்சரிக்க ஆரம்பித்தாள்... அவனோ மர்ம புன்னகையுடன் அவளைப் பார்த்த போதும் பதில்

கூறவில்லை... ஒரு கட்டத்தில் அவளே சலித்துப் போய் அதைக் கேட்காது விட்டு விட்டாள்...

ரிச்சர்ட் காரை கொண்டு வந்து நிறுத்திய இடம் ஒரு தேவாலயம்... கடற்கரை ஓரமாய் அழகுற அமைந்திருந்த அந்தத் தேவலாயத்தின் எழில் மிகு அழகில் மனதை பறிகொடுத்தவளாய் மதுரகவி நின்றிருந்தாள்...

"வா பேபி..." என்று ரிச்சர்ட் அவளை நோக்கி தனது கையை நீட்டினான்...

"சன்டே என்பதால் சர்ச்சுக்கு வந்திருக்கிறியா ரிச்சி..." என்று கேட்டபடி அவள் உற்சாகமாய் அவனது கையைப் பற்றிக் கொண்டாள்... அவன் ஒன்றும் பேசாது அவளை அழைத்துச் சென்றான்...

தேவாலயம் அருகே சென்ற போது தான் தெரிந்தது... உள்ளே திருமணம் நடப்பது... அதனால் இருவரும் வெளியில் காத்திருந்தனர்... அந்தச் சமயம் மதுரகவியின் விழிகள் அந்தத் திருமணத்தை ஏக்கத்துடன் பார்த்தது... அதை ரிச்சர்ட் வேதனையுடன் பார்த்திருந்தான்...

"பேபி..." என்றழைத்தபடி அவன் அவளது தோள் மீது ஆதரவாய் கை வைக்க...

"என்ன ரிச்சி...?"

"ஏன் உன் கண்கள் இரண்டும் கலங்குகிறது...?"

"என் வாழ்க்கையில் கல்யாணம் எல்லாம் நடக்குமான்னு நினைச்சு பார்த்தேன்..."

"ஏன் நடக்காது...?"

"அது எப்படி நடக்கும் ரிச்சி...?" என்று வேகமாய் மறுத்து கூற வந்தவள் பின் எதையோ நினைத்து அமைதியாகி போனாள்...

"நீ என்னைக் காதலிக்கிற... நான் உன்னைக் காதலிக்கிறேன்... காதலிக்கிற நாம ரெண்டு பேரும்

கல்யாணம் பண்ணி கொள்வதில் என்ன தவறு இருக்கிறது...?"

"நம் காதலே தவறு தான் ரிச்சி..." என்று துயரத்துடன் கூறியவளை கண்டு அவனுக்கு ஆற்றாமையாக இருந்த போதும் பதில் பேசவில்லை... வெறும் பேச்சில் அல்லாது செயலில் காட்டிட நினைத்தான் அந்த நல்ல காதலன்...

திருமணம் முடிந்து எல்லோரும் சென்றதும் தேவாலயம் வெறிச்சோடி காணப்பட்டது... அதன் பின்னரே ரிச்சர்ட் மதுரகவியை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்... ஆண்டவர் சொரூபம் முன் அவளைக் கொண்டு வந்து நிறுத்தியவன் அவளது விழிகளுக்குள் தனது விழிகளைக் கலந்தவாறு,

"கடவுள் சாட்சியாய் உன்னைத் திருமணம் செய்து கொள்ள நான் விரும்புகிறேன் பேபி... என்னைத் திருமணம் செய்து கொள்ள உனக்குச் சம்மதமா...?"

காதலனின் வார்த்தையில் முதலில் முகம் மலர்ந்தவள் பின் பேயறைந்தார் போன்று பின்னால் நகர முயன்றாள்... அவனோ அவளை நகர விடாது பிடித்துக் கொண்டு,

"பதில் சொல் பேபி...?" என்று கேட்டவனுக்கு அவள் மௌனத்தைப் பதிலாகக் கொடுத்தாள்... அவளது விழிகள் இரண்டும் அச்சத்தைப் பிரதிபலித்தது...

"பேபி... நான் என் வாழ்க்கையில் ஆசைப்பட்டது ஒண்ணே ஒண்ணு தான்... அது நீ மட்டும் தான்... எனக்கு நீ வேண்டும் பேபி... அதுவும் என் மனைவியாய்..."

கண்களில் காதல் வழிய கேட்டவனின் காதலை மறுக்க அந்தக் காதலியால் முடியவில்லை... வாழ்வது கொஞ்ச காலம்... அதில் அவனையாவது சந்தோசமாய் வைத்திருப்போம் என்று எண்ணியவளாய் விழிகளில் ஆனந்த கண்ணீர் மல்க ஆனந்தமாய்ச் சம்மதித்தாள்...

ரிச்சர்ட் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து இரு மோதிர பெட்டியை எடுத்தான்...

"இது எப்போ வாங்கின ரிச்சி...?" ஆச்சிரியமாய் விழி மலர்த்தியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அன்னைக்கு உனக்குப் புடவை, ஜூவெல்ஸ் வாங்கும் போது வாங்கினேன்..." என்று கூறியவன் அவளுக்கான மோதிரத்தை எடுத்து அவளது வலது கையைப் பற்றி அவளது வெண்டை பிஞ்சு விரலில் மெல்லமாய்ப் போட்டு விட்டான்...

அந்தக் கணம் மதுரகவி அடைந்த மகிழ்விற்கு அளவே இல்லை... எத்தனை ஆண்டுக் காலத் தவம் இது... அதை இன்று நிறைவேற்றிய காதலனை கண்டு அவளுக்கு அத்தனை காதல் எழுந்தது...

அது போல் அவளும் அவனது வலது கரத்தில் மோதிரம் போட முயன்ற போது அதில் இருந்த கட்டு இடைஞ்சலாக இருக்க, அவன் சிரித்தபடி தனது இடது கையை அவள் முன் நீட்டினான்... அவளும் புன்னகையுடன் அதில் மோதிரத்தை அணிவித்தவள் பின் சந்தோச மிகுதியில் அவனது கையில் நறுக்கென்று கிள்ளினாள்...

"ஷ்... பேபி..." என்று வலியுடன் கையைத் தேய்த்து கொண்டவனுக்கு மனைவியைக் கடிய மனம் வரவில்லை... மாறாக அவனது விழிகளில் காதலே நிரம்பி வழிந்தது...

"என்னால் இன்னும் நம்ப முடியலை ரிச்சி... அதான் கிள்ளி பார்த்தேன்... இப்போ நம்பறேன்..." என்று குறும்பும், நெகிழ்வுமாய்க் குழந்தைத்தனத்துடன் கூறிய மதுரகவியை அவன் அணைத்துக் கொண்டான்...

ஜெபிப்பதற்குப் பாதிரியார் இல்லை, வாழ்த்துவதற்கு உறவினர்கள் யாரும் இல்லை... ஆனாலும் அவர்களது திருமணம் மிகவும் எளிமையான முறையில் நடந்து முடிந்து விட்டது...

"வீட்டுக்கு போகலாமா...?" அவளது காதோரம் கிசுகிசுத்தவனின் குரலில் இருந்த வேட்கையில் அவள் திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

காதலனாய் கண்ணியம் காத்தவன் இப்போது கணவனாய் வேட்கையுடன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து அவளுள் குளிரெடுக்க ஆரம்பித்தது... வெட்கமும், பயமுமாய் அவனைப் பார்த்தவளின் பார்வையில் அவன் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைப் பார்த்து புன்னகைத்தவன்,

"சரி வீட்டிற்குப் போக வேண்டாம்... வெளியில் போகலாமா...?" என்று கேட்க... அவள் மௌனமாய்த் தலையசைத்தாள்...

அவளது மனம் மாற்ற வேண்டி வெளியில் அழைத்துச் சென்றவன் எல்லா இடங்களையும் சுற்றி காண்பித்து அவளைச் சகஜநிலைக்கு வர செய்தான்... பின் இருவரும் மதிய உணவு முடித்துக் கொண்டே வீட்டிற்குத் திரும்பினர்... வீட்டிற்குள் நுழைந்து கதவை தாளிட்ட அடுத்த நொடி ரிச்சர்ட் அவளைத் தனது கைகளில் ஏந்தியிருந்தான்...

"இதுக்கு மேல் என்னால் நல்லவனாய் நடிக்க முடியாது பேபி... நீ என்னை வில்லனாய் நினைத்து கொண்டாலும் பரவாயில்லை..." என்று கூறியபடி தனது அறைக்கு வந்து படுக்கையில் அவளைப் படுக்க வைத்து,

"நான் உனக்கு மட்டுமேயான வில்லன்..." என்று கூறியபடி தனது முழுக்கை சட்டையை முழங்கை வரை உயர்த்தியபடி வேகமாய் அவளை நோக்கி குனிந்தான்...

பெரும் சூறாவளி காற்றாய் அவன் அவளைச் சுழற்றியடித்த போது அவள் செய்வதறியாது திகைத்து போனாள்... அவளின் நிலை உணர்ந்து அவளை விட்டு விலகியவன் அவளது முகம் பார்த்து,

"என்ன பேபி...?" என்க...

"ஒன்றுமில்லை ரிச்சி..." என்றவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

"பேபி... கொஞ்சம் எழுந்து வாயேன்..."

அவள் புரியாது அவனைப் பார்த்த போதும் அவன் சொன்னதைச் செய்யத் தவறவில்லை... நேராக அவளைக் கண்ணாடி முன் அழைத்து வந்து நிறுத்தியவன் அவளது தோற்றத்தை சுட்டிக்காட்டி,

"இப்போது உன்னைப் பார்க்கும் போது உனக்கு என்ன தோன்றுகிறது...?" என்று கேட்டவனின் உதடுகளில் விசம சிரிப்பு வந்தமர்ந்தது...

மாராப்பு சேலை விலகி இருந்ததைக் கண்டு அதை அவசரமாகச் சரி செய்து கொண்டவள் தனது தோற்றத்தை நன்கு உற்று பார்த்தாள்... புடவை கசங்கி, தலை கலைந்து அவள் நின்றிருந்த தோற்றம் அவளிடம் வேறொரு கதை பேசியது... ஆனால் அவளுக்கு மட்டும் தானே தெரியும், அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்று...

"இப்போது புரிந்ததா என் மக்கு பெண்ணே..." என்று அவன் செல்லமாய் அவளது தலையில் முட்டியபடி கேட்க...

அவன் கூறிய 'சம்திங், சம்திங்'கிற்கான அர்த்தம் இப்போது அவளுக்குப் புரிந்தது...

"ரிச்சி... அப்போ அன்னைக்கு இது தான் நடந்ததா...?" ஆம் என்று தலையசைத்து ஆமோதித்தவன்,

"நான் அன்னைக்குப் பேசியது உன்னை வருந்த வைக்க எல்லாம் இல்லை... ஆனால் அற்ப காரணத்துக்காக நீ பிரிந்து போனதை நினைத்து தான் கோபத்தில் அப்படிச் சொன்னது... அது போக உன் அப்பாவை பற்றி நீ புரிந்து கொள்ளணும்ன்னு தான் நான் அப்படிப் பேசினேன்... அவருக்குப் பயந்து நீ என்னை விட்டுப் போனது எனக்குக் கோபம் தான்... அதுக்காக உன் பெண்மையைக் களவாடும் அளவுக்குக் கெட்டவன் நானில்லை... அன்று உன்னை அணைத்த போது இது மாதிரி தான் என்னைக் கட்டுப்படுத்த இயலாது உன்னைப் படுக்கையில் தள்ளி..." மேலே சொல்ல போனவனின் வாயை நாணத்துடன் மூடியவள்,

"போதும் ரிச்சி..." என்று வெட்கத்துடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்... அவனோ விடாது பேச்சை தொடர்ந்தான்...

"ரொம்ப நேரம் கழித்துத் தான் உன் கிட்ட இருந்து எந்தவித சத்தமும் வரலைன்னதும் நான் உன்னைக் குனிந்து பார்த்தேன்... அப்போது நீ மயக்கமாகி இருந்த..."

"ம்... முதலில் நீ கட்டிப்பிடிச்சப்போ சந்தோசமா தான் இருந்தது... ஆனால் போகப் போகத் தப்புச் செய்கிறோமோங்கிற பயத்தில் கண்ணை இருட்டிக்கிட்டு மயக்கம் வருவது போலிருந்தது..."

"நானும் உன் கன்னம் தட்டி பார்த்து விட்டு ஓய்ந்து, பயந்து போய் டாக்டருக்கு ஃபோன் பண்ண போனேன்... அதற்குள் நீயே எழுந்து விட்டாய்... இப்போது புரிந்ததா...? அன்று எந்தச் சம்திங்கும் நடக்கவில்லை என்று... இன்று தான் நடக்க வேண்டும்... அதற்கு முதலில் உனது சம்மதம் வேண்டும் பேபி..."

"ம்... ம்... சம்மதம்..." என்று வெட்கத்துடன் அவனது சட்டை பொத்தானை உருட்டியவளை கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"ஆனாலும் நீ இவ்வளவு பேபியா இருக்கக் கூடாது பேபி..."

"சும்மா, சும்மா கிண்டல் பண்ணாதே ரிச்சி..." என்று கூறியபடி அவனது நெஞ்சில் ஆழமாய் முகம் பதித்தவளை அவனது கைகள் ஆரவாரத்துடன் அள்ளி கொண்டது...

அவனது காத்திருந்த காதல் பெருவெள்ளமாய்க் கரை புரண்டு ஓடி கட்டுப்பாடுகளைக் கடக்கப் பேராசை கொண்டது... ஆனால் சிறு மழலை போல் செய்வதறியாது விழித்து நிற்கும் மனைவியைக் கஷ்டப்படுத்த விரும்பாது வலிய ஆணவன் தன் வன்மையைக் கைவிட்டு மென்மையைக் கடைப்பிடித்தான் தன்னுடைய மென்மையான பெண்ணிடத்தில்... கணவனது

மென்மையில் பெண்ணவளும் அச்சத்தைக் கைவிட்டு அவனுடன் ஒன்றினாள்...

கூடல் முடிந்து மதுரகவியின் நெற்றியில் முத்தமிட்டவன், "ஒரே ஒரு குறை பேபி..." என்றான் அவன் சோகமாக...

"என்னது ரிச்சி...?" அவனது மனம் நோகும்படி தான் எதுவும் நடந்து கொண்டோமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது...

"அன்று போல் மல்லிகை பூ இல்லாதது ஒன்று தான் குறை..." என்று கண்சிமிட்டியபடி கூறியவனைக் கண்டு முறைக்க முயன்று தோற்று,

"ரிச்சி... பேட் பாய்..." என்று சிணுங்கலாய் கூறியவள் அவனது தோள்வளைவில் முகம் புதைத்து கொண்டாள்...

அவளது சிணுங்கல் அவனுக்கு அழைப்பாகத் தோன்ற, அவன் மீண்டும் அவளது முகம் நோக்கி குனிந்தான்... காதல் கணவனின் நோக்கம் அறிந்தவளாய் அவளும் அவனது செய்கைக்கு இசைந்தாள்...

அதே நேரம் செந்தில்நாதனின் அலைப்பேசிக்கு ரிச்சர்ட்டும், மதுரகவியும் நெருக்கமாய் இருக்கும் புகைப்படம் வந்தது... அதிலும் மதுரகவி ரிச்சர்ட்டிடம் இணக்கமாய்ப் பேசி சிரித்தபடி இருந்தது கண்டு அவரது விழிகளில் கொலைவெறி எழுந்தது...

*************************

மும்பை நகரத்தின் கடற்கரை ஓரமாய் இருந்த அந்த நட்சத்திர விடுதியில் செந்தில்நாதன் மிகுந்த பரபரப்புடன் ரிச்சர்ட்டிற்காகக் காத்துக் கொண்டு இருந்தார்... சுற்றிலும் இருக்கும் ரம்மியமான காட்சியில் மனம் லயிக்காது அவர் அவஸ்தையுடன் அமர்ந்திருந்தார்...

அவரை மேலும் சில நிமிடங்கள் வேண்டும் என்றே காக்க வைத்து விட்டு அங்கு வந்து சேர்ந்தான் ரிச்சர்ட்... அவன் அவர் முன் வந்து கால் மேல் கால் போட்டபடி கம்பீரமாக,

அலட்சிய பாவனையுடன் நாற்காலியில் அமர்ந்தான்... செந்தில்நாதனின் கண்கள் அவனுக்குப் பின்பக்கமாய் யாரையோ தேடி எதிர்பார்த்து ஏமாந்தது...

"யாரை தேடுறீங்க மிஸ்டர். செந்தில்நாதன்...?"

"மது... மது எங்கே...?" என்று தடுமாறியவரை உற்று பார்த்தவன்,

"உங்க பெண் மீது அவ்வளவு பாசமா...?"

"இல்லை... ஆமாம்..." என்று மாற்றி, மாற்றிப் பதிலளித்தவரை கண்டு அவனது முகம் கடுமையாய், கல்லாய் மாறியது...

"மதுவை கொல்ல முடியவில்லையே என்று உங்களுக்குக் கவலையாக இருக்கிறதா...?"

நெத்தியடியாய் ரிச்சர்ட் கேட்ட கேள்வியில் செந்தில்நாதனுக்கு வியர்க்க ஆரம்பித்தது...!!!

மாயமாகும்...!!!

"உங்கள் மகள் மதுரகவி இப்போது என்னுடைய மனைவி... இனி உங்களால் அவளை எதுவும் செய்ய முடியாது..." என்று திமிரும், தெனாவெட்டுமாய்க் கூறிய ரிச்சர்ட்டின் பேச்சில் செந்தில்நாதன் அதிர்ந்து போனார்...

"நீ... என் மகளை... அது எப்படி...?" அவனது வார்த்தைகளின் அர்த்தம் அவருக்குப் புரிந்தாலும் அது அவரது மூளையில் ஏற மறுத்தது...

"நான் உங்க மகளைக் கல்யாணம் பண்ணி கொள்ளக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கிறதா என்ன...?"

"இல்லை... அது வந்து...."

"நானும், உங்க மகளும் ஆறு வருடங்களாகக் காதலர்கள்..." அவன் இப்படிச் சொன்னது கேட்டு அவருக்கு அத்தனை திகைப்பாய் இருந்தது...

"ஆறு வருடங்களாகவா...?" என்று அவனிடம் திகைத்தவர் மனதில், 'உன்னை லண்டனுக்குப் படிக்க அனுப்பி வைத்தேனா...? இல்லை இப்படிக் காதல் செய்வதற்கு அனுப்பி வைத்தேனா...?' என்று மகளைத் திட்டி தீர்த்துக் கொண்டிருந்தார்...

"உங்களுக்கும், உங்க மகனுக்கும் பயந்து தான் அவள் என்னை விட்டு வந்தது..." என்றவனிடத்தில் அவரால் கோபத்தைக் காட்ட முடியவில்லை... அவரது நிலை அது மாதிரி இருந்தது... வேறுவழி இல்லாது அவர் பல்லை கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்...

"நீங்களே உங்கப் பொண்ணை என்னிடம் கொடுக்கும் போது நான் எப்படி வேண்டாம்ன்னு சொல்வேன்...? அதனால் தான் அவளை என்னுடையவளாக்கி கொண்டேன்... ஆனால் நீங்க சொன்னது போல் ஆசைநாயகியாக அல்ல... என் அருமை மனைவியாக... உங்க மகளை நீங்க அசிங்கப்படுத்தலாம்... ஆனால் நான்

ஒரு போதும் என் காதலியை அசிங்கப்படுத்த மாட்டேன்... அவளுக்கு என் மனைவி என்கிற கௌரவம் அளித்து மரியாதை கொடுப்பேன்... இனி என் மனைவியின் சுண்டு விரலை கூட உங்களால் ஒன்றும் பண்ண முடியாது..."

என்று அவன் அலட்சியமாய், அகம்பாவமாய்க் கூறிய போது அவனது சட்டையைப் பிடித்துக் கன்னம் கன்னமாய் அறைந்து தள்ள வேண்டும் என்கிற வெறி அவருள் எழுந்தது... ஆனால் அதைச் செய்ய முடியாதபடி மந்தாகினியின் மிரட்டல் அவரது கைகளைக் கட்டி போட்டது...

"உங்களுக்குத் தான் உங்க மகள் மீது அக்கறை கிடையாதே... பிறகு மதுவை பற்றி நான் ஏன் பேச வேண்டும்... நாம் இங்கு வந்தது தொழில் ஒப்பந்தம் செய்வதற்காகத் தான்... அதை மட்டும் நாம் பார்க்கலாமா...?" என்று ரிச்சர்ட் கேட்ட போது அவரால் மறுத்து பேச முடியவில்லை...

உடனே அவர் மந்தாகினியை அலைப்பேசியில் அழைத்தார்... அடுத்தப் பத்தாவது நிமிடம் அவள் அங்கு வந்து சேர்ந்தாள்... ஆங்கிலேயனான ரிச்சர்ட்டை கண்டதும் மந்தாகினியின் விழிகள் இரண்டும் யோசனையாய்ச் சுருங்கியது...

"இவர் தான் ரிச்சர்ட்... நாம் ஒப்பந்தம் போட போகும் நிறுவனத்தின் எம்டி..."

செந்தில்நாதன் அவளிடத்தில் அவனை அறிமுகப்படுத்தி வைத்தார்... மந்தாகினியின் யோசனையில் சுருங்கிய புருவங்கள் இரண்டும் மகிழ்ச்சியில் நேராகியது... அவள் ரிச்சர்ட்டை நோக்கி சந்தோசமாகத் தனது வலக்கையை நீட்டினாள்... அவனோ,

"வணக்கம்..." என்று தனது இரு கரங்களையும் குவித்தான்...

அதில் முகம் கறுத்து போனாள் மந்தாகினி... அவளது முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்தது... அவள் கடினமான முகத்துடன் செந்தில்நாதனின் அருகில் அமர்ந்தாள்...

ரிச்சர்ட்டின் பார்வை மந்தாகினியை ஆராய்ச்சியாய்ப் பார்த்தது... மதுரகவியை விட இந்தப் பெண் எந்த விதத்தில் செந்தில்நாதனுக்கு முக்கியமானவளாகி போனாள்... அந்தக் கேள்வி தான் அவனைப் போட்டுக் குடைந்தது... அவனது ஆராய்ச்சி பார்வையில் மந்தாகினிக்கு உள்ளூர குளிரெடுத்ததில் அவளையும் அறியாது அவளது கரம் செந்தில்நாதனின் கரத்தை இறுக பிடித்துக் கொண்டது...

செந்தில்நாதனுக்கு இருந்த ஆத்திரத்தில் அவளது கையை உதறி தள்ளிவிடத் தான் நினைத்தார்... ஆனால் அவளது முகத்தில் தெரிந்த பயம் அவளது மனநிலையை அப்பட்டமாய் எடுத்துரைத்ததில், ஆணாய் கர்வம் கொண்டவராய் அவளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு அவளது கரத்தை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டார்... பெற்ற மகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியாத ஈனப்பிறவி, தனது சுகத்திற்காக வைத்து கொண்டவளுக்குப் பாதுகாப்பை அள்ளி வீசியது...

அதையும் ரிச்சர்ட்டின் கண்கள் கவனிக்கத் தவறிவில்லை... அவனது நாட்டில் வயது வித்தியாசத்தை ஒரு பொருட்டாக எண்ணி கொள்ளாது காதலில் விழுவது சகஜம் தான் என்றாலும் செந்தில்நாதனின் இந்த உறவு அவனுக்கே அத்தனை உவப்பாய் இல்லை... காதலிக்காக மகளின் கற்பை விலை பேசிய அந்தத் தகப்பனை எப்படிப் பார்த்தாலும் அவனால் நல்ல விதமாய் நினைக்க முடியவில்லை... அதே சமயம் அவரை மன்னிக்கவும் அவனால் முடியவில்லை...

அந்தக் கணம் அவனுக்கு ஒன்று புரிந்தது... செந்தில்நாதன் எந்த மாதிரியான காமூகன் என்று... அவனது மனதில் எதையோ நினைத்து ஆத்திரம் எழுந்தது... அவரைக் கொன்றுவிடும் வெறி அவனுள் ஆழி பேரலையாய் எழுந்தது... ஆனால் மனைவியின் மதி முகம் வந்து அவனது

கோபத்தினைக் கட்டுப்படுத்தியது... தன்னவளுடன் இப்போது தான் திருமணப் பந்தம் மூலம் இணைந்து இருக்கிறான்... அவனது ஆயுள் வரை அவளோடு காதலாய் வாழ வேண்டும்... அதனால் ஆத்திரப்பட்டு அவஸ்தை படுவதை விட, இத்தனை நாளாய் பொறுமை காத்தது போல் இனியும் பொறுமை காத்திட அவன் எண்ணினான்... அவன் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் இனி செந்தில்நாதன் மீண்டு வராதபடி கடுமையாக இருக்க வேண்டும்... அதற்காகத் தானே அவனும் இத்தனை நாளாய்க் காத்திருந்தது...

அதற்கு மேல் அவனால் அங்கு நிம்மதியாய் இருக்க முடியவில்லை... அதனால் செந்தில்நாதனை பார்த்து,

"அக்ரிமெண்ட்டில் சைன் போட்டு விடலாமா...?" என்று அவன் கேட்க...

"ஓ... எஸ்..." அவரை முந்தி கொண்டு மந்தாகினி பதிலளித்தாள்... அதை ரிச்சர்ட்டும், செந்தில்நாதனும் ரசிக்கவில்லை... ஆனால் ரிச்சர்ட் அதை வெளிப்படையாக முகத்தில் காட்டினான்... செந்தில்நாதனால் அப்படி வெளிக்காட்டி கொள்ள முடியவில்லை... அதனால் அமைதியாக இருந்தார்...

செந்தில்நாதன் தான் கையோடு வைத்திருந்த தொழில் ஒப்பந்த பத்திரங்களைக் கையில் எடுத்த போது,

"அது வேண்டாம் மிஸ்டர். செந்தில்நாதன்..." என்று உரைத்த ரிச்சர்ட் தன்னிடம் இருந்த வேறு ஒரு தொழில் ஒப்பந்தத்தைக் கையில் எடுத்தான்...

"ஏன் இதற்கு என்ன...?"

"உங்கள் தரப்பில் ஏதாவது தவறு நேர்ந்தால் எங்கள் நிறுவனம் எந்த நிபந்தனையுமின்றி விலகி கொள்ளும் என்பதை நான் இந்த ஒப்பந்தத்தில் சேர்த்து இருக்கிறேன்... அந்த ஒப்பந்தத்தில் நான் அப்படிக் குறிப்பிடாததற்குக்

காரணம், நான் வேறு, மது வேறல்ல என்பதால் தான்... ஆனால் இப்போது கதையே வேறு அல்லவா..."

ரிச்சர்ட் மதுவை பற்றி அப்படிக் கூறியதும் மந்தாகினியின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது... அதை ரிச்சர்ட் கவனிக்கத் தான் செய்தான்... இவளுக்கும் மதுரகவிக்கும் என்ன தொடர்பு என்று அவனது துப்பறியும் மூளை யோசிக்க ஆரம்பித்தது... அவனது கண் பார்வையில் இருந்து சிறு விசயம் கூடத் தப்பாது... அவனது தொழில் வட்டாரத்தில் அவனை 'ஷெர்லாக் ஹோம்ஸ்' என்று தான் செல்லமாய் அழைப்பார்கள்... அப்படிப்பட்டவன் பார்வையில் இருந்து மந்தாகினியின் உணர்வுகள் தப்ப முடியுமா...?

"உங்களுக்கும், மதுவுக்கும் இடையில் அப்படி என்ன உறவு இருக்கிறது...? நீங்க அவளுக்காக இந்தளவுக்குப் பார்த்து பார்த்து செய்வதற்கு..."

கொஞ்சம் கூட லஜ்ஜை இல்லாது மந்தாகினி ரிச்சர்ட்டிடம் படபடத்தாள்... அதில் மதுரகவியின் மீதான அவளது பொறாமை அப்பட்டமாய் வெளிப்பட்டது...

"உங்களுக்கு மதுவை தெரியுமா...?" ரிச்சர்ட் பதில் சொல்லாது வேறு கேள்வி கேட்டு அவளைக் கூர்ந்து பார்த்தான்...

"மதுவும், நானும்..."

மந்தாகினி ஏதோ வேகத்தில் உளற போகும் முன் செந்தில்நாதன் அவளது கையை அழுத்தி சொல்லாது தடுத்து விட்டார்... அதை உணர்ந்தவளாய் மந்தாகினி வாயை இறுக மூடி கொண்டாள்... ரிச்சர்ட் இந்த நாடகத்தைக் கவனித்தாலும் அதைக் கண்டு கொள்ளாது,

"மது என்னுடைய காதல் மனைவி..." என்றான் அழுத்தம் திருத்தமாய் அவளைப் பார்த்து...

அதைக் கேட்டு அதிர்ந்து போனவளாய் அவள் ரிச்சர்ட்டை பார்த்தாள்... பின் அவளது விழிகளில் அதிர்வு மெல்ல

மெல்ல அகன்று அந்த இடத்தைப் பொறாமை ஆக்கிரமித்துக் கொண்டது... அவளை விட அந்த மதுரகவி எந்த விதத்தில் உயர்ந்து போனாள்... அமைச்சர் பெண் என்பதைத் தவிர அவளிடம் சொல்லி கொள்ளும்படி வேறென்ன இருக்கிறது... தன்னை விட அவள் ஒன்றும் அத்தனை பெரிய அழகியில்லையே... அவளுக்குப் போய் இத்தனை அழகான, இளமையான, அதுவும் மிகப் பெரிய பணக்காரனான ரிச்சர்ட் கணவனாக அமைந்ததை அவளால் ஜீரணிக்க முடியவில்லை... அவளது மனதிற்குள் பொறாமை கனல் கனன்றது...

அதை ரிச்சர்ட் கண்டு கொண்டாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது, தனது மெய்க்காப்பாளனை அழைத்து மந்தாகினி பெயர், விவரம் கேட்டு ஒப்பந்த பத்திரத்தில் பதிந்து கொடுக்கும்படி கூற... ஐந்து நிமிடத்தில் அவன் ரிச்சர்ட் சொன்னதைச் செய்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டான்... ரிச்சர்ட் மந்தாகினி பெயரை கூடத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லாது அந்த ஒப்பந்த பத்திரத்தை கையில் எடுத்தபடி,

"சைன் போடலாமா...?" என்று கேட்கவும்,

செந்தில்நாதன் அந்த ஒப்பந்த பத்திரங்களை வாங்கி நிதானமாய்ப் படித்துப் பார்த்தவர் பின் திருப்தியுற்றவராய் அதை மந்தாகினி புறம் நீட்டினார்... மந்தாகினி சந்தோசமாய் அதில் கையெழுத்து போட்டாள்... எத்தனை நாள் ஆசை இது... இன்று நிறைவேறியது குறித்து அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

அவளைத் தொடர்ந்து ரிச்சர்ட்டும் அதில் கையெழுத்து போட்டுக் கொடுத்தான்... பின் ஒரு பிரதியை அவனிடத்தில் வைத்துக் கொண்டு மற்றொன்றை செந்தில்நாதனிடம் கொடுத்தான்...

"பை மிஸ்டர். செந்தில்நாதன்... பை மிஸ்...?" என்று அவன் அவளைப் பார்த்துக் கேள்வியாக நிறுத்தினான்...

"மிஸஸ். மந்தாகினி..." என்றாள் அவள் சிறு கர்வமாக...

"ஓகே பை மிஸஸ். மந்தாகினி..." என்று அவன் விடைப்பெற்று சென்றுவிட்டான்...

போகும் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த மந்தாகினி பின் செந்தில்நாதன் புறம் திரும்பி, "இவனுக்கும், மதுவுக்கும் எப்போது கல்யாணம் நடந்தது...? அதுவும் எனக்குத் தெரியாமல்..."

"ஆமாம், எல்லாவற்றையும் உன் கிட்ட சொல்லிட்டு தான் செய்யணுமா...?" என்று அவர் எரிந்து விழ...

"நீங்க சொல்லணும்ன்னு நான் சொல்லலையே... ஆனால் மது என் கிட்ட சொல்லாமல் இருக்க மாட்டாளே... அந்த அர்த்தத்தில் நான் கேட்டேன்..." என்றவள் அவரைப் பார்த்து,

"இந்தச் சந்தோசத்தை நாம் கொண்டாடலாமா...?" என்று அவரைப் பார்த்து மயக்கத்துடன் கண்சிமிட்டியவள் சரசமாய்க் கேட்டாள்...

"இப்போ இது ரொம்ப முக்கியம்...?" என்று அவளிடம் எரிந்து விழுந்தவர்,

"கொஞ்ச நேரம் என்னை நிம்மதியா இருக்க விடு... முதலில் நீ இந்த ரூமை விட்டு வெளியில் போ..." என்று கத்தினார்...

அவர் எப்போது மும்பை வந்தாலும் இந்த நட்சத்திர விடுதியில் தான் தங்குவார்... இங்கு அவருக்கு என்று தனி அறை இருக்கிறது... அறை என்றால் முக்கியமான கூட்டத்திற்கு என்று பயன்படும் 'கான்ஃப்ரன்ஸ்' அறை, வரவேற்பறை, சமையலறை, படுக்கையறை என்று ஒரு வீட்டிற்குத் தேவையான அனைத்து வசதிகளும் அதில் இருந்தது... கடலை நோக்கி இருந்த 'கான்ஃப்ரன்ஸ்' அறையில் தான் மந்தாகினியும், செந்தில்நாதனும் அமர்ந்திருந்தனர்...

"செந்தில்... ஏன் என் மீது இவ்வளவு கோபம்...? நான் என்ன அவ்வளவு கெட்டவளா...?" என்றவளை அவர் முறைத்து பார்த்தார்...

"நீங்க தான் செந்தில் என்னைக் கெட்டவளாக்கிட்டீங்க... நான் எந்தளவுக்கு உங்களைக் காதலிச்சேன்னு உங்க மனசாட்சிக்கு தெரியும்..." அதை அவர் உணர்ந்தவராய் தலை குனிந்தார்...

"நான் உங்க கிட்ட அப்படி என்ன கேட்டுட்டேன்...? எனக்கே எனக்கு என்று ஒரு தொழில்... அதில் இருந்து நிரந்தரமான ஒரு வருமானம்... அவ்வளவு தானே... அதை ஏன் நீங்க புரிஞ்சிக்கலை...? நாளைக்கே உங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா எனக்கு யாரிருக்கா சொல்லுங்க...? உங்க காலத்துக்குப் பிறகு நான் அநாதை தான்... அதுக்காகத் தான் நான் இதைச் செய்யச் சொன்னது..." என்று போலி கண்ணீர் விட்டு அழுதவள்,

"இல்லைன்னா உங்க கிட்ட முந்தி விரிச்ச மாதிரி என் வயிற்று பாட்டுக்காக எல்லோர் கிட்டேயும் முந்தி விரிக்க வேண்டியது தான்... அதுக்கு ஊர், உலகம் என்ன பெயர் சொல்லும் தெரியுமா...? வேசின்னு... இத்தகைய இழிநிலை எனக்குத் தேவை தானா நீங்களே சொல்லுங்க...? என் அப்பா வயசில் இருந்த உங்களை நான் மனசார ஏத்துக்கிட்டதுக்கான காரணம் நீங்க என் மேல் வச்ச காதல்... ஆனால் நீங்க என்னைப் புரிஞ்சிக்கவே இல்லை..." என்று கதறியழுதவளின் தலைமுடியை அவர் ஆக்ரோசத்துடன் பிடித்திழுத்து,

"ஓஹோ... உனக்கு அப்படியொரு எண்ணம் வேறு இருக்குதா...? என்னைத் தவிர வேறு யாரையும் உன் வாழ்க்கையில் கொண்டு வரணும்ன்னு நினைச்ச உன்னைக் கொன்னுருவேன் கொன்னு..." என்று அவர் கர்ஜிக்க...

அதில் ஆனந்தம் அடைந்தவளாய் அவள், "செந்தில்..." என்று அவரை அணைத்துக் கொள்ள...

வெகுநாட்களாகப் பெண் சுகம் காணாத அவரது உடல் அவளை அணு அணுவாய் அனுபவிக்கத் துடித்தது... ஆனால் அவள் செய்த காரியம் அதைச் செய்ய விடாது தடுத்தது... அவளோ அவரது உணர்வுகளைப் புரிந்தவளாய்

அவரது உதட்டோடு உதடு பதிக்க முனைந்த போது அவர் எரிச்சலில் அவளைத் தள்ளிவிட்டார்...

"இதையும் வீடியோ எடுத்து போடுவதற்கா..." என்று அவர் கத்த...

"அது தானே உங்களது கவலை... அந்த வீடியோவை ஊருக்குப் போனதும் அழித்து விடுகிறேன்... எனக்கு நீங்க மட்டும் தான் வேண்டும்... எனக்காக நீங்க இவ்வளவு செய்யும் போது நான் உங்களுக்காக இதைச் செய்ய மாட்டேனா..." என்றவள் அதற்கு மேல் அவரைப் பேச விடவில்லை...

அவரும் தன்னை மறந்தவராய் அவளுள் மூழ்கி போனார்... கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டு விட அவர் தயாராக இல்லை...

திருப்தியுடன் விலகிய செந்தில்நாதனை திருப்தி இல்லாது பார்த்தாள் மந்தாகினி... அவளுக்கு அவரிடத்தில் இன்னமும் நிறைய விசயங்கள் கறக்க வேண்டியிருக்கிறதே...

"செந்தில்..." கொஞ்சலாய் அழைத்தவளை அவர் 'என்ன?' என்பது போல் பார்த்தார்...

"இதுவும் இருந்தால் நல்லா இருக்கும் இல்லையா...?"

அவள் மது பாட்டிலை எடுத்துக் காட்டிய போது அவரால் அதை மறுக்க முடியவில்லை... அவள் ஆசையுடன் ஊற்றி கொடுப்பதாய் எண்ணி கொண்டு அவர் அளவிற்கு அதிகமாய்க் குடித்தார்... பெண்ணாசையால் பல சாம்ராஜ்யங்கள் வீழ்ந்து போனது அந்நேரம் அவருக்கு நினைவில் எழவில்லையோ என்னவோ... அவரின் வீழ்ச்சிக்கு அவரே முன்னுரை எழுதி கொண்டார்...

"செந்தில்... ரிச்சர்ட் எப்படி மதுவை கல்யாணம் பண்ணி கொண்டான்...? அதுவும் காதலித்துக் கல்யாணம் பண்ணும் அளவுக்கு...? இது உங்களுக்கு எத்தனை அவமானம்...? இதை எல்லாம் நீங்க தட்டி கேட்பது இல்லையா...?"

அடுக்கடுக்காய் கேள்விகளை அடுக்கி கொண்டு போனவளை நோக்கி ஆத்திரத்துடன் கை நீட்டியவர்,

"எல்லாத்துக்கும் நீ தான்டி காரணம்... நீ தான்டி காரணம்..." என்று அவர் கோபமாய்க் கத்த...

சட்டென்று அமைதியானவள் மேற்கொண்டு எதுவும் பேசாது அவருக்கு ஊற்றி கொடுக்க ஆரம்பித்தாள்... அவரும் கோபத்தில் என்ன செய்வது என்று தெரியாது அதிகமாய்க் குடிக்க ஆரம்பித்தார்... தனது இயலாமையைப் போதையில் கரைக்க எண்ணினார் போலும்...

அதன் பிறகு அவரிடம் விசயம் என்னவென்று அவள் மெல்ல கேட்க, அதீத போதையில் அவர் எல்லா விசயத்தையும் உளறி கொட்டினார்... அதைக் கேட்டு அவளது விழிகளில் பழிவாங்கும் வெறி மின்னியது... ஒரே கல்லில் செந்தில்நாதன் மற்றும் மதுரகவி என்கிற இரண்டு மாங்காய்களை அடித்து வீழ்த்திட அவள் திட்டமிட்டாள்...

செந்தில்நாதனை அவரது குடும்பத்தார் வெறுத்து ஒதுக்க வேண்டும்... அதே சமயம் மதுரகவியையும் வெறுக்க வேண்டும்... இதற்குத் தான் என்ன செய்ய வேண்டும் என்று மந்தாகினி யோசிக்க ஆரம்பித்தாள்... அந்தக் கணம் அவளது மூளையில் பளிச்சிட்டது திருச்செல்வனின் திரு முகம் தான்... அவன் தான் இவர்களுக்குச் சரியான ஆள் என்று எண்ணினாள்...

திருச்செல்வனின் அலைப்பேசி எண்ணை எடுப்பதற்காக அவள் செந்தில்நாதனின் அலைப்பேசியைக் கைப்பற்றினாள்... போதையில் மல்லாந்து கிடந்த செந்தில்நாதனை கண்டு அவளது விழிகள் வெறுப்பைக் கக்கியது... அவளது அதிர்ஷ்டமோ என்னவோ அவளது கை தவறி தொடு திரையில் பட்டதில் அதில் ரிச்சர்ட்டும், மதுரகவியும் சிரித்தபடி இணக்கமாக இருந்த புகைப்படம் ஒளிர்ந்தது... அதைக் கண்டதும் அவளது முகத்தில் அப்படியொரு குரோதம் கொப்பளித்தது...

உடனே அந்தப் புகைப்படத்தைத் தனது அலைப்பேசிக்கு மாற்றியவள் பின் திருச்செல்வனின் அலைப்பேசி எண்ணை தேடி எடுத்துத் தன்னுடையதில் சேமித்து வைத்து கொண்டாள்... இனி அவளது எண்ணம் நிறைவேறுவது வெகு சுலபமே...

வீட்டிற்குப் போகும் வழியில் ரிச்சர்ட் அந்தத் தொழில் ஒப்பந்த பத்திரங்களைப் புகைப்படம் எடுத்து விஜய்க்கு அனுப்பி வைத்தான்... கூடவே மந்தாகினியின் புகைப்படத்தையும்... ரிச்சர்ட்டின் மெய்க்காப்பாளன் மந்தாகினி அறைக்கு வரும் வழியில் அவளுக்குத் தெரியாமல் புகைப்படம் எடுத்திருந்தான்...

"மிஸ்டர். விஜய்... இந்தப் பெண் யாரென்று எனக்குத் தெரிய வேண்டும்... அதாவது இவளுக்கும் மதுவுக்கும் என்ன உறவு என்று...?"

அவனுக்கு வேண்டியது அது மட்டுமே... மந்தாகினியால் தனது மனைவி மனம் வருந்த கூடாது என்பது மட்டுமே அவனது நினைவில் நின்றது... ஏதோ ஒரு உறவு இருவருக்கும் இடையில் இருக்கக் கூடும் என்று அவனது மூளை அவனை எச்சரித்தது... நாளை செந்தில்நாதன் பற்றிய விசயம் வெளியில் வரும் போது கூடவே மந்தாகினி விசயமும் வெளிவரும்... அது மதுரகவியைப் பாதித்து விடக் கூடாது என்று அவன் நினைத்தான்... மற்றபடி செந்தில்நாதனுக்கும், மந்தாகினிக்கும் இடையில் இருக்கும் உறவு பற்றித் தெரிந்து கொள்ள அவன் பெரிதாய் அக்கறை காட்டவில்லை...

நேரே வீட்டிற்கு வந்தவனை மதுரகவி இன்முகத்துடன் வரவேற்றாள்... கணவனது முகத்தைக் கண்டதுமே அவளுக்குத் தெரிந்து போனது அவன் மிகுந்த களைப்பாக இருக்கிறான் என்று... சோபாவில் அமர்ந்து கண்களை மூடி சாய்ந்தவனின் அருகில் வந்தமர்ந்தவள் அவனது தோள்களை இதமாகப் பிடித்து விட்டாள்...

"வேலை அதிகமா ரிச்சி...?"

அவர்களுக்குத் திருமணமான இந்த நான்கு நாட்களில் அவன் அவளை மட்டும் முன்னதாக வீட்டிற்கு அனுப்பி விடுவான்... அவன் மட்டும் அங்கு இருந்து மீதம் இருக்கும் வேலைகளை முடித்துக் கொண்டு வருவான்...

"இல்லை..." என்றவன் அவளது மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டான்...

அவள் தனது மெல்லிய விரல்களால் அவனது நெற்றியை மென்மையாய் பிடித்து விட்டாள்... அவனது மனதில் தோன்றிய கனலை அவளது விரல்களின் குளிர்ச்சி தணிப்பது போல் இருந்தது அவனுக்கு... ஆனால் அவனது மனதின் வெம்மையைத் தணிக்க முடியவில்லை... இன்று செந்தில்நாதனை பார்த்ததும் மீண்டும் அவனது மனம் எரிமலையாய் ஆக்ரோசத்துடன் சீறியது...

இறந்து போன அவனது அன்னையின் முகம் அவனது நினைவிலாடியது... எவ்வளவு கோரமான மரணம் அவருடையது... அதற்கு முக்கியக் காரணம் இந்தச் செந்தில்நாதன் அல்லவா... என்ன நினைத்தும் அவனது மனம் குமுறுவதை அவனால் அடக்க முடியவில்லை...

"ரிச்சி..."

மனைவியின் கவலை குரலில் அவன் மெல்ல கண் விழித்துப் பார்த்தான்... அவளது முகத்தில் தெரிந்த கவலையில் அவன் மென்மையாய் அவளை நோக்கி புன்னகைத்தான்...

"என்ன பேபி...?"

அவனது புன்னகையில் நிம்மதியுற்றவளாய் பதிலுக்கு அவனைப் பார்த்து புன்னகைத்தவள், "இன்னைக்கு உன் முகமே சரியில்லை ரிச்சி..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை பேபி... நான் எப்போதும் போல் தான் இருக்கிறேன்..." என்றவன்,

ஒரு காதல் கணவன் மனைவியிடத்தில் எப்படி நடந்து கொள்வானோ, அது போல் அவன் நடந்து கொண்டு அவளது கவலையை முற்றிலும் அகற்றினான்... அது போல் அவளது அருகாமையில் எப்போதும் போல் அவன் தனது மனக்கவலையையும் முற்றிலும் களைந்தான்...

அயர்ந்து உறங்கும் மனைவியைப் பார்த்தபடி வெகுநேரம் அமர்ந்திருந்தான்... அவளுக்காக மட்டுமே அவன் செந்தில்நாதன் விசயத்தில் சற்று நிதானிப்பது... இல்லை என்றால் நடந்திருப்பதே வேறு... நிச்சயம் அவர் அவளது தந்தை என்பதற்காக இல்லை... அவன் அவளுடன் காதலாய் வாழ வேண்டும் என்பதற்காக மட்டுமே... தூரதிர்ஷ்டசாலியான அவனுக்கு வரமாய்க் கிட்டிய அதிர்ஷ்ட தேவதை அல்லவா அவள்... அவளுடனான வாழ்க்கையை இழப்பதற்கு அவனுக்கு மனம் வரவில்லை...

அதற்காக அவன் அந்தச் செந்தில்நாதனை சும்மா விடப் போவதும் இல்லை... அவரை எப்படிக் கதறியடிக்க வேண்டும் என்று அவனுக்குத் தெரியும்...

*******************

மறுநாள் விஜய் தன்னிடம் இருந்த ஒப்பந்த நகலை மனைவியிடம் கொடுத்து, "இனி நீ தாராளமா செந்தில்நாதன் மீது நடவடிக்கை எடுக்கலாம்..." என்று கூற...

அதை வாங்கிப் படித்துப் பார்த்த முத்துபேச்சி வியப்பில் விழிகளை விரித்தாள்...

"யார் இந்த மந்தாகினி...? மதுவின் பெயரில் இருந்து இந்தப் பெயருக்கு எப்போது மாற்றப்பட்டது...?"

"யாருக்கு தெரியும்...? நீ அவன் மீது நடவடிக்கை எடு... அப்போது தானாகவே தெரிந்து போகப் போகிறது இந்தப் பெண் யாரென்று..."

"ம்... ம்... அதுவும் சரி தான்..." என்றவள் கணவனிடம்,

"முதலில் இந்தப் பத்திரத்தை ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணிட்டு நமக்கு ஒரு காப்பி அனுப்ப சொல்லு விஜூ... அப்ப தான் நான் சட்டப்படி அவன் மீது நடவடிக்கை எடுக்க முடியும்..."

"இன்று ரிஜிஸ்ட்ரேஷன் முடிஞ்சிரும்ன்னு நினைக்கிறேன்... காப்பி வந்ததும் உனக்கு அனுப்பி வைக்கிறேன்..." என்றவன் தனது வேலைக்குக் கிளம்பினான்...

ஒப்பந்தத்தில் இருந்த மந்தாகினியின் பெயரை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள் முத்துபேச்சி...

அதே நேரம் மந்தாகினி தனது அலைப்பேசியில் இருந்து ரிச்சர்ட், மதுரகவி இணைந்து இருந்த புகைப்படத்தைத் திருச்செல்வனுக்கு அனுப்பி வைத்தவள், அடுத்த நொடி அவனுக்கு அழைத்தாள்... அவளது அலைப்பேசி எண் கூட அவளது பெயரில் கிடையாது... வேறு யாரோ பெயரில் அதை எடுத்துக் கொடுத்திருந்தார் செந்தில்நாதன்.... ஏனெனில் அவர் அவளிடம் பேசும் விசயம் யாருக்கும் தெரிந்து விடக் கூடாது என்று... அதில் எல்லாம் அவர் விவரம் தான்...

மறுமுனையில் திருச்செல்வன் எடுத்ததும், "இங்கே உன் தங்கச்சியை வெள்ளைக்காரனுக்குக் கூட்டி கொடுத்துட்டு நீ நிம்மதியா தேர்தல் வேலை பார்க்கிறியா...? இதுக்கு நீ அவளை மும்பை சிவப்பு விளக்குப் பகுதியில் விற்று இருக்கலாம்..." என்று அகந்தையுடன் ஒலித்த அவளது குரலில் திருச்செல்வன் கோபத்தில் பல்லை கடித்தான்...

"ஏய்... யார் நீ...? வார்த்தையை அளந்து பேசு..." என்று அவன் கோபத்தில் கர்ஜித்தான்...

"நான் எதுக்கு அளந்து பேசணும்... இதனால் எனக்கு எந்த லாபமும் இல்லை.... நஷ்டமும் இல்லை... ஆனால் நான் சொல்வது அனைத்தும் உண்மை... உண்மையைத் தவிர வேறில்லை... மும்பையில் உன் தங்கை அந்த வெள்ளைக்காரனோடு கொட்டமடித்துக் கொண்டு இருக்கிறாள்... இதுக்கு உன் அப்பாவும் உடந்தை... அவர் தான் வெள்ளைக்காரன் கிட்ட ஏதோ காரியமாவதற்காகச்

சொந்த பொண்ணைக் கூட்டி கொடுத்து இருக்கிறார்... அவளும் இது தான் சாக்குன்னு வெள்ளைக்காரன் கூடச் சந்தோசமாய், கொஞ்சமும் வெட்கம் இல்லாது கூத்தடிச்சுக்கிட்டு இருக்கிறாள்... அவள் எல்லாம் ஒரு பெண்ணா...? அவளுக்குக் கொஞ்சம் கூட வெட்கம், மானம், சூடு, சொரணை இல்லையா...? வேணும்ன்னா நீயே அங்குப் போய் விசாரிச்சுக்கோ... நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன்... அதற்கு மேல் உன் விருப்பம்..." என்று கூறியபடி அலைப்பேசியை அவள் அணைத்து விட்டாள்...

எதையோ சாதித்து விட்ட உணர்வு அவளது முகத்தில் தோன்றியது... தோழி மீது கொண்ட பொறாமை அவளது வாழ்க்கையை அழிக்கத் துணிந்தது...

திருச்செல்வன் செய்வதறியாது அந்தப் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான்... மதுரகவியின் முகத்தில் இருந்த வெட்க சிரிப்பு அவனுக்கு வேறு எதையோ உணர்த்தியது... அடுத்த நொடி தாமதியாது தலைவரிடம் கூடச் சொல்லி கொள்ளாது அவன் மும்பைக்குக் கிளம்பி விட்டான்...

அவன் மும்பைக்குக் கிளம்பி அதே நேரம் செந்தில்நாதன், மந்தாகினியுடன் சென்னைக்குத் திரும்பி கொண்டிருந்தார்... அவர் முதல் வகுப்பிலும், அவள் இரண்டாவது வகுப்பிலும் பயணம் செய்தது அவளுக்கு மிகுந்த கடுப்பை கிளப்பியது... ஆனாலும் பொறுத்து கொண்டாள்... இன்று பத்திர பதிவு முடிந்ததும் இத்தோடு செந்தில்நாதனின் உறவுக்கு ஒரு பெரிய முற்றுப்புள்ளி வைத்திட அவள் எண்ணினாள்... அதுவரை இந்த உதாசீனத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டியது தான் என்று எண்ணி அமைதியாக அவள் இருந்தாள்...

அவளை விட அவர் அதிகக் கடுப்பில் இருந்தார்... அமைச்சர் அவரால் ரிச்சர்ட் மற்றும் அவரது மகள் மதுரகவியை ஒன்றும் செய்ய முடியாது புறமுதுகிட்டு வருவது அவருக்குப் பெருத்த அவமானமாக இருந்தது... ரிச்சர்ட் சொன்னது

போல் மதுரகவியின் சுண்டு விரல் என்ன, கால் தூசியைக் கூட அவரால் தொட முடியவில்லை... அது போல் தான் ரிச்சர்ட்டையும் அவரால் நெருங்க முடியவில்லை... அந்தளவிற்கு அவனைச் சுற்றி பலத்த பாதுகாப்பு எந்நேரமும் இருந்தது... முதல்முறையாக அவன் மீது அவருக்குச் சந்தேகம் வந்தது... அவன் யாரென்று...?

சென்னை வந்து சேர்ந்த ஒரு மணி நேரத்தில் செந்தில்நாதனின் செல்வாக்கால் தொழில் ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது... அதன் ஒரு நகல் ரிச்சர்ட்க்கு அனுப்பி வைக்கப்பட்டது... அதை அவன் அப்படியே விஜய்க்கு அனுப்பி விட்டான்... அதன் பின்னரே ரிச்சர்ட்க்கு சற்று நிம்மதியாக இருந்தது...

"பேபி... இன்னைக்கு ஆபிசுக்கு போகாம வீட்டில் இருக்கலாமா...?" என்று சரசமாய்க் கேட்ட கணவனை அதிசயமாய்ப் பார்த்தாள் மதுரகவி...

அவளே அப்படிச் சொன்னால் கூடக் கடமை தவறாத கர்மவீரன் போன்று தினமும் அலுவலகத்திற்குச் செல்பவன் இன்று அப்படிக் கூறியதை கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"முக்கியமான வேலை எதுவும் இல்லையா ரிச்சி...?"

"உன்னை விட முக்கியமானது ஒண்ணும் இல்லை பேபி..." என்றவன் அவளுக்கான முக்கியத்துவத்தைத் தனது அழுத்தமான இதழொற்றலின் மூலம் அவளுக்கு வன்மையாய் உணர்த்தினான்...

அவனது காதலில் எப்போதும் போல் இன்றும் உருகியவளாய் அவள் அவனது கைகளில் பனிக்கட்டியாய் கரைந்தாள்... ஏனோ தெரியவில்லை அன்று ரிச்சர்ட் மேலும் மேலும் அவளை நாடினான்... அதை உணர்ந்தவளாய் அவளும் அவனைக் காதலோடு அரவணைத்து கொண்டாள்...

அன்று மதியத்திற்கு மேல் இருவரும் அலுவலகத்திற்குக் கிளம்பி சென்ற போது திருச்செல்வன் அவர்களுக்காக நிறுவனத்தின் வரவேற்பறையில் காத்திருந்தான்... எப்போதும் போல் ரிச்சர்ட்டின் கையணைவில், அவனது தோள் சாய்ந்தபடி உலகம் மறந்தவளாய் மதுரகவி மகிழ்வாய் அவனுடன் உரையாடி கொண்டு வர, ரிச்சர்ட் அவளைக் காதலோடு பார்த்தபடி அவள் பேசுவதை உன்னிப்பாய் கவனித்தபடி புன்னகையுடன் வந்து கொண்டிருந்தான்...

அதைக் கண்டு திருச்செல்வனின் விழிகளில் கொலைவெறி ஏறியது... நேரே அவர்கள் முன் வந்து நின்றவன் ரிச்சர்ட் எதிர்பாராத தருணத்தில் தங்கையை அவனிடம் இருந்து பிரித்தெடுத்து அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்... அதில் நிலைக்குலைந்து போனவளாய் மதுரகவி தள்ளி போய் விழுந்தாள்...

"பேபி..." என்றபடி ரிச்சர்ட் பதறியபடி அவளை நோக்கி ஓடி வந்தவன் அவளைத் தூக்க முயன்றான்... ஆனால் அவளோ அவனது கையைப் பற்றாது பயத்தில் அருகில் இருந்த சுவரோடு ஒன்றினாள்... அவளது விழிகளில் அப்படியொரு அச்சம் தெரிந்தது...

ஆறு வருடங்களுக்கு முன் இளம் ஜோடி ஒன்று ஆணவ படுகொலை செய்யப்பட்டு இறந்து போன சம்பவம் அவளது கண்முன் தோன்றி அவளுள் மரணப் பயத்தைத் தோற்றுவித்தது...!!!

மாயமாகும்...!!!

ரிச்சர்ட் மதுரகவியைப் பிடிவாதமாய்ப் பற்றித் தூக்கி நிறுத்திய அடுத்தக் கணம் அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான்... எல்லா உறவுகளும் அவளுக்குப் பொய்த்துப் போகலாம்... ஆனால் அவனது காதல் அத்தனை எளிதில் பொய்த்து போகாது... அப்படிப் போகவும் அவன் விட மாட்டான்... அதே நேரம் அவனது மெய்க்காவலர்கள் திருச்செல்வனைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள்... அவர்களது பிடியில் இருந்து திமிறிய திருச்செல்வன் தங்கையைக் கோபமாய் முறைத்துப் பார்த்தான்...

"உன்னை வேலை கத்துக்கச் சொல்லி இங்கே அனுப்பி வைச்சா... நீ என்னத்தைக் கத்துக்கிட்டு இருக்க...?" என்று அவன் ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

"அண்ணா..." என்றழைத்த மதுரகவியின் குரலில் மட்டும் அல்லாது உடலிலும் அத்தனை நடுக்கம் இருந்தது...

"ச்சீ... இனி நீ என்னை அப்படிக் கூப்பிடாதே..." என்று அவன் அடங்காது சீறினான்...

"மிஸ்டர். திரு..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் ரிச்சர்ட் அவனை அழைத்தான்...

அப்போது தான் மதுரகவிக்குத் தான் கணவனது அணைப்பில் இருக்கிறோம் என்பதே உறைத்தது... அவள் வேகமாக அவனின் அணைப்பில் இருந்த திமிறி விலகினாள்... பெண்ணவளுக்கு எப்படித் தான் அவ்வளவு தைரியம் வந்ததோ... ஆணின் வலிமையான அணைப்பை மெல்லிய தேகமுடையாள் நொடி பொழுதில் வேகமாக உதறி தள்ளினாள்...

அந்தளவிற்கு அவளுக்குச் சகோதரனிடத்தில் பயம்... ரிச்சர்ட்டிடம் இருந்து விலகி அண்ணனிடம் ஓடினாள் அவள்...

"அண்ணா... நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை..."

"எதுவும் இல்லையா...? எதுவும் இல்லாமல் தான் அவன் உன்னைக் கட்டி பிடிச்சிக்கிட்டு வந்தானோ... எதுவும் இல்லாமல் தான் நீ அவனை உரசிக்கிட்டு வந்தியோ..." திருச்செல்வனின் வார்த்தைகள் சாட்டையடியாய் அவளை நோக்கி பாய்ந்து சுளீரென்று தாக்கியது...

"திரு... கொஞ்சம் மரியாதையா பேசுங்க..." என்றபடி அங்கு வந்த ரிச்சர்ட் மனைவிக்குப் பாதுகாப்பாக அவள் அருகில் வந்து நின்று கொண்டான்...

"நீங்க ரெண்டு பேரும் பண்ணிக்கிட்டு இருக்கிற வேலைக்கு மரியாதை ஒண்ணு தான் கேடு..." என்று திருச்செல்வன் கோபமாய்க் கத்தினான்...

"முதலில் அண்ணாவை விடச் சொல்லு ரிச்சி..." என்று அவள் ரிச்சர்ட்டிடம் கெஞ்சினாள்...

"என் இடத்தில் வந்து என் மனைவியை அவன் கை நீட்டி அடிப்பான்... அதை நான் பார்த்துக் கொண்டு இருக்கணுமா..." ரிச்சர்ட் அவளிடம் கோபமாய் இரைந்தான்...

"என்னது ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா...?" திருச்செல்வன் ஏறக்குறைய அலறினான்...

"இல்லை அண்ணா... அப்படி எல்லாம் இல்லை... எங்க ரெண்டு பேருக்கும் இடையில் கல்யாணம் எல்லாம் நடக்கலை... ரிச்சி சும்மா சொல்கிறான்..." என்று சகோதரனிடம் மழுப்பியவள் கணவனிடம்,

"இத்தனை பேர் பார்க்க என் அண்ணாவை நீ அவமானப்படுத்தணுமா...? அவருக்கு ஒண்ணுன்னா அது என்னையும் பாதிக்கும்..."

மதுரகவி சொன்னதும் ரிச்சர்ட் சற்று நிதானித்தான்... செந்தில்நாதன் அளவிற்குத் திருச்செல்வன் கெட்டவன்

கிடையாது தான்... ஆனாலும் அவனது கண்மூடித்தனமான கோபம் ரிச்சர்ட்டிற்கு மிகுந்த பயத்தைக் கொடுத்தது... அதை விட அவனது மனைவி நடந்த திருமணத்தை மறைப்பது கண்டு அவனுக்கு இன்னமும் அச்சம் அதிகரித்தது... எங்கே அவளை மீண்டும் இழந்து விடுவோமோ என்று... அதே சமயம் காதல் மனைவி ஒன்று கேட்டு அவனால் அதைச் செய்யாது மறுக்க முடியவில்லை...

அதனால் அவன் தனது மெய்க்காவலர்களைக் கண்ணசைவில் விலகி போகச் செய்தான்... இதைத் திருச்செல்வன் கவனித்துக் கொண்டிருந்தான்... பிறகு ரிச்சர்ட் திருச்செல்வனை நோக்கி,

"நீ மது மேல் கை வைத்தால் இவர்கள் உன் மீது கை வைப்பார்கள்..." என்று மிரட்டலாய் கூறியவன்,

"மதுவுக்காக நான் உன்னைக் கூப்பிடுகிறேன்... எதுவாக இருந்தாலும் என் அறைக்குப் போய்ப் பேசலாம்..." என்று கூறிவிட்டு அவன் அழுத்தமாய்த் திருச்செல்வனைப் பார்த்தான்...

"எனக்கு உன்னிடம் எந்தப் பேச்சும் இல்லை... என் தங்கையிடம் மட்டும் பேசவே எனக்கு உரிமை இருக்கிறது..."

"உன் தங்கை இப்போது என் மனைவி..."

ரிச்சர்ட் கூறியதும் திருச்செல்வன் தங்கையை உற்றுக் கவனித்துப் பார்த்தான்... அவளது கழுத்தில் தாலி இருப்பதற்கான அடையாளம் எதுவும் இல்லை... அந்தக் கணம் ரிச்சர்ட் கிறித்துவன் என்பதை அவன் மறந்து போனான்...

"என்ன பொய் சொல்கிறாயா...? அவள் என் தங்கை மட்டுமே... உன்னை மாதிரியான ஒருவனுக்கு என் தங்கையைக் கல்யாணம் பண்ணி கொடுக்க மாட்டேன்...

அதற்குப் பதில் அவளைக் கொன்று புதைத்து விடுவேன்..." என்று அவன் ஆத்திரத்தில் அறிவிழந்து கத்தினான்...

"ஐயோ ரிச்சி பேசாமல் இரு..." என்று மதுரகவி கணவனிடம் மன்றாடியவள்,

"அண்ணா... அப்படி எல்லாம் இல்லை... நான் உங்க தங்கை மட்டுமே..." என்று பயத்தில் மீண்டும் மீண்டும் அதையே கூறியவளை கண்டு திருச்செல்வனுக்கு எரிச்சல் வந்தது என்றால், ரிச்சர்ட்டிற்குக் கோபம் வந்தது...

"நமக்குத் திருமணமான விசயத்தை எதற்கு மறுக்கிறாய்...?" என்று ரிச்சர்ட் கோபம் கொள்ள...

"திரும்ப, திரும்பப் பொய் சொல்லாதே..." என்று திருச்செல்வன் தங்கையிடம் எகிறினான்...

"உங்களுக்கு என்ன பிரச்சினை அண்ணா...? இப்போது நான் உங்களுடன் கிளம்பி வரணும் அவ்வளவு தானே... இதோ இப்போதே நான் வருகிறேன்... வாங்க போகலாம்..." என்று அண்ணனுடன் கிளம்பத் தயாரானவளை ரிச்சர்ட் வேகமாய் வந்து தடுத்தான்...

"என்ன பேசுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டு தான் பேசுகிறாயா...? நான் உனக்கு வேண்டாமா...?" என்று கோபத்தில் அவனது முகம் மிளகாய் பழமாய்ச் சிவந்து போனது... உடலில் இருந்த ஒட்டுமொத்த இரத்தமும் முகத்தில் பாய்ந்தது போன்று அத்தனை சிவப்பாகக் கோபத்தில் பளபளத்தது அவனது முகம்...

"வேண்டாம்..." என்று அவளது குரல் உறுதியாய் மறுத்தாலும் அவளது விழிகள் அவனிடம் மன்றாடியது... அதைக் கண்டு ரிச்சர்ட் யோசனையாய் அவளைப் பார்த்தான்...

"வீட்டுக்கு வாடி... உன்னைக் கொன்னு பொலி போட்டால் தான் என் மனசு ஆறும்... எது நடக்கக் கூடாதுன்னு உன்னைப் பொத்தி பொத்தி வளர்த்தோமோ அந்தத் தறி கெட்ட செயலை நீ செஞ்சு எங்க மானத்தை வாங்கிட்ட..."

என்று திருச்செல்வன் தங்கையைப் பிடித்து இழுத்ததில் அவள் தடுமாறி கீழே விழ போனாள்...

அந்த நொடி அண்ணனான திருச்செல்வன் அவளைத் தாங்கி பிடிக்க வரவில்லை... மாறாகக் கணவனான ரிச்சர்ட்டின் கரங்கள் தான் அவளைத் தாங்கி பிடித்தது... அதைக் கண்டு அவளது விழிகளில் விழிநீர் நிரம்பியது... இத்தகைய அன்பை அனுபவிக்க அவளுக்குக் கொடுத்து வைக்கலையே... அவனது அன்பை புறக்கணித்து விட்டு போகும் அவளது தூரதிர்ஷ்டமான நிலையை எண்ணி அவள் மனதிற்குள் இரத்த கண்ணீர் வடித்தாள்...

"நீ அவளைத் தொடாதேடா..." என்று சீறிய திருச்செல்வனை அக்னிப்பிழம்பாய் உறுத்து விழித்தான் ரிச்சர்ட்... அவ்வளவு கோபம் வந்தது அவனுக்கு...

"என் மனைவி நான் தொடுவேன்... உனக்கு என்னடா வந்தது..." என்று சீறியவனைக் கண்டு மதுரகவி கையெடுத்து கும்பிட்டாள்...

"வேண்டாம் ரிச்சி... ப்ளீஸ், எனக்காக..."

மனைவியின் வார்த்தையில் அவனது செயல் கட்டுப்பட்ட போதும், அவனது கோபம் கட்டுப்படவில்லை...

"உனக்காக எதை வேணும்ன்னாலும் செய்றேன்... ஆனா உனக்காக உன்னை விட்டு கொடுக்க என்னால் முடியாது..." என்று நிர்தாட்சண்யமாய் மறுத்தவனை இயலாதவளாய் அவள் பார்த்தாள்...

"ரிச்சி... என் மீது சத்தியமா நான் சொல்றதை நீ கேட்கணும்..." என்று கூறியபடி அவனது கையை எடுத்து தன் தலை மீது வைத்தவளை கண்டு ரிச்சர்ட் ஓய்ந்து தான் போனான்... ஆனாலும் முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"உன் விசயத்தில் சத்தியம் எல்லாம் செல்லுபடியாகாது பேபி..." என்றவனின் வார்த்தையில் இருந்த தவிப்பை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது...

"மது... இப்போ நீ வர போகிறாயா...? இல்லையா...?" என்று திருச்செல்வன் பொறுமை இழந்தவனாய் உறுமினான்...

"நான் உங்க கூட வரணும் அவ்வளவு தானே... வருகிறேன்... அதற்காக ரிச்சியிடம் பேச கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை..." என்று அழுத்தமாய்க் கூறிய இந்த மதுரகவி புதியவள்... எந்த முடிவையும் தைரியமாக எதிர்நோக்க அவள் தயாராக இருந்தாள்...

"நான் ரிச்சி கிட்ட தனியா பேசிட்டு வர்றேன்... அதுவரை நீங்க இங்கே வெயிட் பண்ணுங்க..." என்று கட்டளை போல் அண்ணனிடம் கூறினாள் அவள்...

"மது..." ஓங்கி ஒலித்த அண்ணனின் குரலை அலட்சியப்படுத்தியவள்,

"அண்ணா அமைதியாக இருந்தால் உங்களுக்கு நல்லது... இல்லை என்றால்...?" என்று நிறுத்திய தங்கையைக் கண்டு,

"உன்னால் என்னடி செய்ய முடியும்...?" என்று திருச்செல்வன் எகிற துவங்க...

"உங்களுக்கு வேண்டியது நான் தானே... பிறகு எதுக்கு இப்படிக் கத்தி ரகளைச் செய்றீங்க...? ஐந்து நிமிடத்தில் நான் ரிச்சியிடம் பேசிவிட்டு வந்து விடுகிறேன்..." என்றவள் சகோதரனின் பதிலை எதிர்பாராது கணவனை அழைத்துக் கொண்டு அவனது அலுவலக அறையை நோக்கி சென்றாள்...

அறைக்குள் நுழைந்ததும் தான் தாமதம் மதுரகவி ரிச்சர்ட்டை இறுக அணைத்துக் கொண்டு முத்தத்தால் குளிப்பாட்டினாள்... அவளது பேச்சால் காயப்பட்டுப் போயிருந்த அவனது மனம் அவளது இந்தச் செய்கையில் சற்றுக் குளிர்ந்தது... பதிலுக்கு அவனும் அவளை அணைத்துக் கொண்டான்... இப்போது அவளது செய்கையை அவன் தனதாக்கி கொண்ட போது அதை

மறுக்காது அவள் அவனுடன் ஒத்துழைத்தாள்... நீண்ட நேரம் கழித்தும் அவன் தன்னை விடுவதாய் இல்லை என்பதை உணர்ந்த மதுரகவி தானாக அவனை விட்டு விலகி நின்றாள்...

"ஏன் பேபி...?" என்று மீண்டும் தனது கையணைவில் அவளைக் கொண்டு வந்தவன் அவளது முகம் நோக்கி குனிந்த போது அவள் தடுத்தாள்...

"உன்னோடு வாழ்ந்த இந்த ஐந்து நாட்களில் என் ஆயுசுக்கும் வாழ வேண்டிய வாழ்வை நான் வாழ்ந்து விட்டேன் ரிச்சி... இனி என் உயிர் போனாலும் பரவாயில்லை... நான் சந்தோசமாய் அதற்குச் சம்மதிப்பேன்..."

"த்ச்சு... இது என்ன பேச்சு பேபி...?" என்று அவன் குறைப்பட்டுக் கொண்டான்... சிறிது கோபம் துளிர்த்தது அவனது முகத்தில்...

"நான் நடக்கப் போவதை தான் சொல்வேன் ரிச்சி..." என்று அவனை அணைத்துக் கொண்டு அழுதவள்,

"நான் உனக்கு வேண்டாம் ரிச்சி... நான் அதிர்ஷ்டம் இல்லாதவள்..."

"யார் அப்படிச் சொன்னது...? என் அதிர்ஷ்ட தேவதை நீ தான்..."

"இல்லை ரிச்சி... உன் வாழ்க்கையில் இந்த மது முடிந்து போன அத்தியாயம்... நீ வேறு ஒரு நல்ல பெண்ணைத் திருமணம் செய்து கொள் ரிச்சி... உனக்குப் பெண் குழந்தை பிறந்தால் மறக்காமல் என்னுடைய பெயர் வை..."

"அறைஞ்சிருவேன் அறைஞ்சு... என்ன பேச்சு பேசுகிறாய்...?" அவன் கோபத்தில் படபடக்க...

"நான் பேசுவேன்... ஏன்னா, இனி என்னால் பேச முடியுமோ என்னவோ..." என்றவளை கண்டு,

"என்ன உளருகிறாய்...?" என்று புரியாது கடிந்தான் ரிச்சர்ட்...

"இது உளறல் இல்லை ரிச்சி, உண்மை... நீயும், நானும் இந்த ஜென்மத்தில் சேர முடியாது என்பது தான் உண்மை... அடுத்த ஜென்மத்திலாவது நம் காதல் சேரணும்... அது ஒண்ணு தான் என்னுடைய இறுதி ஆசை..."

"இப்பவும் நாம் சேர்ந்து தான் இருக்கோம் பேபி... உன் அண்ணன் என்ன, உன் அப்பாவால் கூட நம்மை ஒண்ணும் பண்ண முடியாது..."

"அவங்களைப் பத்தி உனக்குத் தெரியாது ரிச்சி... அவங்க ரொம்ப மோசமானவங்க... அதே சமயம் ஆபத்தானவங்களும் கூட..." என்று பதட்டத்துடன் கூறியவள்,

"நீயும் நானும் பிரிவது தான் சரி ரிச்சி..."

"என் மேல் நம்பிக்கை இல்லையா...?"

'உன் மீது நம்பிக்கை இல்லாமலா...? அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற நீ உயிரோடு இருக்க வேண்டுமே... அவர்கள் என்னைக் கொன்றால் கூடப் பரவாயில்லை... உன்னை எதுவும் பண்ணி விட்டால்...? வேண்டாம் ரிச்சி... நீ ஆயிரம் வயசு வரை தீர்க்க ஆயுசோடு இருக்கணும்...' என்று மனதிற்குள் கதறியவள் வெளியில் சாதாரணமாய் முகத்தை வைத்துக் கொண்டு,

"உன்னைக் காதலித்த நானே உன்னை விட்டு போக முடிவு செய்து விட்டேன்... இதற்கு மேல் என்னை வற்புறுத்தாதே... என்னைக் கஷ்டப்படுத்தாதே ரிச்சி... என்னை என் வழியில் போக விடு..." என்றவள் அறை கதவை திறந்து கொண்டு வெளியில் செல்ல முயன்ற போது, அதைச் செயல்படுத்த முடியாதபடி அவனது பிடி அவளை இறுக பிடித்தது...

"ப்ளீஸ் ரிச்சி, என்னைப் போக விடு..."

"ஆறு வருடங்களாக உன்னை விட்டு பிடிச்சாச்சு பேபி... இனியும் உன்னை விட்டு விட நான் தயாராக இல்லை... நீ என்னை விட்டு போக நான் அனுமதிக்க மாட்டேன்..." என்றவனது குரலும், பிடியும் பிடிவாதமாய் இறுகியது...

"ரிச்சி... இதற்கு மேலும் நீ என்னை வற்புறுத்தினால் நான் செத்துவிடுவேன்... இது தான் உனக்கு வேண்டும் என்றால் நான் தாராளமாக உன்னுடன் இருக்கிறேன்... ஆனால் உன்னுடன் வந்த மறுநொடி நான் என்னுயிரை விட்டு விடுவேன்..." காதல் மனைவியின் வார்த்தைகளில் அவனது பிடி தானாகத் தளர்ந்தது...

"பேபி..." அவன் அதிர்வுடன் அவளைப் பார்த்தான்...

'எனக்கு வேறுவழி தெரியலை ரிச்சி...' என்று மனதிற்குள் மருகியவள், "இது தான் என் முடிவு ரிச்சி..." என்று உறுதியாகக் கூறியவள் விறுவிறுவென வெளியில் சென்று விட...

ரிச்சர்ட் ஒரு நொடி திகைத்து நின்றவன் பின் சுதாரித்துக் கொண்டு அவளின் பின்னேயே ஓடி வந்தான்... அதற்குள் அவள் திருச்செல்வன் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டாள்... அங்கு இரு மெய்க்காவர்களுக்கு இடையில் அமர்ந்திருந்த திருச்செல்வன் அவர்கள் இருவரையும் முறைத்துக் கொண்டு இருந்தான்...

"அண்ணா..."

தங்கையின் அழைப்பில் அவளை நிமிர்ந்து பார்த்தவன், "இந்த உறவு முறை இனி நம்மிடையே கிடையாது..." என்று அவளைக் கண்டு எரிச்சலுடன் மொழிந்தவன்,

"வா என்னோடு..." கோபமாய்க் கூறியபடி அவன் முன்னே நடந்தான்... அவனின் பின்னே பலியாடு போல் சென்ற மதுரகவி திரும்பி பார்த்தாள்...

அவளை நோக்கி வந்து கொண்டிருந்த கணவனைக் கண்டு 'வராதே' என்பது போல் சைகை செய்தவள் கண்ணீர் மல்க

அவனிடம் இருந்து விடைப்பெற்றாள்... அவனோ செய்வதறியாது திகைத்து போய் நின்றிருந்தான்...

காதலுக்கு வேறு யார் தடையாக வந்தாலும் எதிர்த்து நிற்கலாம்... ஆனால் காதலியே காதலுக்குத் தடையாக இருந்தால் அவன் என்ன செய்வான்...? அதுவும் காதலுக்காக அவளது உயிரை பணயம் வைக்கும் அளவுக்கு அவள் பேசும் போது அவன் வார்த்தைகளற்று மௌனமாகி போனான்... இது அவனுக்கே உண்டான சாபக்கேடா...? இரண்டாவது முறையாகக் காதலியை தொலைத்து விட்டு அவன் அநாதையாக நிற்கின்றான்...

சர்வ வல்லமை படைத்த வலிய ஆணவனைக் கோழையாக்கிட காதலால் மட்டுமே முடியும்... காதலனின் வலிமை அறியாது அண்ணனுக்குப் பயந்து அவனை விட்டு பிரிந்து சென்றாள் அந்தப் பேதை பெண்...!!!

ரிச்சர்ட் உடனே விஜய்க்கு அழைத்து விசயத்தைக் கூறினான்...

"திருப் பத்தி எனக்கு நல்லா தெரியும், அவன் நல்லவன்னு... ஆனா மது பேசிவிட்டு போனதை பார்க்கும் போது எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது... அவளுக்கு நீங்க தான் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்... என் மது எனக்கு உயிரோடு வேண்டும்..." எதற்கும் கலங்காத அந்த ஆண்மகனின் மனம் காதலியை நினைத்துக் கலங்கியது...

"மதுவை ஏன் போக விட்டீங்க ரிச்சர்ட்...? அவள் என்ன சொன்னாலும் நீங்க அவளைப் பிரிந்து போக விட்டிருக்கக் கூடாது..." விஜய் கூறினான்...

"உயிரை விட்டு விடுவேன் என்று அவள் சொல்லும் போது நான் என்ன செய்ய...? அவள் எனக்கு வேண்டும் விஜய்... அதுவும் உயிருடன்..." என்று மீண்டும் கலங்கியவனிடம் கடிந்து பேச மனம் இல்லாது,

"மதுவை பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு... நீங்க கவலைப்பட வேண்டாம்..." என்று

அவனுக்கு வாக்குறுதி அளித்தான் விஜய்... அவனும் காதலித்துத் திருமணம் செய்தவன் அல்லவா... அதனால் ரிச்சர்ட்டின் மனநிலையைப் புரிந்து கொண்டான்...

அதற்கு மேல் ரிச்சர்ட்டும் தாமதிக்கவில்லை... அவனும் சென்னை கிளம்பி விட்டான்...

நேராக விமானம் மூலம் வீட்டிற்கு மதுரகவியை அழைத்து வந்த திருச்செல்வன் வந்ததும் வராததுமாய் அவளைச் சராமாரியாக அடிக்கத் துவங்கினான்... மீனாட்சி மகனை தடுத்தார்...

"பொம்பளை பிள்ளையை ஏன்டா இப்படிக் கை நீட்டி அடிக்கிற...?" என்று அவர் கோபமாய்ச் சத்தம் போட்டார்...

"மது எப்படி உன் கூட வந்தாள்...? அவள் வேலை கத்துக்கிறதுக்காக ரிச்சர்ட் கூட அல்லவா அனுப்பி வைத்தேன்..." என்ற தந்தையை வெறுப்புடன் பார்த்தாள் மதுரகவி...

ஏனெனில் செந்தில்நாதனின் அடியாட்களால் மதுரகவி, ரிச்சர்ட்டை நெருங்க முடியவில்லை... ஆனால் மகன் இத்தனை எளிதாக மகளை அழைத்து வந்தது அவருக்குப் பெருத்த ஆச்சிரியம்... திருச்செல்வன் மதுரகவியின் அண்ணன் என்று நிறுவனத்தில் அறிமுகப்படுத்தியதால் அவனை உள்ளே அனுமதித்து இருந்தனர்... இதே இது தந்தை என்றால் அனுமதி கிடைத்து இருக்காது என்பதை அவர் அறிந்திருக்கவில்லை...

"வேலை கத்துக்கிறதுக்கு அனுப்பி வைச்சீங்களா...? இல்லை வேறு எதுவும் காரியத்துக்காக அனுப்பி வைச்சீங்களா...?" திருச்செல்வன் முதன்முறையாகத் தந்தையை முறைத்துக் கொண்டு எதிர் கேள்வி கேட்டான்...

"டேய்... அப்பாவை பார்த்து என்னடா பேசுற...?" என்று மகனை அதட்டினார் மீனாட்சி...

"என்ன திருச் சொல்ற...? நான் இவளை வேலை கத்துக்கிறதுக்காகத் தான் அனுப்பி வச்சேன்... நீ

இந்தளவுக்குக் கோபப்படும்படி இந்த மூதேவி அப்படி என்ன செய்தாள்...?" என்று செந்தில்நாதன் மகளை உறுத்து விழித்தபடி மகனிடம் கேள்வி கேட்டார்... கொஞ்சமும் மனசாட்சி இல்லாது நடந்து கொள்ள இவரால் மட்டுமே முடியும்...

மதுரகவியோ திமிராய் அவரைப் பார்த்து முறைத்துக் கொண்டு இருந்தாள்...

"அவன் சொல்றான், இவளும் அவனும் கணவன், மனைவி... எங்களுக்குக் கல்யாணம் ஆகிருச்சுன்னு... அதுக்கு ஏத்த மாதிரி இவளும் அவன் கூடச் சிரிச்சு பேசிக்கிட்டு, உரசிக்கிட்டு நடந்து வர்றாள்... கழுத்தில் தாலி இல்லாம இவளால் எப்படி இப்படி ஒரு காரியம் செய்ய முடிந்தது...? இப்படிக் கெட்டு சீரழிவதற்கா நாம இவளை இத்தனை கஷ்டப்பட்டு வளர்த்தோம்..." திருச்செல்வன் ஆற்றாமையில் பொங்கி விட்டான்...

"சிவ, சிவ..." என்று காதுகளைப் பொத்தியபடி அப்படியே அமர்ந்து விட்டார் மீனாட்சி...

"என்ன சொல்ற திரு...? எனக்கு இது எதுவுமே தெரியாதே..." என்று ஒன்றும் தெரியாதவர் போல் மகனிடம் கேட்ட செந்தில்நாதன் மகளைப் பார்த்து,

"இந்த வயசில் உனக்கு ஆம்பிளை சுகம் கேட்குதா...? உன்னை எல்லாம் உயிரோடு வச்சியிருந்தா தானே இப்படி எல்லாம் புத்தி போகும்... உன்னைக் கொன்னால் தான்டி என் மனசு ஆறும்..."

ரிச்சர்ட்டின் மீதுள்ள கோபத்தினை மகளிடத்தில் காட்டிட எண்ணி அவர் தனது பெல்ட்டை கழட்டி அவளை அடிக்க ஆரம்பித்தார்... மதுரகவியின் பூ உடலில் அவரது பெல்ட் தனது தடத்தை வலிமையாய் பதிவு செய்தது... திருச்செல்வன் ஒன்றும் செய்யாது கைகளைக் கட்டி கொண்டு தந்தை அடிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்... ஏனெனில் அவன் உண்மை அறியாது தங்கை மீது பெரும் கோபத்தில் இருந்தான்...

அவன் அன்பானவன் தான்... ஆனால் தவறு செய்பவர்களுக்கு அவன் தான் முதல் எதிரி...

"வேண்டாம் அவளை அடிக்காதீங்க..." என்று கதறிக் கொண்டு மீனாட்சி தான் இடையில் விழுந்து கணவரை தடுத்தார்... அன்னை மீது அடி விழுவதைக் கண்டு திருச்செல்வன் அவரைத் தடுத்தான்...

"விடுங்கப்பா..."

"அது எப்படி விட முடியும்...? இது வெளியில் தெரிஞ்சா நம்ம மானம், மரியாதை என்னாகும்... பேசாம இவளை விசத்தை வைச்சு கொன்னுருடா..." என்றார் கொஞ்சமும் யோசியாது இரக்கம் இல்லாது...

அவரது மனதில் எங்கே மகள் தன்னைப் பற்றிய உண்மையை மனைவி, மகனிடம் கூறிவிடுவாளோ என்று பயந்து அவரே முந்தி கொண்டார்... இதை மதுரகவி உணர்ந்த போதும் அவள் ஒரு வார்த்தை பேசவில்லை... தனது அன்னைக்காக அனைத்தையும் அமைதியாகத் தாங்கி கொண்டாள்...

"இங்கே பாருங்க... உங்க நாட்டாமையை வீட்டுக்கு வெளியில் வச்சுக்கோங்க... இந்தக் காலத்தில் யார் தான் தப்பு பண்ணலை... மது ஏதோ தெரியாம பண்ணிட்டாள்... அடுத்த முகூர்த்தத்தில் என் அண்ணன் மகனுக்கும், மதுவுக்கும் கல்யாணம் பண்ணி வைக்கும் வழியைப் பாருங்க... என் அண்ணன் கிட்ட நான் பேசுறேன்... அதை விட்டுட்டு நீங்க இப்படிக் கொலை அது இதுன்னு பேசினா நான் மனுசியா இருக்க மாட்டேன்..." என்று மீனாட்சி பெண் சிங்கமாய்க் கர்ஜிக்கவும்... அந்த ஆண் சிங்கம் அசிங்கமாய்ப் பின்வாங்கியது...

"அதுக்குச் சொல்லலை மீனும்மா..."

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்..." என்று உறுதியான குரலில் பேசியவர் மகள் புறம் திரும்பி,

"உண்மையைச் சொல் மது... அங்கு என்ன நடந்தது...?" என்று கேட்க...

மதுரகவி தீர்க்கமாய்த் தந்தையை உறுத்து விழித்தாள்... அதில் அவரது முகம் பேயறைந்தது போலானது...

"சொல்லுடி..." மீனாட்சி அவளை உலுக்கவும் அவள் வாய் திறந்தாள்...

"அங்கு நடந்ததைப் பத்தி நான் எதுவும் பேச விரும்பலை... நான் இப்போ இங்கே வந்துட்டேன்... இனி நான் இப்படிப் பண்ண மாட்டேன்... அது மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்..." என்று தாய்க்கு அவள் உறுதி தர... அதில் மீனாட்சியின் முகம் மலர்ந்தது... செந்தில்நாதனுக்கு அப்போது தான் நிம்மதியாக இருந்தது...

'ஆனால் ஒன்றும்மா... உங்க அண்ணன் மகன் என் பிணத்தின் கழுத்தில் தான் தாலி கட்ட முடியும்...' என்று உறுதியாய் மனதிற்குள் நினைத்த மகளின் நினைவை அந்தத் தாய் அறிந்திருக்கவில்லை... ரிச்சர்ட்டை தவிர வேறு யாரையும் அவளால் கணவனாய் ஏற்றுக் கொள்ள முடியாது... அது தான் நிதர்சனம்...

"திரு... மது தான் இவ்வளவு சொல்கிறாளே... இனி அவள் நம் பேச்சு கேட்டு ஒழுங்காக இருப்பாள்..." என்று மீனாட்சி மகனிடம் கூற...

திருச்செல்வன் அப்போதும் தங்கையை நம்பாது பார்த்தான்... மதியம் தான் ரிச்சர்ட்டிடம் அந்த உருகு உருகினாள்... மாலைக்குள் அவளிடம் வந்த இந்த மாற்றத்தை கண்டு அவன் யோசனையானான்...

செந்தில்நாதன் மகனை தனியே அழைத்துக் கொண்டு வந்தார்...

"உங்கம்மா சொல்றதை கேட்டால் நாம் நம் சாதி, சனம் முன்னாடி தலை குனிய வேண்டி வரும் திரு... அதனால் நான் சொல்றதை செய்... மதுவை நாம் கௌரவக் கொலை

செய்து விடலாம்... வெளியில் யாருக்கும் தெரியாது நான் பார்த்து கொள்கிறேன்..."

"இல்லை வேண்டாம்ப்பா... எனக்கு என்னமோ அம்மா சொல்றது தான் சரி வரும்ன்னு தோணுது... மதுவை சந்தோசமாக வாழ வைக்காமல், அவளைச் சாகடிப்பதால் நமக்கு என்னப்பா நன்மை இருக்கு...? என்ன இருந்தாலும் அவள் என் தங்கைப்பா... அவள் மனசு மாறுகிற வரை அவளுக்கு நான் அட்வைஸ் பண்ணுவேன்... கண்டிப்பேன்... இல்லைன்னா அடிச்சு திருத்துவேன்... நிச்சயம் ஒரு நாள் அவள் மனசு மாறுவாள்... எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"திரு... நாம பண்ணாத கௌரவக் கொலைகளா...?"

"நாம்ன்னு இதில் என்னை ஏன்ப்பா உங்களோட கூட்டு சேர்க்கறீங்க...? நீங்க சொன்ன வேலையை நான் செய்தேன், அவ்வளவு தான்... அதாவது நம்ம சாதி, சனத்தில் காதலிச்சு வீட்டை விட்டு ஓடி போனவங்களைத் தேடி கண்டுபிடிச்சு கூட்டிட்டு வர்றது மட்டுமே எனது வேலை... மத்தபடி அவங்களை என்ன பண்ணினீங்கன்னு உங்களுக்குத் தான் தெரியும்..." என்று அசால்ட்டாய் கூறியவன் அங்கிருந்து சென்று விட்டான்... மகன் இப்படிப் பட்டும் படாமல் பேசியது கேட்டு செந்தில்நாதன் நெஞ்சை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டார்...

தங்கை பற்றிய யோசனையில் திருச்செல்வன் தன்னிடம் இந்த விசயத்தை அலைப்பேசியில் தெரிவித்த அந்தப் பெண்ணைப் பற்றித் தந்தையிடத்தில் கூற மறந்து போனான்...

******************

விஜயின் முன் ரிச்சர்ட் கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்து இருந்தான்... அவனைப் பார்க்கும் போது விஜய்க்கு வருத்தமாக இருந்த அதே சமயம், சிரிப்பாகவும் இருந்தது... எத்தகைய வலிமை உடையவனையும் இந்தக் காதல் கோழையாக்குகிறதே என்று...

"மிஸ்டர். ரிச்சர்ட்... உங்க மதுவின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை..." அதைக் கேட்டு ரிச்சர்ட் நிம்மதியுற்றான்...

"ஆனால் அவளுக்குத் திருமண ஏற்பாடுகள் நடக்கிறது என்று நினைக்கிறேன்..."

விஜயின் வார்த்தையில் ரிச்சர்ட் அஞ்சவில்லை... மாறாகக் கர்வமாக நிமிர்ந்து அமர்ந்தான்...

"ஒரு போதும் மது அதற்குச் சம்மதிக்க மாட்டாள்..." என்று சிறிது திமிர் கலந்து ஒலித்தது அவனது குரல்... இந்த அகந்தை காதலில் மட்டுமே சாத்தியம்...

"உண்மை தான்... நல்லதே நடக்கும் என்று நம்புவோமாக..." என்ற விஜயை ஆமோதித்துப் புன்னகைத்த ரிச்சர்ட்,

"செந்தில்நாதனின் விசயத்தில் நீங்க என்ன ஆக்சன் எடுத்து இருக்கீங்க...?"

"இன்னும் மூன்று நாட்களில் எங்களது ஆக்சன் தீவிரமாக இருக்கும்..."

"ஜாமீனில் வெளிவர முடியாதபடி இருக்குமா...?"

"நிச்சயம் எங்களால் முடிஞ்சதை நாங்க செய்வோம் மிஸ்டர். ரிச்சர்ட்..."

"அப்போ ஜாமீனில் வெளிவர சான்ஸ் இருக்குன்னு சொல்லுங்க..." ரிச்சர்ட் கேட்டதற்குச் சிரித்து மழுப்பினான் விஜய்...

"உங்க நாட்டு சட்ட திட்டத்தில் நாங்க தலையிட முடியாது... ஆனால் தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட வேண்டும்..."

"நிச்சயம் தண்டனை உண்டு... நீங்க கவலைப்படாதீங்க ரிச்சர்ட்..."

"எப்படி...?"

"எங்களது பாணியில்..." என்று மர்ம புன்னகை புரிந்தவனின் புன்னகைக்கான அர்த்தம் புரிந்தவனாய் ரிச்சர்ட்டும் நிம்மதியாய் புன்னகைத்தான்...

"நான் மதுவை பார்க்கணுமே..."

ஆறடிக்கும் அதிகமான உயரம் கொண்ட அந்த ஆண்மகன் சிறு குழந்தை போன்று தவிப்புடன் கேட்டதைக் கண்டு விஜய்க்கு மனம் கேட்கவில்லை...

"விரைவில் அதற்கான ஏற்பாடு செய்கிறேன்... நீங்க கவலைப்படாம போங்க..." என்றவன் ரிச்சர்ட்டிற்கு நம்பிக்கை அளித்து அனுப்பி வைத்தான்...

அன்றே விஜய் மனைவியிடம், "கயலோட பிரெண்ட் தாமரையை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வந்திரு..."

"ஏன் விஜூ...?"

"படிக்கிற பொண்ணு... இனி அங்கே நடக்கப் போகிற விசயங்களைப் பார்த்து மனசு வருத்தப்படக் கூடாது இல்லையா... அதனால் அந்தப் பொண்ணோட படிப்பு பாதிக்கப்பட்டிருச்சின்னா...? அதனால் தான் சொல்கிறேன்... தாமரையும் நம்ம பொண்ணு மாதிரி தான்..."

"ம்... நீ சொல்றதும் சரி தான் விஜூ..." என்ற முத்துபேச்சி அன்றே அதைச் செயலாற்றினாள்...

அவள் நேரே மீனாட்சியிடம் அனுமதி கேட்டாள்... மூத்தமகளின் பிரச்சினையில் அவருக்குமே சின்ன மகளைக் கவனிக்க முடியாது போனது... அவருக்கு விஜய், முத்துபேச்சி பற்றி நன்கு தெரியும்... அதை விடக் கயல்விழி தாமரையின் தோழியும் கூட... அதனால் இதற்கு உடனே சம்மதித்தார்... கணவரிடம் கூட இது பற்றிக் கேட்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றவில்லை... அந்தளவிற்கு ஒரு இறுக்கமான சூழ்நிலை வீட்டில் நிலவியது... தாமரையிடம் அதைக் கூறிய போது அவள் மகிழ்ச்சியில் துள்ளி குதித்தாள்...

"கயல் வீட்டுக்கு நான் போகிறேன்ம்மா..." என்று அன்னையை முத்தமிட்டுச் சந்தோசம் கொண்டாடினாள் அந்தச் சின்னச் சிட்டு...

அக்காவிடம் அவள் விடைப்பெற்ற போது, "ஆல் த பெஸ்ட் தாமரை..." என்று பெரியவள் தங்கையை வாழ்த்தினாள்... அவளது துயரம் அவளோடு...

மீனாட்சி மகளைத் தானே கொண்டு போய் முத்துபேச்சி வீட்டில் விட்டு விட்டு நன்றாகப் படித்துப் பரீட்சை எழுதும்படி அவளுக்கு அறிவுறுத்திவிட்டு வந்தார்...

அவரது செல்ல மகளை உயிருடன் பார்ப்பது இது தான் கடைசித் தடவை என்று அப்போது அவர் அறிந்திருக்கவில்லை... இனி மகளை உயிருடன் பார்க்க போவதில்லை என்று தெரிந்திருந்தால் அவர் மகளை அங்கே விட்டு விட்டு வந்திருக்க மாட்டாரோ...???

மதுரமாகும்...!!!

செந்தில்நாதன் மந்தாகினியின் வீட்டிற்கு வந்த போது ஏதோ ஒரு வித்தியாசமான சூழ்நிலை நிலவுவதை அறிந்து யோசனையாய் சுற்றும் முற்றும் பார்த்தார்... எப்போதும் அவர் வரவை அறிந்ததும் ஓடி வந்து புன்னகையுடன் வரவேற்கும் மந்தாகினியை இன்று காணவில்லை... அதற்குப் பதிலாகப் பணிப்பெண் வந்து கதவை திறந்தவள்,

"அம்மா வரும் வரை வெய்ட் பண்ண சொன்னாங்க..." என்று அவள் கூறியதும்,

"என்னது...? எனக்கேவா...?" என்று அவர் அவளிடம் எகிற...

"ஐயா... அம்மா சொல்ல சொன்னதை நான் சொன்னேன்... அவ்வளவு தான்... எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க..." என்று நடுங்கியபடி கூறியவள் அங்கிருந்து ஓடி விட்டாள்...

அப்போது அங்கு வந்த பவானி அவரைச் சிறிதும் கண்டு கொள்ளாது சென்று விட்டார்... இப்படி ஒரு அலட்சியத்தை அவர் இதுவரை கண்டது இல்லை... மனம் உலைக்களமாய்க் கொதிக்க ஆத்திரத்துடன் மந்தாகினியை தேடி சென்றார்...

அங்கு அறையில் மந்தாகினியின் முகத்திற்கு ஒரு பெண் 'பேசியல்' செய்து கொண்டு இருந்தாள்... மற்றொரு பெண் அவளது காலிற்கு 'மசாஜ்' செய்து கொண்டிருந்தாள்... மந்தாகினி விச்ராந்தியாகச் சாய்வு நாற்காலியில் சுகமாய் அமர்ந்திருந்தாள்...

செந்தில்நாதனை கண்டதும் அந்தப் பெண்கள் தங்களது வேலையை நிறுத்தி விட்டு வெளியில் போக முயன்றனர்... அவர்களது விலகலில் கண்களைத் திறந்த மந்தாகினி அங்கு நின்று கொண்டிருந்த செந்தில்நாதனை கண்டு அலட்சியமாகப் பார்த்தபடி,

"நீங்க கொஞ்ச நேரம் வெளியில் வெய்ட் பண்ணுங்க... நான் இப்போ வந்து விடுகிறேன்..."

அவளது விழி மொழி பேசிய அலட்சியத்திற்கும், உதடுகள் பேசிய கொஞ்சல் மொழிகளுக்கும் சிறிதும் சம்பந்தம் இல்லாது இருப்பதைக் கண்டு அவர் யோசித்தபடி வெளியில் சென்றார்...

அந்த இரு பெண்களும் விழி விரித்து நின்றிருந்த கோலம் கண்டு மந்தாகினி சிரித்தபடி, "அவர் என்னோட கணவர்..." என்று கூறியவள்,

"நீங்க உங்க வேலையைப் பாருங்க..." என்று சொல்ல... அவர்கள் அமைதியாகத் தங்களது வேலையைப் பார்த்தனர்...

சுமார் ஒரு மணி நேரம் வேண்டும் என்றே அவரைக் காக்க வைத்து விட்டுத் தாமதமாகத் தயாராகி வந்தாள் மந்தாகினி...

"ஹாய் செந்தில்... எதுவும் சாப்பிட்டீங்களா...?" என்று கேட்டவள் அவரது பதிலை எதிர்பாராது,

"இந்த அம்மா இவ்வளவு நேரம் என்ன செஞ்சிக்கிட்டு இருக்காங்க...? அம்மா, அம்மா..." என்று உள்பக்கமாய்க் குரல் கொடுக்க... அது பவானியின் காதுகளில் விழுந்தாலும் அவர் கண்டு கொள்ளாது அவரது அறையில் இருந்து விட்டார்...

"உன் உபசாரம் எல்லாம் எனக்கு எதுவும் தேவையில்லை... முதலில் அந்த வீடியோ ஆதாரங்களை அழித்து விடு..."

"எதற்குச் செந்தில்...? அதை அழித்த நொடி நீங்க என்னை அழித்து விடுவதற்கா...?"

அவளது வார்த்தையில் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தவர் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அப்படி எல்லாம் இல்லை மினி..."

"மினி... என் பெயரை போலவே என்னைக் கடைசிவரை சின்ன வீடாகவே வச்சிட்ட இல்லையா...? இப்போ இந்த ஆதாரத்தை அழித்து உன் கையால் நான் சாகணும்ன்னு எனக்கு என்ன தலையெழுத்தா...? நான் சாதிக்கப் பிறந்தவள்... சாவதற்கு இல்லை... இதை வைத்து நான் நிறையச் சாதிக்க வேண்டியிருக்கிறது... அதனால் வீடியோ கடைசிவரை என் கூடவே பத்திரமாக இருக்கும்..." என்று திமிராய் கூறியவள் மீது அவர் ஆத்திரத்துடன் பாய்ந்து விட்டார்...

"அன்னைக்கு என்னடி சொன்ன...? இன்னைக்கு என்னடி இப்படி மாத்தி பேசுற...? உன்னை எல்லாம் உயிரோடு விடக் கூடாதுடி..." என்று அவளது கழுத்தை பிடித்து ஆவேசமாக அவர் நெறித்தார்...

அதைக் கண்டு பயப்படாது அவள் தெனாவெட்டாய் அவரைப் பார்த்தாள்...

"நான் உயிரோடு இருந்தாலாவது அந்த வீடியோ என்னிடம் பத்திரமாக இருக்கும்... நான் செத்துப் போனால் அடுத்த நொடி அது எல்லாச் சேனலிலும் இலவசமா ஒளிபரப்பப்படும்... உனக்கு எது விருப்பமோ அதை நீ செய்து கொள்..." அவளது வார்த்தையில் இயலாமையுடன் அவர் தனது கைகளை அகற்றினார்...

"நீ பண்றது கொஞ்சமும் சரியில்லை..."

"என்ன சரியில்லை...? அதை வைத்து உங்க கிட்ட காசு, பணம் கேட்டு நான் மிரட்டினேனா...? இல்லையே... ஒரு பாதுகாப்புக்கு அது என்னிடம் இருக்கட்டும் அவ்வளவே... மத்தபடி நம் உறவுக்கு இடையில் அந்த வீடியோ வராது... எனக்கு வேண்டியது எல்லாம் உங்க மூலமா ஒவ்வொண்ணா நிறைவேற போகுது... அது போல் உங்களது ஆசையும்... இதுக்கு இடையில் நீங்க ஏன் இந்த வீடியோவை இழுக்கிறீங்க...? நீங்க என் விசயத்தில் ஒழுங்கா நடந்துக்கிட்டா நானும் உண்மையா நடந்து கொள்வேன்... இல்லைன்னா மீடியா முன்னாடி உங்களை அசிங்கப்படுத்தி விடுவேன்..."

"அசிங்கப்படுறது ஒண்ணும் எனக்குப் புதுசில்லை... என்னைக்கு உங்களுக்குச் சின்ன வீடா வர சம்மதிச்சேனோ அன்னைக்கே நான் அசிங்கப்பட்டுட்டேன்... ஆனா உங்களுக்கு அப்படி இல்லை... உங்க மந்திரி பதவி போகும்... கட்சி உங்க மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்... அதுக்கு அப்புறம் நீங்க நினைச்சாலும் இந்த மாதிரி புகழோடு மீண்டும் வர முடியாது... இது எல்லாம் உங்களுக்குத் தேவையா செந்தில்...? பேசாம என்னைச் சந்தோசப்படுத்திட்டு அப்படியே நீங்களும் சந்தோசமா இருங்க... இப்படி இருப்பது நம்ம ரெண்டு பேருக்குமே நல்லது..." என்று நீளமாகப் பேசி முடித்தவள் அடுத்த நொடி அவரைக் கண்டு மையலுடன் இரு கைகளை நீட்டி,

"டேக் மீ செந்தில்..." என்று அவரைச் சரசமாக அழைக்க... வேறுவழியின்றி அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டவருக்கு என்றும் இல்லாத வண்ணமாக மந்தாகினி மிகவும் கனமாய்க் கனத்தாள்...

அவளோடு உறவாடும் போது அவரால் அவளுடன் ஒன்ற முடியவில்லை... அந்தளவிற்கு அவருக்கு வெறுப்பாய் இருந்தது... தவறு செய்தாலும் தடயம் இல்லாது செய்பவர் அவளது விசயத்தில் வசமாய்ச் சிக்கி கொண்டார்... முதலில் அவர் தனது தேவைக்கு அவளை வைத்திருந்து போல், இப்போது அவள் தனது தேவைக்கு அவரை அடிமையாய் வைத்திருக்க எண்ணினாள்... ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்பது இது தானோ...

**********************

முத்துபேச்சி சொன்னது போல் தனது அதிரடி ஆட்டத்தை ஆரம்பித்து விட்டாள்... சென்னை மாவட்ட ஆட்சியர் மூலம் செந்தில்நாதனுக்கு ஒரு அறிக்கை அனுப்பி வைத்தாள்... அதில் இருந்த சாராம்சம் இது தான்...

நில ஆக்கிரமிப்பு சட்டப்படி அரசாங்க நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள செந்தில்நாதனுக்குப் பிரிவு 7ன் கீழ் மாவட்ட ஆட்சியர் முதலில் அறிவிப்புச் சார்வு செய்தார்... அந்த அறிவிப்பில் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருக்கும்

நிலத்தின் விவரங்களைக் குறிப்பிட்டு இருந்தார்... மற்றும் மேற்படி சட்டத்தின் பிரிவு 6ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் விளக்கம் அளிக்குமாறு செந்தில்நாதனை அவர் கேட்டுக் கொண்டார்...

மேற்படி அறிவிப்பை தமிழ்நாடு வருவாய் வசூலிப்புச் சட்டம் 1864ன் பிரிவு 25ன் கீழ் கூறியுள்ளபடி தான் சார்வு செய்ய வேண்டும்... பிரிவு 7ன் அனுப்பப்பட்ட அறிவிப்பிற்கு உரிய விளக்கத்தைச் செந்தில்நாதன் தரவில்லை என்றாலோ அல்லது விளக்கம் திருப்தியுறும் வகையில் இல்லாமல் இருந்தாலோ பிரிவு 6ன் அவரை வெளியேற்ற அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்...

ஆனாலும் செந்தில்நாதனின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க முடியாதபடி சில சட்ட சிக்கல்கள் அதில் இருக்கத் தான் செய்தது... அது என்னவென்றால்,

அவரை வெளியேற்ற பிரிவு 6ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு அதனை எதிர்த்து அவர் பிரிவு 10ன் கீழ் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்... மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட தீர்ப்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து நில நிர்வாக ஆணையரிடம் இரண்டாவது மேல்முறையீடு செய்து கொள்ளலாம்... நில நிர்வாக ஆணையர் உத்தரவுக்கு எதிராக ஆக்கிரமிப்பாளர் உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு பிரிவு 10(அ) ன்படி தாக்கல் செய்யலாம்... மொத்தத்தில் அரசாங்கம் ஆக்கிரமிப்பாளரை தன் இஷ்டப்படி உடனடியாக வெளியேற்ற முடியாது...

அதனால் தான் முத்துபேச்சி அமைதியாக இந்த விசயத்தைக் கையாண்டாள்... சலனம் இல்லாத குளத்தில் சிறு கல்லை எறிந்து சலனத்தை உண்டாக்கி விட்டாள்... இனி குழம்பிய குளத்தில் மீனை பிடிப்பது அவளது கணவனின் சாமர்த்தியம்... அதன் விளைவாகத் தான் அவள் தன் தரப்பில் இருந்து முதலடி எடுத்து வைத்தது...

யாரும் நெருங்க பயப்படும் செந்தில்நாதனை அவள் தைரியமாக எதிர்கொண்டாள்...

இந்த நில ஆக்கிரமிப்பு விசயத்தில் செந்தில்நாதன் சம்பந்தப்பட்டு இருப்பது கூட மக்களிடையே பெருத்த ஆச்சிரியத்தை ஏற்படுத்தவில்லை... அந்த நிலத்தை அவர் மந்தாகினி என்கிற பெண்ணுக்குத் தொழில் தொடங்க கொடுத்தது தான் எல்லோரின் புருவங்களையும் ஆச்சிரியமாய் உயர செய்தது... யாரிந்த பெண் என்று அவர்களது மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்ய ஆரம்பித்தது...

ஏனெனில் அவரது மகள் மதுரகவி பெயரில் வெளிநாட்டு நிறுவனத்தோடு அவர் இதே தொழில் ஒப்பந்தத்தைப் போட்டது எல்லோருக்கும் தெரியும்... இப்போது இதில் திடீரென்று யாரோ ஒரு மந்தாகினி என்கிற பெண்ணின் பெயர் அடிபடுவது ஊடகங்களுக்கு வெகு சுவாரஸ்யமான தகவலாக இருந்தது... அந்த மந்தாகினி பற்றிய விவரங்களைத் துப்பறிய 'நான், நீ' என்று அங்குப் பெருத்த போட்டி நிலவியது...

இந்த விவகாரம் வெடித்த அடுத்த நொடி ரிச்சர்ட் தனது நிறுவன சார்பாகப் பொது நிர்வாகி மூலம் ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கச் செய்தான்... அதாவது நில ஆக்கிரமிப்பு விசயம் தங்களுக்குத் தெரியாது எனவும், இப்போது தெரிந்தவுடன் தங்களது நிறுவனம் அந்த ஒப்பந்தத்தைக் காரணம் ஏதுமின்றி முறித்துக் கொள்கிறது எனவும் தெளிவுப்படக் கூறிவிட்டான்... அவன் எந்த ஊடகங்களின் முன்பும் தோன்றவில்லை...

அந்தக் கணம் ரிச்சர்ட்டின் மனதில் மதுரகவி பற்றிய கவலை அரித்தது... ஏனெனில் மந்தாகினி பற்றி விஜய் மூலம் அவன் கேள்விப்பட்ட விசயங்கள் அப்படி... உயிர் தோழியின் துரோகத்தை அவளால் தாங்கி கொள்ள முடியுமா என்று அவனுக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது...

ரிச்சர்ட்டின் அறிவிப்பு மந்தாகினியை கொதிக்கச் செய்தது... இதற்காகத் தானே அவள் இந்தளவிற்குப்

பாடுபட்டது... அதை விடச் செந்தில்நாதன் மீது அப்படி ஒரு ஆத்திரம் வந்தது... இப்படித் தன்னை ஏமாற்றி விட்டாரே என்று...

ஒப்பந்த பத்திரத்தில் இருந்த மந்தாகினியின் அடையாள அட்டையில் இருந்த முகவரி கொண்டு ஊடகங்கள் அவளது வீட்டினை முற்றுகையிட்டது... இந்த விசயத்தில் செந்தில்நாதனால் பொய்யான விவரங்களைக் கொடுக்க முடியாது போனது... இல்லையென்றால் அவர் கொடுத்து இருப்பார்... உண்மையை மறைப்பதில் தான் அவர் எமகாதகன் ஆயிற்றே...

"இப்போ என்ன பாப்பா பண்ண போற...?" பவானி பயத்துடன் மகளைப் பார்த்தார்...

மந்தாகினிக்கும் உள்ளுக்குள் பயமாகத் தான் இருந்தது... தந்தை இருந்த வரை அவரது பாதுகாப்பில் இருந்தாள்... அதன் பின் செந்தில்நாதனின் பாதுகாப்பில்... அந்தப் பாதுகாப்பு பற்றிச் சந்தேகம் எழுந்ததில் இப்போது அவரையும் பகைத்து கொண்டாயிற்று... இப்போது மீண்டும் அதே போன்றதொரு அநாதரவான உணர்வு... ஆனாலும் தைரியத்தை இழக்காது அவள் நிமிர்வாய் அன்னையைப் பார்த்தாள்...

"முழுவதும் நனைஞ்ச பின்னாடி முக்காடு எதுக்கும்மா...? எப்படியும் நாளை என்னைப் பற்றி விசாரிச்சுப் பத்திரிக்கையில் நாறடிக்கத் தான் போறாங்க... அதுக்கு இடம் கொடுக்காது அந்தாளை நாறடிச்சு நான் மட்டும் தப்பித்துக் கொள்ளப் போகிறேன்..." என்றவளை,

"அது எப்படிப் பாப்பா...?" என்று புரியாது பார்த்தார் பவானி...

"நான் பேசும் போது ஆமாம் சாமி மட்டும் போடுங்க... கூடவே கண்ணுல கொஞ்சம் கண்ணீரை காட்டுங்க... அது போதும்...மத்ததை நான் பார்த்துக்கிறேன்..."

மகளின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டவராய் அவர் அவளைப் பின்தொடர்ந்தார்... மந்தாகினி வெளியில் வந்ததும் அவள் மீது புகைப்படக்கருவி நாலாப்பக்கமும் இருந்து வெளிச்சத்தை வாரியிறைத்தது... அதற்கு அஞ்சாமல் அவள் அங்கு வந்து நின்றாள்...

செந்தில்நாதனுக்கும், அவளுக்குமான தொடர்பை ஊடகங்கள் மாற்றி மாற்றிக் கேள்வி கேட்ட போது வேண்டும் என்றே கண்களில் கண்ணீரை வரவழைத்து கொண்டாள்... மகளைக் கண்டு அன்னையும் கண்ணீர் விட்டார்...

"அவரோட பெண்ணும், நானும் ஸ்கூல் படிச்சப்ப இருந்து நெருங்கிய தோழிகள்... நான் ப்ளஸ்டூ படித்து முடிக்கும் போது என் அப்பா இறந்து போயிட்டார்... குடும்பக் கஷ்டம் காரணமா மதுவின் மூலமா அவங்கப்பாவோட செல்வாக்கை பயன்படுத்தி எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்கச் சொன்னேன்... மது அவரை நேரில் சந்திப்பதற்கு அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிக் கொடுத்தாள்... நானும் அவரை நேரில் பார்க்க போனேன்... ஆனால் அங்கு அவர் என்னை மானபங்கப்படுத்தி விட்டார்... அதை வீடியோவா எடுத்து வச்சு என்னை அவரோட நிரந்தரச் சின்ன வீடா ஆக்கிக்கிட்டார்... இப்போ வரை எங்க உறவை வீடியோ எடுத்து வச்சு என்னை மிரட்டி உறவு கொள்கிறார்... அவரிடம் இருந்து என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள்..." என்று நீலி கண்ணீர் வடித்தாள் அவள்...

பவானியே மகளின் நடிப்பை கண்டு அசந்து போய்விட்டார்... அது போல் ஊடகவியலாளர்களும் அவளைப் பரிதாபமாகப் பார்த்தனர்... அப்படி இருந்தும் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் அவளைப் பார்த்து,

"அப்படிப்பட்ட ஒருவர் எப்படி உங்கள் பெயரில் தொழில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்தார்...?" என்று குறுக்குக் கேள்வி கேட்டார்... அவரை எரிச்சலுடன் பார்த்தாள் மந்தாகினி...

"அவரது சொந்த பெயரில் இவ்வளவு முதலீடு செய்து தொழில் செய்ய முடியுமா...? அதனால் பினாமியாக என்னைப் போட்டு ஆரம்பித்தார்... மத்தபடி எனக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை..." என்று அவள் சமயோஜிதமாய்ப் பதிலளித்துத் தப்பித்துக் கொண்டாள்... தன் கைவசம் இருந்த வீடியோவை ஆதாரமாக அவள் போட்டு காண்பிக்க... அது அப்படியே தொலைக்காட்சியில் நிழலுருவமாய் நேரடியாய் ஒளிபரப்பானது...

இதை எல்லாம் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பில் பார்த்துக் கொண்டு இருந்த திருச்செல்வன் தனது தந்தையைக் கொலைவெறியுடன் பார்த்தான்... ஏனெனில் சற்று நேரத்திற்கு முன்பு வரை 'மந்தாகினி என்று எனக்கு யாரையும் தெரியாது...? முத்துபேச்சி எனக்கு எதிராகச் சதி செய்கிறாள்...' என்று இந்தச் செய்தியை மறுத்து கொண்டிருந்தவர் இப்போது திரையில் தோன்றி பேட்டி அளித்த மந்தாகினியின் பேச்சில் மனதில் கிலி கொண்டவராய் சிந்திக்கும் திறனற்று நாற்காலியில் அசையாது அமர்ந்திருந்தார்...

மதுரகவி, திருச்செல்வன், மீனாட்சி மூவரும் திரையில் தோன்றிய மந்தாகினியை கண்டு முதலில் திகைத்து போயினர்... அதன் பின்னர் அவளது பேட்டி கண்டு அதிர்ச்சியில் பேச முடியாது அப்படியே மரமாய் உணர்வற்று நின்றிருந்தனர்...

'மந்தியா இப்படிச் செய்தாள்...? தோழிக்கு உதவியது தவறா...?' என்று மனம் குமுறியவளாய் மதுரகவி செயலற்று போய் நின்றுவிட்டாள்...

'எத்தனை நாள் இந்தப் பெண்ணை நான் பெத்த பொண்ணு போல் பாசம் காட்டி சாப்பாடு போட்டிருப்பேன்... ஆனா அவள்...? அவளைச் சொல்லி குத்தமில்லை... எல்லாம் இந்தாளை சொல்லணும்...' ஆத்திரத்தில் கணவனை எரித்து விடுவது போல் பார்த்தார் மீனாட்சி...

'என் தங்கை போல் எண்ணியவள் என் அப்பாவின் சின்ன வீடா...?' திருச்செல்வனுக்கு அந்த நினைவே அருவருப்பாக

இருந்தது... அடுத்த நொடி அவன் தனது தந்தையின் சட்டையைப் பிடித்துத் தூக்கி இருந்தான்...

"எவ்வளவு கேவலமான மனுசன் நீ...? அந்தப் பொண்ணு வீட்டுக்கு வரும் போது எல்லாம், என்னோட தங்கச்சியோட பிரெண்ட் எனக்கும் தங்கச்சி மாதிரின்னு நினைச்சு தானே நான் அந்தப் பொண்ணைப் பாசமா பார்த்தேன்... ஆனா உனக்கு மட்டும் எப்படிய்யா வேறு மாதிரி பார்க்க தோணுச்சு... உன் மகள் வயசுள்ள பொண்ணைப் போய்... ச்சே... நீயெல்லாம் மனுசனா... மிருகம்ய்யா..." என்று கூறியபடி அவரின் முகத்தில் அவன் காறி உமிழ்ந்தான்...

அதில் செந்தில்நாதன் கோபம் கொண்டவராய், "டேய், என்னைக் கேள்வி கேட்கும் வேலை எல்லாம் வச்சுக்காதே... ஆமாம்டா, நான் அப்படித் தான்... இவள் மட்டுமல்ல, இன்னும் பல பொண்ணுங்க கூட எனக்குத் தொடர்பு இருக்கிறது... உன்னால் என்னை என்ன பண்ண முடியும்...? என்னை வச்சு தான் உனக்கு அரசியலில் நல்ல எதிர்காலம் இருக்கு... வீணா என்னைப் பகைச்சுக்காதே... வேணும்ன்னா நீயும் இது போல் இருந்துக்கோ... நான் உன்னை எதுவும் கேட்க போறதில்லை..." என்று தெனாவெட்டாய் பதில் கூற...

அடுத்தக் கணம் செந்தில்நாதன் கீழே மல்லாக்க விழுந்து கிடந்தார்... மீனாட்சி தான் அவரைப் பிடித்துக் கீழே தள்ளியிருந்தார்... அவரது கையில் வீட்டை பெருக்கும் துடைப்பம் இருந்தது... விளக்கமாறு என்று சொல்லப்படும் அது ஈர்க்கங்குச்சியினால் (தென்னங்கீற்றின் நடுத் தண்டு) இருந்து செய்யப்பட்டது... கூர்முனைகளுடன் இருந்த அதையே ஆயுதமாகக் கொண்டு மீனாட்சி பத்திரகாளியாக ஆக்ரோசமாய் நின்றிருந்தார்...

"ஏன்டா நாயே, எவ்வளவு தைரியம் இருந்தா நீ கெட்டதும் இல்லாம என் மகனையும் சேர்த்து கெடுக்க நினைப்ப... அது எப்படி உன்னை வச்சு தான் என் மகன் அரசியல் வாழ்க்கை இருக்குதா...? உனக்கே எங்க வீட்டு ஆளுங்களை வச்சு தான் அரசியலில் வாழ்க்கை கிடைச்சது... பழசை

எல்லாம் மறந்துட்டு பேசாதே... நீ கேட்ட கேட்டுக்கு மகள் வயசிலுள்ள பொண்ணு உனக்குக் கேட்குதா... உன்னை எல்லாம் உயிரோடு விடக் கூடாதுடா..." என்று கூறியபடி அவர் கணவரை சராமாரியாகத் தாக்க துவங்கினார்...

செந்தில்நாதன் சுதாரித்துக் கொண்டு எழ முடியாதபடி இருந்தது மனைவி அடுத்தடுத்து கொடுத்த அடிகள்... அன்னையுடன் திருச்செல்வனும் இணைந்து கொண்டான்... தனது பெல்ட்டால் அவரை அடிப்பின்னி எடுத்துவிட்டான்... இருவரின் அதிரடி ஆட்டத்தில் அவர் கோழை போல் வீழ்ந்து கிடந்தார்...

அன்னை மற்றும் சகோதரனின் செயலை மதுரகவி சந்தோசமாய்ப் பார்த்து கொண்டிருந்தாள்... தகப்பன் அவளை அடித்ததால் ஏற்பட்ட காயத்திற்கு அவர் அடிவாங்கும் இந்தக் காட்சி பெருத்த மருந்தாக இருந்தது...

அடித்து, அடித்துக் கை ஓய்ந்து போனவராய் அடிப்பதை நிறுத்திய மீனாட்சி தனது தலையில் இருந்த மல்லிகை பூவை எடுத்து கணவனது முகத்தில் விசிறியடித்தார்... அத்தோடு கணவன் மீதான அன்பையும், மரியாதையையும் சேர்த்து... ஒவ்வொரு பெண்களைப் போல் அவர் 'இப்படி எனக்குத் துரோகம் செய்துட்டீங்களே... உங்களை நான் எந்தளவுக்கு நம்பினேன்...' என்று கணவனைப் பார்த்துக் கண்ணீர் வடிக்கவில்லை...

எப்போது அவரது துரோகம் தெரிய வந்ததோ அப்போதே அவர் மனம் வெறுத்துப் போனார்... இனி கணவனிடம் கெஞ்சுவது, யாசிப்பது போன்ற செயல்களைச் செய்து தனது நிலையைத் தாழ்த்தி கொள்ள அவர் விரும்பவில்லை... அன்பை எந்தளவிற்கு அதிகப்படியாய் காட்டினாரோ, அதை விட அதிகமாய் அவர் தனது வெறுப்பை வெளிப்படுத்தினார்... ஆனாலும் ஆழ்மனதிற்குள் சிறு வலியொன்று முணுக்முணுக்கென்று வலிக்கத் தான் செய்தது... அதைச் சடுதியில் மறைத்துக் கொண்டு அவர் கம்பீரமாக நிமிர்ந்து நின்றார்... அவர் பிறந்ததில் இருந்து பல புரட்சி பெண்களின் சரித்திரத்தை

கேட்டு வளர்ந்தவர்... அவையெல்லாம் இப்போது அவருக்குத் தோள் கொடுத்தது...

"திரு... இப்படிப்பட்டவன் உலகத்தில் உயிர் வாழவே தகுதி இல்லாதவன்... இவனை உயிரோடு கொண்டு போய்க் கடலில் போட்டு விடு... கொஞ்சம் கொஞ்சம் உயிருக்காகத் துடி துடித்துச் சாகட்டும்..." என்று கொஞ்சமும் கருணை இல்லாது கூறிய மனைவியைக் கண்டு செந்தில்நாதன்,

"என்ன இருந்தாலும் நான் உன் புருசன் மீனும்மா..." என்று கெஞ்சினார்...

"திரு... இந்தாளு ரொம்பப் பேசறான்... வாயிலேயே அடி போடு..." என்று கூறிவிட்டு அவர் அங்கிருந்து செல்ல... திருச்செல்வன் தகப்பன் முன் குனிந்தான்...

"டேய்... பக்கத்தில் வராதே... வாசலில் இருக்கும் என் தொண்டர்கள் என்னை இது மாதிரி பார்த்தால் உனக்குத் தான் ஆபத்து..." என்று அவர் மகனை மிரட்ட...

"அடேய் தகப்பா... வெளியில் உன் தொண்டர்கள் கத்தும் சத்தம் உனக்குக் கேட்கலையா... இந்த நியூஸ் பார்த்ததில் இருந்து அவங்களோட தலைவர் நான் மட்டும் தான்... வருங்கால அமைச்சர் திருச்செல்வன் வாழ்க... இது தான் அவங்களோட தாரக மந்திரம்..." என்று அவன் வில்லன் சிரிப்புச் சிரித்தான்... அதைக் கேட்டு செந்தில்நாதனின் முகத்தில் மரணபயம் எழுந்தது...

அப்போது வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது...

"நான் போய்ப் பார்க்கிறேன் அண்ணா..." என்ற மதுரகவி வாயிலை நோக்கி சென்றாள்... அடுத்தச் சில நிமிடங்களில் அவள் பதற்றத்துடன் உள்ளே ஓடி வந்தாள்...

"அண்ணா... ஏசிபி மூர்த்தி சார் வந்திருக்கிறார்..."

திருச்செல்வன் யோசனையுடன் எழுந்தான்... பின் கண்கள் பளிச்சிட தந்தையைப் பார்த்தவன்,

"நாங்க தண்டனை கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை... உனக்கான தண்டனை உன்னைத் தேடி வந்திருக்கு..." என்றவன் தகப்பனை தூக்கி நிறுத்தி அவரை அந்தக் கோலத்திலேயே அழைத்துக் கொண்டு வரவேற்பறை நோக்கி சென்றான்...

மகனின் பிடியில் இருந்து தப்ப இயலாது பலியாடு போல் அவர் அவனைப் பின்தொடர்ந்தார்... சோபாவில் அமர்ந்திருந்த மூர்த்தி இவர்களைக் கண்டதும் எழுந்து நின்றார்... அவரது கண்கள் செந்தில்நாதனை தலை முதல் கால் வரை நன்கு அலசி ஆராய்ந்தது... தங்களுக்கு முன் அவரது வீட்டினரே அவருக்குத் தக்க சிகிச்சை அளித்து விட்டதை உணர்ந்து அவர் தனக்குள் சிரித்துக் கொண்டார்...

"உங்களை அரெஸ்ட் பண்ணுகிறோம் செந்தில்நாதன்..."

"ஏன்...? எதற்கு...?" என்று செந்தில்நாதன் அலறினார்... சாதாரண நில ஆக்கிரமிப்பு வழக்கிற்காகக் கைது செய்வது என்பது அவருக்கே அபத்தமாகத் தோன்றியது...

"அரெஸ்ட் வாரண்ட் கையோடு கொண்டு வந்திருக்கிறோம்... வேறு எந்தக் கேள்வி கேட்பதாக இருந்தாலும் அங்கே வந்து கேட்டுக்கோங்க..."

"நான் ஒரு அமைச்சர்..." என்றார் அப்போதும் அவர் அடங்காது...

"உங்க கட்சி உங்க மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அரை மணி நேரமாகி விட்டது... இனி நீங்களே கௌரவமாக உங்க பதவியை ராஜினாமா செய்ய வேண்டியது தான்... அது எனக்குத் தேவையில்லாதது... இப்போது நாம் போகலாமா...?" என்று அவர் நக்கல் கலந்த குரலில் கேட்டார்...

செந்தில்நாதன் மனைவியையும், மகனையும் பார்த்தார்... அவர்களோ அவரைக் கண்டு கொள்ளாது வேறு எங்கோ பார்த்தபடி இறுக்கமாய் நின்றிருந்தனர்... தனக்கு என்று பேச யாரும் இல்லாது, எல்லோரும் இருந்தும் தனது

இழிசெயலால் அவர்களது அன்பை இழந்து அநாதை போல் அவர் வீட்டை விட்டு வெளியேறினார்...

தொண்டர்களின் கேவலமான பார்வையில் அவமானப்பட்டவராய், ஊடகங்கள் புகைப்படம் எடுப்பதைத் தடுக்க இயலாதவராய் தலையைக் குனிந்து கொண்டு அவர் காவல்துறை ஜீப்பில் ஏறினார்... அந்தக் கணம் அவருக்கு ஒன்று புரிந்தது... தன்னை விடத் தனது மனைவி மற்றும் மகனுக்கு அதிகச் செல்வாக்கு இருக்கிறது என்று...

அங்குச் சென்ற போது தான் அவருக்கே தெரிந்தது தன் மீதான அத்தனை குற்றச்சாட்டுகளும்... அத்தனையும் அவர் மறுக்க முடியாதபடி பல சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களுடன் அவருக்கு எதிராக இருந்தது...

"மிஸ்டர். செந்தில்நாதன்... கல்லூரி பெண்கள் தற்கொலை மற்றும் கல்லூரியில் கேமிரா மறைத்து வைத்த குற்றம் இரண்டையும் பற்றி விசாரிக்கும் போது கடைசியாய் எல்லோராலும் குற்றவாளியாய் கை நீட்டப்படும் ஒரே நபர் நீங்கள் தான்..."

மூர்த்தித் தலைமையிலான குழு செந்தில்நாதனை விசாரிப்பதை விஜயும், ரிச்சர்ட்டும் கணினி மூலம் பார்த்து கொண்டிருந்தனர்...

"இல்லை எனக்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை..." என்று அவர் உறுதியாக மறுத்தார்...

"பின்னே எப்படி அதற்கு என்று இருக்கும் தரகர்கள் அலைப்பேசி எண்களில் இருந்து உங்களுக்கு அழைப்பு போயிருக்கிறது..."

"அது நிச்சயம் நானில்லை..."

"நீங்க அவர்களோடு பேசியதும் முக்கியச் சாட்சியாக இதில் இருக்கிறது..."

"இல்லை, இல்லை..." என்று அப்போதும் அவர் மறுக்க...

"இந்த விசயத்தில் உங்க நண்பர் அப்ரூவராக மாறிவிட்டார்... நீங்களும் அவரும் சேர்ந்து பல இளம் பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்ததை அவர் ஒத்துக் கொண்டார்... அரசியல்வாதிகள் முதற்கொண்டு அரசு அதிகாரிகள் வரை எல்லோரிடமும் காரியம் சாதிப்பதற்காகப் பெண்களைப் போகப் பொருளாக அனுப்பி இருக்கீங்க... அது போல் உங்களது தனிப்பட்ட ஆசைக்கும் அவங்களை இணங்க வைத்து இருக்கீங்க... இது வெளியில் தெரிந்தால் அந்தப் பெண்களைக் கொன்று விடுவோம் என்று மிரட்டி காரியத்தைச் சாதிச்சு இருக்கீங்க... இதற்கான வீடியோ ஆதாரம் எங்க கிட்ட இருக்கு... மிஸ். மந்தாகினி வீடியோ ஆதாரம் இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஒன்று..." என்று மூர்த்திக் கூறிய போது செந்தில்நாதன் வாயடைத்துப் போனார்...

"அப்புறம், குழந்தைகளைக் கடத்தி அவர்களைக் கொன்று உடல் உறுப்புகளை விற்று வந்தது தொடர்பாகவும் நாங்க உங்களை விசாரிக்க வேண்டியிருக்கிறது..."

"என்ன ஒரேடியா என்னை மிரட்டுறீங்களா...? ஒருத்தன் கையில் கிடைச்சா கேஸ் மேல் கேஸா போட்டு வெளியில் வர முடியாதபடி உள்ளே தள்ளிர வேண்டியது... அது தானே உங்க திட்டம்... உங்க கமிசனர் கிட்ட சொல்லுங்க, அவர் நினைக்கிறது நடக்காதுன்னு..." அப்போதும் அவர் அடங்காது எகிறினார்...

"நீங்க அரசியலுக்கு வருவதற்கு முன் இந்தத் தொழிலில் தான் தரகராக வேலை பார்த்ததாக உங்களுடன் தொழில் செய்யும் உங்களது இன்னொரு நண்பர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து இருக்கிறாரே... அதற்கு உங்களது பதில் என்ன...?"

அதைக் கேட்டு செந்தில்நாதனின் முகம் பேயறைந்தது போலானது... அந்த நண்பருடன் செந்தில்நாதன் இருந்த புகைப்படத்தைத் தான் விஜய் ஆசிரமத்தில் பார்த்தது... அந்த ஆசிரமத்தில் மட்டுமல்லாது மதுரகவி புகார் கொடுத்த ஆசிரமத்திலும் அவன் அதைக் கண்டு விட்டான்...

அதை வைத்து தான் அவன் இதைத் துப்பறிய துவங்கியது...

"எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை..." என்று அதற்கும் செந்தில்நாதன் மறுப்பு தெரிவித்தார்...

"எங்களுக்கு அது தெரியாது... ஆதாரங்கள் அடிப்படையில் நாங்க உங்களைக் கைது செய்து இருக்கிறோம்... நாளை கோர்ட்டில் உங்களை ஒப்படைக்கும் போது அங்கே நீங்க பேசி கொள்ளுங்கள்..." என்று மூர்த்தி முடித்துக் கொண்டார்...

செந்தில்நாதன் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தார்... கணினி திரையை அணைத்த விஜய் ரிச்சர்ட்டை நோக்கி புன்னகைத்தான்...

"எவ்வளவு பொய் சொல்கிறான்...?" ரிச்சர்ட்டிற்குக் கோபம் வந்தது...

"குற்றவாளிகள் என்றைக்குத் தங்களது குற்றத்தை ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள்..."

"அது என்னவோ உண்மை தான்... அன்றைக்கு என் கண்களால் பார்த்தேன்... எத்தனை குழந்தைகள்..." ரிச்சர்ட்டிற்கு ஆற்றாமையாக இருந்தது...

ஏனெனில் அன்று ரிச்சர்ட் மதுவை பின்தொடர்ந்து போனதால் தான் அந்தக் குழந்தைகளைப் பார்க்க முடிந்தது... பார்த்தவுடனேயே அவனுக்குத் தெரிந்து போனது அவர்கள் இறந்து விட்டனர் என்று... கைகளில் காதலி மயங்கிய அந்த நிலையிலும் அவன் அந்தக் காட்சியைப் புகைப்படமாக எடுத்து விட்டே அகன்றான்... ஆனால் அதைப் பற்றி இன்று வரை மதுரகவியிடம் அவன் கூறியது இல்லை... அன்று அவளிடம் கூட ஒன்றும் தெரியாத மாதிரி தான் அவன் நடித்தான்...

அதை விட விஜய் தன்னைத் தெரியாதது போல் நடந்து கொண்டது தான் மிகப் பெரிய நகைச்சுவை... அதை

நினைத்து ரிச்சர்ட்டின் உதடுகளில் புன்னகை தோன்றியது...

"என்ன விசயம் ரிச்சர்ட்...? மதுவின் ஞாபகமோ...?" விஜய் நண்பனாய் அவனைக் கிண்டலடித்தான்...

"இல்லை... அன்று நீங்க மது முன்பு என்னைத் தெரியாத மாதிரி நடித்ததை நினைத்து பார்த்தேன்..."

"ஹா ஹா..." என்று அன்றைய நினைவில் வாய் விட்டு சிரித்த விஜய்,

"மது வெகுளி பெண்... அதனால் நம் திருட்டுத்தனத்தைக் கண்டுபிடிக்கவில்லை..."

"ஆம் விஜய்... அவள் வெகுளி பெண் தான்..." என்று கூறிய ரிச்சர்ட்டின் முகம் புன்னகையைத் தொலைத்தது...

"மதுவை பற்றிக் கவலைப்படாதீங்க ரிச்சர்ட்... இனி திருப் பார்த்து கொள்வான்... அப்படியே உங்க இருவரின் காதல் திருமணம் பற்றித் தெரிய வந்தாலும், இனி பெரிதாக ஆட்சேபிக்க மாட்டான் என்றே நினைக்கிறேன்..."

"அப்படியா சொல்றீங்க...?" முகம் மலர தன்னைப் பார்த்தவனைக் கண்டு ஆறுதலாய் புன்னகைத்த விஜய்,

"உங்களுக்காக நான் மீனாட்சி அம்மாவிடமும், திருவிடமும் பேசுகிறேன்... அவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது... இல்லை என்றால் உங்களது வாழ்க்கையை நீங்க வாழ பாருங்கள்..."

"மது என் கூட வர பயப்படுகிறாளே..."

"நீங்க உண்மையைச் சொல்லும் போது அவள் பயப்படாமல் உங்களுடன் வருவாள்..."

"அதற்காகத் தான் நானும் காத்துக் கொண்டு இருக்கிறேன்..." என்று கூறிய ரிச்சர்ட் விஜயிடம் விடைப்பெற்று கிளம்பி சென்றான்...

***************************

"அண்ணா... நம்மளை எல்லாம் எப்படி ஏமாத்தி இருக்கிறான்னு பாருங்க... இவனை எல்லாம் உயிரோட விடக் கூடாதுண்ணா... என் கிட்ட எப்படி நடிச்சு நம்ப வைத்து கழுத்தறுத்து இருக்கிறான்... அதை நினைக்கும் என் மனசு ஆறலை... நீங்க அவனுக்குப் பெரிய தண்டனையா கொடுக்கணும்... உங்க தங்கச்சி நான் கேட்கிறேன் அண்ணா... எனக்கு அவனோட உயிர் வேண்டும்... அதுவும் அவனைத் துடிக்கத் துடிக்க நீங்க கொல்லணும்... அதை என் கண்ணால் நான் பார்க்கணும்... இவனுக்குக் கொடுக்கிற தண்டனை பார்த்து இனி வேறு யாரும் இது மாதிரி தப்பு செய்யவே யோசிக்கணும்... கல்யாண வயசில் இருக்கிற என் மகன் கூட ஒழுக்கமா இருக்கான்... ஆனா இந்தாளுக்கு வயசான காலத்தில் பொண்ணு சுகம் கேட்குது..."

மீனாட்சி தன் அண்ணனிடம் கோபத்தில் குமுறிக் கொண்டிருந்தார்... அவரது இந்தக் குமுறல் நிச்சயம் ஒரு மனைவியாய் அல்ல... ஒரு தாய் மற்றும் ஒரு பெண்ணின் தவிப்பாய் அது இருந்தது... அதனால் சக மனுசியாய் கணவனான மிருகத்திற்குத் தண்டனை வழங்கிட அவர் துடித்தார்... மனைவி என்கிற பதவியை விட மனுசி என்கிற மனிதத்தன்மையைத் தக்க வைத்திட அவர் எண்ணினார்...

அங்கு அமர்ந்து அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த திருச்செல்வன் மனதில் தாயின் குமுறலை போக்கிட வேண்டும் என்கிற வெறி எழுந்தது...!!!

மதுரமாகும்...!!!

திருச்செல்வன் நேரே எழுந்து வீட்டின் வாயிலுக்கு வந்தான்... அங்குக் காரின் அருகில் பவ்யத்துடன் நின்றிருந்த ஓட்டுநர் ராஜனை ஒரு பார்வை பார்த்தவன்,

"ஆபிஸ் ரூமுக்கு வா..." என்று கட்டளை குரலில் கூறியவன் பின்பு அங்கு நின்று கொண்டிருந்த தனக்கு விசுவாசமான இருவரை கண்களால் சாடை செய்து ராஜனை பின்தொடர்ந்து அவர்களை வர சொன்னான்...

அலுவலக அறைக்குள் நுழைந்த திருச்செல்வன் அங்கிருந்த மேசை மீது சாய்ந்து நின்று கொண்டான்... உள்ளே நுழைந்த ராஜன் பின்னே வந்த இருவரும் தாங்களும் உள்ளே நுழைந்ததும் கதவை மூடினர்... அதைக் கண்டு ராஜனுக்கு வியர்த்து வழிந்தது...

"உட்காருங்க மிஸ்டர். ராஜன்..." இரு கைகளையும் கட்டி கொண்டு அமர்த்தலான குரலில் சொன்ன திருச்செல்வனைக் கண்டு ராஜனுக்குப் பயத்தில் உடல் நடுங்கியது...

அடுத்த நொடி திருச்செல்வன் காட்டிய சிறு கண்ணசைவில் அவ்விருவரும் ராஜனை போட்டு அடிப்பின்னி எடுத்து விட்டனர்... அதற்கு மேல் அடித்தால் செத்து விடுவான் என்று தெரிந்த பின்பே திருச்செல்வன் அவர்கள் இருவரையும் வெளியில் போகச் சொன்னான்... அவர்கள் சென்றதும் அவன் ராஜனை பார்த்த பார்வையில் ராஜனின் கண்களில் மரணபயம் தோன்றியது...

"அந்தாளு செய்கிற ஒவ்வொரு தப்பும் உனக்குத் தெரியும்... ஏன்னா நீ தான் அந்தாளு கூட நிழல் மாதிரி சுத்திக்கிட்டு இருந்த... நீயில்லாம அந்தாளு எங்கேயும் வெளியில் போக மாட்டான்... அந்தாளு தப்பு பண்ணியதை விட அந்தத் தப்பை இத்தனை நாளாய் எங்கே கிட்ட இருந்து மறைச்சே பாரு... அதைத் தான் என்னால் மன்னிக்க முடியாது... அதுக்குத் தான் இந்த அடி... நான் எப்பவுமே தண்டனை கொடுத்துட்டு தான் விளக்கம் சொல்லுவேன்... அது போல்

தான் விளக்கமும் கேட்பேன்... இப்போ மரியாதையா உண்மையைச் சொல்லு, அந்தாளுக்கும், மந்தாகினி பொண்ணுக்கும் எத்தனை வருசமா தொடர்பு இருக்கு... அந்தப் பொண்ணு சொன்னது உண்மையா...? இல்லை இதில் வேறு எதுவும் இருக்கிறதா...? உண்மையைச் சொன்னால் உன்னை உயிரோடு விடுகிறேன்... இல்லைன்னா நான் என்ன செய்வேன்னு நான் சொல்லி உனக்குத் தெரிய வேண்டியது இல்லை..."

"என்னை ஒண்ணும் செஞ்சிராதீங்க... நான் உண்மையைச் சொல்லிர்றேன்..." என்றவன் செந்தில்நாதனுக்கும், மந்தாகினிக்கும் இடையில் இருந்த உறவை பற்றி அப்படியே ஒப்புவித்தான்...

அதைக் கேட்டு திருச்செல்வனின் இரத்தம் கொதித்தது... தங்கையின் தோழி இந்தளவிற்குக் கீழ்த்தரமான எண்ணம் கொண்டவளா என்று...

"இடையில் நம்ம ஐயாவுக்கும், அந்தப் பொண்ணுக்கும் பிரச்சினை வந்தப்போ அந்தப் பொண்ணு என் கிட்ட தான் வீடியோவை கொடுத்து பாதுகாப்பா வச்சிருக்கச் சொல்லுச்சு... ஏதோ பணத்துக்கு ஆசைப்பட்டு இதைச் செஞ்சிட்டேன் தம்பி... என்னை மன்னிச்சிருங்க... இனி இப்படிப் பண்ண மாட்டேன்..." என்று அவன் திருச்செல்வனின் காலில் விழுந்து கெஞ்சினான்...

மந்தாகினி மனதில் இத்தனை கயமை இருக்கும் என்று திருச்செல்வன் நினைத்து கூடப் பார்க்கவில்லை... அவள் மீது அத்தனை ஆத்திரம் வந்தது... அந்த ஆத்திரத்தை அவன் அப்படியே ராஜன் மீது காட்டினான்...

"என் அம்மா கையால் எத்தனை தடவை வாங்கிச் சாப்பிட்டிருப்ப... அந்த விசுவாசத்திற்காகவாவது நீ எங்க கிட்ட இந்த உண்மையைச் சொல்லியிருக்க வேண்டாமா...? எங்க சோத்தை தின்னுட்டு எங்களுக்கே துரோகம் பண்ண உனக்கு எப்படி மனசு வந்தது...?" என்று கூறியபடி மேலும் மேலும் அவன் அடிப்பின்னி எடுத்துவிட்டான்....

தனது விசுவாசிகளை மீண்டும் அழைத்து ராஜனை தூக்கி தெருவில் போட சொல்லிவிட்டு அவன் தனது காரை கிளப்பிக் கொண்டு நேரே மந்தாகினியை பார்க்க சென்றான்... அவன் சென்ற நேரம் அன்னையும், மகளும் சதியாலோசனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்...

"இனிமேல் நம்ம வயித்துப்பாட்டுக்கு என்ன பண்ண போறோம் பாப்பா...?"

"இந்த வீடு வித்து வர்ற வருமானத்தைப் பேங்க்கில் போட்டுரலாம்..." என்று கூறியவள்,

"இது நம்ம அன்றாடப் பிரச்சினைக்குத் தான்ம்மா உதவும்... அதற்கு மேல் நமக்குத் தேவைப்படும் பணத்திற்கு வேறு ஏதாவது தான் செய்தாகணும்..." என்று கூறியவள், அதற்கு என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தாள்...

அப்போது வாயிற் கதவு பட்டென்று திறந்தது... யாரது என்று பார்த்தவள் அங்குத் திருச்செல்வனைக் கண்டதும் மனதிற்குள் பயத்தில் நடுங்கி போனாள்... தான் போட்ட வேசத்தைச் சரியாகப் போட எண்ணியவளாய் அவனைக் கண்டதும் கண்களில் போலியாகக் கண்ணீரை உண்டு பண்ணி கொண்டவள்,

"அண்ணா... கடைசியில் என் நிலைமை இப்படியாகி விட்டது..." என்று கதறியழ...

அவளது அண்ணா என்ற வார்த்தையில் கொலைவெறியான திருச்செல்வன் விரைந்து வந்து அவளது கன்னத்தில் ஆக்ரோசமாய் ஓங்கி ஒரு அறை விட்டான்... அதில் அவள் நிலைக்குலைந்து தள்ளி போய்த் தரையில் விழுந்தாள்...

"ச்சீ... யாருக்கு யார் அண்ணா...? வயது வித்தியாசம் பார்க்காம எங்கப்பனை கைக்குள் போட்டுக்கிட்ட உனக்கு நான் அண்ணனா...? அப்போ என் அப்பா உனக்கு யாருடி...? என் தங்கச்சி மாதிரி உன்னை நினைச்சிருந்தேனே,

கடைசியில் நீ இவ்வளவு கேவலமான புத்தி உடையவளா இருப்பன்னு நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை..."

"தம்பி... என் பொண்ணு பாவம்ய்யா..." என்று பவானி கதறியபடி மகள் அருகில் ஓடி வர முயன்ற போது,

"ஏய், ஓரமாய் ஒதுங்கி நின்னு வேடிக்கை மட்டும் பாரு... இடையில் வந்த முதலில் உன்னைத் தான் நான் கொல்வேன்..." என்று அவன் அவரை மிரட்டி விலகி போகச் செய்தான்... பயந்த சுபாவம் கொண்டவரான பவானி வாயை மூடி கொண்டு அறையின் ஒரு மூலையில் போய் நின்று கொண்டார்...

மந்தாகினி சுதாரித்துக் கொண்டு எழுந்தவள், "நான் அப்படிப்பட்ட பொண்ணு இல்லைண்ணா... உங்கப்பா தான்..." என்று மீண்டும் போலி கண்ணீர் வடித்தவளின் கழுத்தை பிடித்துக் கோபத்தில் நெறித்தான் திருச்செல்வன்...

"திரும்பத் திரும்பப் பொய் சொன்ன, உன்னைக் கொன்னுருவேன்டி..." என்று சீறிய திருச்செல்வனிடம் இனி பொய் பேச இயலாது என்று அறிந்தவளாய் மந்தாகினி திமிராய் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"சரி, நான் உண்மை சொல்றேன்... என்னை என்ன செய்வதாய் உத்தேசம்...? ஆமாம், நான் உன் அப்பாவோட இரண்டாவது மனைவி தான்... உன் பாசையில் சொல்லணும்ன்னா வைப்பாட்டி தான்... அதுக்கு இப்போ என்னங்கிற... தப்புச் செஞ்சவங்களை விட, அந்தத் தப்புச் செய்யத் தூண்டுனவங்களைத் தான் நீ கொல்லணும்... அப்படிப் பார்த்தால், நல்லவளா இருந்த என்னைக் கெட்டவளா மாத்தினது உங்கப்பா... போ, போய் அந்தாளு கிட்ட இதுக்கான நியாயத்தைக் கேளு..."

"என்னை வந்து இந்தக் கேள்வி கேட்கிறியே... உன் அப்பா உன் தங்கையையும் தான் அந்த வெள்ளைக்காரனுக்குக் கூட்டி கொடுத்து இருக்கான்... அதுக்கு நீ என்ன பண்ண போற...? என்னை அடிச்ச மாதிரி உன் தங்கச்சியை அடிக்கப்

போறியா...? இல்லை இதுக்குக் காரணமான உங்கப்பாவை கொல்ல போறியா...?"

அவள் இதைச் சொல்லும் போதே திருச்செல்வனின் கை அவளது கழுத்தை இன்னமும் இறுக்கியது...

"என்னடி சொல்ற...?"

மந்தாகினிக்குத் தொண்டை வலிப்பது போல் இருந்த போதும் அவள் தனது அலட்சிய முகபாவத்தை மாற்றவில்லை...

"அன்னைக்கு உனக்கு ஃபோட்டோ அனுப்பியது, ஃபோன் பேசியது எல்லாம் நான் தான்... இந்த விசயம் எல்லாம் உன் அப்பன் போதையில் என் கிட்ட உளறியது.. கூட்டி கொடுத்த உன் அப்பனையும், இது தான் சாக்குன்னு காதலனை கல்யாணம் பண்ணிக்கிட்டுச் சந்தோசமா குடித்தனம் பண்ணுகிற உன் தங்கச்சியையும் பார்த்தா உனக்குக் கேவலமா தெரியலை... ஆனா என்னைய பார்த்தா உனக்குக் கேவலமா இருக்கா...? முதலில் போய் அவங்க ரெண்டு பேரையும் கொன்னுட்டு அதுக்கு அப்புறம் வந்து என்னைக் கொல்லு... நீ என்னை இத்தனை கேள்வி கேட்கிறியே... பதினேழு வயசில் காதலிச்ச உன் தங்கையைப் போய் நாக்கை பிடுங்கிக்கிற மாதிரி கேள்வி கேளு... அதை விட்டுட்டு என் கிட்ட வந்து வீரத்தை காட்டுறியே..."

தங்கை காதலித்தது அவனுக்குப் புதிய சேதி... அதைக் கூடத் தாங்கி கொண்ட அவனால் தந்தை தங்கைக்குச் செய்த துரோகத்தை, இழிசெயலை அவனால் சற்றும் தாங்கி கொள்ள முடியவில்லை... ஆண்மகனான அவன் மனதளவில் மிகவும் ஓய்ந்து போய்விட்டான்... தான் பெற்ற மகளுக்கு இத்தகையை ஈனத்தைச் செய்ய வேண்டும் என்றால் அந்தத் தந்தையின் மனம் எத்தகைய கொடூர குணத்தைக் கொண்டிருக்க வேண்டும்... அந்தக் கணம் அவனால் தந்தையை மன்னிக்க முடியவில்லை... அவருக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்றே அவன் விரும்பினான்....

தனது யோசனைகளை விடுத்து திருச்செல்வன் மந்தாகினியை உறுத்துப் பார்த்தான்... அவளைக் கண்டு அவனுக்கு அப்படி ஒரு அருவருப்பாக, வெறுப்பாக இருந்தது... தனது தாய்க்குத் துரோகம் செய்தவளை கொன்றுவிடச் சொல்லி அவனது மனமும், கரங்களும் துடித்தது... ஆனால் அவளுக்குத் தண்டனை கொடுக்க வேண்டிய முழு உரிமை பாதிக்கப்பட்ட தனது தாயிற்குத் தான் அதிகம் இருப்பதை உணர்ந்தவனாய் அவன் தனது அன்னைக்கு அலைப்பேசியில் அழைத்தான்...

அவரிடம் விசயத்தைச் சொன்னதும் அவர் சிறிதும் யோசிக்கவில்லை...

"கையில் ஒத்தை பைசா இல்லாம அவளை வீட்டை வெளியில் அனுப்பி விட்டிரு திரு..."

"அம்மா... இவளை இப்படியே விடச் சொல்றீங்களா...? எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு இவளை கொன்னால் தான்ம்மா நிம்மதியா இருக்கும்..."

"புள்ளத்தாச்சி பொண்ணை ஒண்ணும் பண்ணிடாதீங்க..." பவானி மூலையில் நின்றபடி பரிதாபமாகக் குரல் கொடுத்தார்...

மந்தாகினி முகத்தில் உயிர் பயம் அப்பட்டமாகத் தெரிந்தது...

"கேட்டீங்களாம்மா... அந்தாளோட வாரிசு இந்தக் கேடுகெட்டவளோட வயித்தில் வளருதாம்..."

மகன் கூறிய விசயத்தை ஜீரணிக்க மீனாட்சிக்கு சில நிமிடங்கள் தேவைப்பட்டது... கணவனது துரோகம் தெரிந்த ஒன்று தான் என்ற போதும் இந்த விசயம் அவரது மனதினை வாள் கொண்டு அறுத்துத் துடிதுடிக்கச் செய்தது... ஆனாலும் வேதனையில் இருந்து நொடியில் மீண்டவராய்க் கம்பீரமாக,

"கையில் பணம் இல்லாம கஷ்டப்பட்டா தான் உழைப்போட அருமை அவளுக்குத் தெரியும்... இல்லைன்னா அவளோட

வழியில் அவள் வேசி தொழிலில் போனால் கூட எனக்கு ரொம்பச் சந்தோசம் தான்... அடுத்தவள் குடும்பத்தைக் கெடுத்து அதில் சொர்க்கம் பார்த்தவளுக்கு அந்தத் தொழில் நரகத்தைக் காட்டட்டும்... இதை விட்டுட்டு அவளை ஒரு நொடியில் கொல்வதால் என்ன பிரயோஜனம் திரு...? இனி ஒவ்வொரு நாளும் ஏன்டா வாழ்கிறோம்ன்னு அவள் மனசுக்குள் மருகி மருகி சாகணும்..."

அந்தப் புதுமை பெண் சற்றுப் புதுமையாக யோசித்துத் தான் மற்ற பெண்களைப் போல் அல்ல என்பதை நிரூபித்தார்...

அன்னை சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டான் திருச்செல்வன்... அவனது ஆட்கள் மூலம் மந்தாகினி, பவானி இருவரையும் வீட்டை விட்டு வெளியில் தள்ள சொன்னான்... 'இந்த வீடு எங்களோடது... நாங்க போக மாட்டோம்' என்று அடம்பிடித்த இருவரையும் கண்டு,

"இந்த வீடு நிச்சயம் உன் பெயரில் இருக்காது... அப்படியே உன் பெயரில் இருந்தாலும் அதை எப்படி மாத்தி எழுதுறதுன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் மந்தாகினியின் தலைமுடியை பிடித்துத் தரதரவென இழுத்து வந்து வெளிவாயிலில் தள்ளிவிட்டான்...

"டேய், வீட்டோட கதவை பூட்டுங்கடா... இனி இவள் எப்படி உள்ளே போகிறாள்ன்னு பார்ப்போம்..." என்று அவனது ஆட்களுக்கு உத்தரவிட்டவன் மந்தாகினியை பார்த்து,

"இனி நீ எப்படி உயிர் வாழ போகிறேன்னு நான் பார்க்கிறேன்...? இனி தான் நீ நரகத்தைப் பார்ப்ப... நீ எங்கே போனாலும் நான் உன்னை விட மாட்டேன்..." என்று அவளிடம் கடுமையாய் கூறியவன் மனதிற்குள்,

'என் அம்மா சொன்னது போல் உன்னை வேசி தொழிலில் தள்ளாம நான் விட மாட்டேன்... இதுநாள் வரை சுகமாயிருந்தது இனி நரகமா தெரியும்...' என்று வெறுப்பாக நினைத்தவன் வீட்டை பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டான்...

"பாப்பா..."

அன்னை அழைத்ததை உணர்ந்தும் மந்தாகினியால் என்னவென்று கேட்க முடியவில்லை... எதிர்காலம் அவளைப் பெரிதாய்ப் பயமுறுத்தியது... என்ன செய்வதென்று தெரியாது அவள் தரையில் விழுந்தது போல் அப்படியே வீழ்ந்து கிடந்தாள்...

வீட்டிற்கு வந்த திருச்செல்வன் அறையில் இருந்த அன்னையின் முன் வந்து நின்றான்... 'சுந்தரகாண்டம்' படித்துக் கொண்டிருந்த அவர் மகனது வருகையை உணர்ந்து அதை மூடி வைத்து விட்டு அவனைப் பார்த்து புன்னகைத்தார்... மனதின் வலிகளைப் புன்னகையின் பின்னே மறைக்கும் தாயை கண்டு அவனது இதயத்தில் உதிரம் கசிந்தது...

"அம்மா..." மகனது அழைப்பில் இருந்த தவிப்பை அந்தத் தாயுள்ளம் உணர்ந்தது...

"என்னப்பா...?"

அவர் அவனது தலையை வருடி பாசத்துடன் கேட்க, அதற்கு மேல் தாங்க முடியாது திருச்செல்வன் அவரது மடியில் படுத்துக் கண்ணீர் விட்டான்... அவன் முதுகு குலுங்கியதில் இருந்து அவன் அழுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட மீனாட்சி மனம் பதறிப் போய்விட்டார்... அவர் அறிந்த அவரது மகன் எதையும் தைரியமாய் எதிர்கொள்பவன்... இப்படிக் கோழை போல் அழுது கொண்டிருக்க மாட்டான்...

"திரு... என்னாச்சுப்பா...? அந்தாளை நினைச்சு அழுறியா...? அந்தாள் நம்ம கண்ணீருக்கு தகுதியில்லாத மனுசன்..."

அன்னையின் வார்த்தையில் கண்கள் கலங்க நிமிர்ந்து பார்த்தவன், "அதுக்கு அழலைம்மா..." என்றவன் தங்கையின் பரிதாப நிலையை அன்னையிடம் விளக்கி கூறினான்...

"நல்லவேளை அவன் அவள் காதலன் என்பதால் சரியா போச்சு... இல்லைன்னா மதுவோட நிலைமை...? இந்நேரம்

நாம் நம் மதுவை இழந்திருப்போம்... நம் மது பாவம்மா... இப்படிக் கூட ஒரு தகப்பன் இருப்பானாம்மா...? அந்தாளை நினைச்சு எனக்கு அத்தனை வெறுப்பா இருக்கு..."

மகன் கூறிய சேதி கேட்டு இடி விழுந்தார் போன்று மீனாட்சி அதிர்ந்து போய்விட்டார்... தனது கணவன் எத்தகைய கேவலமானவன் என்பதை அறிந்த போது வந்த ஆத்திரத்தை விட இப்போது அதிக ஆத்திரம் அவருள் எழுந்தது...

"திரு... அந்தாளை கொல்ல சொல்லி உன் கிட்ட சொல்லியிருந்தேன்... ஆனா அந்தாளை நான் என் கையால் கொல்லணும்டா... வதைச்சு கொல்லணும்... அவனை மாதிரி ஒரு பொறுக்கி கூட வாழ்க்கை நடத்தி பிள்ளைகளைப் பெத்த எனக்கும் இது தண்டனையாக இருக்கட்டும்... இப்படி உலகம் தெரியாம நான் இருந்திருக்கிறேனே..."

"அம்மா..."

"அந்தளவுக்கு அந்தாளை நான் நம்பினேன் திரு... கடைசியில் அவன் எனக்குத் துரோகம் பண்ணியது போதாதுன்னு என் மகளுக்கும் துரோகம் பண்ணியிருக்கான்... இவன் எல்லாம் ஐந்தறிவு மிருகத்தை விடக் கேவலமானவன்... என் மனசு ஆற மாட்டேங்குது திரு... அவன் துடிதுடிக்கச் சாகறதை பார்த்தால் தான் என் மனசு ஆறும்..."

"நிச்சயம்மா... உங்க கையால் தான் அவனுக்குச் சாவு..." என்று அவன் உறுதிபடக் கூறினான்...

"அம்மா, மது கிட்ட நாம இதைப் பத்தி பேசணும்மா... அவள் மனசளவில் ரொம்ப ஒடிஞ்சு போயிருப்பாள்... வாங்கம்மா..."

அன்னையை அழைத்துக் கொண்டு திருச்செல்வன் தங்கையைத் தேடி சென்றான்... மதுரகவி அவளது அறையில் அசோக வனத்து சீதையாய் தன்னவன்

நினைவில் சோக சித்திரமாய் அமர்ந்திருந்தாள்... மகளை அந்த நிலையில் கண்டதும் மீனாட்சியின் பெற்ற வயிறு துடித்தது...

"மது..." என்று கதறியபடி விரைந்து வந்து மகளை அணைத்துக் கொண்டார் அந்த அன்பு உள்ளம் கொண்ட தாய்...

"உன் அப்பனை பத்தி நீ ஏன் எங்க கிட்ட சொல்லலை...? சொல்லியிருந்தால் அப்போதே அந்தாளை வெட்டி போட்டிருப்பேனே..." அன்னை திடுமென இப்படிக் கூறி அழுததும் மதுரகவி புரியாது விழித்தாள்...

"எதுக்கும்மா...?"

"உன்னை எதுக்கு அந்த வெள்ளைக்காரன் கிட்ட அந்தாளு அனுப்பி வச்சான்...?" தாயின் அந்தக் கேள்வியில் அவளது தலை தானாகக் கவிழ்ந்தது... அவளது கண்களில் கண்ணீர் அரும்பியது...

"அவனோட கேடு கெட்ட செயலை நீ என் கிட்ட கூடச் சொல்லாம விட்டுட்டியே...?"

"அது... அது எனக்குத் தெரியாதும்மா... ரிச்சியைப் பார்க்க போன்னு மட்டும் தான் அவர் சொன்னார்..." அப்பா என்று சொல்ல வாய் கூசியவளாய் மதுரகவி 'அவர்' என்று கூறினாள்...

அன்று காலையில் தேவதை போல் கிளம்பி சென்ற மகளின் தோற்றம் மீனாட்சியின் விழிகளில் வலம் வந்தது...

"உனக்கு ஒண்ணும் ஆகலையே..." என்று பரிதவிப்புடன் வந்தது அவரது வார்த்தைகள்...

ரிச்சர்ட்டை தவிர அங்கு வேறு யார் இருந்தாலும் அவளின் நிலை பரிதாபத்திற்கு உரியதாய்ப் போயிருக்கும்... ஒன்று அவனைக் கொன்று இருப்பாள், இல்லை அவள் தற்கொலை செய்து கொண்டிருப்பாள்...

"இல்லைம்மா, ரிச்சி ரொம்ப நல்லவன்..." என்றவளின் தலை உண்மையைத் தாயிடம் கூற முடியாது தலை குனிந்தது... தங்கையின் 'ரிச்சி' என்றழைப்பை திருச்செல்வன் மனதில் குறித்துக் கொண்டான்...

"அவன் உன் காதல் கணவன்னு நான் கேள்விப்பட்டேனே...?" திருச்செல்வனின் பார்வை அவளைக் கூர்மையாகத் துளைத்து எடுத்தது...

அதில் சகோதரனை பதட்டத்துடன் நிமிர்ந்து பார்த்தவள், "இல்லைண்ணா... அப்படி எல்லாம் இல்லை... யாரோ உங்க கிட்ட தப்பா சொல்லியிருக்காங்க..." என்று மழுப்பியவளின் ஒரே நோக்கம் காதலனின் உயிரை காப்பாற்றுவது மட்டுமே...

அந்தக் கணம் திருச்செல்வனின் மனக்கண்ணில் ரிச்சர்ட்டின் முகம் மின்னி மறைந்தது... 'எனக்கும் மதுவுக்கும் கல்யாணமாகிருச்சு...' ரிச்சர்ட் கூறிய வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவனது காதுகளில் ஒலித்தது... அதே போல் இருவரும் இணைந்து இணக்கமாக நடந்து வந்த காட்சி... அதை விடத் தங்கையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்ட ரிச்சர்ட்டின் குணமும்... ஆறடி ஆண் ஒரு பெண்ணின் வார்த்தைக்கும், கண்ணசைவிற்கும் கட்டுப்படுகிறான் என்றால் நிச்சயம் அது காதலில் மட்டுமே சாத்தியம்...

"நீ அவனைக் காதலிக்கிறியா மது..." என்று கேட்ட அன்னையின் குரலும் அவளுள் பதற்றத்தை ஏற்படுத்த அண்ணனை பயத்துடன் பார்த்தவள்,

"இல்லைம்மா... அவர் என்ன காரணத்துக்காக ரிச்சி கிட்ட என்னை அனுப்பினாரோ எனக்குத் தெரியாது... ஆனால் ரிச்சி அப்படி எல்லாம் என் கிட்ட தப்பா நடந்துக்கலை... உண்மையில் எனக்கு வேலையைத் தான் பழக்கி கொடுத்தான்..." அது தான் உண்மையும் கூட...

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்த மகளை மீனாட்சி முழுதாய் நம்பினாலும், திருச்செல்வன் இன்னமும்

அளவிடுவது போல் தங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான்... சகோதரனின் பார்வையின் வீரியம் தாங்காது மதுரகவி அங்கிருந்து எழுந்து சென்று விட்டாள்...

"வெள்ளைக்காரனுக்கு இருக்கிற பண்பாடு கூட இந்தாளுக்கு இல்லாம போச்சே..." என்று கூறிய மீனாட்சிக்கு அதை நினைத்து நினைத்து ஆற்றாமையாக இருந்தது...

கணவன் மட்டும் நேரில் இருந்திருந்தால் கொன்று குடலை உருவி மாலை போட்டிருப்பார்... அந்தளவிற்குக் கோபம் வந்தது அவருக்கு... ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் கூடத் தனக்கு எதுவென்றாலும் தாங்கி கொள்ளும்...இதே இது தனது குட்டிகளுக்கு ஏதாவது ஒன்று என்றால் ஆக்ரோசம் அடைந்து விடும்... அப்படி ஒரு மனநிலையில் மீனாட்சி இருந்தார்...

"மாமாவுக்கு ஃபோன் போடு திரு... மது கல்யாணத்தைப் பேசி முடிவு செய்திருவோம்..."

"வேண்டாம்மா..." என்று திருச்செல்வன் அவரைத் தடுத்தான்...

"ஏன்...?"

"மதுவோட விருப்பத்தை நாம் மதிக்கணுமா...?"

"அவளுக்குன்னு தனியா என்ன விருப்பம் இருக்கப் போகுது...?"

"ஒருவேளை அவள் அந்த வெள்ளைக்காரனை காதலிச்சு இருந்தால்...?"

"என்னடா சொல்ற...?" என்று அதிர்ச்சியில் நெஞ்சில் கை வைத்தபடி மகனை பார்த்தார் அவர்...

ரிச்சர்ட்டை பற்றி அன்னையிடம் முழுவதும் கூறியவன், "ரெண்டு பேரும் காதலிக்கிறாங்கன்னு தான் எனக்குத் தோணுது... ஆனா கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களா, இல்லையான்னு தெரியலை... அவன் கல்யாணம்

பண்ணிக்கிட்டதா சொல்கிறான்... இவளோ இல்லைன்னு மறுக்கிறாள்..." என்று குழப்பத்துடன் நெற்றியை நீவி விட்டுக் கொண்டான் அவன்...

"அதுக்காகப் போயும் போயும் ஒரு வெள்ளைக்காரனுக்குப் போய் நம்ம பொண்ணைக் கல்யாணம் பண்ணி கொடுக்கணுமா திரு... எனக்கு மனசே ஒத்துக்கலை..."

"நீங்க இந்த ஊர்க்காரனை தானே கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... என்ன பிரயோஜனம்...? அவனுக்கு இந்த வெள்ளைக்காரனே பரவாயில்லை... மதுவோட ஒரு வார்த்தைக்கு, கண்ணசைவுக்கு அப்படிக் கட்டுப்பட்டு நடக்கிறான்... அவளை நான் அடிச்சேங்கிறதுக்காக என் கிட்டேயே சண்டைக்கு நிற்கிறான்... இதை விடவாம்மா நம்மூர் மாப்பிள்ளைங்க மதுவை பத்திரமா பார்த்துக்கப் போறாங்க... மது யாரை கல்யாணம் பண்ணினாலும் சரி... அவள் சந்தோசமா இருந்தால் அதுவே எனக்குப் போதும்..."

"திரு... நீயாடா இதைச் சொல்ற...?"

"நான் தான்ம்மா சொல்றேன்... எனக்கு இந்தக் காதல், கண்றாவி எல்லாம் பிடிக்காது தான்... ஆனா இப்போ மனசு புரிஞ்சு சேருகிற காதல் சரி தானோன்னு தோணுது... ப்ளீஸ்ம்மா, எனக்காக இதுக்குச் சரின்னு சொல்லுங்க..."

"திடீர்ன்னு என்னால் மனசை மாத்திக்க முடியலை திரு... எனக்குக் கொஞ்சம் யோசிக்க டைம் கொடு..."

"நல்லா யோசிங்கம்மா... அதை நல்லவிதமா மட்டும் யோசிங்க... இன்னும் அதிக நாள் மது தாங்க மாட்டாள்..."

மகனின் கூற்றைத் தலையசைத்து ஏற்றுக் கொண்ட மீனாட்சி அமைதியாக யோசிக்க ஆரம்பித்தார்... அவரைத் தனிமையில் யோசிக்க விட்டு விட்டு அவன் வெளியில் வந்தான்... அவன் அன்னையிடம் கூறிய விசயத்தைத் தங்கையிடம் கூறியிருக்கலாம்... ஆனால் அவன் அதைச் செய்யவில்லை...

மதுரகவியோ மிகுந்த பயத்துடன் அமர்ந்திருந்தாள்... எங்கே தனது காதல் கதையைக் கூறினால் காதல் கணவனின் உயிருக்கு ஆபத்து வந்து விடுமோ என்று... ஆறு வருடங்களாகியும் அந்தச் சம்பவத்தை அவளால் மறக்க முடியவில்லை...

ஆறு வருடங்களுக்கு முன் ரிச்சர்ட்டின் அன்னையைப் பற்றி அறிந்ததும் அவனது காதலை புறக்கணித்து விட்டு, அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் சென்னைக்கு ஓடி வந்தவளுக்கு அங்கு வந்த ஓரிரு நாட்களில் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது...

அன்று அவளது அன்னையும், தங்கையும் கோவிலுக்குச் சென்றுவிட, அவள் மட்டும் எங்கும் போகப் பிடிக்காதவளாய் வீட்டில் இருந்தாள்... தந்தையின் அலுவலக அறைக்கு ஏதோ எடுப்பதற்காக வந்தவள் அறை கதவின் மீது கை வைத்து லேசாகத் திறக்க, அங்குக் கண்ட காட்சி கண்டு திகைத்து போனாள்... இளம் ஜோடி ஒன்று கைகள் கட்டப்பட்ட நிலையில் நின்றிருந்தனர்...

"பெத்த தாய், தகப்பனை விட்டுட்டு எவன் கூடவோ காதல்ங்கிற பெயரில் ஓடி போயிருக்கியே... உனக்கு வெட்கமா இல்லை...?" என்று திருச்செல்வன் கர்ஜித்தபடி அந்தப் பெண்ணின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்...

அருகில் அந்தப் பெண்ணின் பெற்றோர் இருந்த போதும் அவர்கள் திருச்செல்வனை எதிர்த்து ஒரு வார்த்தை பேசவில்லை... ஆனால் அந்தப் பையன் எதிர்த்து வாய்த் திறந்தான்...

"நான் யாருன்னு தெரியுமா...? எங்கப்பா யாருன்னு தெரியுமா...?" என்று அவன் இந்தி மொழியில் எகிறினான்...

மதுரகவிக்கு இந்தி மொழி தெரியுமாதலால் அவன் பேசியது நன்கு புரிந்தது...

"நீ யாரா இருந்தா எனக்கு என்ன...? எங்க வீட்டுப் பொண்ணைத் தூக்க நினைச்சா நாங்க உன்னைத்

தூக்கிருவோம்..." என்று அந்தப் பையனிடம் கோபமாய் முழங்கியவன் அவளிடம்,

"உன்னைப் படிக்க அனுப்பிச்சாங்களா...? இல்லை காதலிக்க அனுப்பிச்சாங்களா...?" என்று கோபம் கொள்ள... அந்தப் பெண் அழுதபடி தலை குனிந்து நின்றாள்...

யாரோ வரும் ஓசை கேட்டு மதுரகவி அந்த இடத்தை விட்டுச் சத்தம் இல்லாது நகர்ந்து விட்டாள்... அன்று முழுவதும் அவளுக்கு அதே யோசனை தான்... தான் காதலித்தது தெரிந்தாலும் அண்ணன் இப்படித் தான் நடந்து கொள்வான் என்று அவளுக்கு நன்கு தெரியும்... ஆனாலும் அவளால் ரிச்சர்ட்டை மறக்க முடியவில்லை... அதே சமயம் இந்தக் காதல் சரி தானா? என்கிற கேள்வியும் அவளது மனதில் எழுந்தது... அந்த வயதிற்குரிய அலைபாயும் மனதுடன் அவள் அமர்ந்திருந்தாள்...

மறுநாள் காலையில் செய்தித்தாளை படிக்கும் போது அந்தச் செய்தி அவளது கண்களில் விழுந்து அவளை மேலும் அச்சம் கொள்ளச் செய்தது... அந்தப் பெண் வீட்டில் தற்கொலை செய்து கொண்டதாக ஒரு பக்கத்தில் செய்தி வந்திருந்தது... அந்தப் பையன் இரயிலில் அடிப்பட்டு இறந்து போனதாக வேறொரு பக்கத்தில் செய்தி வந்திருந்தது... அவளுக்கு அவர்கள் இருவரின் புகைப்படமும் நன்கு அடையாளம் தெரிந்தது... ஏனென்றால் இருவரும் 'மேட் ஃபார் ஈச் அதர்' என்பது போல் அத்தனை அழகான ஜோடி...

நிச்சயம் இந்தக் கொலையைத் தனது அண்ணன் தான் செய்திருக்க வேண்டும் என்று அவள் உறுதியாக நம்பினாள்... ஆனால் அதைச் செய்தது அவளது தந்தை என்பதை அவள் இதுநாள் வரை தெரிந்திருக்கவில்லை... திருச்செல்வன் அவர்களைப் பிடித்துக் கொடுத்ததோடு ஒதுங்கி விட்டான்... செந்தில்நாதன் தான் சாதி அரசியலுக்காக அந்த இளம் ஜோடியை கொன்றுவிட்டார்...

இதை அறியாது அவள் பயத்தில் ஒரு வாரம் காய்ச்சலில் படுத்து எழுந்தாள்... அதன் பின் அவள் இலண்டன் செல்ல

மறுத்து விட்டாள்... ஏனென்று அவளை அதட்டி கேள்வி கேட்டு மீனாட்சி ஓய்ந்து போனார்... திருச்செல்வன் தான் அவரைச் சமாதானம் செய்தான்...

"எவ்வளவு பணத்தைக் கொட்டி கொடுத்து படிக்க அனுப்பி வச்சா, இவள் போக மாட்டேன்னு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாளே..." என்று அவருக்குச் சற்றுக் கோபம் வந்தது...

"அம்மா... அவளை வற்புறுத்தாதீங்க... அவள் விருப்பப்படி செய்யட்டும்..." என்று அவன் தான் தங்கைக்காகப் பரிந்து பேசினான்... இது எதுவும் அவளுக்குத் தெரியாது...

மதுரகவிக்கு நன்கு தெரியும், ரிச்சர்ட் தன்னை இரண்டு தடவை பின்தொடர்ந்தால் தன் மனதினை தன்னால் கட்டுப்படுத்த முடியாது என்று... ஏனெனில் அவளது காதல் மனம் மீண்டும் மீண்டும் காதலனை நினைத்துக் கொண்டிருந்தது... அவனது காதலை துறப்பது என்பது அவ்வளவு எளிதல்ல என்று அவளுக்கு நன்கு புரிந்தது... மீண்டும் தன் காதல் துளிர்விட்டு, அதனால் ரிச்சர்ட்டுக்கு ஏதேனும் ஆபத்து வந்து விட்டால்...?

இலண்டனுக்கும், சென்னைக்கும் விரைவாகப் பாலம் போட்டு தொடர்பு படுத்தியது அவளது அஞ்சிய நெஞ்சம்... அதன் விளைவு காதலனை மனதில் சுமந்து கொண்டு உடலளவில் அவனை விட்டு முழுவதுமாய்ப் பிரிந்து வந்து விட்டாள்... வயதின் காரணமாகச் சரியாக யோசிக்கத் தெரியாது காதலை இழந்து விட்டாள்...

காதல் என்பது உடனிருந்து உயிர் கொல்லும் வியாதி... உயிர் இருக்கும் வரை காதல் தொடரும் என்பதைப் பின்னாளில் தான் அவள் உணர்ந்து கொண்டாள்... தனது வீட்டில் காதலுக்கு எதிர்ப்பு வரும் என்று தெரிந்திருந்தும் தான் காதலில் விழுந்தது தனது தவறு தான் என்பதை அவள் புரிந்து கொண்டாள்... காதலனை பிரிந்திருப்பதே தனது தவறிற்கான தண்டனை என்று தன்னை மட்டுமே அவள் நினைத்தாள்... ஆனால் அது அவனுக்கும் தண்டனை தான் என்பதை அந்தக் கணம் அவள் உணரவில்லை...

இதோ இப்போதும் அதே தவறினை செய்து தவறே செய்யாத அவனுக்கான தண்டனையை இன்னமும் அதிகப்படுத்திக் கொண்டு இருந்தாள்...

அதே நேரம் முத்துபேச்சி மீனாட்சிக்கு அலைப்பேசியில் அழைத்தாள்... உடனே மீனாட்சி எடுத்ததும் அவள்,

"சாரிங்கம்மா... நான் வேணும்ன்னு..." எப்படிச் சொல்வது என்று தெரியாது தயங்கியவளை கண்டு,

"இதில் நீ ஒண்ணும் பண்ணலையே முத்து... அந்தாள் செஞ்ச தப்புக்குத் தண்டனை அனுபவிக்கிறான்... என்னைக் கேட்டால் உன் புருசன் கிட்ட சொல்லி என்ன என்ன கேஸ் உண்டோ எல்லாத்தையும் அந்தாளு மேல போட சொல்லு..." என்று ஆத்திரத்துடன் உரைத்தார் அவர்...

சிறிது நேரம் மீனாட்சிக்கு ஆறுதல் கூறிவிட்டு முத்துபேச்சி அவரிடம் மெதுவே ஆரம்பித்தாள்...

"அம்மா... தாமரை இந்த நியூஸ் பார்த்துக் கொஞ்சம் அப்செட்டா இருக்கிறாள்... நீங்க யாராவது வந்து அவளைக் கொஞ்சம் ஆறுதல்படுத்தினால் நல்லாயிருக்கும்..."

"அவளை இங்கே கொண்டு வந்து விட்டிரும்மா..." என்ற மீனாட்சி பின் முடிவு செய்தவராய்,

"வேண்டாம்மா... இங்கே இன்னும் பிரஸ்க்காரங்க, அரசியல்வாதிங்க எல்லோரும் மாத்தி மாத்தி வந்துக்கிட்டே இருக்காங்க... பரீட்சை முடியும் வரை தாமரை அங்கேயே இருக்கட்டும்... நான் மதுவை அனுப்பறேன்... இப்போ நானும், திருவும் அங்கே கிளம்பி வர முடியாத சூழ்நிலையில் இருக்கோம்... " என்றவர் அழைப்பை துண்டித்து விட்டு மகளைத் தேடி போனார்...

சோகமாய் இருந்த பெரிய மகளின் மனதினை மாற்றிட வேண்டி அவளைத் தங்கையிடம் அனுப்பி வைத்தார்... அதற்கும் பெரிய மகளுக்கு ஆயிரம் அறிவுரை கூறி அவர் அனுப்பி வைத்தார்...

முத்துபேச்சி வீட்டிற்கு வந்த மதுரகவியை அவள் தான் உற்சாகமாய் வரவேற்றாள்...

"வா, வா மது, எப்படியிருக்க...?"

"இருக்கேன்க்கா..." என்று சுரத்தே இல்லாது பதிலளித்தவள்,

"தாமரை எங்கேக்கா...?" என்று வரவேற்பறையைப் பார்வையால் துளாவியபடி கேட்க...

"மாடியில் இடது பக்கம் இருக்கும் அறையில் இருக்கிறாள்..."

முத்துபேச்சி கூறியதும் மதுரகவி ஒன்றும் பேசாது எழுந்து செல்ல, அவள் செல்வதைப் புன்னகையுடன் பார்த்திருந்தாள் முத்துபேச்சி...

சுவாதீனமாய் அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்த மதுரகவி அங்கு இருந்த ரிச்சர்ட்டை கண்டு ஆனந்த அதிர்ச்சி அடைந்தவளாய் கண்கள் கலங்க, கால்கள் நகர மறுத்து உணர்ச்சிவசப்பட்டவளாய் அப்படியே சிலையாய் சமைந்து நின்றாள்...

மதுரமாகும்...!!!

"மது... மை லவ்..."

ரிச்சர்ட் காற்றை விட வேகமாய் விரைந்து வந்து தன்னவளை இறுக அணைத்துக் கொண்டான்... அவன் மதுரகவியை வேகமாக இழுத்ததில் கதவை பிடித்தபடி நின்றிருந்த மது அவனது அணைப்பில் புகுந்ததும் கதவு தானாக மூடி கொண்டது... இரு நாள் பிரிவு அவனை வாட்டி வதைத்ததோ என்னமோ அவனது அணைப்பு மேலும் மேலும் இறுகியது...

எலும்புகள் நொறுங்கி விடுவது போலிருந்த கணவனது அணைப்பு அவளது புண்பட்ட நெஞ்சத்திற்குத் தேவையாக இருந்தது போலும்... அந்தக் கணம் அவளது மனதிலிருந்த வேதனை எல்லாம் அழுகையாக வெளிப்பட்டது... அவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்...

அம்மா, சகோதரன் என்று எல்லோரும் அவளைச் சுற்றியிருந்த போதும் அவளால் தனது மனத்துயரை யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியவில்லை... தன்னவனைக் கண்டதும் அவளது துக்கம் எல்லாம் வெள்ளமென வெளிவந்தது... கோபம் மட்டுமல்ல வேதனையையும் உரிமை இருக்கும் இடத்தில் மட்டும் தான் காட்ட முடியும்... ஒரு நாளில் எத்தனை துன்பம் தான் அவளுக்கு...

மனைவியின் அழுகையை உணர்ந்த ரிச்சர்ட் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைக் கட்டிலில் அமர வைத்து தானும் உடன் அமர்ந்து கொண்டான்... அவளைத் தன் கையணைவில் வைத்துக் கொண்டு,

"ப்ளீஸ் பேபி... அழாதே..." என்று அவளைச் சமாதானப்படுத்தினான்...

"அவர் இப்படிப் பண்ணுவார்ன்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை ரிச்சி... அதை விட மந்தி இப்படி நடந்து கொள்வாள்ன்னு நான் கனவிலும் நினைச்சு பார்க்கலை..."

அவளது அழுகையின் காரணம் புரிந்து அவன் வேதனையோடு அமைதியாக இருந்தான்... அவளைப் பற்றி அவனுக்கு நன்கு தெரிந்ததால் தானே இந்த நேரம் அவளுடன் தான் ஆறுதலாய் இருக்க முடியவில்லையே என்று அவன் கவலைப்பட்டது... இப்போது அவன் அவளுக்கு ஆறுதலாக இருப்பது அவனுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

"மகள் மாதிரி உள்ள பொண்ணைப் போய் எப்படி இப்படி நினைக்க முடிந்தது ரிச்சி...? அது போல் அப்பா மாதிரி உள்ளவரை போய்... ச்சீ ச்சீ... அவ்வளவு அருவருப்பா இருக்கு... உன்னோட அம்மா சரியில்லைன்னு தான் நான் உன்னை விட்டு பிரிஞ்சது... ஆனால் என் அப்பா அதை விடக் கேவலமான கேரக்டர்... அவங்களாவது சந்தர்ப்ப சூழ்நிலையில் அப்படியானவங்க... ஆனால் இவர்...? இந்த அற்ப காரணத்துக்காக உன்னைப் பிரிஞ்சு வந்ததுக்கு எனக்கு இது வேண்டும் தான்... யாரையும் தவறா நினைக்கக் கூடாதுன்னு இப்போ எனக்குப் புரியுது..." என்றவள் அழுகையோடு அவனை ஏறிட்டு,

"நான் ரொம்பத் தப்புப் பண்ணிட்டேன் ரிச்சி... உனக்குத் துரோகம் பண்ணிட்டேன்..."

'நீ என்னைப் பிரிந்ததற்கு இது மட்டும் தான் காரணமா பேபி...?' மனதிற்குள் கேட்டு கொண்டவன் அதை அவளிடம் வாய் விட்டு கேட்கவில்லை...

அவள் மனக்கஷ்டத்தில் இருக்கும் போது அவனும் சேர்ந்து அவளைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை... ஏனெனில் அவனின் நிலையும் அதே தான்... இப்போதும் அவள் அப்படி நினைத்திருந்தால் அவனைத் திருமணம் செய்திருக்காது இருந்திருக்கலாம்... இத்தனை மகிழ்வாய் அவனோடு வாழாது ஒதுங்கி போயிருக்கலாம்... இந்தக் காரணத்தை எல்லாம் தாண்டிய வேறு ஒரு விசயம் அவள் மனதினை

வாட்டுவதை அவன் உணர்ந்தே இருந்தான்... அது எதுவென்று அறியாது அவன் திணறினான்...

"ப்ச்... நீ எந்தத் துரோகமும் பண்ணலை மது..." அவன் அவளை ஆறுதல் படுத்த முயன்ற போது அவள் தனது சிப்பி இமைகளை மலர்த்தி அவனை ஏறிட்டவள்,

"இப்படிச் சொல்வது உன் பெருந்தன்மை ரிச்சி..."

"இந்த ஒரு விசயத்திற்காக மட்டும் தான் நீ என்னை வெறுத்து ஒதுக்கினியா...? அதற்காக என்றால் இதுநாள் வரை உன்னால் என்னை மறக்க முடிஞ்சதா...? இல்லையே... அப்புறம் எப்படி இது துரோகமாகும்...?"

அவனது கேள்வியில் அவளது மனம் தெளிந்தது... முகம் மலர்ந்தது...

"உன்னை மறக்க என்னால் முடியுமா...?" என்று கேட்டவளை கண்டு அவனது அணைப்பு மேலும் இறுகியது...

இந்தக் காதலுக்காகத் தானே அவன் அவளுக்காக இத்தனை வருடங்கள் காத்திருந்தது... அவளது நெற்றியில் அவனது இதழ் அழுத்தமாய்ப் பதிந்தது... கணவனது செயலில் அவளது அலைபுற்றிருந்த மனது அமைதியானது...

"உன் அப்பா, உன் தோழி துரோகம் தெரிந்து உன் மனசு என்ன பாடுபடும்ன்னு நினைச்சு நான் கவலைப்பட்டுக்கிட்டே இருந்தேன்..."

"ம்... ம்... ரொம்பக் கஷ்டமாயிருக்கு ரிச்சி..."

"அவர் உன் அம்மாவுக்கு மட்டுமல்ல, உனக்கும் துரோகம் பண்ணிருக்கார்..." என்றவனைப் புரியாது பார்த்தவளிடம்,

"என்னிடம் உன்னை அனுப்பியது தவறு தானே..." அதைக் கேட்டு அவளது முகம் ஒரு நொடி சுருங்கினாலும் மறுநொடி மலர்ந்தது...

"அழகான தவறு... அதனால் தான் நீ எனக்குக் கிடைச்சிருக்க ரிச்சி..." என்று சந்தோசமாய்க் கூறியவள் அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள்...

"அந்த இடத்தில் நானில்லாது வேறு யாராவது இருந்திருந்தால்...?" இதைச் சொல்லும் போதே அவனது குரலும், உடலும் நடுங்கியது...

"நான் செத்திருப்பேன் ரிச்சி... இந்நேரம் என்னைப் புதைச்ச இடத்தில் புல் முளைச்சிருக்கும்..." என்று கண்ணீர் மல்க கூறியவளின் வார்த்தையில் அவனது முகம் உணர்வுகளைத் தொலைத்துக் கடினமுற்றது...

அவளின் குணம் அறிந்து தான் அவன் உள்ளம் நடுங்கியது... ஆங்கிலேயனான அவனிடமே கற்புநெறி, ஒழுக்கம் பற்றிப் பாடம் எடுத்தவள் அவள்... அப்படிப்பட்டவள் இதைச் செய்யாது இருந்தால் தான் அவன் ஆச்சிரியப்பட வேண்டும்...

"இனி நீ இப்படிப் பேச கூடாது பேபி..." என்று அவன் அவளைக் கடிந்து கொண்டான்...

"உங்கப்பா எதனால் இதைச் செய்தார் தெரியுமா...?"

"எதனால்...?"

"உன் பெயரில் ஆரம்பித்த தொழில் ஒப்பந்தத்தை அந்தப் பெண் அவள் பெயரில் மாற்ற சொல்லி உங்கப்பாவை மிரட்டி இருக்கிறாள்... வேறுவழி இல்லாமல் அவர் என்னிடம் வந்து கேட்டார்... நான் முடியாதுன்னு சொன்னேன்... அப்போ தான் அவர் என்னிடம் பெண்கள் பழக்கம் இருக்கான்னு கேட்டார்... இது தான் சாக்குன்னு நான் உன்னைக் கேட்டேன்... எப்படியாவது நீ எனக்கு வேண்டும்ன்னு நான் நினைச்சேன்... உன்னை அடைய நான் தேர்ந்தெடுத்த வழி தவறானதா இருக்கலாம்... ஆனால் என்னோட ஒரே நோக்கம் நீயும், நானும் ஒண்ணு சேரணுங்கிறது மட்டுமே..." என்று கூறியவனின் குரலில்

'என்னைப் புரிந்து கொள்' என்கிற யாசிப்பே அதிகம் இருந்தது...

மதுரகவிக்குத் தனது தோழியின் இன்னொரு பக்கம் தெரிந்து பெருத்த அதிர்ச்சியாக இருந்தது... தன்னிடம் போட்டி போடும் அளவிற்கு அவளுக்குத் தன் மீது ஏன் இவ்வளவு பொறாமை...? அவளால் மனம் தாங்க முடியவில்லை... நல்ல நட்பு என்று எண்ணியிருந்தது இப்படி அவளது குடும்பத்தை நிலைக்குலைய செய்யும் என்று அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லையே... அதை விடத் தந்தையை நினைத்து மனம் தாங்கவில்லை... சில நொடிகள் அமைதியாக இருந்தவள் பின்பு இருவரை பற்றி நினைப்பதை முயன்று ஒதுக்கி வைத்துவிட்டு,

"உன்னை எனக்குத் தெரியாதா ரிச்சி...?" என்று கணவனைக் கண்டு புரிதலுடன் கூறினாள்... அதில் காதல் பெருக்கெடுக்க அவன் அவளது விழி மீது முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்...

அப்போது அவர்களின் அறை கதவு படபடவெனத் தட்டப்பட்டது... கூடவே தாமரையின் குரலும்... அப்போது தான் அவள் 'ஸ்பெசல் க்ளாஸ்' முடிந்து பள்ளியில் இருந்து வந்திருந்தாள்...

"அக்கா, அக்கா..."

தங்கையின் குரல் கேட்டதும் மதுரகவி கணவனிடம் இருந்து சட்டென்று விலகி அமர்ந்தாள்... அவளது பயத்தினைக் கண்டு ரிச்சர்ட் சிரித்தபடி எழுந்தான்... அவனோடு சேர்ந்து அவளும் எழுந்து நிற்க... அவன் அவளது தோளோடு கை போட்டு அணைத்துக் கொண்ட போது,

"வேண்டாம் ரிச்சி..." என்று மதுரகவி தடுத்தாள்...

"நான் உன் கணவன் தானே...?"

"அது வந்து...?"

"ஆமாவா...? இல்லையா...?"

"ஆமாம்..."

"அப்போ பேசாம என் கூட வா..." என்று அவளைப் பார்த்து கட்டளை போல் கூறியவன் அவளையும் உடன் அழைத்துக் கொண்டு வந்து கதவை திறந்தான்...

"மாமா... கடைசியில் என் அக்கா உங்களைத் தேடி வந்துட்டாளா...?" என்று தாமரை கண்களை உருட்டி கொண்டு நமட்டு சிரிப்புடன் ரிச்சர்ட்டிடம் கேட்க... அதை மதுரகவி அதிசயமாய்ப் பார்த்தாள்...

"உனக்கு ரிச்சியைத் தெரியுமா...?" திக்கி திணறி கேட்டவளை கண்டு இருவரும் வாய் விட்டு நகைத்தனர்...

"இன்னும் இந்தப் பயந்தாங்கொள்ளி பொண்ணு உங்களுக்கு வேணுமா மாமா...? பேசாம என்னைக் கல்யாணம் பண்ணிக்கோங்களேன்... நான் அக்கா மாதிரி எல்லாம் பயப்பட மாட்டேன்... வீட்டை விட்டு தைரியமா ஓடி வந்திருவேன்..."

"ஏய்..." என்று கோபத்துடன் மதுரகவி தங்கையின் காதை பிடித்துத் திருக...

"ஐயோ விடுக்கா..." என்று போலியாக அலறினாள் தாமரை...

"இந்த வயசில் உனக்குக் காதல் கேட்குதா...?"

"நீ மட்டும் காதலிக்கலாம்...? நான் காதலிக்கக் கூடாதா...? இது எந்த ஊர் சட்டம்...?" சின்னவள் கோபம் போல் விளையாட்டாக அக்காவிடம் எகிறினாள்... சின்னவள் பேச்சு கேட்டு பெரியவள் முகம் வாடி போனது...

"எனக்கு இந்தப் பயந்தாங்கொள்ளி பொண்ணு தான் வேணும்... வேறு எந்தப் பொண்ணும் வேண்டாம்..." என்று கூறிய கணவனின் வார்த்தையில் அவளது முகம் புன்னகையைத் தத்தெடுக்க, அவனது தோளில்

சலுகையாய் சாய்ந்து கொண்டு சிறு கர்வத்துடன் தங்கையைப் பார்த்தாள் மதுரகவி...

"பெட்ரோமாஸ் லைட்டே தான் வேணும்ன்னு நீங்க பிடிவாதம் பிடிச்சா, நான் என்ன பண்ண...? உங்க தலையெழுத்து அவ்வளவு தான்... விதி வலியது..." என்று அலுத்துக் கொண்டு சொல்வது போல் கூறியவளின் விழிகள் குறும்பில் கூத்தாடியது...

"தாமரை உன்னை..." என்று மதுரகவி அவளை அடிக்க வர, சின்னவள் அக்காவின் கைகளில் அகப்படாமல் ஓடினாள்... மதுரகவி அவளைத் துரத்தி கொண்டு சிறு பிள்ளை போல் பின்னாடி ஓடினாள்...

சகோதரிகளின் விளையாட்டை ரசித்தபடி புன்னகையுடன் ரிச்சர்ட் அவர்களைப் பின்தொடர்ந்தான்... மனைவியின் முகத்தில் மகிழ்ச்சியை மீட்டெடுத்த மச்சினிச்சியை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது...

தாமரையைத் துரத்தி கொண்டு கீழே ஓடி வந்த மதுரகவி அங்கு நின்று கொண்டிருந்த முத்துபேச்சியிடம், "அக்கா... அவளைப் பிடிங்கக்கா..." என்று மூச்சிரைக்கக் கூற...

சற்று நேரத்திற்கு முன்பு தான் மதுரகவியிடம் நலம் விசாரித்த போது அவள் 'இருக்கேன்க்கா...' என்று விட்டேற்றியாகக் கூறிய போது வருத்தம் கொண்ட முத்துபேச்சி, இப்போது அவளது சகஜமான மனநிலையில் நிம்மதியுற்றாள்...

"நான் பிடிக்கிறேன்க்கா..." என்று கயல்விழி தோழியைப் பிடித்து அவளது அக்காவிடம் கொடுத்தாள்...

"நீ தான் நல்ல தங்கை..." என்று கயல்விழியை மெச்சிய மதுரகவி தங்கையின் தோளில் இரண்டு அடி போட்ட பின்பே ஓய்ந்தாள்...

"உனக்கு நான் பெட்ரோமாஸ் லைட்டாடி...?"

"அட போக்கா... அது கூடச் சீக்கிரம் பத்திக்கும்... ஆனா நீ...?" முதுகை தடவி விட்டுக் கொண்டே தாமரை நமட்டுச் சிரிப்பு சிரித்தாள்...

"ஏய்..." என்று மீண்டும் அவள் மீது பாயப் போன மதுரகவியை ரிச்சர்ட் தடுத்து அணைத்துக் கொண்டான்...

"விடு சின்னப் பொண்ணு தானே... இந்த வயசில் ஜாலியா இருக்காம வேறு எந்த வயசில் இருப்பது...?" என்று அவன் மச்சினிச்சிக்கு பரிந்து பேச...

அப்போது தான் மதுரகவிக்குச் சுற்றுப்புறம் நினைவு வந்தது... எல்லோரையும் பார்த்து அகப்பட்டது போல் அவள் விழித்துக் கொண்டு நின்றிருந்தாள்...

"நான்... ரிச்சி..." என்று கைகளைப் பிசைந்தவளை கண்டு முத்துபேச்சி, தாமரை, கயல்விழி மூவரும் ஒன்றாகச் சேர்ந்து,

"மிஸ்டர். ரிச்சர்ட், உன்னோட கணவர்... அதுவும் காதல் கணவர்..." என்று கேலியாய் ஒன்று போல் கூறி சிரிக்க... மதுரகவி நாணம் கொண்டு கொண்டவனின் தோள்வளைவில் முகம் புதைத்து கொண்டாள்...

அடுத்து அங்குக் கடந்த மணி துளிகள் மகிழ்ச்சியாகவே கடந்தது... முத்துபேச்சி வீட்டில் இரவு உணவு முடித்துக் கொண்டு மதுரகவி கிளம்பத் தயாரான போது தங்கையைத் தனியாக அழைத்து,

"தாமரை... நடந்து போன விசயங்களை நினைத்து மனசை அலைபாயச் செய்யாம, படிக்கிறதில் மட்டும் கவனம் செலுத்தும்மா... உனக்காக அம்மா, அண்ணா, நான் எல்லோரும் இருக்கிறோம்..."

"மாமாவையும் கூடச் சேர்த்துக்கோக்கா..." தங்கை கூறியதை கேட்டு அவளது முகம் மென்மையானது...

"முதல்ல நியூஸ் கேட்டுக் கொஞ்சம் அதிர்ச்சியாகத் தான் இருந்தது... ஆனா அம்மாவும், அண்ணாவும் அவரை அடிச்சு

நொறுக்கியதை கேள்விப்பட்டதும் எனக்கு ரொம்பச் சந்தோசமா இருந்துச்சு... இது போதாதுக்கா... இன்னமும் அதிகத் தண்டனை அவருக்குக் கொடுக்கணும்..." என்று சற்று கோபத்துடன் சொன்னவள் பின் சாந்தமாகி,

"நீ ஏன்க்கா மாமாவை பிரிஞ்சிருக்க...? அவர் ரொம்ப நல்லவர்க்கா... உன் மேல் உயிரையே வச்சியிருக்கிறார்... என் கிட்ட அவர் பேசும் போது எல்லாம் உன்னைப் பத்தி பேசியது தான் அதிகம்..."

அதைக் கேட்டு அவளது முகம் கறுத்துப் போனது... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "நீ இந்த விசயத்தை அண்ணா கிட்ட சொல்லிடாதே..." என்று பயத்துடன் கூறியவளை கண்டு தங்கை யோசனையாகப் பார்த்தாள்...

எல்லோரும் அவளைத் தங்க சொன்ன போதும் அவள் பயத்தில் மறுத்து விட்டாள்... கணவனுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்று அவளுக்கு ஆசை தான்... ஆனால் சகோதரன் கேட்கும் கேள்விகளுக்கு அவளிடம் பதில் இல்லையே... பின்பு தங்கையிடமும், முத்துபேச்சியிடமும் அவள் விடைப்பெற்று விட்டு இறுதியாகக் கணவனிடம் வந்தாள்... அவர்களுக்குத் தனிமை கொடுத்து எல்லோரும் விலகி சென்றனர்...

"ரிச்சி..." என்று தழுதழுத்தவளின் கைகளை இறுக பற்றிக் கொண்டு அவன் அமைதியாக இருந்தான்...

அவனது முகம் சிவந்து இருந்ததில் இருந்து அவன் உணர்ச்சிவசப்பட்டு இருக்கிறான் என்பது அவளுக்கு நன்கு புரிந்தது... அது தன்னால் தான் என்றும் அவளுக்குப் புரிந்தது... அவனது துயரை எப்படித் துடைப்பது என்று தெரியாது அவள் விழித்து நின்றாள்...

"என்னைப் புரிந்து கொள் ரிச்சி..." என்று தவிப்புடன் கூறியவளை கண்டு அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

"நான் உன்னைப் புரிந்து கொள்ளாமலா...? இதற்கு முடிவு தான் என்ன பேபி...? இப்படியே நாம ரெண்டு பேரும் கடைசி வரை பிரிந்திருக்க வேண்டியது தானா...?"

"அது தான் நம்ம தலையெழுத்து என்றால் இப்படித் தான் வாழ்ந்தாகணும்..." என்றவளை கூர்ந்து பார்த்தவன் ஒன்றும் பேசாது அவளது முன் நெற்றியில் அழுத்தமாய் இதழ் பதித்து விலகினான்...

"போய் வா..." என்று அவன் அவளுக்கு விடை கொடுக்க... அவளோ கண்ணீருடன் அவனிடம் இருந்து விடைப்பெற்றாள்... அவளது கண்ணீர் அவனது மனதினை உலைக்களமாய்க் கொதிக்கச் செய்தது... இதற்கு நிரந்தரத் தீர்வு எடுக்கச் சொல்லி அவனது காதல் மனம் துடித்தது...

அப்போது அங்கு வந்த தாமரை அவனிடம், "அக்கா ஏன் அண்ணாவுக்கு இப்படிப் பயப்படுகிறாள்ன்னு எனக்குத் தெரியலை...? அண்ணா எங்க ரெண்டு பேர் மேலும் உயிரையே வைச்சிருக்காங்க... இவள் பயப்படுகிற மாதிரி எல்லாம் அவங்க கெட்டவங்க கிடையாது..." என்று புரியாது கூற...

அதைக் கேட்டு ரிச்சர்ட்டின் முகம் மலர்ந்தது... பிரச்சினையின் நுனி கிடைத்து விட்டதே... அந்தக் கணம் அவன் தனது மனதில் ஒரு தீர்மானம் எடுத்திருந்தான்...

"தேங்க்ஸ் தாமரை..." என்றான் அவன் மகிழ்ச்சியாய்...

******************

மந்தாகினியும், அவளது தாயாரும் கால்நடையாக வெகுதூரம் நடந்து வந்து கொண்டிருந்தனர்... அவர்களது வீடு இருந்த பகுதி கடற்கரையை ஒட்டி ஊருக்கு ஒதுக்குபுறமாக இருந்தது... அதனால் அங்கு வீடுகள் என்று அதிகம் இருந்தது இல்லை... அதனால் மனித நடமாட்டத்தைக் தேடி இந்த இரு ஜீவன்களும் நடந்து வந்தனர்...

சற்று தள்ளி ஒரு மீனவ குப்பத்தில் இருந்து வெளிச்சம் ஒளிர்ந்ததில் அவர்களது முகம் மலர்ந்தது... அங்கிருந்த அம்மன் கோவில் பிரகாரத்தில் வந்து அவர்கள் இருவரும் அமர்ந்தனர்... நடந்து வந்ததில் அவர்களது கால்கள் வலித்தது...

"ஷப்பா..." என்று பவானி தனது கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டார்... மந்தாகினியோ இறுகி போன முகத்துடன் அமர்ந்திருந்தாள்...

அங்கு வந்த பூசாரி அவர்களைப் பார்த்து, "இங்கே ராத்திரி தங்க அனுமதி இல்லைம்மா... நீங்க ரெண்டு பேரும் கிளம்புங்க..." அவர்களது பெரிய இடத்துத் தோரணை கண்டு அவர் சற்று மரியாதையாகப் பேசினார்...

"ஐயா... போறதுக்குப் போக்கிடம் இல்லைங்க... இன்னைக்கு ஒரு நாள் இங்கே தாங்கிட்டு நாளைக்குக் காலையில் கிளம்பி போயிர்றோம்..." என்று பவானி கெஞ்சியதும்... அவர் யோசனையுடன் சரியென்று கூறினார்...

"ஐயா... பிரசாதம் ஏதும் மீதம் இருக்குதா...?" பசி காதை அடைத்ததில் அவர் பிச்சை எடுக்காத குறையாகப் பூசாரியிடம் கெஞ்சினார்... மந்தாகினி அன்னையை முறைத்தாள்... அவரோ அவளைக் கண்டு கொள்ளவே இல்லை...

"இந்தாங்கம்மா... வீட்டுக்குக் கொண்டு போக எடுத்து வச்சது..." என்று பூசாரி பவானியிடம் பிரசாதத்தை எடுத்து கொடுத்து விட்டு வாயிற்கதவை வெளிப்பக்கமாகப் பூட்டிவிட்டு அவர் சென்றுவிட்டார்...

"உனக்கு வேணுமா பாப்பா...?" என்று அன்னை நீட்டிய பிரசாதத்தைக் கண்டு எரிச்சலுடன்,

"இந்த நிலைமையிலும் உங்களுக்குச் சோறு கேட்குதா...?" என்று மந்தாகினி முகத்தைச் சுளித்தாள்...

"பாப்பா... பசி வந்தால் பத்தும் பறந்து போகும்... நான் என்ன எம்மாத்திரம்...?" என்றவர் மகளைக் கண்டு கொள்ளாது உண்ண துவங்கினார்...

மகளோ அன்னை கூறியதை வெகுதீவிரமாய் யோசித்துக் கொண்டிருந்தாள்... அதன் விளைவு அவள் ஒரு முடிவு எடுத்தாள்...

"அம்மா... நான் சினிமாவில் நடிக்கலாம்ன்னு இருக்கேன்..."

மகள் 'சினிமா' என்று கூறியதும் அவரது வாயெல்லாம் பல்லாக மாறியது... எப்போதுமே பெரிய திரை மீது மக்களுக்கு இருக்கும் மோகமே தனித் தான்...

"நல்ல ஐடியா பாப்பா... உன் அழகுக்கு நீ பெரிய நடிகையா வலம் வருவ..." என்று கூறியபடி சர்க்கரை பொங்கலை அள்ளி தனது வாயில் திணித்துக் கொண்டார்... மகள் வாயில் திணிக்க ஆசை தான்... ஆனால் அவள் கோபத்தில் தனது கையைக் கடித்து விட்டால்...? அதனால் அவர் சற்று அடக்கி வாசித்தார்...

"அதுக்கு முன்னாடி ஒரு நல்ல லேடி டாக்டரா பார்க்கணும்மா..."

"எதுக்குப் பாப்பா...?"

"அபார்சன் பண்ணிக்கத் தான்..." என்று அலட்சியமாய்க் கூறிய மகளைக் கண்டு அவர் திகைத்துப் போனார்...

"பாப்பா..."

மகள் இந்தக் குழந்தையை எவ்வளவு ஆசையாகக் கருவில் சுமந்தாள் என்பது அவருக்குத் தானே தெரியும்... அதனால் அவளது முடிவு அவருக்கு அத்தனை அதிர்ச்சியைக் கொடுத்தது...

"ஆமாம், ரொம்ப ஆசையா தான் இந்தக் கருவை சுமந்தேன்... ஆனா நான் போகிற பாதைக்கு இது பெரிய தடையா இருக்கும்ன்னா இதை அழிக்கிறதை தவிர எனக்கு வேறுவழியில்லை... முதலில் எனக்கு என் சுகம் தான்ம்மா

பெரிசு... இது வேணும்ன்னு பெத்துக்கிட்டு ஐஞ்சுக்கும், பத்துக்கும் என்னைக் கூலிக்கு மாரடிக்கச் சொல்றீங்களா...?" மகளின் கூற்றில் இருந்த உண்மையை உணர்ந்தவராய் அமைதியாய் இருந்தவர் மெல்ல அவளிடம்,

"சினிமாவில் சான்ஸ் கிடைப்பது அவ்வளவு லேசு இல்லை பாப்பா..."

"தெரியும்மா... இத்தனை நாள் எப்படி வாழ்ந்தேனோ அது போல் சில விசயங்களை நாம் சகிச்சுக்கிட்டு கடந்து வந்துவிட்டால் சினிமாவில் நம்பர் ஒன் பொசிசன் நமக்குத் தான்..." மகளின் ஆசை வார்த்தைகளில் அவரது விழிகளில் கனவு விரிந்தது...

"நாளைக்கு முதல் வேலையா லேடி டாக்டரை பார்க்க போகலாம் பாப்பா..." என்றவர் பின்பு யோசித்தபடி,

"பணத்துக்கு என்ன பண்ண பாப்பா...?" என்று கவலையாகக் கேட்டவரை கண்டு,

"கழுத்தில், காதில் போட்டிருக்கிறதை விற்க வேண்டியது தான்..." மகளின் பதிலில் அவர் திருப்தியுற்றவராய் அங்கே படுத்துக் கொண்டார்...

மந்தாகினி இருண்ட வானத்தை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அவளது நெஞ்சம் கோபத்தில் பொருமி கொண்டிருந்தது... இதை எல்லாம் அருள்பாலிக்கும் புன்னகை முகத்துடன் அம்மன் பார்த்து கொண்டிருந்தாள்...

நல்லவர்களோ, கெட்டவர்களோ அவர்களுக்கு வேண்டிய அருளை அளிக்க வேண்டியது கடவுளது கடமை... ஆனால் மனிதர்கள் செய்யும் நல்லது, கெட்டது தான் அவரவருக்கு நல்லது, கெட்டதைத் திருப்பிக் கொடுக்கிறது என்பதை மனிதர்கள் தான் அறிந்து கொள்ளவில்லை... அதை அறியாது காரியம் வெற்றியடைந்தால் கடவுளை புகழ்வதையும், காரியம் தோல்வியுற்றால் கடவுளை நிந்திப்பதையும் மனிதர்கள் வாடிக்கையாகக்

கொண்டிருக்கின்றனர்... இறைவன் இரண்டையும் புன்னகை முகத்துடன் ஏற்றுக் கொள்கிறான்... அது போல் மனிதனும் இன்ப, துன்பத்தைப் புன்னகை முகத்துடன் கடந்து விட்டாலே பாதிப் பிரச்சினைகள் தீர்ந்து விடும்...

மறுநாள் காலையில் எழுந்ததும் திருச்செல்வன் அன்னையிடம் வந்தான்...

"அம்மா... இன்னைக்கு அந்தாளை கோர்ட்டுக்கு கூட்டிட்டு போறாங்க..."

"ம்... தெரியும்..."

"ஒருவேளை அந்தாளை ஜாமீனில் விட்டுட்டாங்கன்னா..."

"அப்படி அவன் வெளியில் வந்தால் அவனுக்கான தண்டனையை நாம கொடுக்க வேண்டியது தான்..." என்று தீவிரமான குரலில் கூறிய அன்னையைப் பார்த்து அவனும்,

"நிச்சயம்மா..." என்று உறுதியாய்க் கூறினான்...

அப்போது அவனது அலைப்பேசி அழைத்தது... தெரியாத எண் என்றதும் அவன் யோசனையுடன் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்... மறுமுனையில் பேசிய குரலை கேட்டதும் அவனது முகம் அவனையும் அறியாது மகிழ்ச்சியில் விகசித்தது...

"கட்டாயம் வர்றேன்... இதை விட வேறு வேலை எனக்கு என்னயிருக்கு..." என்றவன் அவசரமாய் வெளியில் கிளம்பினான்...

"திரு..." வெளியில் செல்லும் மகனிடம் 'எங்கே போகிறாய்...?' என்று கேட்க தயங்கி அவர் நிற்க...

"எல்லாம் நல்ல விசயம் தான்ம்மா... வந்து சொல்கிறேன்..."

"எப்படியோ நல்லது நடந்தால் சரி..." அவர் கணவனை மனதில் நினைத்துக் கொண்டு கூற...

"நிச்சயம் நல்லதே நடக்கும்மா..." என்று இருபொருள்படக் கூறிவிட்டு அவன் அவசரமாக வெளியில் விரைந்தான்...

*******************

காலையில் நீதிமன்ற வளாகம் எப்போதும் போல் பரபரப்பாக இயங்கி கொண்டிருந்தது... செந்தில்நாதன் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைக்கு வருவதால் அந்தப் பரபரப்பு இன்னமும் அதிகமாய் இருந்தது... செந்தில்நாதன் தனக்கு ஜாமீன் கிடைத்துவிடும் என்று இறுமாப்புடன் அமர்ந்திருந்தார்...

அவரது கல்லூரியை பினாமி பெயரில் வைத்திருந்த நண்பரின் மகன் அவருக்காக ஜாமீனில் எடுக்க எல்லா ஏற்பாடுகளும் செய்து இருந்தான்... ஏனெனில் இதில் அவனது தந்தையும் சேர்ந்து மாட்டி கொண்டு இருக்கிறாரே... காவல்துறை அடித்து உதைத்து பொய் வாக்குமூலம் பெற்றுக் கொண்டது என்று வழக்கை திசைமாற்றிவிட எண்ணி அவனும், அவன் நியமித்த வழக்கறிஞரும் காத்திருந்தனர்...

வழக்கை நீதிபதி விசாரிக்கும் போது வேறு ஒரு வழக்கறிஞர் சார்பாக மற்றொரு மனு அளிக்கப்பட்டது... அவர் எதிர்கட்சி வழக்கறிஞர்... அதனால் செந்தில்நாதனை வசமாக மாட்டிவிட அவர் எண்ணினார்... அந்த மனுவில் இருந்ததைக் கேட்டு செந்தில்நாதனுக்கு மயக்கம் வராத குறை தான்... ஆம், சர்வதேச அளவில் அவர் செய்த குற்றங்களைப் பட்டியலிட்டு கூறி அவரைச் சிபிஐ காவலில் வைத்து விசாரிக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டு இருந்தது...

மதியம் அதை விசாரித்த நீதிபதி இதற்கான பதிலை சமர்ப்பிக்கும்படி காவல்துறையைக் கேட்டுக் கொண்டார்...

அதன்படி மறுநாளே காவல்துறை அதற்குரிய பதிலை சமர்ப்பித்தது... அன்று நடந்த விசாரணையில் நீதிபதி சிபிஐ விசாரணைக்குச் சம்மதம் தெரிவித்து உத்தரவிட்டு

கையெழுத்திட, அதனால் செந்தில்நாதனின் தலையெழுத்தே மாறிப் போனது...

அன்றே அவர் சிபிஐ விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டார்... சிபிஐ அதிகாரிகளுடன் ரிச்சர்ட்டும் சேர்ந்து வந்தான்... அவனை அங்குக் கண்டதில் செந்தில்நாதனின் கண்கள் குழப்பத்துடன் சுருங்கியது... நேரே அவர் முன் வந்து நின்றவன் உணர்ச்சி துடைத்து முகத்துடன் அவரைப் பார்த்து,

"எங்கே என் அம்மாவின் இதயம்...?" என்று கேட்டான்...

அதைக் கேட்டு அவரது முகத்தில் இகழ்ச்சியான புன்னகை தோன்றியது...

"உன் அம்மாவின் இதயம் உன் அம்மாவிடம் இருக்கும்... என்னிடம் வந்து எதற்குக் கேட்கிறாய்...?"

"அது காணாமல் போனதால் தானே உங்களிடம் வந்து கேட்கிறேன்..." அவனது அழுத்தமான குரலில் அவர் யோசனையாய் அவனைப் பார்த்தார்...

"இரண்டு வருடங்களுக்கு முன் ரோசலின் என்கிற வெளிநாட்டு பெண்ணின் இதயத்தை மாற்றி வைத்துப் போஸ்ட்மார்ட்டம் அறிக்கையை மாத்தி எழுதுனீங்களே... அது உங்களுக்கு நினைவு இருக்கிறதா...?"

அவனது கேள்விகளில் அவருக்குப் பயத்தில் வியர்த்து வழிந்தது... அச்சத்தில் மனம் படபடக்கத் தன்னையும் அறியாது அவர் உளற ஆரம்பித்தார்...

"அவள் யார் உனக்கு...? அவளை எப்படி உனக்குத் தெரியும்...? உனக்கும், அவளுக்கும் என்ன சம்பந்தம்...? இதைக் கேட்க நீ யார்...?"

அவரது ஒட்டுமொத்த கேள்விகளுக்கும் ரிச்சர்ட் ஒரே வரியில் பதில் அளித்தான்...

"எனது அம்மாவின் கொலையை விசாரிக்கும் நான், சர்வதேச காவல்துறையை (Interpol) சேர்ந்தவன்..."

அவன் கூறியதை கேட்டு அவருக்கு நெஞ்சு வலிப்பது போலிருந்தது... நெஞ்சை பிடித்துக் கொண்டு அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தார்...!!!

மதுரமாகும்...!!!

மருத்துவமனை கட்டிலில் படுத்திருந்த செந்தில்நாதனின் பயம் இன்னமும் முற்றிலும் அகலவில்லை... அவரது மனக்கண்ணில் கோபத்தை அடக்கி கொண்டு தன் முன் வந்து நின்ற ரிச்சர்ட்டின் முகமே வலம் வந்தது... அவனது அன்னை தான் அந்த வெள்ளைக்காரி ரோசலின் என்று அவர் கனவிலும் நினைத்து பார்த்தாரா...? இல்லையே... அதிலும் அவன் சர்வேதச காவல்துறையைச் சேர்ந்தவன் என்றதும் அவருக்குப் பயம் பிடித்துக் கொண்டது...

அடுத்தக் கணம் நெஞ்சு வலிப்பது போல் அவர் துடித்து நாடகம் போட்டதை நம்பி காவல்துறையினர் அவரை மருத்துவமனையில் சேர்த்து ராஜ உபசாரம் செய்து கொண்டிருந்தனர்... இந்த மாதிரி மடையர்கள் இருக்கும் வரை அவரது காட்டில் மழை தான்... அவரது நடிப்பிற்கு மருத்துவர்கள் வேறு உடந்தை... உடல்நலம் சரியில்லை என்று கூறி விசாரணையைத் தள்ளி போட வேண்டியது தான் என்று அவர் மனதிற்குள் திட்டமிட்டுக் கொண்டார்... ஆனால் அதற்கு முன் அவர் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கிறதே... அதை எப்படிச் செயல்படுத்துவது என்று அவர் பெரிய திட்டமே வைத்திருக்கிறார்...

'அடியேய் முத்துபேச்சி... உனக்கு வைக்கிறேன்டி பெரிய ஆப்பு...' என்று அவர் மனதில் கறுவி கொண்டார்...

மீண்டும் அவரது மனம் ரிச்சர்ட்டிடம் வந்து நின்றது... அவனது அன்னையைப் பற்றிய நிகழ்வு அவரது மனதில் எழுந்தது... அதே நேரம் ரிச்சர்ட்டும் தனது அன்னையைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்... உணர்வுகளுக்கு ஆட்படாத அவனையும் அன்னையின் கொடூர மரணம் மிகுந்த மனவுளைச்சலுக்கு ஆளாக்கி விட்டது...

இரண்டு வருடங்களுக்கு முன் அவன் தாத்தாவின் தொழில் சம்பந்தமாக அவர் சார்பாக அவன் இங்கே வர வேண்டியது இருந்தது... ஆம், வயோதிகம் காரணமாக அவன் அவரது

தொழிலை அவர் சார்பாகப் பார்த்து கொண்டாலும் அவன் அதில் எந்தவொரு முக்கியப் பதவியும் வகிக்கவில்லை... அதற்கு அவனது வேலை ஒரு காரணம்... சர்வேதச காவல்துறை பதவியில் இருந்து கொண்டு பரம்பரை தொழில் பார்ப்பது என்பது சத்தியமில்லாத ஒன்று... அதனால் தொழிலில் இருந்து அவன் சற்று விலகி இருந்தான்...

"ரிச்சர்ட்... நானும் இந்தியா வரலாம்ன்னு நினைக்கிறேன்... என்னையும் அழைத்துப் போகிறாயா...?" என்று அவனது அன்னை ரோசலின் ஆவலுடன் அவனிடம் கேட்ட போது அவன் ஆச்சிரியமாக அவரைப் பார்த்தான்...

கடந்த இரண்டு வருடங்களாக அவன் அவ்வப்போது இந்தியாவிற்குச் சென்று வந்து கொண்டிருக்கிறான்... அப்போது எல்லாம் உடன் வர வேண்டும் என்று அவர் கூறியது இல்லை... அதனால் தான் அவனுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"ஷ்யூர் மாம்..." என்று சந்தோசமாய்க் கூறியவன்,

"பட் ஒன் கண்டிசன் மாம்... அங்கே போய் நீங்க மெடிட்டேசன் எல்லாம் செய்து குடி பழக்கத்தை நிறுத்தணும்..."

"அதற்காகத் தான் நானும் அங்கே வருகிறேன்..." என்று அவர் கூறிய போது அவன் இன்னமும் மகிழ்ந்து போனான்...

இந்தியா செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே அவர் குடிப்பதை நிறுத்தியிருந்தார்... இதை அறிந்த ரிச்சர்ட் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான்... தனது அன்னையைப் புது மனுசியாக்கிட துடித்த அவன் அவரை அழைத்துக் கொண்டு இந்தியா கிளம்பி வந்தான்... அவன் மும்பையில் வேலையின் காரணமாகத் தங்கி விட, அவனது அன்னை மட்டும் தமிழ்நாடு கிளம்பி சென்றார்...

தமிழ்நாடு என்றதும் அவனது முகம் தன்னவள் நினைவில் ஒரு மாதிரியாக மாறியது... இப்போது அவளுக்குத்

திருமணமாகி இருக்குமோ என்று அவனது மனம் ஆர்வமாகக் குறுகுறுத்தது... அதை அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் இருந்த போதும் அதைத் தாங்கி கொள்ளும் தைரியம் இல்லாதவனாய் அவன் அந்த எண்ணத்தைக் கைவிட்டான்...

"இங்கேயே இருக்கலாமே..." என்று அவன் கூறிய போது அவனது அன்னை மறுத்துவிட்டார்...

"பாண்டிச்சேரியில் இருக்கும் அரவிந்தர் ஆசிரமத்திற்குச் செல்ல போகிறேன்... சில காலம் மன நிம்மதிக்காக அங்கே இருந்து விட்டு வருகிறேன்..." என்று அவர் கூறிய போது அவனால் மறுக்க முடியவில்லை...

ரிச்சர்ட் அவரது பயணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தான்... இவ்வளவு செய்து கொடுத்தவன் அவருடைய பாதுகாப்பிற்கு என்று தனியாக யாரையும் நியமிக்கவில்லை... ஆனால் அந்தந்த இடங்களில் ஆட்களை நியமித்திருந்தான் அவரது போக்குவரத்திற்காக... அவன் இந்திய திருநாட்டில் பயமில்லை என்று நினைத்தானோ, இல்லை எல்லா நாடுகளைப் போன்று அவன் இந்தியாவை எண்ணி கொண்டானோ? எதுவென்று தெரியவில்லை... அன்னையைத் தனியாக அனுப்பி வைத்தான்...

அன்னையின் மரணத்திற்குப் பிறகு தான் அவன் தனக்கு என்று மெய்க்காவலர்களை வைத்துக் கொண்டது... தனக்காக இல்லை என்றாலும் தன்னவளின் பாதுகாப்புக்காக அவன் வைத்துக் கொண்டான்... ஏனெனில் செந்தில்நாதனின் கயமைத்தனம் அப்போது தான் அவனுக்குத் தெரிய வந்தது... அன்னையை இழந்தது போல் அவளை இழக்க அவன் விரும்பவில்லை...

பாண்டிச்சேரி செல்லும் முன் மாமல்லபுரத்தில் இரு நாட்கள் தங்கியிருந்து சிற்பங்களைப் பார்க்க வேண்டும் என்று ரோசலின் திட்டமிட்டு இருந்தார்... அதற்கு ஏற்றார் போன்று ரிச்சர்ட்டும் மாமல்லபுரத்தில் கடற்கரையோரம் இருந்த தங்கும் விடுதியில் அவருக்கு அறை பதிவு

செய்திருந்தான்... அங்குத் தான் ரோசலினுக்கு வினையே ஆரம்பமானது...

தனியாருக்கு சொந்தமான அந்த விடுதியின் கடற்கரையோரம் பொதுமக்களுக்குத் தடை விதிக்கப்பட்டு அங்குத் தங்குபவர்கள் மட்டுமே உபயோகப்படுத்தும் வகையில் அது அமைக்கப்பட்டு இருந்தது... அந்தளவிற்கு அரசியல் செல்வாக்கு அங்கு வேலை செய்தது...

மாலை நேரம் கடலில் குளியல் முடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார் ரோசலின்... அதே விடுதியில் செந்தில்நாதன் தனது இரு நண்பர்களுடன் தொழில் சம்பந்தமாகப் பேசுவதற்காகத் தங்கியிருந்தார்... மூவரும் முழுப் போதையில் கடற்கரையில் நடந்து வந்து கொண்டிருந்த போது அவர்களது கண்களில் ரோசலின் விழுந்தார்... அந்த வயதிலும் முப்பது வயது பெண் போன்று கனக்கச்சிதமான உடல் அமைப்புடன் பேரழகுடன் இருந்த அவரைக் கண்டு மூவரின் விழிகளிலும் பெண் போதை ஏறியது...

அடுத்தக் கணம் அவரின் பின்னால் இருந்து ஒருவர் அவரது வாயை மூடி கொள்ள மற்ற இருவரும் அவரது தலை மற்றும் கால்களைப் பிடித்துக் கொண்டு அருகில் இருந்த மறைவான இடத்திற்குத் தூக்கி கொண்டு சென்றனர்... அதன் பின் அவரது பெண்மையைக் களவாட அவர்களுக்கு அதிகச் சிரமம் ஏற்படவில்லை...

அவர் விலைமாதராக இருந்த போதும் அவரது விருப்பம் இல்லாது அவர்கள் அவரைத் தொட்ட போது அவர் மறுத்துக் கதறினார்... அவர்களின் மூர்க்கத்தனம், வெறி அவருள் சொல்லொண்ணா வலியையும், வேதனையும் ஏற்படுத்த அதைத் தாங்கி கொள்ள முடியாது அவர் தனது இறுதி மூச்சை நிறுத்தி இருந்தார்... ஏற்கெனவே பலகீனமாய் இருந்த அவரது உடல் அதற்கு மேல் உயிர் வாழ விரும்பவில்லை...

தங்களது ஆசை நிறைவேறிய பின்பு மூவரும் திருப்தியுடன் ரோசலினை பார்த்த போது அவர் மரணம் அடைந்தது

கண்டு திகைத்து போயினர்… பயத்தில் அவரை அப்படியே போட்டு விட்டு ஓடி வந்து விட்டனர்… ஆனால் காவல்துறையினரால் அதை அப்படியே விட முடியவில்லை… ஏனெனில் அவரது மகன் ரிச்சர்ட் சர்வதேச காவல்துறையில் இருப்பவன்… அதனால் அவரது உடலை பரிசோதனைக்கு அனுப்பி வைத்து ஆய்வு செய்தது…

இங்குச் செந்தில்நாதன் தனது பதவியைப் பயன்படுத்தி மருத்துவ உடற்கூறு ஆய்வறிக்கையை மாற்றி எழுத வைத்தார்… அதாவது இறப்பதற்கு முன் ரோசலின் மது அருந்தியதாகவும், அதனால் உடலில் ஆல்கஹால் கலந்திருந்ததன் காரணமாக இதயத்திற்குச் செல்லும் இரத்தம் நின்று போனதாகவும், அதன் விளைவால் அவர் மாரடைப்பு வந்து இறந்திருக்கலாம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது… ரோசலின் பாலிலியல் பலாத்காரம் செய்யப்பட்டது அப்படியே மறைக்கப்பட்டது…

முன்பு என்றால் ரிச்சர்ட் இந்தச் செய்தியை நம்பி இருப்பான்… ஆனால் இப்போது அவனால் இதை நம்ப முடியவில்லை… ஏனெனில் அவனது தாய் சில நாட்களாக மது அருந்துவதைச் சுத்தமாய்த் தவிர்த்து வந்தார்… அது அவனுக்கு நிச்சயம் தெரியும்… அதனால் அவன் தனது நாட்டின் மூலமாகத் தனது செல்வாக்கை பயன்படுத்திச் சிபிஐ மூலம் அந்த வழக்கை விசாரிக்கச் செய்தான்…

அன்னையின் இதயத்தைப் பரிசோதனை செய்த போது அது அவரது இதயமல்ல… வேறு ஆணினுடையது என்று தெரிய வந்தது… பிறகு டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது… அது ரிச்சர்ட்டின் டிஎன்ஏ உடன் ஒத்து வரவில்லை… மீண்டும் இதயத்தைப் பரிசோதனை செய்த போது அது ஒரு இளம்பெண்ணின் இதயம் என்று கூறினர்…

இறுதிவரை ரோசலினின் மரணம் புரியாத புதிராக இருந்தது… அதனால் காவல்துறை மீண்டும் அவரது உடலை பரிசோதனைக்கு உட்படுத்தினர்… அப்போது தான்

அவர் பாலியில் பலாத்காரம் செய்யப்பட்டு இருப்பது தெரிய வந்தது... அதுவும் பலமுறை என்று ரிச்சர்ட்டிற்குத் தெரிய வந்த போது அவன் மிகவும் மனமுடைந்து போனான்...

கடைசிவரை குற்றாவளிகளை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை... அதே போல் செந்தில்நாதனுக்கும் அவனை அடையாளம் தெரியாது போனது... ஏனெனில் எந்த இடத்திலும் அவன் தனது முகத்தினைக் காட்ட விரும்பவில்லை... இந்தச் சமயத்தில் தான் ரிச்சர்ட்டிற்கும், விஜய்க்கும் நல்ல நட்பு ஏற்பட்டது...

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் கழித்துச் செந்தில்நாதன் மற்றும் பல நாடுகளின் இருக்கும் பெரும் புள்ளிகள் சர்வேதச போதை பொருள் கடத்தலில் ஈடுபட்டு இருப்பதாக இங்கிலாந்தில் பிடிப்பட்ட போதை பொருள் தரகர் கூறியதை அடுத்து அதைப் பற்றி இரகசியமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது... இங்கிலாந்தில் இருந்து கப்பலில் மருத்துவக் கழிவை ஏற்றும் போது அதோடு போதை பொருளை கடத்தியது தெரிய வந்தது... இந்தக் கப்பல் தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா வழியாக இறுதியாக இந்தியாவை வந்தடைகிறது... அது போல் இந்தியாவிலிருந்து மீண்டும் இங்கிலாந்திற்குச் செல்கிறது...

இந்த வழக்கை விசாரிக்கும் போது தான் ரிச்சர்ட் செந்தில்நாதனின் முழுக் குடும்ப விவரத்தை அறிய நேர்ந்தது... அவரது மகளாகத் தன்னவளை புகைப்படத்தில் கண்ட போது அவன் இனிய அதிர்ச்சி அடைந்தான்... அதிலும் அவளுக்கு இன்னமும் திருமணமாகவில்லை என்று அறிந்ததும் அவன் மகிழ்ச்சியில் துள்ளி குதிக்காத குறை தான்... அன்றே அவன் தனது தாத்தாவிடம் வந்து நின்றான்...

"நான் எனது வேலையில் விடுமுறை எடுத்துவிட்டு இந்தியா சென்று தொழில் பார்க்கலாம் என்று இருக்கிறேன்... அதற்கான ஏற்பாடுகளைக் கவனிங்க... அதாவது தொழிலில் முக்கிய முடிவு எடுக்கும் அதிகாரத்தை

எனக்குத் தாருங்கள்..." இதற்குத் தானே பெரியவரும் இத்தனை நாளாய் ஆசையாய்க் காத்திருந்தது... உடனே அவர் அவனுக்கு வேண்டியதை செய்து கொடுத்தார்...

அப்படித் தான் அவன் இந்தியாவில் தொழில் துவங்க அதுவும் செந்தில்நாதனுடன் சேர்ந்து துவங்க எண்ணி அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவரைச் சம்மதிக்க வைத்து அங்கு வந்தது... அதன் மூலம் மதுரகவியை அவன் அடைய திட்டமிட்டான்...

அப்போது கூட அவன் தனது அன்னையின் மரணத்தில் செந்தில்நாதன் சம்பந்தப்பட்டு இருப்பார் என்று நினைக்கவில்லை... இப்போது பெண்கள் விசயத்தில் அவர் கைது செய்யப்பட்ட போது தான் அவரது நண்பர் கொடுத்த வாக்குமூலத்தின் மூலம் எல்லாம் வெளிவந்து விட்டது... ரோசலினின் இதயத்தை எடுத்து எரித்து விட்டு அதற்குப் பதிலாக இறந்த வேறொருவரின் இதயத்தை வைத்து விட்டனர் என்று தாங்கள் செய்த தவறுகள் எல்லாவற்றையும் அவர் ஒத்துக் கொண்டார்...

அநாதை குழந்தைகளின் உடல் உறுப்புகளைத் திருடி விற்றது, பெண்களைத் தவறாகப் பயன்படுத்தியது இந்த வழக்கோடு சர்வதேச அளவில் போதை பொருள் கடத்தலிலும் செந்தில்நாதன் முக்கியக் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார்... ஏனெனில் இந்தியாவின் தொழில் அமைச்சராக இருக்கும் செந்தில்நாதன் போதை பொருள் இறக்குமதிக்கு பெரிதும் உதவியாக இருந்திருக்கிறார்...

இது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுச் சர்வதேச காவல்துறை அவரைத் தேடும் குற்றவாளியாக இப்போது தான் அறிவித்திருந்தது... அதைத் தொடர்ந்து ரோசலின் மரணத்திலும் அவர் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார்... இந்த முறை அவர் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்று உறுதியாகத் தெரிய வந்ததும் தான் அவர் நெஞ்சை பிடித்துக் கொண்டு நடித்தது...

அவரது குற்றம் நிரூபிக்கப்பட்ட அதே நேரம் ரிச்சர்ட்டின் விடுமுறை முடிந்து அவன் தனது பணியில்

சேர்ந்திருந்தான்... அதனால் அன்னையின் மரணத்தில் அவனே தனது விசாரணையை நேரிடையாகத் துவங்கினான்...

"ரிச்சர்ட்..." விஜய் அவனது தோளை தொடவும் அவன் தன் நினைவுகளில் இருந்து கலைந்து நிமிர்ந்து அவனைப் பார்த்தான்...

"என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க விஜய்...? அவனுக்கு நெஞ்சுவலி எல்லாம் ஒண்ணும் இல்லை... பொய்யாய் நடிப்பவனுக்கு இந்தளவுக்கு ட்ரீட்மெண்ட் அவசியம் தானா...?" ஆத்திரத்தில் விழிகள் சிவக்க கூறிய ரிச்சர்ட்டை கண்டு,

"கூல்டவுன் ரிச்சர்ட்... உங்களுக்கு, எனக்கு மட்டுமல்ல, இந்த ஊருக்கே தெரியும் அவன் நடிக்கிறான்னு... ஆனால் சட்டம் காகிதம் சொல்வதைத் தான் நம்பும்... நீங்களும், நானும் சொல்வதை நம்பாதே... எப்படியாவது அவன் நம்மிடம் மாட்டாமலா போயிருவான், அப்போ கவனிச்சிக்கலாம்... இந்த விஜயோட ட்ரீட்மெண்ட்டே வேறன்னு அப்போ அவனுக்குத் தெரியும்..."

விஜய்க்குமே சற்றுக் கோபம் எழுந்தது... இத்தனை ஆதாரங்கள் செந்தில்நாதனுக்கு எதிராக இருந்த போதும் அவருக்கு உடனே தண்டனை கொடுக்க முடியாதபடி பல சட்ட சிக்கல்கள் தனது கைகளைக் கட்டி போடுவதைக் கண்டு அவனுக்குமே எரிச்சல் வந்தது... சட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டுச் செந்தில்நாதனை அடித்துத் துவம்சம் செய்திடும் அளவிற்கு அவனது பொறுமை காற்றில் பறந்து கொண்டிருந்தது...

"அதற்குள் அவன் சட்டத்தில் இருக்கும் ஓட்டையின் வழியே எளிதாக வெளியில் வந்து விடுவான்... உங்கள் நாட்டுச் சட்டத்தில் நாங்கள் தலையிட முடியாது... அதனால் தான் உங்களிடம் விசாரணைக்குக் கொடுத்துவிட்டு நாங்கள் ஒதுங்கி இருக்கிறோம்... இதே இது எங்க நாடாக இருந்தால் நடக்கும் விசாரணையே வேறு... தண்டனையும் வேறு..."

அவனது மனம் குமுறியது தனது அன்னைக்கு நிகழ்ந்த அநீதியை நினைத்து...

"உங்களுக்கான நீதியை நாங்கள் வழங்குவோம் ரிச்சர்ட்... கவலைப்படாதீங்க..." விஜய் அவனுக்கு ஆறுதல் அளிக்க... அதில் அவன் முகம் தெளிந்தான்...

"உங்க நாட்டுச் சட்டம் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ உங்கள் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது விஜய்..."

கடந்த இரண்டு வருடங்களாக இழுத்தடிக்கப்பட்ட அன்னையின் வழக்கு ஒரு முடிவுக்கு வர விஜய் தான் முக்கியக் காரணம்... அவன் தான் மிகவும் கஷ்டப்பட்டு, எத்தனையோ இடர்களைச் சமாளித்து உண்மையை வெளிக்கொண்டு வந்திருக்கிறான்...

ரிச்சர்ட்டின் நம்பிக்கையில் விஜயின் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

"நிச்சயம் உங்களோட இந்த நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

**************************

"அம்மா... அந்தாளு நெஞ்சுவலின்னு ஹாஸ்பிட்டலில் போய்ப் படுத்து இருக்கானாம்..." என்றான் திருச்செல்வன் வெறுப்பான குரலில்...

"உண்மையில் நெஞ்சுவலி வந்து உயிர் போனால் கூட நல்லது தான்..." என்றார் மீனாட்சி எரிச்சலுடன்...

"இப்போ நான் என்ன செய்யம்மா...?"

"கொஞ்சம் பொறுமையா இருக்கலாம் திரு... விஜய் தம்பி மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"ஆமாம்மா... அந்த நம்பிக்கையில் தான் நானும் இருக்கேன்..."

"திரு... அவள் என்னவானாள்...?"

"ஹாஸ்பிட்டல், ஹாஸ்பிட்டலா ஏறி இறங்குகிறாளாம்..."

"எதுக்கு...?"

"அபார்சன் பண்ணிக்கிறதுக்காக..."

"ரொம்ப நல்லது..." உணர்வில்லாத குரலில் கூறியவர் அங்கிருந்து சென்றுவிட்டார்...

மந்தாகினி ஏதோ திட்டத்துடன் தான் இதைச் செய்ய நினைக்கிறாள் என்று திருச்செல்வன் உறுதியாக நம்பினான்... அதனால் அதற்கு இடையூறு மேல் இடையூறுகளை அவன் கொடுத்து வந்தான்... அவள் செல்லும் மருத்துவமனையின் மருத்துவர்களை மிரட்டி கருக்கலைப்பு செய்யாது தடுத்தான்... பணத்திற்கு ஆசைப்பட்டு அதற்குச் சம்மதித்த மருத்துவர்களிடம் 'தொழில் பார்க்க முடியாதபடி செய்துவிடுவேன்' என்று மிரட்டியதும், அவர்களும் பயந்து போய் மறுத்து விட்டனர்...

அதே நேரம் மந்தாகினி ஊருக்கு ஒதுக்குபுறமாய் இருந்த அந்தச் சிறிய மருத்துமனைக்கு ஒளிந்து ஒளிந்து வந்தாள்... அன்னையைக் கோவிலில் இருக்கச் செய்து விட்டு அவள் மட்டும் இங்கு வந்தாள்... கடந்த ஒரு வாரமாக அவளும் கருக்கலைப்பிற்காக எல்லா மருத்துவமனைக்கும் ஏறி இறங்குகிறாள்... முதலில் சம்மதிப்பவர்கள் மறுநாள் அவள் அதற்குத் தயாராகப் போகும் போது மறுத்து விடுகின்றனர்... ஒன்று போல் இந்த அனுபவம் ஏற்படவும் தான் அவள் சுதாரித்தது...

அப்போது தான் தன்னைக் கண்காணித்தபடி ஆட்கள் பின்தொடர்ந்து வருவதை அவள் கவனித்தாள்... அதனால் தான் இன்று அன்னையைக் கோவிலில் இருக்கச் செய்தவள் அவள் மட்டும் தனியே ஒளிந்து மறைந்து இங்கு வந்துவிட்டாள்... கருக்கலைப்பிற்கு ஏற்றவாறு ஒன்றும் உண்ணாது வந்தவளுக்கு உடனே கருக்கலைப்புச் செய்ய அந்த மருத்துவர் ஒத்துக் கொண்டார்... அதற்கு முக்கியக்

காரணம் மந்தாகினி கொடுத்த அதிகப் பணம்... நகையை விற்று வந்த பணத்தில் பெருமளவு பணத்தை இதற்குக் கொடுத்தாள் அவள்...

பணத்திற்கு ஆசைப்பட்ட அந்த மருத்துவர் மந்தாகினியின் உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளவில்லை... நன்கு வளர்ச்சி அடைந்திருந்த அந்தச் சிசுவை கலைக்கும் போது சின்ன உயிருடன் சேர்ந்து பெரிய உயிரும் ஆபத்துக் கட்டத்தை எட்டியது... என்ன முயன்றும் மருத்துவம் தோல்வியுற்று மந்தாகினி ஜன்னி கண்டு வலிப்பு ஏற்பட்டு இறந்து போனாள்... சுகமாய் வாழ ஆசைப்பட்டுப் பணத்திற்காகத் தனது கொள்கைளை விற்ற சின்னப் பெண்ணவள் தனது இறுதி மூச்சை பரிதாபமாக நிறுத்தி இருந்தாள்...

இப்படிப்பட்ட தாய் பூமியில் இருக்கத் தகுதியில்லை என்றெண்ணிய அந்தச் சிசு தனது தாய் என்னும் அரக்கியை தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்று விட்டதோ...! இல்லை புதிய உலகிற்குத் தனியே பயணப்படப் பயந்து துணைக்குத் தனது அன்னையைத் தன்னுடன் அழைத்துச் சென்று விட்டதோ...! மொத்தத்தில் இரு உயிர்களும் தங்களது வாழ்க்கையை முழுமையாய் அனுபவிக்காமல் பரிதாபமாய்த் தங்களது உயிரை இழந்திருந்தது...

மருத்துவர் பயந்து போய் என்ன செய்வது என்று தெரியாது தனது ஊழியர்களை வைத்து மந்தாகினியின் உடலை அப்புறப்படுத்திச் சாலையின் ஓரமாய் அநாதையாய் போட்டு விட்டார்... வெகு நேரம் கழித்து மகள் வராததைக் கண்டு பவானி மகளைத் தேடி வந்த போது சாலையில் கிடந்த மகளைக் கண்டு அவர் அலறி துடித்தார்... அந்த மருத்துவரிடம் சென்று சண்டை போட்டார்... ஏழையின் சொல் அம்பலத்தில் ஏறவில்லை... கடைசியில் அவரைப் பைத்தியம் என்று கூறி அங்கிருந்தோர் விரட்டியடித்து விட்டனர்... சிலர் காவல் நிலையம் செல்லலாம் என்று கூறினர்... ஆனால் பவானி அங்குச் செல்ல பயந்து மறுத்து விட்டார்...

பவானி மீது இரக்கப்பட்ட பூசாரி மந்தாகினியின் உடலை தகனம் செய்ய ஏற்பாடு செய்தார்... அதன் பிறகு பவானி அந்தக் கோவிலில் தங்கி கொண்டார்... கோவிலை சுத்தம் செய்யும் பணி செய்து அங்கு வருபவர்கள் கொடுக்கும் பணத்தில் உண்டு உயிர் வாழ்கிறார்... தவறு செய்யும் மகளைக் கண்டிக்காததன் விளைவு அவர் இப்படி அநாதை மாதிரி வாழ நேர்ந்திருக்கிறது...

இது அனைத்தையும் திருச்செல்வன் தனது ஆட்கள் மூலம் அறிந்து கொண்டான்... அதை அப்படியே அன்னையிடத்தில் சொல்லவும் செய்தான்... அதைக் கேட்டு மீனாட்சி அமைதியாகி விட்டார்... பின்பு தெளிவான குரலில்,

"அவளுக்கான தண்டனையை அவளது குழந்தையே கொடுத்து விட்டது... தெய்வம் இருக்கிறது திரு... இன்று தான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது..." என்று கூறியவரின் மனதில் அத்தனை நிம்மதி...

மதுரகவியும் இந்த விசயத்தைக் கேள்விப்பட்டாள்... தோழி மீது அவளுக்குச் சிறிதும் இரக்கம் வரவில்லை... மாறாகத் துரோகி ஒழிந்தாள் என்றே அவள் நிம்மதி அடைந்தாள்...

********************

மறுநாள் காலையில் செய்தித்தாள் படித்து ரிச்சர்ட்டின் அன்னையின் மரணத்திற்குத் தனது தந்தை தான் காரணம் என்பதை அறிந்து கொண்ட மதுரகவி அதிர்ச்சி அடைந்து அப்படியே உறைந்து போய் அமர்ந்திருந்தாள்... நல்லவேளை அதில் ரிச்சர்ட்டின் வேலையைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை... இல்லை என்றால் அது தெரிந்து அவள் இன்னமும் அதிர்ந்து போயிருப்பாள்... ஒரு மகனாய் தாயின் மரணத்திற்கு நீதி கேட்க வேண்டி அவன் தன்னை வெளிக்காட்டி இருந்தான்... சர்வதேச காவல்துறையைச் சேர்ந்தவனாக அல்ல, ஒரு மகனாய்... அப்போது திருச்செல்வன் அங்கு வந்தான்...

"என்ன மது...? உட்கார்ந்துட்டு தூங்கிறியா...?" என்று கேட்டபடி அவளது கையிலிருந்த செய்தித்தாளை அவன்

வாங்கிக் கொள்ள... அதில் சுரணை அடைந்தவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"ஒண்ணும் இல்லைண்ணா..." என்றபடி அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டாள்...

திருச்செல்வன் அவளை யோசனையுடன் பார்த்தவன் பின்பு செய்தித்தாளில் கவனத்தைச் செலுத்தினான்... அவனுமே அந்தச் செய்தி கண்டு திகைத்துப் போனான்... அதை எடுத்துக் கொண்டு அவன் அன்னையைத் தேடி சென்றான்... சமையலறையில் பணிப்பெண்ணிடம் வேலை கூறி கொண்டிருந்தவரை தனியே அழைத்து வந்து அந்தச் செய்தியை அவன் காட்டினான்... படித்துப் பார்த்த அவர் கண் கலங்கி விட்டார்...

"நம்ம எல்லோரையும் விட அந்தத் தம்பி தான் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்... அப்படி இருந்தும் அவர் நம் மதுவுக்கு நல்லது செய்ய நினைத்து இருக்கிறார் என்றால் அவர் ரொம்பவும் நல்லவர் தான் திரு..."

"அப்போ நம்ம மதுவை அவருக்குக் கல்யாணம் பண்ணி வைக்கச் சம்மதமாம்மா...?" சமயம் பார்த்து திருச்செல்வன் அன்னையிடம் சம்மதம் கேட்டான்... அவன் கூறியதை கேட்டு புன்னகையுடன்,

"நீ சொல்வது போல் இவரை விட நல்ல பையன் நாம் தேடினாலும் கிடைக்காது... எனக்குச் சம்மதம் திரு... மது கல்யாணத்திற்கு நான் மனதார சம்மதிக்கிறேன்..."

"ரொம்பத் தேங்க்ஸ்ம்மா..." என்று அவன் நெகிழ்வுடன் தனது நன்றியை வெளிப்படுத்த,

"மது எனக்கும் மகள் தான்..." என்று அவர் மகனுக்கு நினைவுப்படுத்த... அதைக் கேட்டு அவன் சிரித்தான்... வெகுநாட்களுக்குப் பின் அவன் மனம் விட்டுச் சிரிக்கின்றான்...

"தாமரைக்குப் பரீட்சை முடிந்ததும் மது கல்யாணத்தை வைத்து கொள்ளலாம்..." என்றவன்,

"தாமரை எங்கேம்மா...?" என்று திடீரென்று ஞாபகம் வந்தவனாய் கேட்டான்...

"கயல் வீட்டில் இருக்கிறாள்... இங்கே இருக்கும் சூழ்நிலையில் அவள் படிப்பாளான்னு எனக்குச் சந்தேகமா இருந்தது... அதனால் தான் முத்து கேட்கவும் அனுப்பி வச்சிட்டேன்..."

"நல்லதும்மா... முத்துக்கா ரெண்டு பேரையும் நல்லா படிக்க வச்சிருவாங்க..." என்றவனின் கூற்றைத் தலையசைத்து ஆமோதித்த மீனாட்சி,

"திரு... மாப்பிள்ளையைப் பார்த்து நீ பேசினியா...? அதுக்குள்ள நாம் கல்யாணம் வரைக்கும் போயாச்சு..."

"அன்னைக்கு ஃபோன் வந்ததுன்னு போனேன்னே, அது யார் பண்ணியது நினைக்கிறீங்க... உங்க மாப்பிள்ளை தான்..."

"அப்படியா...?" அவர் ஆச்சிரியமாய்ப் பார்த்தார்...

"அப்படியே தான்... அவர் நம்ம மதுவை காதலிப்பதை என்னிடம் எடுத்து சொல்ல தான் என்னைக் கூப்பிட்டு இருக்கிறார்... ஆனால் நான் அவங்க கல்யாணத்துக்குச் சம்மதிப்பேன்னு அவர் கொஞ்சமும் எதிர்பார்க்கலை... நம்ம மது என்னைக் கண்டு பயந்துக்கிட்டு அவரைப் பிரிஞ்சு வந்து இங்கே இருக்கிறதா அவர் சொன்னப்போ எனக்குச் சிரிப்பை அடக்க முடியலை... என்னைப் பார்த்தால் அவளுக்கு வில்லன் மாதிரியா இருக்கு...?"

அதைக் கேட்டு மீனாட்சி முகத்தில் புன்னகை அரும்பியது...

"நீங்க அவள் கிட்ட இந்த விசயத்தைச் சொல்லாதீங்க... சர்ப்ரைசா இருக்கட்டும்..."

"அதுவும் சரி தான்..." என்று மகிழ்வோடு கூறிய தாயை அவன் இரக்கமாய்ப் பார்த்தான்...

ரிச்சர்டு, மதுரகவி தேவாலயத்தில் மோதிரம் மாற்றித் திருமணம் செய்து கொண்டதையோ, அவர்கள் கணவன்,

மனைவியாய் வாழ்ந்து வந்ததையோ அவன் அவரிடம் சொல்லவில்லை... ஏனோ அவன் அதை அவரிடம் சொல்லாது மறைத்து விட்டான்... அந்தக் கால மனுசியான அவரால் அதை ஏற்றுக் கொள்ள முடியுமா? என்று அவனுக்குச் சற்று யோசனையாக இருந்தது... அதனால் கடைசிவரை இந்த விசயம் அவருக்குத் தெரியாமல் இருப்பது நல்லது என்றே அவன் எண்ணினான்...

தனது அறைக்கு வந்த மதுரகவி உடனே கணவனுக்கு அழைத்தாள்... துயரில் இருந்தவனுக்கு மனைவியின் அழைப்பு மருந்தாகத் தோன்றியது... உடனே அலைப்பேசியை உயிர்ப்பித்துப் பேசினான்...

"பேபி எப்படியிருக்க...?"

அவனது துக்கத்திலும் தனது நலன் விசாரிக்கும் கணவனைக் கண்டு அவளுக்கு அழுகை வந்தது...

"இன்னைக்குப் பேப்பரில்... உங்கம்மாவை அவர்..." மேலே சொல்ல முடியாதபடி அவளது குரல் தேம்பியது...

"ஹேய் அழாதே பேபி... கஷ்டம் தான்... என்ன செய்வது...? நான் இதிலிருந்து மீண்டு வெளியில் வந்துவிட்டேன்... நீ அதை நினைத்து அழாதே... ப்ளீஸ்ம்மா..."

அவளுக்காகத் தன்னைத் தேற்றிக் கொண்டு அவன் அப்படிக் கூறினான்... அவனது சோகம் அவனை விட அவளைத் தான் அதிகம் பாதிக்கும் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

"எனக்கு அந்தாளை நினைச்சு அருவருப்பா இருக்கு ரிச்சி... அப்படிப்பட்டவரோட பொண்ணுக்கு நீ நல்லது செய்யணும்ன்னு நினைச்சியே, உன் நல்ல மனசு யாருக்கும் வராது..."

"நீ அவரோட பொண்ணு இல்லை... என் காதல் மனைவி... அதை நீ எப்போதும் நினைவில் வச்சுக்கோ... உனக்கு நல்லது செய்யாம வேறு யாருக்கு நான் நல்லது செய்யப்

போகிறேன்..." என்று கூறியவனின் வார்த்தைகள் அவளது மனதிற்குப் பெருத்த நிம்மதியை தோற்றுவித்தது...

"அவருக்குக் கடுமையான தண்டனை வாங்கிக் கொடுக்கணும் ரிச்சி... இப்படியே அவரைச் சும்மா விடக் கூடாது..."

"கட்டாயம் மது பேபி..." என்றவன் சிறிது நேரம் அவளின் மனதினை மாற்றிட வேண்டி சாதாரணமாகப் பேசி கொண்டிருந்தான்...

அவளது அண்ணனிடம் தான் பேசியதை சொல்ல நினைத்தவன் பின் வேண்டாம் என்று முடிவு செய்து அழைப்பை துண்டித்தான்... அவளுக்கு இனிய அதிர்ச்சி அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தவனின் இதழ்களில் புன்னகை நெளிந்தது...

************************

கயல்விழிக்கும், தாமரைக்கும் அன்று 'ஸ்பெசல் க்ளாஸ்' எதுவும் இல்லாததால் மற்ற மாணவர்களோடு சேர்ந்து அவர்களும் வகுப்பு முடிந்து வெளியில் வந்தனர்... அவர்களோடு கனியமுதனும் சேர்ந்து நின்று கொண்டிருந்தான்... அவர்களது கார் வருவதற்காக அவர்கள் பள்ளி வாசலில் காத்திருந்தனர்...

அப்போது ஒரு கார் அவர்கள் அருகில் சரேலென்று வந்து நின்றது... காரின் பின்பக்க கதவை திறந்தவன் கண்ணிமைக்கும் நேரத்தில் முதலில் கனியமுதனை தூக்கி காரினுள் தள்ளினான்... அடுத்து தாமரையையும்... கயல்விழியைப் பிடித்துத் தள்ளும் முன் அவள் அவனது கையைப் பிடித்து நன்றாகக் கடித்து விட, அவனோ வலியில் கையை உதறியவன் சட்டென்று காரிலேறி கதவை சாத்தியதும் கார் வேகம் பிடித்தது...

அவன் வேகமாய்த் தள்ளியதில் கீழே விழுந்த கயல்விழிக்குக் கை, கால்களில் நன்றாக அடிப்பட்டு விட்டது... அந்த அதிர்ச்சியான நிலையிலும் அவளது

கண்கள் காரின் எண்ணை வேகமாய்ப் படம் பிடித்துக் கொண்டது...

எல்லாமே நொடி பொழுதில் அரங்கேறி முடிந்திருந்தது... சுற்றியிருந்தவர்கள் அதிர்ச்சியில் இருந்து வெளிவருவதற்குள் கயவர்கள் தங்களது பணியைச் சிறப்பாகச் செய்து முடித்திருந்தனர்...!!!

மதுரமாகும்...!!!

கீழே விழுந்த கயல்விழி தன்னைச் சுதாரித்துக் கொண்டு தலைமையாசிரியரின் அறையை நோக்கி காற்றாய் பறந்தாள்... அவளது மனம் முழுவதும் பதற்றம் நிறைந்திருந்த போதும் பெற்றோர் கூறியிருந்த அறிவுரைகள் அவளைச் சற்று நிதானப்படுத்தி யோசிக்க வைத்தது...

"கயல்விழி... என்னம்மாச்சு..."

சீருடை அழுக்காகி, கைகளில் சிராய்ப்பு ஏற்பட்டு இரத்தத்துடன் நின்றிருந்தவளை கண்டு தலைமையாசிரியை பதட்டத்துடன் அவள் அருகில் வந்தார்... அவளது பெற்றோரை அவருக்கு நன்கு தெரியும்...

"நான் அப்பாக்கு ஃபோன் பண்ணணும்..."

"என்ன விசயம் கயல்விழி...? பதட்டப்படாம விசயத்தைச் சொல்லு..."

"கனியையும், தாமரையையும் யாரோ கடத்திட்டு போயிட்டாங்க..." மூச்சிரைக்கக் கூறியவளை கண்டு திகைத்து போனவர் மறுத்து பேசாது தனது அலைப்பேசியை அவளிடம் கொடுத்தார்...

அழைப்பை உடனே ஏற்ற விஜய், "சொல்லுங்க மேடம்..." என்றான் மரியாதையாக... ஏனெனில் பேசுவது தலைமையாசிரியர் என்று அவன் நினைத்துக் கொண்டான்...

"அப்பா... நான் கயல் பேசறேன்..." மகளின் குரலில் இருந்த பதற்றம் அந்தத் தகப்பனுக்கு நன்கு புரிந்தது...

"என்னாச்சு கயல்...?"

தந்தை கேட்டதும் தான் தாமதம் அவள் அனைத்து விசயங்களையும் மடமடவென ஒப்புவித்தாள்... பின்பு தான்

குறித்து வைத்திருந்த காரின் எண்ணை தந்தையிடம் சொன்னவள்,

"அப்பா... தம்பி, தாமரை பாவம்ப்பா..." என்று கண்ணீர் விட... மகள் கூறியது கேட்டு அவனது மனம் பதற தான் செய்தது... இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

"அவங்களை நான் பார்த்துக்கிறேன் கயல்... நீ அம்மா வர்ற வரைக்கும் ஜாக்கிரதையாக ஸ்கூலில் இரு..."

தான் எல்லாம் பார்த்துக் கொள்வதாகக் கூறி மகளைச் சமாதானப்படுத்திய விஜய், தலைமையாசிரியரிடம் மனைவி வரும் வரை மகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னான்... அவர் சம்மதம் தெரிவித்த பின்னரே அவன் அழைப்பை துண்டித்தான்... தலைமையாசிரியர் விஜய் கூறியதை கேட்டு கயல்விழியை அங்கு அமர செய்து அவளது காயத்திற்கு முதலுதவி அளிக்க ஏற்பாடு செய்தார்...

மகள் கூறியதை கேட்டு விஜய் துரிதமாகப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அறைக்கு அழைத்து அந்தக் காரின் எண்ணை கொடுத்து அதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்தான்... அது போல் எல்லாக் காவல்நிலையங்களுக்கும் தகவல் தெரிவித்தான்... முக்கியமாகப் பள்ளி இருந்த பகுதியில் இருக்கும் காவல்நிலையத்திற்கு...

அவனின் யோசனையை முன்பே தெரிந்து கொண்டது போல் அந்தக் கார் நகரத்திற்குள் செல்லாது குறுக்கு வழியே புறநகர் பகுதியை நோக்கி விரைந்தது... அதனுள் தாமரை மற்றும் கனியமுதன் மயங்கிய நிலையில் படுத்திருந்தனர்...

விஜய் மருத்துவமனைக்கு அழைப்பு விடுத்துச் செந்தில்நாதனை பற்றி விசாரித்தான்... அவர் சிகிச்சையில் இருப்பதாகத் தகவல் கிடைத்ததும் அவன் யோசனையானான்... முன்பு அவன் தனது குழந்தைகளுக்கு என்று தனியே பாதுகாப்பு அளித்திருந்தான்... ஏனெனில் அவனது வாகனத்தை மர்ம

ஆட்கள் சிலர் பின் தொடர்வதால் அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தான்... ஒருவேளை செந்தில்நாதனால் மகனுக்கும், மகளுக்கும் தீங்கு ஏற்படுமோ என்று அவன் பயந்தான்...

இப்போது அவர் கைது செய்யப்பட்டதும் அது மாதிரியான பயம் இல்லாததால் அவன் சற்று இறுக்கம் தளர்ந்திருந்தான்... அதனால் கணவன், மனைவி இருவரும் மாற்றி மாற்றிப் பள்ளியில் இருந்து பிள்ளைகளை அழைத்து வந்தனர்... காலையில் அவன் கொண்டு போய்ப் பள்ளியில் விட்டானானால், மாலையில் முத்துபேச்சி பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வந்து விடுவாள்... இன்று ஏன் அவள் தாமதமாகச் சென்றாள்...? என்று யோசித்தவன் மனைவிக்கு அழைத்தான்...

அதற்குள் பள்ளிக்கு சென்ற முத்துபேச்சி மகனும், தாமரையும் காணாது போனது பற்றி அறிந்து கொண்டவள் முதலில் அதிர்ந்தாலும் கணவன் மீது கொண்ட நம்பிக்கையில் அவள் தைரியமாக இருந்தாள்... அந்தக் கணம் அவனும் அவளுக்கு அழைத்திருந்தான்...

"கண்ணம்மா... மன்னிச்சுக்கோ..." என்று மன்னிப்பு வேண்டியவனிடத்தில் அவள் தைரியமாக,

"நீ நம் மகனையும், தாமரையையும் கண்டுபிடிக்கும் வழியைப் பார் விஜூ... உன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது..." என்று கம்பீரமாக உரைத்தவள்,

"நானும் கட்சி ஆளுங்களை விட்டு தேட சொல்கிறேன்..." என்று புரிதலுடன் கூறியவளை கண்டு அவனது மனம் கனிந்தது...

"மீனாட்சிம்மா கிட்ட விசயத்தைப் பக்குவமா சொல்லிரு... அவங்க வீட்டுக்கு போய் அவங்களுக்கு ஆறுதலா இரு பேச்சி..."

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." என்றவள் அழைப்பை துண்டித்தாள்...

அழுது கொண்டிருந்த மகளை அணைத்து ஆறுதல்படுத்திய முத்துபேச்சி அவளை அழைத்துக் கொண்டு நேரே மீனாட்சியைக் காண சென்றாள்... போகும் வழியெல்லாம் இன்று நிகழ்ந்த நிகழ்வுகள் நின்று அவளது மனதினை அலைக்கழித்தது... என்றும் இல்லாத வண்ணமாக ஓரிடத்தில் சாலை மூடப்பட்டு இருந்தது, மற்றொரு இடத்தில் விபத்து என்று ஊரை சுற்றிக் கொண்டு அவள் பள்ளி வந்து சேருவதற்குள் சற்று நேரமாகிவிட்டது... அதற்குள் இந்த அசம்பாவிதம் நடந்து முடிந்திருக்கிறது...

அங்குப் பாதுகாப்பிற்கு இருந்த காவலரும் அது போல் ஒன்றை தான் கூறினார்...

"நான் எப்போதும் போல் எதிரில் இருந்த கடையில் நின்னுக்கிட்டு இருந்தேன்... பாப்பாவும், தம்பியும் வெளிவர்றதை பார்த்துட்டு நான் அங்கே போகும் போது ஒரு வேன் குறுக்கே வந்து என் முன்னால் நின்னுச்சு... அட்ரஸ் தெரியலைன்னு கேட்டாங்க... நான் விளக்கி சொல்லியும் புரியாத மாதிரி திரும்பத் திரும்பக் கேட்கவும் நான் எரிச்சலுடன் அடப்போங்கப்பான்னு சத்தம் போட்டுட்டு வர்றதுக்குள்ள ஸ்கூல் பக்கம் இருந்து ஒரே சத்தம்... அங்கே போய்ப் பார்த்தால்..."

துக்கம் தொண்டையை அடைக்க அவர் மேலே பேச முடியாது அமைதியாகி போனார்... அவரைச் சொல்லியும் குற்றமில்லை... அதனால் முத்துபேச்சி அவரைத் திட்டாது வந்துவிட்டாள்...

காணாமல் போன இரு பிள்ளைகளையும் நினைத்து பெரும் கவலையாக இருந்தது அவளுக்கு... ஆனாலும் கணவன் எப்படியும் அவர்களைக் காப்பாற்றி விடுவான் என்று அவளுக்கு அவன் மீது அதீத நம்பிக்கை இருந்தது...

மதுரகவி வீட்டிற்குள் நுழையும் போது முத்துபேச்சிக்கு திக்திகென்று இருந்தது... அவள் தானே வலிய தாமரையைத் தனது வீட்டிற்கு அழைத்தது... அதனால் அவளுக்கு ஒரே குற்றவுணர்வாகப் போய்விட்டது...

"அடடே... முத்து வாம்மா... வா கயல்..." என்று இருவரையும் வரவேற்றவர் அவர்கள் பின்னால் பார்த்து தேடியபடி,

"தாமரை எங்கே...?"

"அம்மா... அது வந்து..." என்ற முத்துபேச்சி நடந்ததை அனைத்தையும் கூறிவிட்டு,

"என்னை மன்னிச்சிருங்கம்மா... உங்க மகளைப் பத்திரமா பாதுகாக்க என்னால் முடியலை... என்னை மன்னிச்சிருங்க..." விழிகளில் விழிநீர் அரும்ப அவள் அவரிடம் கைக்கூப்பி மன்னிப்பு கேட்டாள்...

அதைக் கேட்டு மீனாட்சி அதிர்ந்து போய்விட்டார்... அங்கு வந்த மதுரகவியும் அதிர்ந்து போனாள்... வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்த திருச்செல்வனும் செய்வதறியாது திகைத்துப் போனான்...

"அக்கா... எல்லாம் அந்தாளு வேலையாகத் தான் இருக்கணும்... உங்க ரெண்டு பேரையும் பயமுறுத்த கயலையும், கனியையும் கடத்த நினைச்சு தவறி போய்த் தாமரையைக் கடத்தியிருப்பான்... அவனை...?" என்று கோபத்தில் பற்களை நறநறவென்று கடித்தான் திருச்செல்வன்...

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்... ஆனா உங்கப்பா ஹாஸ்பிட்டலில் ட்ரீட்மெண்ட்டில் இருக்கிறதா சொல்றாங்களே..."

"அவன் கையில் ஃபோன் இருந்தால் போதும், அதை வைத்து அவன் உலகத்தையே விற்று விடுவான்..." என்று வெறுப்புடன் கூறினான் திருச்செல்வன்...

"நானும் போய்த் தேடுறேன்க்கா... நீங்க அம்மாவையும், மதுவையும் பார்த்துக்கோங்க..." என்றவன் வீட்டிற்குப் பலத்த பாதுகாப்பை ஏற்படுத்தி விட்டு நேரே விஜயை சந்திக்கச் சென்றான்...

"அம்மா..." என்று முத்துபேச்சி மீனாட்சியின் தோள் பற்றி அசைக்க... அடுத்த நொடி அவர் உடைந்து போய்க் கதறியழுதார்...

"அந்தாளு எனக்குத் தான் துரோகம் செஞ்சான்னா, இப்படி என் மகள்களுக்கும் துரோகம் செய்கிறானே..."

"அம்மா... தாமரையைக் கயல்ன்னு நினைச்சு கடத்திட்டாங்க... அது தாமரைன்னு தெரிஞ்சதும் திருப்பி அனுப்பிருவாங்க... பயப்படாதீங்க..." என்று ஆறுதல் கூறியவள் நூறு சதவீதம் இந்தக் காரியத்தைச் செந்தில்நாதன் செய்திருக்கலாம் என்று நம்பினாள்...

முத்துபேச்சியின் வார்த்தையில் அவளை ஏறிட்டார் மீனாட்சி... அவளும் தானே தன்னைப் போல் மகனை பறிகொடுத்து இருக்கிறாள்... அவளைக் கண்டு அவருக்கு இரக்கமாய் இருந்தது...

"இரண்டு பிள்ளைகளும் பத்திரமா வீடு வந்து சேரணும்..." என்று கூறியவருக்குக் கடவுளை வேண்டி கொள்வதைத் தவிர வேறுவழி தெரியவில்லை...

அங்குக் கனத்த மௌனம் சூழ்ந்தது... மீனாட்சி, மதுரகவி, கயல்விழி மூவரும் அமைதியாகச் செய்வதறியாது அமர்ந்திருந்தனர்... முத்துபேச்சி மட்டும் அலைப்பேசி வழியாக இது சம்பந்தமாகத் தகவலை கேட்டறிந்து கொண்டிருந்தாள்... அவ்வப்போது கலங்கும் தன் மனதினை முயன்று திடமாக வைத்து கொண்டாள்...

***********************

திருச்செல்வன் கூறியது போல் செந்தில்நாதன் கையில் அலைப்பேசியை வைத்துக் கொண்டு அனைத்து காரியத்தையும் செய்து கொண்டிருந்தார்... விஜயின் மகளையும், மகனையும் கடத்திய விசயம் கேட்டு அவருக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது... ஆம், கடத்தியவர்கள் தாமரையைப் பார்த்திராததால் அவர்கள் அவளை விஜயின் மகளாக எண்ணி செந்தில்நாதனிடம் தெரிவித்து

விட்டனர்... மதுரகவி, தாமரை இருவரும் பொதுநிகழ்வுகளில் அவ்வளவாகத் தலை காட்டியது இல்லை... அதனால் அவர்களைப் பற்றி யாரும் அதிகம் அறிந்திருக்க வாய்ப்பில்லை... அதனால் விஜய்க்கு இரு மகள்கள் என்று நினைத்து விட்டனர் போலும்...

காலையில் மூவரையும் வீட்டில் இருந்து பள்ளி வரை பின்தொடர்ந்து வந்த போது அங்குச் சென்று கொண்டிருந்த மற்ற மாணவர்களை நிறுத்தி மூவரையும் சுட்டிக்காட்டி,

"அவங்க போலீஸ் கமிசனர் வீட்டு பிள்ளைங்க தானே...?" என்று கேட்ட போது அவர்கள் அனைவரும் ஆம் என்று கூறியதை வைத்து, மாலையில் அவர்களைக் கடத்த திட்டமிட்டனர்... அதைத் தான் அரைகுறையாகச் செய்து சொதப்பி வைத்திருந்தனர்... அது பற்றி அவர்கள் செந்தில்நாதனிடம் மறந்தும் மூச்சு விடவில்லை...

"அந்தச் சின்னப் பயலை தனியே அடைச்சு வைங்கடா... அவனை உயிரோட துடிக்கத் துடிக்கக் கொன்னு அவனோட உடல் உறுப்புகளை எடுக்கிறதை வீடியோ எடுத்து விஜய்க்கும், முத்துபேச்சிக்கும் அனுப்புவோம்... அதற்கு முன் அந்தப் பொண்ணை நிர்வாணப்படுத்தி ஃபோட்டோஸ் எடுத்து அவங்களுக்கு அனுப்பு... அப்போ தான் அவங்க ரெண்டு பேருக்கும் புத்தி வரும்..." என்றவர்,

"இந்த வேலையைக் கச்சிதமாகச் செய்து முடிச்சதால் உங்களுக்கு ஸ்பெசல் ட்ரீட் தரலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்..." அதைக் கேட்டு அந்த ரௌடிகளின் முகம் பிரகாசமாக மலர்ந்தது...

"அந்தப் பொண்ணு தான் உங்களுக்கான ட்ரீட்... நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் அங்கிருப்பேன்... அதற்குள் நீங்க கச்சிதமாக வேலையை முடித்திருக்க வேண்டும்..."

அவர் கட்டளையிட்டதும் அந்த ரௌடிகள் நால்வரும் கனியமுதனை தனியே அடைத்து வைத்து விட்டு தாமரையை நெருங்கினர்... அவளது உடைகளைக்

களைந்து நிர்வாணமாகப் புகைப்படம் எடுக்கும் போது அவள் மயக்கம் தெளிந்து மெல்ல கண் விழித்தாள்...

"டேய்... அவளுக்கு மயக்கம் தெளிஞ்சிருச்சுடா..." என்று ஒருவன் கத்த...

"ரொம்ப நல்லது..." என்று கூறிய மற்றொருவன் விகாரமாக இளித்ததில் எல்லோரும் புரிந்து கொண்டவர்களாய் வாய்விட்டு நகைத்தனர்...

பின்பு நால்வரும் ஒன்று போல் சின்னவளை நெருங்க... அவளது விழிகள் அச்சத்தில் விரிந்தது... மனமோ ஆடைகளற்ற தனது நிலையை எண்ணி கூசியது... பயத்திற்கும், மானத்திற்கும் இடையில் அஞ்சி நடுங்கி கொண்டிருந்த சின்னஞ்சிறு புறா வல்லூறுகளுக்கு இரையாகி போனது பரிதாபமாக...

அதே நேரம் கனியமுதனுக்கு விழிப்பு வந்தது...

***************

திருச்செல்வன் விஜயை சந்திக்கச் சென்ற போது அங்கு ரிச்சர்ட்டும் இருந்தான்... அப்போது தான் திருச்செல்வனுக்குத் தெரிந்தது ரிச்சர்ட் சர்வதேச காவல்துறையைச் சேர்ந்தவன் என்று... அந்த மகிழ்வை கொண்டாட முடியாதபடி துன்பமாகச் சின்னத் தங்கையின் நிலை இருந்தது...

"சார்... எப்படியாவது தாமரையைக் கண்டுபிடிச்சு கொடுத்திருங்க..."

"பயப்படாதே திரு... என் மகள்ன்னு நினைச்சு தாமரையைக் கடத்தியிருக்காங்க... கயல் இல்லைன்னு தெரிஞ்சதும் விட்டிருவாங்க..."

"இல்லை சார்... எங்கப்பாவை போல் கேவலமான ஒருத்தனை பார்க்க முடியாது... தன்னுடைய சுயநலத்துக்காக வேண்டி அவன் என்ன வேணும்ன்னாலும் செய்வான்... மகள், மனைவின்னு கூடப் பார்க்க மாட்டான்..."

"ஆமாம் விஜய்... அவர் ரொம்ப ஆபத்தான ஆள்..." என்றான் ரிச்சர்ட்டும் அதை ஆமோதித்தவனாய்... அவனுக்குத் தானே தெரியும் அவரது மறுபக்கம் எந்தளவிற்கு மோசமானது என்று...

அந்நேரம் விஜய்க்குத் தொலைப்பேசியில் அழைப்பு வந்தது... அதை எடுத்து பேசியவன் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"இதுக்கு யார் உடந்தை...?" என்று கேட்டறிந்தவன் உடனே,

"அந்தச் செல்ஃபோன் நம்பரை ட்ரேஸ் பண்ணி செந்தில்நாதன் எங்கே போகிறான்னு கண்டுபிடிங்க... நான் உடனே அங்கே கிளம்பி வருகிறேன்..." என்று உத்தரவிட்டவன் அழைப்பை துண்டித்து விட்டு எழுந்தான்...

"என்ன விசயம் விஜய்...?" உடன் எழுந்தபடி ரிச்சர்ட் கேட்டான்...

"செந்தில்நாதன் தப்பிச்சுப் போயிட்டானாம்... நான் இப்போது ஹாஸ்பிட்டல் தான் போகிறேன்..."

"நானும் வருகிறேன்..." ரிச்சர்ட்டும் உடன் கிளம்பினான்...

"நானும் வரவா...?" திருச்செல்வன் அனுமதி கேட்க... ஒரு நொடி யோசித்த விஜய் அவனிடம் ஒரு விசயத்தைக் கூறி தனது சந்தேகத்தைத் தெளிவுப்படுத்திக் கொண்டவன், பின்பு திருச்செல்வனை அதைச் செய்யப் பணித்து விட்டு,

"நாங்க எந்த இடத்திற்குப் போகிறோம்ன்னு உனக்குப் பிறகு தெரியப்படுத்துகிறேன்... நீ நேரே அங்கே வந்துவிடு திரு..." என்று அவன் கூற... எதற்கு என்று புரியவில்லை என்றாலும் திருச்செல்வன் அதற்குச் சம்மதித்துக் கிளம்பி சென்றான்...

காவல்துறையைச் சேர்ந்த ரிச்சர்ட்டிற்கு விசயம் புரிந்து விட்டது... விஜயை கண்டு அவன் திருப்தியுடன் புன்னகைத்தான்... பதிலுக்குப் புன்னகைத்த விஜய் அவனை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச்

சென்றான்... பொதுவாக அவனது பதவி நிமித்தம் அவன் நேரிடையாகக் களத்தில் இறங்கி பணிபுரிவது கிடையாது... ஆனால் இதில் தனது மகனும் சம்பந்தப்பட்டு இருப்பதால் பதவி பாராது களத்தில் இறங்கிவிட்டான்...

மருத்துவமனையில் செய்த விசாரணையில் செந்தில்நாதனுக்கு உதவியாய் இருந்த ஒரு மருத்துவர், அங்குப் பணிபுரியும் வேலையாள், மற்றும் காவல்துறையைச் சேர்ந்த காவலர் ஒருவர் இவர்கள் மூவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுத்துவிட்டு அவன் வெளியில் வந்த போது செந்தில்நாதன் சென்ற இடத்தின் முகவரி தெரிய வந்தது... உடனே அவன் திருச்செல்வத்திற்கு அழைத்துத் தகவல் சொல்லிவிட்டு அங்கு விரைந்தான்... போகும் வழியில் அங்கிருந்த காவல்நிலையத்திற்கும் தகவல் தெரிவித்து விட்டான்...

செந்தில்நாதன் அறையின் மூலையில் முதுகு காட்டி நிர்வாணமாய்ப் படுத்திருந்த அந்தச் சின்னப் பெண்ணைக் கண்டு குதூகலம் அடைந்தார்... அவளது உடலில் இருந்த காயங்கள் அவள் பட்ட அவஸ்தையை அப்பட்டமாய் எடுத்துக் காட்டியதில் அவரது அரக்க குணம் கொண்ட மனம் எல்லையில்லா உவகை அடைந்தது... எதிரியின் மகளைத் துன்புறுத்தியதில் அவர் இன்பம் கண்டார்... அவள் அருகில் வந்து,

"எனக்கு மட்டும் நல்ல மூடு இருந்திருந்தால் நானே உன்னை அனுபவிச்சு இருப்பேன்... ஆனால் எனக்குக் கொஞ்சம் மூடு சரியில்லை... அதனால் நீ தப்பிச்சிட்ட..." என்று கூறியபடி அவளைக் காலால் எட்டி உதைத்தார்...

அதில் வலியில் முனங்கிய தாமரை தந்தையின் குரலை உணர்ந்து, "அப்பா..." என்று பலகீனமான குரலில் முனங்கினாள்...

"யாருக்கு யாருடி அப்பா...? என் மகள் கூடச் சேர்ந்து படிச்சால் நீ எனக்கு மகளாகப் போயிருவியா...? நீ என்னைக்குமே என் எதிரியின் மகள் தான்..." என்று கர்ஜித்தவரை கண்டு அதிர்ச்சியுற்றவளாய் தாமரை

மெல்ல திரும்பி பார்த்தாள்... ஆடைகளற்ற தனது மேனியை கைகளால் மூடியபடி, தந்தை முன் அப்படியிருக்கக் கூசி போய் மனமுடைந்து போனாள் அந்தச் சின்னப் பெண்...

"அப்பா... நான் தாமரை..."

அந்தப் பெண் உருவம் திரும்பியதில் அடையாளம் கண்டு கொண்ட செந்தில்நாதன் அதிர்ந்து போனார்... காம கொடூரனான அவன் கூட மகளின் நிலை கண்டு ஒரு நொடி உறைந்து நின்றான்... பின் சுதாரித்துக் கொண்டு,

"மூதேவி... உன்னை யார் அவளோடு இருக்கச் சொன்னது... இப்போ பார்... ஆள் மாறி என்னவெல்லாம் நடந்துவிட்டது... இனி நான் எப்படி ஊரில் தலை காட்ட முடியும்... நீ கேவலப்பட்டு என்னைக் கேவலப்படுத்திட்டியே..." என்று திட்டியபடி அவளைக் காலால் மிதிக்க ஆரம்பித்தார்...

ஏற்கெனவே பலகீனமாய் இருந்தவள் தந்தையின் சராமாரியான தாக்குதலை தாங்க முடியாது, "அப்பா... என்னை மிதிக்காதீங்க... வலிக்குது..." என்று கதறியழ ஆரம்பித்தாள்... ஆனால் அந்த மிருகம் அதைக் கொஞ்சமும் கண்டு கொள்வதாய் இல்லை... அது மகளை மூர்க்கத்தனமாகத் தாக்க துவங்கியது...

விஜய் அந்த இடத்திற்கு விரைந்து வந்து அங்கிருந்தவர்களோடு சண்டையிட்டு முதலில் காப்பாற்றியது தனது மகனை தான்... ஏனெனில் கனியமுதன் முன்பக்க அறையில் கட்டி வைக்கப்பட்டு இருந்தான்... தந்தையின் வீரபிரதாபங்களை நேரில் கண்டவனுக்குத் தந்தை 'ஹீரோ'வாகி போனான்...

"அப்பா... நீங்க ஒரு 'சூப்பர்மேன்'..." என்று தனது கன்னத்தில் முத்தமிட்டு கூறி மகிழ்ந்த மகனை கண்டு புன்னகைத்த விஜய்,

"நீ இந்த அங்கிளோடு இரு... நாங்க தாமரை அக்காவை கூட்டிட்டு வருகிறோம்..." என்று கூறியதும் அவன் சமத்தாய்

அங்கிருந்த காவலரோடு சேர்ந்து ஜீப்பை நோக்கி நடந்தான்...

விஜய், ரிச்சர்ட் இருவரும் தாமரை இருந்த இடத்தைத் தேடி வந்த போது செந்தில்நாதன் அவளை மிதித்தே கொன்றிருந்தான்... ஈனபுத்தியுடைய தந்தைக்குப் பிறந்த அந்தச் சின்னக் குருத்துப் பரிதாபமாகத் தனது உயிரை விட்டிருந்தது...

மச்சினிச்சியின் நிர்வாண உடலை கண்டு ரிச்சர்ட் பதறி போய்த் தனது சட்டையைக் கழற்றி அவள் மீது போர்த்தி விட்டான்... 'மாமா' என்றழைத்து அவள் பேசிய மகிழ்வான தருணங்கள் அவனது நினைவுகளில் இனிமையாய்... அதை நினைத்து அவனது விழிகள் இரண்டும் கசிந்து இரு சொட்டு கண்ணீரை அவளது உடல் மீது சொட்டியது...

மனம் கனக்க எழுந்து நின்ற ரிச்சர்ட்டிற்குச் செந்தில்நாதனை அடித்தே கொல்ல வேண்டும் என்கிற வெறி எழுந்தது... ஆனால் சட்டத்தை மதிக்கும் அவனால் அதை மீற முடியவில்லை... அடக்கப்பட்ட கோபத்துடன் அவன் விஜய்யை பார்த்தான்... அவன் தான் எல்லாம் பார்த்துக் கொள்வதாகக் கண்களைக் காட்டினான்... அவனுக்குமே சின்னப் பெண்ணான தாமரையின் முடிவு மனதினை மிகவும் வருந்த செய்தது...

அதற்குள் அங்கு வந்து சேர்ந்தான் திருச்செல்வன்... அவனது கண்களுக்கு உயிரை விட்டிருந்த தங்கையைத் தவிர வேறு யாரும் தெரியவில்லை...

"ஐயோ தாமரை..." என்று பதறிக் கொண்டு அவன் அவள் அருகே செல்ல முயன்ற போது விஜய் தடுத்து விட்டான்...

"விடுங்க சார்... இந்த மிருகத்தை என் கையால் கொன்னால் தான் எனக்கு நிம்மதி..." என்று அவன் சிங்கம் போல் கோபமாய்க் கர்ஜித்தான்...

நாற்புறமும் சூழப்பட்டுத் தனியே மாட்டி கொண்ட செந்தில்நாதன் செய்வதறியாது விழித்தார்... ஒரு பக்கம்

ரிச்சர்ட் நிற்க, மறுபக்கம் விஜய் நின்று கொண்டிருந்தான்... கூடவே திருச்செல்வன் மற்றும் காவலர்கள் சிலர்...

"திரு நான் கேட்டதைக் கொண்டு வந்திருக்கியா...?" விஜய் கேட்டதும் அவனுக்கு எதுவோ புரிவது போலிருந்தது... அதை எடுத்து விஜயிடம் கொடுத்தான்...

அது செந்தில்நாதனின் துப்பாக்கி... அதற்குரிய உரிமத்தை அவர் வைத்திருந்தார்... அதைத் தான் விஜய் அவனை வீட்டில் இருந்து எடுத்து வர சொன்னான்... அப்போதே அவன் செந்தில்நாதனின் முடிவை பற்றித் திட்டம் தீட்டி விட்டான்... இனி அதைச் செயல்படுத்த வேண்டியது தான் பாக்கி...

அந்தத் துப்பாக்கியை தன்னிடம் இருந்த கைக்குட்டையால் அழுந்த துடைத்த விஜய், "இதை வச்சு உன்னை நீயே சுட்டுக்கிட்டு செத்திரு... நாங்களும் பெண்ணை இப்படிப் பார்த்ததால் தாங்க முடியாம நீ தற்கொலை பண்ணிக்கிட்டேன்னு கேசை மூடிருவோம்... உன்னால் இதைச் செய்ய முடியாதுன்னு சொன்னால்...? உன்னை என்கவுண்ட்டர் பண்ணிட்டுக் கேசை மூடிருவோம்... எது வசதின்னு நீயே முடிவு பண்ணிக்கோ..." என்று கூறியவன் அந்தத் துப்பாக்கியை அவரிடம் நீட்டினான்... அதை வாங்கித் திருப்பி அவனைச் சுட முடியாதபடி மற்ற காவலர்களின் துப்பாக்கி அவரைக் குறிப்பார்த்துக் கொண்டிருந்தது...

"சார்... எங்க மாப்பிள்ளையிடம் துப்பாக்கியை கொடுங்க... அவர் தான் இந்த நாயால் ரொம்பக் கஷ்டப்பட்டு இருக்கிறார்..." திருச்செல்வன் விஜயிடம் கத்தி கூறினான்... அதைக் கேட்டு ரிச்சர்ட்,

"எனக்கு மதுவோடு நிறைய வருசங்கள் வாழணும்ன்னு ஆசையிருக்கு... போலீஸ்க்காரனான நான் சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது... சாரி திரு... சட்டம் தன் கடமையைச் செய்யும்..." என்று மறுத்து விட்டான்...

தனது முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்த செந்தில்நாதன் தைரியமாய் அதை வாங்கித் தன்னைத் தானே சுட்டுக் கொண்டார்... அதில் அவருக்குச் சிறிதும் வருத்தமில்லை... கடைசிவரை அவர் தனது தவறை எண்ணி வருந்தவில்லை... இவர்களிடம் மாட்டி கொண்டு அவஸ்தைப்படுவதை விட உயிர் விடுவது மேல் என்று அவர் நினைத்தார் போலும்... அந்தக் கடைசி நேரத்திலும் அவர் தன்னைப் பற்றி மட்டுமே சுயநலமாய் யோசித்தார்...

திருச்செல்வன், விஜய், ரிச்சர்ட் மூவரும் அவரது சடலத்தை உணர்வில்லாது பார்த்தனர்... பின்பு மூவரின் பார்வையும் தாமரை மீது படிந்தது... திருச்செல்வன் தங்கையின் உடலை கண்ணீரோடு பார்த்துக் கொண்டிருந்தான்... தனது மகளுக்குப் பதிலாக உயிரை தியாகம் செய்த சின்னவளை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் விஜய், தனது பதவியை மறந்தவனாய்... ரிச்சர்ட்டின் விழிகள் இரண்டும் இன்னமும் கசிந்து கொண்டிருந்தது, சின்ன மொட்டு மலரும் முன் கருகியதை எண்ணி...

செந்தில்நாதனின் உடலை வாங்க அவரது குடும்பத்தினர் யாரும் முன் வரவில்லை... அதனால் அநாதை பிணமாக அது எரியூட்டப்பட்டது... அவரது கட்சி உறுப்பினர்கள் கூட அவரது இறுதி யாத்திரைக்கு வரவில்லை...

விஜயின் மகளைக் கடத்த நினைத்து தனது மகளைக் கடத்தி அவளுக்குத் தான் துரோகம் புரிந்ததை எண்ணி மனம் வருந்தி செந்தில்நாதன் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என்று அவரது வழக்கை மூடி வைத்து விட்டது காவல்துறை... அவரது இரு நண்பர்களும் சிறை தண்டனை அனுபவித்து வருகின்றனர்...

மறுநாள் தாமரையின் உடல் வீட்டிற்குக் கொண்டு வரப்பட்ட போது மகளின் நிலை அறிந்து மீனாட்சி மயங்கி விழுந்தார்... அவருக்கு மயக்கம் தெளிவித்து அவருடன் முத்துபேச்சியும், மதுரகவியும் ஆறுதலாக இருந்தனர்... கணவனின் அட்டகாசத்தால் சின்ன மகளின் உயிர்

அநியாயமாய்ப் பறி போனதை நினைத்து அவர் திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தார்...

இந்தக் களேபரத்தில் மதுரகவி அங்கிருந்த ரிச்சர்ட்டை கவனிக்க மறந்து போனாள்... ஆனால் அவன் தனது விழிகளைத் தன்னவளிடம் இருந்து வேறு எங்கும் திருப்பவில்லை... அவன் அவளது அழுகையைக் கையாலாகாதவனாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் அழுவது கண்டு அவனது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

விஜய், முத்துபேச்சி மனதளவில் மிகவும் வருத்தமுற்று இருந்தனர்... தங்கள் மகளைக் காப்பாற்றிய தெய்வமாகத் தாமரையை எண்ணினர்... அதே சமயம் அந்தச் சின்னஞ்சிறு கிளியினுடைய பரிதாப முடிவை எண்ணி மனம் மருகி போயினர்... கயல்விழிக்கு விவரம் தெரியும் வயதாதலால் தோழிக்கு நேர்ந்ததை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது... தோழியை நினைத்து அவள் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தாள்... கனியமுதனுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றாலும் அங்கிருந்த துக்கம் அவனது மனதினை வாட்ட, அவன் அமைதியாக அமர்ந்திருந்தான்...

திருச்செல்வன் துக்கத்தினைத் தன்னுள் போட்டு புதைத்துக் கொண்டு தங்கையின் இறுதி ஊர்வலத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்... குமுறிக் கொண்டிருந்த மனதினை அடக்கி கொண்டிருந்தவனின் விழிகள் இரண்டும் கலங்கி சிவந்திருந்தது... தங்கையைச் சிதைத்த நால்வருக்கும் 'என்கவுண்டர்' என்கிற பெயரில் மரணதண்டனை அளித்த பின்பும் கூட அவனால் மனதின் குமுறலை அடக்க முடியவில்லை...

தாமரையின் பதினாறாம் நாள் காரியம் முடிந்து முத்துபேச்சி தனது வீட்டிற்கு வந்தாள்... அன்றிரவு உறங்கும் போது எப்போதும் தன்னை அணைத்துக் கொண்டு உறங்கும் மகன் இன்று அதிசயமாய்த் தந்தையை

அணைத்துக் கொண்டு படுத்திருப்பதைக் கண்டு அவள் ஆச்சிரியமுற்றாள்...

"கனி, அம்மா கிட்ட வரலையா...?"

"ம்ஹூம்... வர மாட்டேன்... அப்பா தான் சூப்பர்மேன்... எப்படிச் சண்டை போட்டார் தெரியுமா...? டிஷ்யூம், டிஷ்யூம்..." என்று அவன் சண்டை போடுவது போல் காற்றில் கைகளை அசைத்து காண்பிக்க... அதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"அப்பாவை கண்டாலே முறைச்சுக்கிட்டு திரிவ... இப்போ அப்பா உனக்குச் சூப்பர்மேன் ஆகிட்டாரா..." என்று அவனது தலையைக் கலைத்து விட்டு அவள் சிரித்தாள்... அப்போது தான் அவள் கணவனின் முகம் சரியில்லாது இருப்பதைக் கவனித்தாள்... பிள்ளைகள் உறங்கிய பின்பு அவன் அருகில் வந்தமர்ந்தாள்...

"விஜூ..." கணவனை அவள் தொட்டதும் அவன் திரும்பி அவளது மடியில் முகம் புதைத்து படுத்துக் கொண்டான்... சிறிது நேரம் ஆறுதலாய் அவனது தலையை வருடி கொடுத்தவள்,

"என்ன விஜூ...?" அதில் அவளை நிமிர்ந்து பார்த்தவன்,

"என்ன முயற்சி செய்தும் தாமரையைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே..." அது அவளுக்குமே வருத்தம் தான்...

"அதுவும் நம்ம பொண்ணுக்கு பதிலா அவள் உயிரை இழந்திருக்கிறாள் என்று நினைக்கும் போது என் நெஞ்சு பதறி போயிருச்சு கண்ணம்மா... இப்படியும் ஒரு தகப்பன் இருப்பானா...? கணவனான ஆண் தப்பாக இருக்கலாம்... ஆனா தகப்பனான ஆண் இப்படித் தப்பாகும் போது பெண் குழந்தைகள் இந்த உலகத்தில் எந்த ஆணை தான் நம்பும்... மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு..."

தினம் தினம் விஜய் இது போல் ஆயிரம் வழக்குகளைப் பார்க்கிறான் தான்... ஏனோ இந்த வழக்கு அவனது

மனதினை மிகவும் பாதித்து விட்டது... அதை உணர்ந்தவளாய் அவள் மௌனமாக அவனது தலையை வருடி கொடுத்து ஆறுதல் அளிக்க, அதில் அவனது மனம் மெல்ல மெல்ல அமைதியானது... ஆழ்ந்த உறக்கம் அவனைத் தழுவி கொண்டது...

முத்துபேச்சியால் தான் தூங்க முடியவில்லை... இதற்குத் தீர்வு தான் என்ன? என்று வெகுநேரம் யோசித்தவளுக்குத் தீர்வு என்ற ஒன்று புலப்படவே இல்லை... ஒவ்வொரு ஆணும் சுயக்கட்டுப்பாடுடன் தங்களைத் திருத்தி கொண்டால் ஒழிய இதை மாற்ற யாராலும் முடியாது... சொந்த வீட்டிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத அவலநிலை இன்றைய நம் தாய் திருநாட்டில்...

*******************

சுமார் ஒரு மாதம் கழித்துத் தாமரை இறந்த துக்கம் சிறிது ஆறியிருந்த வேளையில் ரிச்சர்ட் மதுரகவியின் வீட்டிற்கு வருகை தந்தான்... வரவேற்பறையில் அமர்ந்திருந்த மதுரகவி அவனது வரவை உணர்ந்து வாயிலுக்கு விரைந்து வந்தாள்...

"ரிச்சி... நீ ஏன் இங்கு வந்த...? அண்ணா பார்க்கும் முன் போய்விடு..." என்று அவள் பயத்துடன் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு கூற...

"அவரைப் பார்க்க தான் நான் வந்திருக்கிறேன்..." என்று புன்முறுவலுடன் கூறிய ரிச்சர்ட் வீட்டிற்குள் அடி எடுத்து வைத்தான்...

"நீ எதுக்கு அவரைப் பார்க்கணும்...?"

"என் மனைவியை என்னுடன் அழைத்துச் செல்ல வேண்டி அனுமதி கேட்க தான்..." என்று அமர்த்தலாகக் கூறியவனைக் கண்டு அவள் திகைத்து போய் விழி விரித்து நின்றிருந்தாள்...

அப்போது உள்ளே இருந்து மீனாட்சியும், திருச்செல்வனும் அங்கு வந்தனர்... ரிச்சர்ட் நேரே அவர்கள் முன் வந்து

நின்று,

"மதுவும், நானும் உயிருக்கு உயிராகக் காதலிக்கிறோம்..." என்று முதலில் இருந்து கதையைக் கூற ஆரம்பிக்க...

"இல்லைண்ணா... ரிச்சி பொய் சொல்கிறான்..." என்று அவள் பயத்தில் அலறினாள்...

"காதலிக்க மட்டுமல்ல, கல்யாணமும் செய்து கொண்டோம்..." என்று அவன் கூற...

மீனாட்சி ஒரு மாதிரியாய் மகளைப் பார்க்க, திருச்செல்வனோ 'போச்சுடா' என்பது போல் மானசீகமாகத் தலையில் கை வைத்துக் கொண்டான்... மதுரகவியோ அச்சத்தில் வியர்வை துளிர்க்க,

"இல்லை... இல்லை... இல்லை..." என்று கத்தியபடி மறுத்தவள் அடுத்த நொடி மயங்கி கீழே சரிந்தாள்...!!!

மதுரமாகும்...!!!

"உங்க பொண்ணு கர்ப்பமா இருக்காங்க..."

மதுரகவியைப் பரிசோதித்த மருத்துவர் கூறியதை அடுத்து மீனாட்சி மனதில் பூகம்பம் வெடித்தது... முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அவர் மகளைக் கோபமாய்ப் பார்த்தார்... மயக்கத்தில் இருந்து எழுந்த மதுரகவிக்கு மீண்டும் மயக்கத்திற்குச் செல்வது போல் தோன்றியது... இனி அவள் விசயத்தை மூடி மறைத்து ஒரு பயனும் இல்லையே...

ரிச்சர்ட் மிகவும் சந்தோசத்துடன் மனைவியின் கைகளைப் பிடித்தபடி அவளை லேசாக அணைத்தபடி அமர்ந்திருந்தான்... திருச்செல்வன் அன்னையை எப்படிச் சமாதானம் செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான்...

அவளுக்குத் தேவையான ஊட்டச்சத்து மாத்திரைகளை எழுதி கொடுத்துவிட்டு மருத்துவர் கிளம்பி சென்று விட்டார்... அவர் கிளம்பும் வரை அமைதி காத்த மீனாட்சி அடுத்தக் கணம் மகளை அடிக்கப் பாய்ந்து விட்டார்...

"அந்தாளு தான் எங்க மானத்தை வாங்கினான் என்றால் இப்போ நீயும் எங்க மானத்தை வாங்கிட்டியே..." என்று ஆற்றாமையோடு கூறியவருக்கு அழுகை வரும் போலிருந்தது...

கணவன் என்கிற உறவு பொய்த்துப் போன போது கூட அவருக்கு அழுகை வரவில்லை... ஆனால் மகள் ஒழுக்க நெறியில் இருந்து தவறி விட்டாள் என்பதை அறிந்து அவருக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

"ஆன்ட்டி... ப்ளீஸ், மதுவை அடிக்காதீங்க..." என்று ரிச்சர்ட் தன்னவளை அணைத்து அவளுக்கு அடி விழாதபடி தடுத்தான்...

"அம்மா... கொஞ்சம் பொறுமையா இருங்க..." திருச்செல்வன் அன்னையைச் சாந்தப்படுத்தினான்...

"எப்படிப் பொறுமையா இருக்கிறது திரு...? இந்தப் பொறுமை இவளுக்கு ஏன் இல்லாமல் போனது...? கல்யாணம் ஆகுவதற்கு முன் இப்படி வந்து நிற்கிறாளே... அவருக்குத் தான் நம்ம கலாச்சாரம் தெரியாது... இவளுக்கு அது தெரியும் தானே... இவளுக்கு அறிவில்லை..." அந்தத் தாயின் மனக்குமுறல் இன்னமும் அடங்கவில்லை...

அப்போது தான் ரிச்சர்ட்டிற்கு மீனாட்சியின் கோபத்திற்கான காரணம் புரிந்தது... தன்னவள் ஏன் காதலிக்கும் காலத்தில் இருந்து ஒழுக்கத்தை உயிராக நினைத்தாள் என்பதற்கான விடையை இப்போது அவன் தெரிந்து கொண்டான்... அதனால் வேகமாய் மீனாட்சி அம்மாவிடம் தங்களது திருமண மோதிரத்தை காட்டியபடி,

"எனக்கும், மதுவுக்கும் சர்ச்சில் கல்யாணம் நடந்து முடிந்து விட்டது... இப்போது அவள் என் மனைவி..." என்று எடுத்துக் கூறினான்...

அதைக் கேட்டு மீனாட்சி சிறிது சமாதானம் அடைந்தார்... தனது மகள் தவறு செய்யவில்லை என்கிற திருப்தி அவருள் எழுந்தது... ரிச்சர்ட்டை போன்ற நல்லவன் ஒருவனைப் பார்ப்பது அரிது என்பதால் அவர் ஏற்கெனவே அவனைத் தங்கள் வீட்டு மாப்பிள்ளையாகத் தான் எண்ணி இருந்தார்... அதனால் அவர்களது திருமணத்தை எளிதாக அங்கீகரித்துக் கொண்டார்...

"அம்மா... ஒருவேளை இந்தக் குழந்தை நம்ம தாமரையாக இருந்தால்...?" மகன் கூறியதை கேட்டு மீனாட்சியின் உடலும், மனமும் நடுங்கியது... அப்படி நடப்பதற்கும் சாத்தியம் இருக்கிறதா என்று...

"நம்ம தாமரை நம்மைப் பிரிய மனசில்லாமல் மதுவின் குழந்தையா திரும்ப வந்திருக்கிறாள்... இந்தக் குழந்தை நம் தாமரை தான்ம்மா... நம்ம தாமரையை நாம வரவேற்கணும்மா... அப்போ தான் அவள்

சந்தோசப்படுவாள்..." கண்கள் கலங்க கூறிய திருச்செல்வனைக் கண்டு ஆமோதித்த மீனாட்சி,

"உண்மை தான் திரு... நம் தாமரை எங்கும் போகவில்லை... என் பேத்தியாக எனக்குத் திரும்பி கிடைத்து இருக்கிறாள்..." என்று கண்ணீர் மல்க சந்தோசத்துடன் கூறியவர் மறைமுகமாக மகளின் திருமணத்தை ஆதரித்து விட்டார்... அதை உணர்ந்து ரிச்சர்ட், மதுரகவி முகத்தில் புன்னகை மீண்டது...

அந்தக் கணம் ரிச்சர்ட் தீர்மானித்து விட்டான், அவனுக்கு மகள் பிறந்தால் அவள் பெயர் தாமரை என்று... மதுரகவியோ இப்படிப் புரிதலுடன் பேசும் அண்ணனை ஆச்சிரியமாகப் பார்த்து கொண்டிருந்தாள்... ஆனாலும் அவளது மனம் திக்திகென்று அடித்துக் கொண்டது...

"மது, போலீஸ்க்காரன் பொண்டாட்டி இப்படிப் பயப்படலாமோ...?" என்று திருச்செல்வன் தங்கையின் பயந்த பார்வை கண்டு கேலி செய்ய... இப்போது ஆச்சிரியத்தில் அவளது விழிகள் சாசர் போல் இன்னமும் அகலமாய் விரிந்தது...

"ரிச்ச, அண்ணா சொல்றது உண்மை தானா...?"

'உண்மை தான்' என்பது போல் ரிச்சர்ட்டின் விழிகள் ஆமோதித்து ஒரு நொடி மூடி திறந்தது...

"இதை ஏன் என்னிடம் சொல்லலை...?"

அவளது கேள்விக்கு அவன் புன்னகையை விடையாகக் கொடுத்தான்... தன்னவனின் பணி குறித்து அவளுக்குச் சற்றுப் பெருமையாக இருந்தது... மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது...

"மது... இனியாவது என் மீதான உன் பார்வையை மாற்றிக் கொள்வாயா...?" என்ற சகோதரனை அவள் புரியாது பார்த்தாள்...

"அது தான் வில்லனை போன்று பார்ப்பது...?"

அண்ணன் அப்படிக் கேட்டதும் அவளது முகம் பயத்தில் வெளிறியது... ரிச்சர்ட்டின் கைகளை இறுக பற்றிக் கொண்டு அவனோடு ஒன்றி அமர்ந்து கொண்டாள்... ஆனாலும் ரிச்சர்ட்டின் பணி அவளது நினைவில் எழுந்து அவளுள் சிறிது தைரியத்தையும் கொடுத்தது... திருச்செல்வன் அவள் அருகில் அமர்ந்து,

"ஏன்ம்மா இப்படி நினைச்ச...? உன் மீது நான் உயிரையே வைத்திருக்கிறேன்... நான் உனக்குத் தீங்கு செய்ய நினைப்பேனா...?" என்று அவன் கூறியதும் அவள்,

"அண்ணா..." என்றபடி கண்கள் கலங்க அவனை ஏறிட்டாள்...

"சொல்லு மது... நீ ஏன் என்னைத் தவறா நினைக்கிற...?"

சகோதரன் கேட்டதும் அவள் அன்றைய நிகழ்வை எடுத்து கூறி கண்களில் பயத்துடன் அண்ணனை பார்த்தாள்... அப்போது தான் ரிச்சர்ட்டிற்கும் தன்னவளின் பயம் புரிந்தது... தேவையில்லாத பயம் தான் என்றாலும் அவளது அன்னிச்சை மலர் மனம் அறிந்து அவளைக் கடியாது அவன் அமைதியாக இருந்தான்...

"அந்தக் கொலைகளை நான் செய்யவில்லை மது... அந்தாளு பதவிக்காகச் செய்தது... அது கேள்விப்பட்டு நான் அவரைச் சத்தம் போட்டேன்... காதலிப்பவர்களைப் பிடித்துச் சாகடிப்பதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை... அந்தப் பெண்ணுக்கு வேறு திருமணம் செய்து வைக்க வேண்டியது தானே என்று கூடச் சண்டை போட்டேன்... அது தான் நான் கடைசியாக அவருக்காகச் செய்தது... அதன் பிறகு நான் எந்தக் காதலர்களையும் பிடித்து வரவில்லை..." என்று கூறியவன் சிறிது நேரம் அமைதியாக இருந்தான்...

"அந்தாளுக்காக நான் சில விசயங்களைச் செய்திருக்கிறேன் தான்... இல்லை என்பதற்கு இல்லை... அப்பா என்கிற கண்மூடித்தனமான பாசத்தில் அதை எல்லாம் நான் செய்தது... அவர் எது செய்தாலும் சரியாக இருக்கும் என்கிற நம்பிக்கையில் தான் நான் எல்லாம்

செய்தது... ஆனால் அவரே தவறாகி போவார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை..."

கடைசி வரியை அவன் கூறும் போது அதில் அத்தனை வேதனை இருந்தது... அதை உணர்ந்தவளாய் மதுரகவி அண்ணனின் கையை ஆறுதலாகப் பற்றினாள்... தங்கையின் ஆறுதலில் அண்ணனது புன்னகை மீண்டது...

"இனி நான் எதைச் செய்தாலும் யோசித்துச் செய்வேன்... அது போல் எனது தவறுகளைத் திருத்தி கொள்வேன்... என்னை நம்பலாம் மது..."

"நிச்சயம் அண்ணா..." என்று புரிதலுடன் கூறியவளை அவன் அன்போடு பார்த்தான்...

அதற்குள் மீனாட்சி இனிப்புச் செய்து எடுத்து வந்து எல்லோருக்கும் கொடுத்தார்... தாமரை இறந்ததில் இருந்து அங்கிருந்த இறுக்கமான சூழ்நிலை, அவள் மீண்டும் பிறக்க போகிறாள் என்கிற நம்பிக்கையில், சந்தோசத்தில் இன்று சற்றுத் தளர்ந்தது... வாழ்வு வெறுத்தது போலிருந்த மீனாட்சி இன்று மகிழ்வோடு இனிப்பை உண்டார்...

"அம்மா... கல்யாணத்தை எப்போ நடத்தலாமா...?" என்று திருச்செல்வன் ஆரம்பித்து வைத்தான்...

"ஏற்கெனவே எங்களுக்குக் கல்யாணமாகி விட்டது..." ரிச்சர்ட் குழப்பமாய் எல்லோரையும் பார்த்தான்... அதைக் கேட்டு எல்லோரும் நகைத்தனர்...

"அது உங்க முறைப்படி... இது எங்கள் முறைப்படி..." என்று மதுரகவி கணவனுக்கு விளக்க...

"பட்டு வேட்டி கட்டி, தீ முன் அமர்ந்து, மஞ்சள் கயிறு கட்டி கல்யாணம் செய்வது தானே..." என்று ஆர்வமாய்க் கேட்ட ரிச்சர்ட்டிற்கு எல்லோரும் ஆம் என்று ஒன்று போல் கூற... அதைக் கேட்டு ரிச்சர்ட்டின் முகம் மலர்ந்தது... அவனுக்கு இது போல் திருமணம் செய்ய வேண்டும் என்கிற ஆசை உண்டு... அதனால் அவன் சந்தோசமாய் அதற்குச் சம்மதித்தான்...

அலைப்பேசி வழியாக ஜோசியரிடம் பேசி இன்னும் இரண்டு வாரத்தில் திருமணம் என்று முடிவு செய்யப்பட்டது... துக்கம் நடந்த வீடாக இருந்த போதும் இந்தத் திருமணத்தைப் பெரிதாக நடத்திட திட்டமிட்டனர் தாயும், மகனும்... பின்னே மதுரகவி குடும்பத்தினருக்காகத் தனது காதலனை இத்தனை வருடங்கள் பிரிந்திருந்தது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது... அவளைச் சந்தோசப்படுத்த தான் இந்தக் கோலாகலமான திருமண ஏற்பாடு...

ரிச்சர்ட் கிளம்பும் போது மீனாட்சி அவனிடம் ஒன்று மட்டும் கேட்டுக் கொண்டார்...

"கடைசி வரை மதுவை கைவிடாம பார்த்துக்கோங்க..."

ஏனெனில் அவன் நாட்டுக் கலாச்சாரம் அப்படி... அவரது இந்திய திருமணமே பொய்த்துப் போய்விட்டது... அதனால் விளைந்த ஏமாற்றத்தின் விளைவே இந்த மன்றாடல்... அதை அவனும் புரிந்து கொண்டான்...

"நிச்சயம் ஆன்ட்டி... என் ஆயுள் வரை மது தான் என் மனைவி இதில் எந்த மாற்றமும் இல்லை... ஏனென்றால் என் அம்மா..." என்று அவன் தனது அன்னையைப் பற்றிக் கூற வந்த போது மதுரகவி அவனது கையை அழுத்தி தடுத்து விட்டாள்... அதனால் அவன் அதைச் சொல்லாது விடுத்து விட்டான்...

"உங்கம்மாவுக்கு நேர்ந்த கொடூரத்திற்கு எங்களால் மன்னிப்பு மட்டுமே கேட்க முடியும்... எங்களை மன்னிச்சிருங்க..." என்று கூறிய தாய், மகனை ரிச்சர்ட் புரிதலுடன் பார்த்தான்... அதற்காகத் தான் மதுரகவி கணவனது கையைப் பிடித்து அழுத்துகிறாள் என்று அவர்கள் இருவரும் நினைத்து கொண்டனர்...

கிளம்பும் முன் மனைவியைத் தனிமையில் சந்தித்தான் ரிச்சர்ட்...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு பேபி..." என்று தன்னவளை அணைத்துக் கொண்டான் அவன்... தந்தையாகப் போகும் மகிழ்ச்சி அவனது மனமெங்கும் வாசமாய்... அவளும் மகிழ்ச்சியை அனுபவித்தபடி அவனது அணைப்பில் வாகாய் அடங்கிக் கொண்டாள்...

"அம்மாவை பத்தி ஏன் சொல்லாமல் தடுத்த பேபி...?"

"இங்கு அதை எல்லாம் அவ்வளவு சாதாரணமாக எடுத்துக்க மாட்டாங்க... என் ரிச்சியை யாரும் இறக்கமாய்ப் பார்க்க கூடாது... அது எனக்குப் பிடிக்காது... உனக்கு வேண்டிய மரியாதையை அவங்க கடைசி வரை கொடுக்கணும்... அதனால் தான் வேண்டாம்ன்னு தடுத்துட்டேன்..."

அன்று அறியாத வயதில் அவள் ஏன் தன்னை விட்டு பிரிந்து சென்றாள் என்று அவனுக்கு இப்போது புரிந்தது... இந்தியாவின் கலாச்சாரம் இப்போது நன்கு புரிந்ததால் அவளது கூற்றை அவன் ஏற்றுக் கொண்டான்...

"என் அப்பாவை விட உன் அம்மா ஒன்றும் கேவலம் இல்லை ரிச்சி... அந்தாளை போன்ற ஒரு இழிவான பிறவியை நான் பார்த்தது இல்லை... அப்படிப்பட்ட கேவலமானவனின் பெண்ணை இத்தனை காதலோடு கவனித்துக் கொள்ள உன்னால் மட்டும் தான் முடியும்... இந்தப் பரந்த குணம் எனக்கு மட்டும் ஏன் இல்லாமல் போச்சு ரிச்சி...? எதை எதையோ நினைத்துக் கொண்டு உன்னைப் பிரிந்து, உன்னைக் கஷ்டப்படுத்தி, நானும் கஷ்டப்பட்டு... நிறையத் தவறுகள் பண்ணியிருக்கேன்... என்னை மன்னிச்சிரு ரிச்சி..."

"தவறு தான்... ஆனால் எல்லாமே அழகான தவறுகள்... இந்தப் பிரிவு தான் உன் மீதான என் காதலை இன்னமும் அதிகப்படுத்தியது... எங்க கலாச்சாரத்தை மீறி உன்னை மட்டுமே நினைக்க வைத்தது... உன்னைத் தேடி வரவழைத்தது... அதனால் நீ மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமே இல்லை..." காதலோடு கூறியவனைக் கண்ணீர்

மல்க ஏறிட்டவளின் விழிகளிலும் காதல் பொங்கி வழிந்தது...

"நீ ஏன் ரிச்சி இன்டர்போலில் வேலை செய்பவன்னு என் கிட்ட சொல்லவே இல்லை...?"

"நீ கேட்கவே இல்லையே..." என்று ராகம் போட்டு இழுத்து சொன்னவனைக் கண்டு முறைத்தாள் அவள்...

"நான் தான் சின்னப் பொண்ணு இது எல்லாம் யோசிக்கலை... ஆனால் நீ இதை எல்லாம் சொல்லியிருக்கலாமே..."

"எங்கே... என்னைச் சொல்ல விட்டால் தானே...? இந்தச் சின்னப் பெண் ஒவ்வொரு நாளும் அவளது காதலில் என்னைக் கட்டியிழுத்து மயக்கி பேசாது செய்து விட்டாள்... அவளோடு நான் இருந்தால், நான் உலகம் மறந்து, என்னை மறந்து அவளை மட்டுமே நினைக்கச் செய்து விடுவாள்... அப்படி இருக்கும் போது எனது வேலை மட்டும் எனக்கு எப்படி ஞாபகத்தில் இருக்கும்...?"

கணவனது காதலில் மனம் உருகிய போதும், "ஆனாலும் நீ சொல்லி இருக்கலாம் ரிச்சி..." என்று அவள் மனத்தாங்கல் கொள்ள...

"நீயும் கொஞ்சம் புரிஞ்சிக்க முயற்சி செய்திருக்கலாம் பேபி..." என்று அவளைப் போல் சொல்லி காட்டியவன்,

"அன்று ஆசிரமத்தில் மயங்கி விழுந்த உன்னை நான் எப்படிக் காப்பாற்றி ஹாஸ்பிட்டலில் சேர்த்தேன்னு நீ யோசிக்கலையா...?"

"ஆமாமில்ல..." என்று அவள் யோசிக்க...

"உன் பின்னால் நான் சுற்றியதில் விளைந்த நன்மை அது... நீ மயங்கி விழுந்ததும் உன்னைக் கையில் ஏந்தி கொண்டு ஹாஸ்பிட்டலில் சேர்த்து ட்ரீட்மெண்ட் கொடுத்து, நீ கண் முழிக்கும் வரை என் உயிர் என்னிடம் இல்லை..."

"அப்போ நீயும் அந்தக் குழந்தைகளைப் பார்த்தியா ரிச்சி..." என்று கேட்டவளின் முகத்தில் துயரத்தின் சாயல் படிந்தது...

"ஆம் பார்த்தேன்... பார்த்ததுமே தெரிந்து போனது, அவர்கள் இறந்து விட்டனர் என்று... அந்த நிலையிலும் அதை ஃபோட்டோ எடுக்க நான் மறக்கவில்லை..."

"அப்போவே உனக்கு விஜய் அங்கிளை தெரியுமா...?"

"அதுக்கு முன்னாடியே தெரியும்... ஆனா உன் முன்னாடி அவர் காட்டிக்கலை, அவ்வளவு தான்... பின்னே எப்படி இப்போது அவர் வீட்டில் உன்னை நான் சந்தித்தேன்...? நாங்கள் நல்ல நண்பர்கள் என்பதால் தான்..."

"நான் தான் சரியா யோசிக்காது போயிட்டேன்..." என்றவளின் நெற்றி மீது செல்லமாய் முட்டியவன்,

"நீ அதை மட்டுமா யோசிக்காது போனாய்... அன்று உன் கார் மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டு நீ மயங்கி இருந்தாய்ன்னு நான் சொன்னப்போ கூட நீ கொஞ்சமும் சந்தேகப்பட்டு யோசிக்கலை... ஏன்னா உன் காருக்கு எந்த அடியும் ஏற்படலை... அது போல் தான் நான் உன்னை விமானத்தில் அழைத்து வந்ததும்... எந்த அடையாள அட்டையும் இல்லாது உன்னை எப்படி விமானத்தில் அழைத்து வந்தேன்...?" என்று புருவம் உயர்த்தித் தன்னைப் பார்த்துக் கேள்வி கேட்ட கணவனைக் கண்டு அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது... இந்தளவிற்குக் கொஞ்சமும் யோசிக்காது முட்டாளாகத் தான் இருந்திருக்கிறோமே என்று...

"போதும் ரிச்சி... ரொம்பக் கிண்டல் பண்ணாதே..." என்று அவனது நெஞ்சில் முகம் புதைத்தபடி அவள் கூற... அதைக் கண்டு அவன் வாய் விட்டு நகைத்தான்... பின் தன்னவளின் அறியாமை, குழந்தை உள்ளத்தை நினைத்து மெல்ல அவன் முகம் கனிந்தது...

"நீ இப்படிப் பேபியா இருக்கிறதும் எனக்குப் பிடித்துத் தான் இருக்கிறது..."

அவனோ தைரியமானவன், காவல்துறையைச் சேர்ந்தவன்... அவளோ பயந்த, மென்மையான, குழந்தை மனம் கொண்ட குமரி பெண்... இருவருக்கும் இடையில் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம்... ஆனாலும் அவளை அவளாக ஏற்றுக் கொண்டு ரசித்தான் அவளது காதல் கணவன்... மனைவியின் அறியாமையை ரசிக்கும் கணவன் கிடைப்பதும் அரிய வரம் தான்...

"உண்மையாவா ரிச்சி...?"

"உண்மையா பேபி... என் பேபிக்கு பேபி வந்தாலும் நீ எனக்குப் பேபி தான்..." என்று காதலுடன் கூறியவனைக் கண்டு அவளுக்கும் காதல் பெருக்கெடுத்தது...

சரியாகத் திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் ரிச்சர்ட் மதுரகவியைத் தேடி வந்தான்...

"பேபி... என்னோடு வா..." என்று அவளது விழிகளைத் தனது கைகளால் மூடியபடி அவன் அழைத்துச் செல்ல...

"எங்கே ரிச்சி...?"

"ஷ், பேசாது வா பேபி..."

கணவன் கூறியதை கேட்டு அவள் அமைதியாக வந்தாள்... சிறிது தூரம் சென்றதும் ரிச்சர்ட் அவளது கண்களில் இருந்து தனது கைகளை எடுத்தான்... விழி திறந்தவள் தன் முன் இருந்தவர்களைக் கண்டு நம்ப முடியாது ஆச்சிரியத்தில் கண்கள் அகல பார்த்தாள்... அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்தவர்கள் உஷாவும், அகிலும்... தங்களது திருமணத்திற்காக ரிச்சர்ட் தான் அவர்களை வரவழைத்து இருந்தான்... அவனது தாத்தா வயோதிகம் காரணமாக வரவில்லை என்று கூறிவிட்டார்...

"அகில்..." என்று சந்தோசத்துடன் கூவியவள் ஓடி வந்து அவனை அணைப்பதற்குப் பதில் உஷாவை அணைத்து கொண்டாள்...

"அகில் இங்கே இருக்கிறேன் மது... அது உன் ஆன்ட்டி உஷா..."

"அது எங்களுக்கும் தெரியும்... முதலில் ஆன்ட்டி, அதுக்குப் பிறகு தான் நீ..." என்று கெத்தாகக் கூறி கலகலவெனச் சிரித்தவளை கண்டு மீனாட்சி, திருச்செல்வன் வாஞ்சையுடன் பார்த்திருந்தனர்...

தாமரை இறந்ததில் இருந்து அவர்களை விட மதுரகவி தான் மிகவும் ஒடுங்கி போயிருந்தாள்... சந்தோசம் இல்லாது சிரிப்பை துறந்து எப்படியோ இருந்தாள்... இப்போது அவளை இப்படிச் சிரிப்போடு பார்க்கும் போது அவர்களுக்குமே சற்று நிம்மதியாக இருந்தது...

அதன் பிறகு அகில், உஷாவுடன் அவளுக்குப் பேச ஆயிரம் விசயங்கள் இருந்தது... ரிச்சர்ட் அவளைப் புன்சிரிப்புடன் பார்த்திருந்தான்... வெகுநேரம் சென்ற பிறகே அவளுக்குக் கணவனது நினைவு வந்தது...

"தேங்க்ஸ் ரிச்சி..." என்று கூறியவளின் நன்றியை புன்சிரிப்புடன் ஏற்றுக் கொண்டான் அந்தக் காதல் கணவன்...

************************************

சுபயோக சுபதினத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் புடை சூழ ரிச்சர்ட் மதுரகவி கழுத்தில் மங்கல நாணை பூட்டினான்... மதுரகவிக்கு இப்போது தான் நிம்மதியாய் இருந்தது... மீனாட்சி, திருச்செல்வன் இருவரது மனதிலும் எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது... அந்த நேரத்தில் மீனாட்சி மனதில் தாமரையின் நினைவு எழாமல் இல்லை... இப்படி அவளுக்கும் திருமணம் செய்து பார்க்கும் பாக்கியம் இல்லாது போயிற்றே என்று அவர் மனம் வருந்தினார்...

தாயின் மனநிலையை உணர்ந்து திருச்செல்வன் அவரை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்... தந்தை போன்று ஆதரவு தந்த மகனது ஆதரவில் மீனாட்சி வருத்தம் மறைந்து கம்பீரமாக நிமிர்ந்தார்...

விஜய், முத்துபேச்சி தங்களது பிள்ளைகளுடன் அந்தத் திருமணத்திற்கு வந்திருந்தனர்...

மணமேடையில் மதுரகவி இயல்பாய் ரிச்சர்ட்டுடன் பேசி கொண்டிருப்பதைக் கண்ட அகில், "மது கல்யாண பெண்ணாய் கொஞ்சம் வெட்கப்படு..." என்று கேலி செய்ய...

"ரிச்சி இந்த அகிலை பாரு... சும்மா, சும்மா என்னிடம் வம்பிழுக்கிறான்..." பள்ளி சிறுமி போல் அவள் கணவனிடத்தில் முறையிட்டாள்...

"அகில்... மது பாவம்... விட்டு விடு..." என்று ரிச்சர்ட் அவனிடம் கெஞ்ச...

"போ ரிச்சி... நீ போலீஸ்க்காரன் என்று வெளியில் சொல்லிவிடாதே... இப்போது நீ கெத்தாக அவனை மிரட்டணும்... இப்படிக் கெஞ்ச கூடாது..." என்று அவள் அவனைக் கேலி செய்து சிரித்தாள்...

"ரிச்சர்ட்... இதற்குத் தான் சொன்னேன்..." என்று அகில் இப்போது ரிச்சர்ட்டை கிண்டல் செய்தான்...

கும்மாளமும், கொண்டாட்டமுமாய்த் திருமண நிகழ்வு நடந்து முடிந்தது... எல்லோர் மனதிலும் தாமரையின் நினைவுகள் நெருஞ்சி முள்ளாய் உறுத்த தான் செய்தது... அதையும் தாண்டி வாழ வேண்டிய நிர்பந்தம் அவர்களைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தது...

திருமண நிகழ்வை ஒட்டி வரும் முதலிரவு சடங்கு முதலியவற்றைக் கணவனின் சம்மதத்துடன் மதுரகவி வேண்டாம் என்று மறுத்து விட்டாள்... அவளால் இன்னமும் தங்கையின் மரணத்தில் இருந்து வெளிவர முடியவில்லை... அதை ரிச்சர்ட்டும் நன்கு உணர்ந்திருந்தான்... அவனுக்குமே அந்தப் பாதிப்பு இருக்கத் தான் செய்தது...

ரிச்சர்ட் தனது நாட்டின் தூதரகம் மூலம் அவர்களது திருமணத்திற்குச் சம்மதம் கேட்டு ஏற்கெனவே

விண்ணப்பித்து இருந்தான்... அதற்கான ஒப்புதல் வந்தவுடன் அவன் தங்களது திருமணத்தைச் சட்டப்படி பதிவு செய்து தனது மனைவியைத் தன்னுடைய நாட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டான்...

மகளைப் பிரியும் போது மீனாட்சிக்கு மிகவும் வருத்தமாக இருந்தது... ஆனால் அவளது வாழ்க்கையை நினைத்து அவர் தனது அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு புன்னகை முகமாய் விடை கொடுத்தார்... அதைக் கண்ட திருச்செல்வன் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்... இனியும் அன்னையை இப்படியே வீட்டில் முடங்கியிருக்கச் செய்தால் அவர் கவலையுற்றுத் தன்னை வருத்தி கொள்வார் என்று எண்ணி அவரை அதிலிருந்து வெளிக்கொண்டு வருவதற்கான யோசனையில் ஈடுபட்டான்...

இலண்டனில் புதுமணத் தம்பதிகளை இந்து முறைப்படி ஆரத்தி எடுத்து வரவேற்றார் உஷா... சிறிது நேரம் பேசியிருந்து விட்டு அவர் தனது வீட்டிற்குக் கிளம்பி சென்றுவிட்டார்...

மதுரகவி அங்கு வந்ததில் இருந்து ரிச்சர்ட்டின் தாத்தா அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்... அப்படி என்ன பிரமாதமான அழகி என்று இந்த இந்திய பெண்ணைப் பேரன் திருமணம் முடித்து அழைத்து வந்திருக்கிறான் என்று அவருக்குப் பெருத்த யோசனையாக இருந்தது... இவளை விட அழகான பெண்கள் இங்கு உண்டு... பேரன் அவர்களை எல்லாம் கடந்து வந்திருப்பான் தான்... அதில் எந்தவித சந்தேகமுமில்லை... அப்படிப்பட்ட அழகு பெண்களை வெறுத்து ஒதுக்கி விட்டு இந்தப் பெண்ணைக் காதலித்து அதுவும் இத்தனை வருடங்கள் காத்திருந்து கைப்பிடித்ததற்கு என்ன காரணம் இருக்கக் கூடும் என்று அவருக்குச் சுத்தமாய் விளங்கவில்லை...

"ரிச்சி... உன் தாத்தாவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க வேண்டாமா...?" மதுரகவி கணவனது கையைச் சுரண்டினாள்...

"கட்டாயம் அதைச் செய்து தான் ஆகவேண்டுமா...?"

"ஆம், செய்து தான் ஆகவேண்டும்... அவருடைய வயதுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் ரிச்சி..."

மனைவி கூறியதும் எதிர் பேச்சு பேசாது அவன் அவளோடு சென்று தாத்தாவின் காலில் விழுந்து வணங்கினான்... மதுரகவி முதல் பந்தில் 'சிக்ஸர்' அடித்துத் தாத்தாவின் மனதினை கொள்ளை அடித்தாள்... அவளது அந்தப் பண்பு அவருக்கு மிகவும் பிடித்துப் போனது... அதிலும் அவள் குழந்தை உண்டாகி இருப்பதை அறிந்து அவர் மிகவும் மகிழ்ந்து போனார்... அடுத்தத் தலைமுறையைப் பார்க்கும் ஆவல் அவரிடம் தொற்றிக் கொண்டது...

அடுத்து வந்த நாட்களில் அவள் ரிச்சர்ட்டின் மீது வைத்த அன்பினை அவர் கவனித்துப் பார்த்துக் கொண்டு இருந்தார்... அவனுக்காகப் பார்த்து, பார்த்துச் செய்வதும், இரவு அவன் எந்த நேரம் வந்தாலும் காத்திருந்து அவனுக்கு உணவு பரிமாறி குழந்தை போல் அன்பாகக் கவனித்துக் கொள்ளும் அவளைக் கண்டு அவருக்கு மிகவும் பிடித்துப் போனது... எதனால் பேரன் அவளிடத்தில் மயங்கினான் என்பதினை அவர் அறிந்து கொண்டார்... அதன் பின் அவர் மதுரகவியை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டார்...

அது போல் அவனையும் சும்மா சொல்ல கூடாது... குழந்தை உண்டாகி இருக்கும் மனைவியை அவன் அப்படித் தாங்கினான்... இதோ அவர்கள் இங்கு வந்து மாதங்கள் மூன்று உருண்டோடி விட்டது... இன்னமும் மதுரகவி உடலளவில் அவனுடன் இணைய முற்படவில்லை... அவனும் அவளது மனநிலையை உணர்ந்து கொண்டு, அவளது உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து விலகி நின்றான்... எந்த ஆணும் அப்படி நடந்து கொள்ள மாட்டான்... ஆனால் ரிச்சர்ட் தன்னவளுக்காக அதைச் செய்தான்... அவன் மீதான அவளது காதல் அவன் அறியாததா...? அந்த வகையில் மதுரகவி மிகவும் கொடுத்து வைத்தவளே...

***********************

கண்ணாடி பார்த்தபடி மீனாட்சி தனது நெற்றியில் அகலமாய்க் குங்குமம் வைத்துக் கொண்டார்... பின் சிறு துண்டு மல்லிகைப்பூ சரத்தை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டார்... கணவன் இறந்ததால் அவர் பூ, பொட்டு எதையும் துறக்கவில்லை... காதலோடு வாழ்ந்த கணவனுக்கு இந்தச் சாஸ்திரம், சம்பிரதாயம் எல்லாம் பொருந்தும்... ஆனால் செந்தில்நாதன் மாதிரியான அயோக்கியன்களுக்கு இது போன்றதொரு தியாகம் எல்லாம் தேவையில்லை... தியாகம் செய்யும் அளவிற்கு அவர் ஒன்றும் நல்லவர் இல்லையே...

"அம்மா... அம்மா..." என்றழைத்தபடி பரபரப்புடன் திருச்செல்வன் அங்கு வந்தான்...

"என்ன திரு...?"

"அம்மா... அந்தாளு இறந்து போனதால் அந்தத் தொகுதிக்கு தேர்தல் அறிவிச்சிருக்காங்க..."

"ரொம்பச் சந்தோசம் திரு... இந்தத் தேர்தலில் நீ நில்லு... இனியாவது உனக்கான எதிர்காலத்தை நீ பார்..." என்று அவர் சந்தோசத்துடன் கூற...

"இல்லைம்மா... இந்தத் தேர்தலில் நிற்க போறது நீங்க தான்... நீங்க தான் அதுக்குத் தகுதியான ஆள்..."

ஏற்கெனவே அவன் மனதில் எடுத்திருந்த யோசனையை அவரிடம் தெரிவித்தான்... அவர் தனது கவலைகளில் இருந்து வெளிவந்து சாதனை பெண்ணாய் மாற வேண்டும் என்று அந்த மகன் துடித்தான்... இதுநாள் வரை தந்தைக்கு அரசியலில் முதுகெலும்பாய் இருந்தவரை, முற்றிலும் வல்லமை கொண்ட பெண்ணாய் மாற்றிட அவன் எண்ணினான்...

"நான் எப்படி இப்படி...?" அவர் தனது பொட்டையும், பூவையும் சுட்டிக்காட்டினார்...

"இப்போ இருக்கிற இதே மாதிரி தான்ம்மா நீங்க எப்போதும் இருக்கணும்... நீங்க மத்த பெண்களுக்கு

உதாரணமா இருக்கணும்... இரும்பு மனுசி போல் எல்லாத்தையும் நீங்க கடந்து வந்தது போல் மத்த பெண்களும் கடந்து வரணும்ன்னா, அதுக்கு நீங்க தான் தேர்தலில் நிக்கணும்..." என்று அவர் மனதினை கரைத்துத் தேர்தலில் நிற்க அவன் சம்மதம் வாங்கி விட்டான்...

மீனாட்சியைத் தேர்தலில் நிற்க வைப்பதற்குக் கட்சியில் முத்துபேச்சி பெரிதும் உதவினாள்... அவள் தான் எல்லோரிடமும் பேசி சரி கட்டி மீனாட்சிக்குத் தேர்தலில் நிற்பதற்கு இடம் வாங்கிக் கொடுத்து விட்டாள்...

தேர்தல் பிரச்சாரத்திற்காக மீனாட்சி சென்னையின் வட பகுதிக்கு சென்றார்... அங்குத் தான் முத்துபேச்சியின் சட்டமன்ற தொகுதி இருந்தது... அதனால் தேர்தல் வேலைகள் செய்வதற்குத் திருச்செல்வனுக்கு மிகவும் எளிதாக இருந்தது... அவளது ஆட்கள் அவனுக்குப் பெரிதும் உதவினர்...

மீனாட்சி பிரச்சாரம் செய்யும் போது எதிர்கட்சியின் வேட்பாளரும் அங்குப் பிரசாரத்திற்கு வந்தார்... அவருடன் அந்தக் கட்சியின் பேச்சாளர் 'சவுண்ட்' சரோஜா உடனிருந்தாள்... அடர் மஞ்சள் நிறத்தில் புடவையும், கைகளில் கலகலவென மஞ்சள் நிற கண்ணாடி வளையல்களும், நீண்ட தலைமுடியை பின்னி 'டிஸ்கோ' குஞ்சம் எனப்படும் பளபளவெனச் சரிகை தாள் கொண்டு செய்யப்பட்டிருந்த குஞ்சத்தைச் சடையின் நுனியில் கட்டி, கண்களில் கறுப்பு கண்ணாடி அணிந்து அவள் நின்றிருந்த கோலம் திருச்செல்வனுக்குச் சிரிப்பை வரவழைத்தது...

அதைக் கண்டு அவளது விழிகளில் கோபம் ஏறியது... அவள் அணிந்திருந்த கறுப்பு கண்ணாடி அவளது கோபத்தினை மறைத்தது... 'இன்னைக்கு இருக்குடி உனக்கு...' என்று அவள் மனதில் கறுவி கொண்டதை அவன் அறிந்திருக்கவில்லை...

அன்றைய இரவு பிரச்சாரக் கூட்டத்தில் செந்தில்நாதன், மீனாட்சி, திருச்செல்வன் என்று எல்லோரையும் சரோஜா ஒரு பிடி பிடித்து விட்டாள்... அந்தளவிற்கு அவள்

கேவலமாக, காது கொடுத்து கேட்க முடியாதபடி வசவு வார்த்தைகளைக் கொண்டு அவர்களைத் திட்டி தீர்த்து விட்டாள்...

அதைக் கேள்விப்பட்ட திருச்செல்வன் இரத்தம் கொதித்தது... நேரே அவளைத் தேடி சென்று அவன் பதிலுக்குக் கத்தினான்...

"என்ன ரொம்பத்தான் சவுண்ட் விடுற...? நான் ஒண்ணு விட்டேன்னு வை, செவுளு பிஞ்சிரும்..." என்று அவன் எகிற...

"டேய் என்னடா ரொம்பத் தான் எகிற...? இந்தச் சவுண்டு சரோஜா கிட்டேயே சவுண்ட் விடுறியா...? உன் அப்பனே என் கிட்ட பேச பயப்படுவான்... நீ என்ன பச்சா சிலிர்த்துக்கிற...? ஒழுங்கு மரியாதையா இடத்தைக் காலி பண்ணு... இல்லை நடக்கிறதே வேற..." என்று சடையின் குஞ்சத்தை வலது கையில் சுழற்றியபடி, இடது கையால் அணிந்திருந்த கண்ணாடியை ஏற்றி விட்டுக் கொண்டு அவனை மமதையுடன் பார்த்தாள் அவள்...

அர்த்த இராத்திரியில் அவள் நின்றிருந்த கோலம் கண்டு அவனுக்கு எரிச்சலும் வந்தது... அதே சமயம் சிரிப்பும் வந்தது... அதற்குள் அவனது தொண்டர்கள் அவனை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு வந்து விட்டனர்... காரிலேறி கிளம்பும் வரை அவன் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான்... அவளும் சளைக்காது அவனது பார்வையைத் தாங்கி நின்றாள்...

அந்தத் தேர்தலில் மீனாட்சி அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்... அதற்கு நன்றி நவிலும் பொருட்டு ஒவ்வொரு வாக்காளர் வீட்டிற்கும் அம்மாவும், மகனும் சென்றனர்... அதன்படி அவர்கள் சரோஜா வீட்டிற்கும் வந்தனர்... அவளது அன்னையிடம் நன்றி கூறிவிட்டு கிளம்பும் போது திருச்செல்வன் மற்றும் சரோஜாவின் விழிகள் நான்கும் கூர்வாள்களாய் மோதி கொண்டது... கண்ணாடி அணியாத அவளது விழிகளின் வீச்சு மின்னலை ஒத்திருந்தது... திருச்செல்வன் அதைச்

சளைக்காது தாங்கி நின்றான்... (இவர்களது காதல் கதையைத் தனிக் கதையாகத் தனியே பார்க்கலாம்)

மாதங்கள் கடந்து ஓடியது... மீனாட்சி இப்போது பாராளுமன்ற உறுப்பினராய் டெல்லி வரை சென்று வருகிறார்... அவரது வாழ்க்கை கட்சி பணியில் சிறப்பாகச் சென்று கொண்டிருந்தது...

"திரு... எப்போப்பா கல்யாணம் பண்ணிக்கப் போற...?" என்று கேட்ட அன்னையிடம்,

"எனக்குக் கல்யாணத்தில் விருப்பம் இல்லை..." என்று முடித்துக் கொண்டான் அந்தத் திருமகன்...

தந்தை ஏற்படுத்திய காயம் அவனது மனதில் ரணமாக... அதனால் அவன் அனுபவித்த துன்பங்களும் அதிகம் அல்லவா... அவன் தனது அன்னைக்கு அனுமனாய் மாறி பணி செய்ய விரும்பினான்... அதே சமயம் அவன் அனுமன் பக்தனாகவும் மாறிப் போனான்... அவனது மனதினை 'சவுண்ட்' சரோஜா தான் சவுண்ட் விட்டு மாற்ற வேண்டும் என்று விதி இருந்தால் யார் தான் தடுக்க முடியும்...???

ரிச்சர்ட் மதுரகவியைப் பிரசவத்திற்குக் கூட அவளது அன்னை வீட்டிற்கு அனுப்பவில்லை... தானே பார்த்துக் கொண்டான்... மீனாட்சி தான் அங்குச் சென்றார்... திருச்செல்வன் கூறியது போல் மதுரகவிக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது... தாமரையின் நினைவாகக் குழந்தைக்குத் தாமரை என்று பெயர் வைத்தனர்...

*****************

அந்த நட்சத்திர விடுதியில் இருந்த அந்தச் சிறிய அரங்கு முக்கியத் தொழிலதிபர்கள், பத்திரிக்கையாளர்களால் நிறைந்திருந்தது... மதுரகவியைத் தாத்தாவின் நிறுவனங்களுக்கு வாரிசாக அறிவிக்கும் விழா தான் அது... ரிச்சர்ட்டிற்குத் தனது வேலையை விட விருப்பம் இல்லாததால் இந்த முடிவு... அதற்குத் தாத்தாவும் சம்மதித்தது தான் அதிசயத்திலும் அதிசயம்...

தாத்தா அவளைத் தனது தொழில் வாரிசாக எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்... அப்போது ரிச்சர்ட்டின் கைகளில் இருந்த தாமரை அன்னையை அடையாளம் கண்டு கொண்டு கைகளைத் தூக்கியபடி துள்ளி குதித்தாள்... மகளது மகிழ்வு அவனையும் தொற்றிக் கொண்டது... அவன் நிறைவான மனதுடன் புன்னகையுடன் மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

கணவனது பார்வையை உணர்ந்த பாவையவள் அவனை நன்றியோடு பார்த்திருந்தாள்... அவளது ஒவ்வொரு சந்தோசத்திற்கும் அவன் தானே காரணம்... அவன் இல்லை என்றால் அவள் என்னவாகி இருப்பாளோ...

அன்றிரவு மகளைச் சீக்கிரமே உறங்க வைத்துக் கொண்டிருந்த கணவனை அதிசயமாகப் பார்த்தாள் மதுரகவி... தாமரை உறக்கத்தில் கண்களைக் கசக்கினாலும் அவளை உறங்க விடாது அவளோடு விளையாண்டு கொண்டிருப்பவன் இன்று அவளை உறங்க வைத்தால் அதிசயம் தானே...

"ரிச்சி..." என்று அவள் ஆச்சிரியமாய்ப் பார்க்க...

"ஷ்..." என்றவன் மகளைத் தொட்டிலில் படுக்க வைத்து விட்டு மனைவி அருகில் வந்தான்...

அவள் இயல்பு போல் அவனுடன் பேசி கொண்டிருக்க, அவனோ தனது கைகளால் அவளை இறுக அணைத்துக் கொண்டான்... கிட்டத்தட்ட ஒரு வருடங்களுக்குப் பிறகு அருகில் வரும் கணவன்... அவனது தொடுகையில் அவளது உடலும், மனமும் நெகிழ்ந்தது...

"எத்தனை நாளா இப்படியே தப்பிக்கலாம் என்கிற எண்ணம்...?" என்று கேட்டவனின் உதடுகள் அவளது மேனியில் ஊர்ந்து செல்ல ஆரம்பித்தது...

தந்தை செய்த இழிசெயல்கள், தங்கை தாமரையின் இழப்பு என்று தனக்குள் இறுகி போனவளை கணவன் எந்த விதத்திலும் தொந்திரவு செய்யவில்லை என்பது அவளது

புத்தியில் அப்போது தான் உறைத்தது... தனக்காகத் தள்ளி இருந்து விரதம் காத்த கணவனைக் கண்டு காதல் பெருக்கெடுக்க அவனுடன் இழைந்தவள்,

"சாரி ரிச்சி சாரி... நீ சொல்வது போல் நான் இன்னும் பேபியாகவே இருக்கிறேன்... ஐயம் ரியலி சாரி..." என்று கூறியவளின் காதில் ரகசியமாக,

"நீ இப்படிப் பேபியாக இருப்பது தான் எனக்கும் பிடிச்சியிருக்கு..." என்று கூறியவன் அவளிடத்தில் தனது கணவன் உரிமையை மெதுவே நிலைநாட்டிட துவங்கினான்...

புண்பட்டு இருந்த அவளது மனதிற்கு அவனது அரவணைப்பு தேவைப்பட்டதோ என்னமோ... என்றுமில்லாத வண்ணமாக அவளும் அவனுடன் ஒன்ற ஆரம்பித்தாள்... அதை உணர்ந்தவனாய் அவன் மதிமயங்கி மேலும் மேலும் அவளிடம் மூழ்கி போனான்...

தன்னை விட்டு பிரிந்து மாயமாகி போன தனது காதலை தேடி சென்று காதலால் அவளை மதுரமாக்கி அவனது மதுராவாக மாற்றிக் கொண்டான் அந்த நல்ல காதல் கணவன்... மனைவியின் பயத்தைக் களைந்து அவளுக்குப் பக்கபலமாக இன்று இருந்தது போல் வாழ்வின் இறுதிவரை அவன் உடனிருப்பான் என்று நம்புவோமாக...

இனி அவர்களது வாழ்வின் என்றும் வசந்தமே...!!!

முற்றும்...!!!